தமிழ்நாடு அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூல்நிலையம்

# பாளையப்பட்டுக்களின் வரலாறு

## தொகுதி-IV

தமிழ்நாடு அரசு
கீழ்த்திசை நூலகச்
சுவடி

பதிப்பாசிரியர்
**க. குழந்தைவேலன்** எம்.ஏ.,
கல்வெட்டாய்வாளர், தொல்பொருள் ஆய்வுத்துறை

பொறுப்பாசிரியர்
**டாக்டர் இரா. நாகசாமி**

வெளியீடு
தமிழ்நாடு அரசு தொல்பொருள் ஆய்வுத்துறை
சென்னை

**1981**

முதற் பதிப்பு—1981
தொ. பொ. ஆ. துறை வெளியீடு எண் : 84

TAMIL NADU STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY
Acc No. 10043
Date ........
MADRAS-28

© தமிழ்நாடு அரசுத் தொல்பொருள் ஆய்வுத்துறை

# பாளையப்பட்டுக்களின் வம்சாவளி, தொகுதி-IV

பதிப்பாசிரியர்
**க. குழந்தைவேலன்** எம். ஏ.,

954.82
குழ

பொறுப்பாசிரியர்
**டாக்டர் இரா. நாகசாமி**

விலை: ரூ. 9·75

தமிழ்நாடு அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திற்காக
தொல்பொருள் ஆய்வுத்துறை அச்சகத்தில்
அச்சிடப்பட்டது.

**செ. அரங்கநாயகம்**
*கல்வி அமைச்சர், தமிழ்நாடு அரசு*

*செயின்ட்ஜார்ஜ் கோட்டை,*
*சென்னை-600009.*

*தமிழ்நாடு அரசு இதுகாறும் அச்சில் வெளிவராத பழம் ஓலைச்சுவடிகளைப் படி எடுத்து அச்சிட்டுப் பதிப்பிக்க ஒரு திட்டத்தை மேற்கொண்டுள்ளது. அதற்கு உரிய பண ஒதுக்கீடு செய்துள்ளது. தமிழ்நாட்டிலும், மற்றும் நாட்டின் பிற பகுதிகளிலும், பல்வேறு சுவடி நூலகங்களில் தமிழக மருத்துவம், கணக்கு, இசை, நாட்டியம், சிற்றிலக்கியங்கள், பேரிலக்கியங்கள் இன்னபிற நூல்கள் அச்சிடாமல் இருப்பது கணக்கிடப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள பல்வேறு சுவடி நூலகங்களையும், அந்நிறுவனங்களில் உள்ள அச்சில் வராத நூல்களை அச்சிடும் பணிக்கு உதவுமாறு அரசு கேட்டுள்ளது. பல்வேறு நூலகத்தார்களும் தேவையான வசதிகளை அளிக்க மனமுவந்து முன் வந்துள்ளனர். தமிழ்த் துறையில் வல்லுநர்கள் இந்நூல்களை ஆராய்ச்சிக் குறிப்புடனும், முன்னுரையுடனும் பதிப்பித்துத்தர முன்வந்துள்ளனர். இந்த நூல்கள் ஆங்கிலத்திலும். தமிழிலும் அடிக்குறிப்புக்களுடன் வெளியிடப்படும் ஓலைச்சுவடிகளைத் தேர்ந்தெடுத்துப் படி எடுத்துப் பதிப்பிக்கும் பணியைத் தொல்பொருள் ஆய்வுத்துறை, மேற்கொண்டுள்ளது.*

இதுகாறும் 75 நூல்கள் படியெடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் பல அச்சாகி இந்நூல் வரிசையில் வெளி வருகின்றன. அரசின் இந்தப் பணியில் ஒத்துழைக்க முன்வந்துள்ள ஆராய்ச்சி வல்லுநர்களையும், தமிழ்ப் பெரியோர்களையும், சுவடி நூலகங் களையும் நான் வாழ்த்துகின்றேன். இதுபோன்று விரைவில் அச்சில் வராத அனைத்து நூல்களும் ஆராய்ச்சியாளர்களுக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் மற்றும் பொது நூலகங்களுக்கும் கிடைக்கும் வகையில் வெளிவரும் என்பதில் ஐயம் இல்லை. இதன் பயனாய் காலந்தோறும் தமிழில் தோன்றிய பல்வேறு கருத்துக்களையும் பண்பாட்டையும் முழுமையாக அறிந்து கொள்ள இயலும் என்பதில் ஐயம் இல்லை.

செ. அரங்கநாயகம்
*27-12-1980*

**C. ARANGANAYAGAM**
Minister for Education
Government of Tamilnadu

Fort St. George
Madras-600009
27-12-80

The Government of Tamilnadu, under a special scheme of publication of unpublished Tamil Manuscripts have come forward to undertake the printing and publishing of all the available unpublished Tamil Manuscripts in the State. Necessary funds towards the publication have been provided for the purpose. It is estimated that several hundred unpublished Tamil manuscripts dealing with native medicines, mathematics, music, fine arts, and literary compositions of various nature, are lying unpublished in different Manuscripts Libraries of this State and also in other parts of the country. Various Manuscript Libraries in the State, have been approached to make available their unpublished texts for publication. The authorities of these Manuscripts Libraries have come forward with interest and enthusiasm to afford necessary facilities for the same. Eminent Tamil Scholars, well-versed in the art of editing have been requested to take up the work of editing. Under the scheme the texts will be critically edited with suitable foot-notes and brief introductory analysis both in English and Tamil for the benefit of researchers and scholars. The selection of manuscripts, copying and editing have been entrusted to the Tamilnadu State Department of Archaeology.

So far the texts of 75 manuscripts have been copied and a number of them edited and are made available in printed form in this series. I am thankful to all the institutions and scholars who have come forward to join the Government in this venture. It is only a beginning and I do hope that all the available texts will be in the hands of scholars, educational institutions ane public Libraries, so that the contribution of the Tamils through the centuries in different fields will be available for the proper understanding and comprehension of the Tamil Language, Literature and Culture.

C. ARANGANAYAGAM
27-12-80.

# INTRODUCTION

The manuscripts published under this title "Palayappattukalin Varalaru" were collected by Col. Mackenzie, the well known collector of historical documents and Literary manuscripts. These are well known to historians as *Mackenzie Manuscripts* and are now preserved in the Government Oriental Manuscripts Library, Madras. Summaries of these Manuscripts have appeared in English and the Madras University has published one volume in English edited by Dr. T. V. Mahalingam. Even in this edition only the summary of the texts are given. The entire collection has not been published in original so far. We are now publishing the entire collection in original in four volumes.

A perusal of the text shows that, Mackenzie collected these family history of the erstwhile Palayappattu Pattakkarars and Zemindars, to prove their claim for titles and previleges and hence these are the most valuable documents which show the transition from the native administrative set up and life to the colonial yoke and how steadily the independence of the local lords were eroded. It is interesting to note that many of these families were able to give sufficient account of their ancestors. Most of them were able to recollect as far back as 16th century and some upto 14th century, beyond which the tradition is unable to bear any authenticity. In some cases, they plainly said that they have lost their family history in the political unrests and efflux of time. Many of the decendents of the families are still alive though reduced in their status.

The collection of the family history of the erstwhile local chiefs, besides throwing light on their way of functioning, provides ample evidence on the social customs and manners, that were prevalent in 16th to 18th centuries A. D. This aspect has not been fully utilised by Sociologists and hope that this series will provide the basis for further research.

**Dr. R. Nagaswamy**

# உள்ளடக்கம்

வரிசை எண் | பக்க எண்


| வரிசை எண் | | பக்க எண் |
|---|---|---|
| 1. | இடையக்கோட்டை வம்சாவழி ... | 1 |
| 2. | கொண்டம நாயகன் வமிசா வழி ... | 12 |
| 3. | நத்தம் லிங்கமனாயக்கர் வம்சாவளி ... | 21 |
| 4. | ராமகிரிப் பாளயக்காரன் சாமய னாயக்கன் வம்சாவளி ... | 35 |
| 5. | ஆயக்குடி வம்சாவளி ... | 46 |
| 6. | பளைய கோட்டை சக்கரைக் கவுண்டன் வமிசாவளி ... | 52 |
| 7. | முத்து ரங்கப்ப நாயகன் வமிசாவளி ... | 64 |
| 8. | மயிலாடி பாளையக்காரன் சின்னம நாயக்கன் வமிசாவளி ... | 68 |
| 9. | வேடப்பட்டி திம்மநாயக்கன் வமிசாவளி ... | 73 |
| 10. | சோத்தம நாயக்கன் வமிசாவளி ... | 76 |
| 11. | சீலமநாயக்கன் வமிசாவளி ... ... | 78 |
| 12. | சிதம்பர வன்னியன் வமிசாவளி ... ... | 88 |
| 13. | குடையூர் கைபீது ... ... | 94 |
| 14. | திருமலைமுத்து மாதா நாயக்கன் வமிசாவளி ... | 96 |
| 15. | மருதப்பதேவன் வமிசாவளி ... | 111 |
| 16. | பால முத்தைய நாயக்கன் வமிசாவளி ... | 127 |
| 17. | அளகாபுரி ஜமீன்தார் வமிசாவளி ... | 136 |
| 18. | பழனி பாளையப்பட்டு சின்னப்ப நாயக்கன் வமிசாவளி ... | 141 |

# இடையக்கோட்டை வம்சாவழி

## D : 2829

இடையக்கோட்டை வம்சாவளிக்கு விபரம் என்ன வென்றால்,

முன் யெங்கள் பெரியோர்கள் யிருந்த தலம் பெஞ்ச நகறம். அதில் வல்லாள மாக்கையனாயக்கர் இருக்குர போது மகாறாச மானிய றாச ஸ்ரீ றாயர் சமஸ்தானத்தில் கோட்டியம் நாகம னாயக்கரிடத்தில் சேவித்து கொண்டு யிருந்தார்கள். அப்போது வடக்கே யிருந்து றயர் ஸமஸ்தா னத்தை யெடுபத்திப் போடுகுரதர்க்காக வுத்தராதியிலிருந்து பார்ச்சா பாளையமும் அவடமடசேத்திரியான் ராசாக்களும் ஸ்த்தோத்ரம் தளமும் வந்து றயர்ஸ்தமஸ்த்தானம் யெடு படுத்துகுரதாயிருந்த முன்னுக்கு கர்த்தாக்களாகிய விசுவ னாத னாயக்கர் படை வெட்ட போர் முன்னுக்கு நாங்களும் கூடவே போயி யெங்கள் செனங்கள் அநேக செனம் சேத்து வுத்திரவாதம் செய்ததில் அதி(ன்) பிரகு விசுவனாத னாயக்கறுக்கு சந்தோஷம் வந்து யெங்களுக்கு அனேகம் வெகு மதி செயிதார்கள். றாயர் ஸமஸ்தானத்துக்கு விசுவனாத னாயக்கர் போயி யெங்கள் பெஞ்சை வல்லான் மாக் கைய னாயக்கரைக் கூட்டிக் கொண்டு போயி றாயரவர்கள் முன்னுக்கு மெத்தவும் சந்தோஷமான வார்த்தை சொல்லிக் கொண்டதில் யெங்கள் பேரில் தயவு வந்து அநேக வஸ்த்திரமும், பூஷணாதியளும், தண்டிகையும் அதர்க்கு சேற்ந்த சிங்கமுக அணி அஞ்சாத பாட்டையும் ரெண கங்க ணமும் ரெணவாசிங்கமும் சர்ம தோ... றோகர வெண்ட யமும், நிகளமும் வீரமணி வுபய வெஞ்சாமரமும், வெள்ள டால், பச்சடால், வெள்ளைக் கொடை, பச்சைக்கொடை, வெள்ளைச் சுருட்டி, பச்சைச் சுருட்டி, கிறுடடால், சிங்க கொடி, அன்னக்கொடி, மும்மோர்சி, வீர தண்டை, பகல் தீவட்டி, வெள்ளைக்குதிரை, அதர்க்குச் சேற்ந்த சல்லியம், கால வெண்டயம், அனைத்து படையும் குடுத்து நிகளங்க

மல்லனென்னும் வல்லக்கா னாயனென்றும், பேறும் குடுத்து அனேக வெகுமதியளும் செயிதார்கள். றாயர் ஸ்தயட்சமத்துக்கு விசுவனாத னாயக்கர் யெங்கள் பெஞ்சவல்லான் மாக்கைய னாயக்கரை கூட்டிப்போயி றாயரவர்கள் முன்னுக்கு விட்டு சொல்லிக்கொண்டார்களப்போது ராயரவர்கள் விசுவனாத னாயக்கரைப் பார்த்து வல்லான் மக்காள னாயக்கருக்கு யெங்கேயாகிலும் கிறாமம் பூமி விட்டுக் குடுத்து வுன்னிடத்தில் சேவுகமிறுக்கட்டும்யென்று சொன்னார்களவர்களிடத்தில் அநேகநாள் காத்திருந்தேன். அதின்பிறகு பாண்டிய தேசத்து கறுதாக்களாகிய விசுவநாத னாயகருக்கு பட்டாபிஷேகம் சூட்டினதின் பெறகு அரியனாயக முதலியாறும் விசுவநாதனாயக்கரும் மதுராபுரிக்கி வந்து பாண்டியன் கோட்டைக்கி பிற்ப்பாடு பினையும் விலாசத்தில் யெளுவத்திரெண்டு கொத்தளத்தில் கோட்டையும் போட்டு யெளுவத்திரெண்டு பாளயகாரரையும் நேமகம் செய்து திருமஞ்சண வாசலுக்கு பெறதெட்சணமாக வடமேற்கு மூலையில் ஷெி மதுறாபுரி பட்டணத்துக்கு வடமேற்கு மூலையில், கருமலைக்கி மேற்க்கு நங்காஞ்சி நதி தீரத்தத்தில் பழனி மலைக்கி முக்காத வளிக்கி இந்தப் பெரம் யீசான்னிய பாகத்தில் காடாரண்ணிய பாகத்தில் காடாரண்ணிய மாயிருக்கும் யிடத்தில் நீங்கள் யாதவ குலமாச்சே. வுங்கள் பேருக்கு கிறாமங்கள் வுண்டு பண்ணிக் கொள்ளுங்களென்று உத்திரவு செய்ததில் அனேக வனங்களை யெல்லாம் வெட்டி வெளிசெய்து யிடையக்கோட்டை யென்பதாயிக்கோட்டையும் வுண்டுபண்ணி அதில் சேர்ந்த நிலவளிக் கிறாமம். ஆதி குத்திலுப்பை, வாடிபட்டி, அத்தப்ப நாயக்கன் பட்டி, ராகுவ னாயக்கன் பட்டி, சின்னக்காமு பட்டி, நாரணப்ப னாயக்கன் பட்டி, வலயபட்டி, சவ்வாது பட்டி, சொகிப் பட்டி, கேது குரும்பு, கோடங்கி பட்டி, இதர்க்குச் சேர்ந்த் வுபகிறாமம் புளியமரத்துக் கோட்டை மற்றுமுண்டாகிய வுப கிறாமங்களையும் இதற்குச் சேற்ந்த காடுகரையும் விட்டுக்கொடுத்தார்கள். அப்போது சாலிவாகன சகாப்தம் ஆயிறத்தி முன்னித்தி அன்பத்தாறு கலியுக செகாப்தம் னாலாயிரத்தி அஞ்நூத்தி முப்பத்தஞ்சு அதர்க்கு மேல் பட்டமாண்டது. அப்படி சிருது காலம் கறத்தாக்கள் சொன்னபடி கேட்டுக் கொண்டு கொத்

தளமுங் காத்துக் கொண்டு யிருந்தார்கள். பெஞ்சைமாக்கையை னாயக்கன் பட்டமிருந்தது ஷூ 36. அவர் மகன் இரக்குடி திப்பைய நாயக்கன். அவர் பெண்சாதி கிறஷ்ட்டனம்மாள். அவர் னாளையில் திருவெங்கிடானாத பெறுமாள் சன்னிதியும் கட்டி வைத்து பெறதிஷ்ட்டையும் செயிதார்கள். அந்த பெரு மாள் பெறதிஷ்ட்டை செயிகுரதர்க்கு முன்னடந்த அதிசயம் யென்னவென்றால், குடியான பேற்களில் யார் பால் கொண்டு வந்தாலும் அவடத்தில் காலெடரி பால்க்கலசம் உடைந்து அந்த சிலையின் சிரசுலே அவிஷேகமாயிப் போகும். அப் படிக்கி சிருது நாள் நடந்து வரும் காலத்தில் அந்த குடி யானபேற்கள் யிந்தயிடத்தில் தினசரி யிப்படி நடக்குர அதிசயமென்னவென்று மண் வெட்டி கொண்டு சோதிச்சுப் பார்க்குமிடத்தில் அந்த சிலையினுடைய சிறசுல் மண்வெட்டிப் பட்டவுடனே ரெத்தம் கண்டுது. அந்த சமாசாரம் யிசக்குடி னாயக்கரிடத்தில் சேதி சொல்லி அந்த செய்தி கேட்ட வுடனே அவடத்தில் வந்து நின்று யிதுயென்ன காறணமென்று யோசித்து நிர்க்குரபோது ஒருத்தன் பேரில் ஆவேசம் வந்து திருப் பதியிலேயிருந்து யிவடத்துக்கு வந்திருக்குரோ மென்றும் நம் முடைய நாமதேயம் திருவெங்கடநாதப் பெருமாநென்றும் சொன்னதுநாலே மண்டப முதலாகியதும் கல்லுநாலே கட்டி வச்சு பெறதிஷ்ட்டை செயிதார்கள். அவர் பட்டம் ஷூ 35. ஷெ குமாறர் தம்ம னாயக்கர். அவர் பெண்சாதி சினக்கம் மாள். அவர் பட்டம் ஷூ 35. மேல்ப்படி குமாறன் தண்டிகை யேறத்தம்ம னாயக்கன். அவர் பெண்சாதி பொம்மலம்மாள். அவர் னாளையில் வேரியப்பூருக்கு வடமேற்க்கு நங் காஞ்சி ஆத் தில் அணையுங்கட்டி வைத்து வாய்க்காலும் வெட்டி, பெரிய குள முங் கட்டி வைத்து அந்த குளத்துக்கு மேற்க்கு பக்க பாரீசத்தில் காட்டின பேரில் கல்லுனாலே சிவாலயமுங் கட்டி வைத்து, மல்லிகார்ச்செனலிங்க மென்று நாமகறன்னமுஞ் சாத்தி பெற திஷ்ட்டையும் செய்து தினசரி பூசையும் தவராமல் நடக்கும் படி செயிது அந்த சன்னதி முன்பதாக தம்மைப் போலே கல்ச்சிலையும் வுண்டு பண்ணினார். அப்படி யிருக்கிர நாளையில் தண்டு யேறதம்மனாயக்கன் அணை கால் பார்க்கப் போன யிடத்தில் பெரிய பழம் கிறாமம் இடைய கோட்டைக்கி சேற்ந்த கிறாமமாயி சேற்ந்திருந்ததில்

மதுரை மீனாட்சியம்மாளுக்கு படித்தரக் கட்டளைக்கு விட்டிருந்து அந்த கிறாமம் சொந்தமாகச்சே மோற் தயிர் சாதம் கொண்டு வரச்சொல்லி அணைப் பார்க்கப் போரதர்க்கு முதனாளே மனுஷரை அனுப்பிவிச்சிருந்தார்கள். அப்படிக்கு மோர் தயிர் சாதமும் கொண்டு வறுதரதர்க்கு தாமிசம் செய்த படியினாலே அணையிலிருந்து கொண்டு வெரியப்பூருக்கு மனுஷரை அனுப்பிவிச்சு, அந்தவூர் நாட்டாண்மைக்காரனைக் கூட்டிக் கொண்டு வரச்சொல்லி கோவிச்சு கடைசனை தண்டினை செய்தார். அந்த முன்னுக்கு அந்த நாட்டாண் மைக்காரன் விருபாட்சிக்கி பேற்வற்த்தகம் செயிது அந்த வெரியப்பூர் கிறாமத்தை பட்டாணையும் போட்டுக் கொள்ளச் சொல்லி கட்டிக் குடுத்து விட்டானதற்கு அத்தாட்சி அந்த யெல்லையில் அன்று முதல் யிது வரைக்கும் அந்த அணைக் கால் வளியில் தண்ணீறும் வந்து குளமும் பெறுகி நஞ்சையும் வருஷா வருஷம் விளஞ்சிவறுகுது. பலனும் அனுபவித்துக் கொண்டு வருதரோம். அவர் பட்டம் ௵ 50. ஷெ குமாரன் முத்துவேங்கிடாத்திரி னாயக்கர். அவர் பெண்சாதி வல்லக் கொண்டம்மாள். அவர் னாளையில் சவ்வாதுபட்டிக்கு தெர்க்கு கால்ப்புரம் அணையுங் கட்டி வைத்து நங்காஞ்சி பாசனம் வாயிக்காலும் வெட்டி வைத்து நஞ்சையும் வுண்டு பண்ணினார். அதின் வடக்கு ஷெ நதியில் வர்த்தக ணனை யென்பதாயி அணையுங் கட்டி வைத்து கால்ப் புரவு வாயிக்காலும் வெட்டி நஞ்சையும் உண்டு பண்ணி அதின் கிளக்கு அப்பு சமுத்திரமென்று ஒரு குளமுங் கட்டி வைத்து அந்தக் குளத்துக்கு சேற்ந்த நஞ்சை யும் உண்டு பண்ணினார். அவர் பட்டம் ௵ 50. ஷெ ...ரன் லட்சமிபதி நாயக்கர், அவர் பெண்சாதி நல்லம் ...ாள் வெள்ளையம்மாள். அவர் னாளையில் சவ்வாது பட்டிக்கி வடமேற்க்கு ஒடையாத்தில் அணையுங் கட்டிவைத்து வாய்க்காலும் வெட்டி வாய்க்கால் பாசனமும் மேலைக்குளம் யென்று குளமுங் கட்டி நஞ்சையும் வுண்டு பண்ணினார். அதின் வடகெளக்கு அரைனாளிகை வளிக்கி யிருந்தப்புரம் செங்கொள மென்று குளமுங் கட்டி வைத்து மேலைகுளத்து மருகால் தண்ணீர் வந்து நிரம்பும்படிக்கி செயிது திருவேங் கடனாதப் பெருமாளுக்கும் பெறமணாளுக்கும் தாரை தத்துவ

மாக செயிது நில கல்லில் வாமன முத்திரையும் வுண்டு பண்ணி, கல்லும், காவேரியும், புல்லும், பூமியும், சந்திறாதித்தர் உள்ளவரைக்கும் தர்மம் கட்டளையாக நடப்பிவிச்சார். அதில் வடகௌக்கு பக்கத்தில் யிடைய கோட்டைக்கி வட மேற்க்கு செல்லாண்டியம்மான் குளமென்று குளமுங் கட்டி வைத்து நஞ்சையும் வுண்டு பண்ணி கரைக்கி கீள் பாரிசத்தில் பாண்டியன் பெறதிஷ்டை செல்லாண்டி யம்மனுக்கு கூரைக் கட்டு கோவிலாயிருந்ததை செங் கல்க்கட்டு காரை மண்டபமாயி வுண்டு பண்ணி அம்ம னுக்கு தினசரி பூசையும் நடக்குர்படிக்கு செய்விச்சார். அவர் நாளையில் மதுராபுரியில் கற்த்தாக்கள் சமட்சமத்தில் காத்து கொண்டுயிருந்ததில் பரிபூரண தயவு செயிது கோபால சேக்கறம் ஆயிரம் பொன் வகையிறப்புப் பண்ணித்தீர்த்துக் குடுத்தார்கள். அவர் பட்டம் வருஷம் 15. ஷெ லட்சும் தி னாயக்கர் பெண்சாதி நல்லம்மாள். குமாறன் குமார சின்னோப னாயக்கன். யிளைய குடி வெள்ளையம்மாள் குமாரன் முத்து வெங் கடாத்திரி னாயக்கன். ஷெ மூத்தகுடி குமார சின்னோபனாயக் கன். பெண்சாதி சக்கம்மாள். அவர் நாளையில் செல்லாண்டி யம்மாள் குளத்துக்கு வடகிளக்கு ஒட்டுக் குளமுங் கட்டி வத்து மருகால் தண்ணீர் பெருகும்படிக்கி செயிது நஞ்சையும் வுண்டு பண்ணினார். அவர் பட்டம் ஷ௵ 25. அவர் நாளையிலும் சிறுது நாள்முன் தீர்த்நவகையிறுப்பு கோபாலி சக்கரம் ஆயிரம் பொன்னாகத் தேனே குடுத்துக்கொண்டு வந்தோம். அதில் பின்னாலே கற்த்தாக்கள் பேற வஞ்சம் யில்லாமல் போயும் மையிசூறார் பேற வஞ்சமாயிருந்ததில் ஸ்தானாதிபதி யளைக் கற்த்தா பேட்டிக்கு அனுப்பிவிச்சு கறுத்தா பேட்டியுஞ் செயிது கொண்டு சிறுது வெகுமதிகளும் வாங்கி வகையிறுப்பு கோபாலி சக்கரம் ஷ௵ 1க்கு 3000 பொன்னாகத் தீர்த்து பத்து மாத்தை திட்டத்தில் பேரில் மாதம் 1க்கு 300 மேரைக்கு அரவக்குறிச்சி கெடிக்கு கிரஷ்ட்டணப்பய்யன் அதிகாரத்தில் ஷ௵ 1-க்கு 3000 பொன் மேரைக்கு குடுத்து வந்தோம். அவர் பட்டம் ஷ௵ ¯0. ஷெயார் குமாரன் முத்து வேங்கடாத்திரி னாயக்கன். அவர் பெண்சாதி செந்தாமரையம்மாள், சினக்கம்மாள், கறுத்தம்மாள். அவ னாளையில் யிடையக் கோட்டை வூர்நடுவில் முன் புறாதனம்

அங்காளம்மன் சன்னிதி கூரைக்கட்டு ஆக இருந்ததை கல் மண்டபமும் கட்டிவிச்சு விக்கிறகமும் வுண்டு பண்ணி தினசரி பூசையும் நடக்கும் படிக்கி செயிவிச்சார். கோட்டையோறம் சமீபம் கீள் பாரீசு முன் புராதனம் விக்கெனேசுவரன் சன்னதி கூரைக் கட்டாயிருந்ததை செங்கல்லாலே காரை பூச்சு மண்டப மாகக் கட்டி வைத்து தினப்படியும் பூசையும் நடக்கும்படிக்கு செய்விச்சார். அதின் கிளக்கு நங்காஞ்சி னதிக்கி மேல் பாரிசம் காரைக்கட்டு கோயிலுங்கட்டி வைத்து மலையாளபகவதி அம் மனை பிரதிஷ்ட செயிது அதில் தினப்பெறதி பூசை நடக்கும் படிக்கு செய்விச்சார். அவர் னாளையில் அரவக்குரிச்சிக்கு ஸ்ரீ 1-க்கு 3000 பொன் கோபாலி சக்கரம் வகையிறுப்பு பணம் குடுக்க நிருவாகமில்லாமல் ஒருவனுக்கு பின்னிட்டுயிறுந்து மறு படியும் சீரங்கப்பட்டணத்தில் சமட்சமத்தில் ஸ்தானாதிபதி மனு ஷரை அனுப்பிவிச்சு பேட்டியும் செயிது கொண்டு முன்னுக்கு பூர்வனாங்கள் தீர்த்து கொடுத்த வகையிறுப்பு கோபாலி செக் கரம் ஸ்ரீ 1க்கு 3000 பொன்னுக்கு குரையறக்க தில்லை யென்று அதுவேமேரைக்கு தீர்த்து குடுத்து வெகுமதியும் குடுத்து வகையிருப்பு பரமான்னிகையுங் குடுத்ததில் யதன் மேல் அரவகுரிச்சிக்கு நாங்கள் பணம் செலுத்த மாட்டோமென்று தின்றுக்கல்லுக்கு பணம் செலுத்தும்படியாயி சாகிப்பய்யன் அதிகாரத்தில் பரமான்னிகையுங் கொண்டு வந்து குடுத்து பணமும் செலுத்திக் கொண்டு வந்தோம். அவறுக்குப் பினதி காரம் ராணோசீஷீர சாகறன் அதிகாரத்திலும் (முதல்) தீர்த்த ஸ்ரீ 1க்கு 3000... கோபாலி செக்கரம் மேரைக்கி செலுத்தி வந்தோம். அவறுக்கு பின் அதிகாரம் மீர்பத்திலீகான் சாயபு அவர்களதிகாரத்திலும் அதுவேப் பெறகாரம் ஸ்ரீ 1க்கு 3000 கோபாலி செக்கரம் செலுத்தி கொண்டு வந்தோம். அவறுக்கு பின் அதிகாரம் ஆரணி றாமநாயக்கர் அவர் அதிகாரத்திலும் அந்த 3000 கோபாலி செக்கரமே செலுத்தி வந்தோம். அவறுக்குப்பின்னாலே ஆரன்னி வேங்கடப்பய்யன் அவர்கள் அதிகாரத்திலும் அதுவே கோபாலி செக்கரமே 3000 செலுத்தி கொண்டு வந்தோம். அவறுக்குப் பினதிகாரம் மீரு சாயபு நவாபு அவர்கள் துரைத்தினத்தில் நடந்த விபரமானது. அவர் திண்டுக்கல்லுக்கு வந்து சேர்ந்தவுடனே ஷெி குமார முத்து வெங்கிடாத்திரினாயக்கனை தறுவித்து இந்த

வகையிறுப்பல்லாமல் நதிர் அய்யாயிரம் ரூபாயி கேட்டார். அதர்க்கு நிறுபாகமில்லையென்று சொல்லிப் போட்டு யிடையக்கோட்டைக்கி வந்து சேற்ந்ததின் பெறகு குதிரை பாறுசயிதமாயி வந்து ஊரைக் கொள்ளை செயிது செட்டிறாத்தகான் குடியான பேற் சகலத்து ராளையும் பிடித்து கெட்டிக்கொண்டு போயி அவறவறுக்கு தக்கதாயி பணம் பிரிச்சி குடுக்க நிறுபாகமல்லாமல் அனேக சங்கடப்பட்டு யாசகம் பண்ணி அவரவறுக்கு வுண்டான பணத்தை செலுத்திப் போட்டு சகலத்தினாளும் தேசாந்திரத்திப் போய் விட்டார்களந்த முன்னுக்கு, குமார முத்து வெங்கடாத்திரி னாயக்கரும் ஓடிப்போய் விட்டார்களாயிருக்க யெடமில்லாமல் கட்டவூர் கிறாமப்பாலை விடுதியில் ரெண்டு வருஷம் இருந்தார். கிறாமம் சீமையும் அரூபந்தை அடைந்து போச்சிது. அதின்பேரில் வாசகுறுவப்ப னாயக்கர் முன்னிலை யாக சீர்மையை விடச்சொல்லிப் பெற வர்த்தகம் செயிததில் மூனாம்கெட்ட நதிர் வகைப் பணம் அய்யாயிரம் ரூபாயி குடுத்தால் சீர்மை பாளையக்காரனுக்கு விட்டு வகையிறுப்பு தீர்த்துக் குடுக்குறோமென்று நபாபு மீறுசாயபு அவர்கள் உத்திரவு செயிதார்கள் யென்று பாலக்குறுவப்ப னாயக்கரை ஸ்தானாபதி மனுஷியாளிடத்தில் சொல்லி யனிப்பிவிச்சதில் அந்த மேரைக்கி சம்மதித்து குமாரமுத்து வெங்கடாத்திரி னாயக்கர் ஆதாறம் பார்க்கும் யிடத்தில் ரெண்டாயிரம் ரூபாயி யிருந்தது. பாக்கி முவ்வாயிரம் முக்க நிறுபாகமில்லாமல் றாமகிரி கடயூர் கம்மைய னாயக்கன், முச்சிய னாயக்கன், லக்கைய னாயக்கன், சக்கரை கவுண்டன் மண்ணுடையோர் பல்லவராயக் கவுண்டன், வெள்ளய்யக் கவுண்டன் யிந்த யிடத்துக்கு யெல் லாம் போயி யேசகம் செயிதுகொண்டு வந்து அய்யாயிரம் ரூபா யும் செலுத்திவிச்சு முன்னுக்கு வகையிறுப்பு ஷு பிறுதி ஷு ரூபாயி நாலாயிரம் ரூபாயி செலுத்திவிக்கும்படிக்கு வுத்திரவு குடுத்து வெகுமதியுங் குடுத்து சீமைக்கு தோரண காகிதமுங் குடுத்து அனுப்பிவிச்சார்கள். அதர்க்கு பினிச்ச அதிகாரம் திண்டுக்கல் லுக்கு மகம்மது அர்த்தவல்ல சாயபு அவர்கள் னாளையிலும் சாலி உப்பாசி திருமலை றாயர் னாளையிலும் வகையிறுப்பு ரூபாயி 4000 செலுத்திக்கொண்டு வந்தோம். அதர்க்குமேலே செயிது நவாபு சாயபு அவர்கள் திண்டிக்கல் சீமை சாகீராக

வாங்கி கொண்டுவந்தார்கள்.

அந்த முன்னுக்கு குமாரமுத்து வேங்கடாத்திரி னாயக்கர் பேட்டிக்கு போன முன்னிலையில் விறுப்பாட்சியான திம்மகர மாயிறாக்குரான் அரமனைக்கி வகையிறுப்புப் பணம் குடுக் குரதில்லையென்று பத்துப் பதினைஞ்சு ஷூ மலையாணை நிருவாகம் போலே யெண்ணிக்கொண்டு அரண்மனைக்கி பணம் குடுக்காமல் நிராகரித்துக்கொண்டு யிருக்குரான். அந்த மலையை யும் அவனையும் செயம் பண்ணிக் குடுக்க வேணுமென்று குமார முத்து வெங்கிடாத்திரி நாயக்கருக்கு வெள்ளைச் சுருட்டியும், பச்சை நிசாறும், வஸ்திரமும், வெகுமதியும் குடுத்துப் போட்டு நாவாபு வுத்திரவு அனுப்புவிச்சேனோ அந்த வேளைக்கி நீ வரவேணுமென்று வுத்திரவு செயிது போட்டு திண்டுக்கல் போயி சேற்ந்தார்கள்.

சேற்ந்த பதினஞ்சா னாள் மறுபடியும் யிடைய கோட் டைக்கி வந்து குமாறு முத்து வெங்கடாத்திரி னாயக்கரையும் அவர் செனத்தையும் வரச் சொல்லி கூட்டிக்கொண்டு விறு பாட்சியில் குதிரை பார பீரங்கி சையித்தமாயி பாளையம் போயிரங்கினார்கள்.

யிந்த பாளையத்துக்கு வுபறாலாயிவடக்கே சீரங்கபட்ட ணத்திலேயிருந்து சையிது அநீரு சாயபும் சூரனும் சிரிது குதிரையும் மாறும் வந்து விறுபாட்சியில் பாளையம் யிரங்கி னார்கள். யிருவகை பாளையமும் சுவாரிச் சகறாறி செயிது பீரங்கிச் சண்டையும் செயிததில் கலித்தளியும் விடாமல் மலையும் சுவாசமில்லாமல் யிறுந்த முன்னுக்கு குமாரமுத்து வெங்கடாத்திரி னாயக்கரை நபாபு சையிது சாயபு அவர்கள் வரவழைத்து யின்று றாத்திரிக்குள்ளாக யிந்த கல்லதளியும் மலையும் செயம்பண்ணிக் குடுக்க வேணு மென்று கேட்டதில் அப்படியே ஆகட்டும் யென்று வுத்திரவு வாங்கிக் கொண்டு அன்று றாத்திரி குமாரமுத்து வேங்கி டாதிரி னாயக்கறும் அவரைச் சேற்ந்த செனமும் கன்னவளி மார்க்கங்களில் போயி சண்டை செயிததில் அனேக செனமும் சேதமாகியும் பின்வாங்காமல் நல்தளியும் வாங்கி மலையில் பற்பல வடகாடு பரியந்திரம் பாளையத்

தாறும் இவரைச் சேர்ந்த செனமும் கொள்ளை சூரை செயிததில் விருபாட்சி குப்பள னாயக்கன் நிறுவாகமில்லாமல் ஓடிப்போயி விட்டான்.

அந்த முன்னுக்கு மகாராசமானியராசஸ்ரீ டீபு சுல்தான் நவாபு அவர்களும் பெரிய பாளைபமும் வந்து விறுபாட்சியில் இரங்கியிருந்த முன்னிலும் அவர் பேட்டி செய்து கொண்ட முன்னுக்கு சிருது வெகுமதியுங் குடுத்து நவாபு சையிது சாயிபு அவர்களை பார்த்து இந்த இடைய கோட்டை குமார முத்து வெங்கிடாத்திரி னாயக்கன் பெத்த பிள்ளை, மரியாதியாயி நடப்பிவிச்சிக் கொள்ளென்று வுத்தரவு செயிதார்கள்.

அந்த முன்னுக்கு சையிது நவாபு அவர்கள் குதிரையுங் குடுத்து வெகுமதியுங் கொடுத்து அனுப்பி வச்சார்.

அந்த முன்னுக்கு பூர்வம் வெரியப்பூறு முதல் நமக்குச் சேர்ந்த யெல்கை ஆதிந்தமும்தாமே கூடயிருந்து எல்கை கல்லும் நாட்டிக் குடுத்தார். அந்த யேல்கையும் ரெண்டு ஷ அனுபவித்து கொண்டு வந்தோம்.

யிப்பட்டிக்கெல்லாம் அரமனைக் காரியத்தில் வுத்திர வாதம் செயிது குடுத்து அதற்குமேல் யிடையகோட்டைக்கு வந்து சேர்ந்தார். அவர் னாளையில் வகையிறுப்பு எல்லை சிறுத பூமி அதிகமாச்சுதுயென்று ரெண்டாயிரத்தி னூத்தி யெளுவத்தி மூணு பொன்னாக தீர்த்து குடுத்தார்கள். அவர் மனுஷர் ரெங்காறாயரவர்களை திண்டிக்கல் சீர்மை அதிகாரம் நெமகம் செயிது போட்டு சையிது நவாபு அவர்கள் குரங்கோடை சீர்மைக்கிப் போயி விட்டார். அதின் பின்னாலே யேளு ஷ யிதுவேப் பெறகாரம் கையிறுப்பு செலுத்திக் கொண்டு வந்தோம். மறுபடியும் சையிது நவாபு சாயபு அவர்கள் திண்டிக்கல்லுக்கு வந்தார்கள். அவர் பட்டம் ஷ 49. ஷ குமாரன் முத்து மலையாண்டி மீனாட்சி னாயக்கன். அவர் பெண்சாதி வசந்தக்கத்திரியம்மாள், பொன்னம்மாள். அவர் னாளையில் சையிது நபாபு அவர்கள் திண்டிக்கல்லுக்கு தறுவச்சி வெகுமதியும் செயிது பட்டக் குரிப்பும் நெகமம் செயிது அனுப்பி வித்தார்.

அப்படி யிறுக்குர னாளையில் கும்பினியாரையும் வந்த முன்னிலையில் அந்தத் தரையில் அய்யாயிரம் குதிரையும் வந்தது. யிடையகோட்டையில் யெட்டு நாள் வரைக்கும் யிரங்கி யிருந்த முன்னிலையில் கும்பினியாறுடைய பாளையமும் அரவக்குரிச்சியில் வந்திரங்கி யிருந்தது. அப்போது சையது நவாபு சாயபு சிறிது குதிரையும் வந்து யிடையகோட்டையில் வந்தெரங்கியிருந்து வடக்கே போர் முன்னிலையில் யிடையகோட்டயை கொள்ளை செய்து அக்கினி பரகதையும் செயிது போட்டு வடக்கே போயி விட்டார்கள்.

அந்த முன்னுக்கு முத்து மலைபாண்டி மீனாட்சி னாயக்கர் பின்னுட்டு யிருந்து மறுபடி திண்டுக்கல் சீர்மைக்கு கலக்கட்டறாகிப மகாராச மாணிய ராசஸ்ரீ மக்கலோட்டு துரையவர்கள் சமட்சமத்துக்கு ஸ்தானாபதியளை அனுப்பிவிச்சுப் பேட்டி செயிது கொண்ட முன்னிலையில் தீர்ந்த வகையிறுப்பு ரூபாயி 6000 யிந்தப் படிக்கி செலுத்தி வச்சு கொண்டு வந்தோம். அதர்க்குப்பின் மகாராச ஸ்ரீ திண்டிக்கல் கலகட்டறாகிய ரெங்கன் துரை நாளையிலும் அதே வகையிறுப்பாக ரூபாயி 6000 செலுத்திவிச்சு கொண்டு வந்தோம்.

அவர் பட்டம் ௵ 1. அவறுக்கு புத்திரனில்லாது னாலே மேலே யெழுதிப மூன்றாம் பட்டத்தில் லட்சுமபதி னாயக்கர் பெண்சாதி யிளைபதாரம் வெள்ளையம்மாள் குமாரன் முத்து வெங்கிடாத்திரி னாயக்கர் ஷெ. பெண்சாதி முத்தம்மாள். ஷெ குமாரன் கோதண்டறாம னாயக்கன். ஷெ பெண்சாதி வெங்கிட்டம்மாள். அவர் னாளையிலும் வகையிறுப்பு ரூபாயி 6000 தானே செலுத்தி கொண்டு வந்தோம். அவர் பட்டம் ௵ 2. ஷெ குமாரன் குமார சின்னோப னாயக்கன் அவர் னாளையில் திண்டிக்கல்லுக்கு கலகட்டறாகிய மகாராசஸ்ரீ வுஞ்சிதுரை னாளையிலும் அதுவே மேரைக்கு வகையிறுப்பு ரூபாயி 6000 தானே செலுத்திக் கொண்டு வந்தோம். அதன் பின்னாலே மகாராசமானியராசஸ்ரீ திண்டுக்கல்லுக்கு கலகட்டறாகிய அரடீசுதுரையவர்கள் னாளையில் கெஷ்திபந்தி வாயிதாப் பெறகாரம் கும்பினி காயிதா மேரைக்கு பணம் செலுத்தி வியலாமல் போனதுனாலே ஆயர் துரை வந்து சீர்மையை சப்த்தி செயிது போட்டார்களந்த முன்னுக்கு ஒரு ௵

பின்னுட்டு யிருந்து மறுபடி மகாராச மானியராச ஸ்ரீ ஆரடீசு துரையவர்கள் சமட்சமத்தில் குமார சின்னோப னாயக்கன் போயி கண்டு கொண்டதில் மகராச ஸ்ரீ ஆரடீசு துரை அவர்களுக்கு தயவு வந்து மாதம் 1க்கு ரூபாயி 100 மேரைக்கு சம்பளம் நிகுதி செயிது மாதாமாதம் சம்பளத்தை வாங்கி சாப்பிட்டு கொண்டு யிருக்கச் சொல்லி வுத்திரவு செயிதார்கள். அவர் பட்டம் ஷூ 1. ஷெ தம்பிலட்சுமபதி னாயக்கன் ஷெ பெண்சாதி பாப்பம்மாள் நாச்சியாரம்மாள், சின்னக்க அம்மாள். அவர் னாளையில் ரத்நாட்சி ஷூ 3 தையி மீ வரைக்கும் கும்பினிபார் நிகுதி செயிதிருந்த சம்பளம் நடந்து வந்தது. அதன் பின்பு மகாராச மானியராச ஸ்ரீ கும்பினி யாரவர்களுக்கு தயவு வந்து மதுரை, றாமனாதபுரம், சிவகெங்கை, திண்டுக்கல் சீர்மைக்கு கலக்கட்டறாகிய பாரிசு துரையவர்கள் சமட்சமத்துக்கு லட்சுமபதி னாயக்கனை வரவளைத்ததும் மகாராச மானிப ராசஸ்ரீ ஆரடீசு துரை யவர்கள் னாளையில் பைபிமாஷ்வேலூசு தீர்ப்புப்படிக்கு கணக்கு பார்த்து யெனக்கு பிரிதலான கணக்கு வுண்டான பணம் போக கும்பினியாறுக்கு செலுத்திவிடச் சொல்லி வுத்திரவு செயிததும், ரெண்டாயிரத்தி யெளுனூத்தி தொண்ணூத்தி னாலு மயிலை னார்ப்பத்தி ஒண்ணு காசி முப்பத்தி னாலு ஆக கலி பணம் 4913 பணம் கலிப் பணமும் கெஷ்த்தி பந்தி வாயிதா மேரைக்கி செலுத்திவிச்ச சொல்லி கும்பினியார் வுத்திரவு செயிந மேரைக்கு செலுத்தி கும்பினி யாருக்கு குமார வர்க்கமாயி மெத்தவுங் கீள்பட்டிருந்து கொள்குரேன் சுவாமி சித்தமரிய வேண்டியது. இந்தப்படி யேற திம்மனாயக்கர்.

# கொண்டம நாயகன் வமிசா வழி

## D. 2830

**கும்பினியாரவர்கள் சமுஸ்தானத்துக்கு பாலமுக கொண்டு வல்ல கொண்டமனாயக்கன் எழுதிக்கொடுத்த வங்கிச வளி**

பூருவம் எங்கள் முன்னோர்கள் குழந்தைவேல் வல்லக் கொண்டமனாயக்கன், றாயரவர்கள் சமஸ்தானத்தில்ப் போய் வெகுநாள் காத்திருந்தபோது ஒருநாள்த் தென்வயலார் யாவர்கள் சமட்சமத்தில் அடுத்துப் போயிநின்று ராயரவர் களைப் பார்த்து மகாறாசா நான் வெகுநாளாயி நிஜமாங் கள் பரிபூரண கடாட்சம் வேணுமென்பதாயி கோரி சமஸ் தானத்தில்க் காத்திருக்குரேன். ஆகையினாலே என்னிடத்தில்ச் சேவுகமுங்கொண்டு என்னையும் லட்சித்துக் காப்பாத்திக் கொள்ள வேண்டியதென்று நிரம்பவும் வணக்கத்துடனே சொல்லுதர சமாசாரம் கேழ்விப்பட்டு றாயரவர்கள் குழந்தைவேல் வல்லக் கொண்டம னாயக்கரைப் பார்த்து நீயே கேட்டுக்கொண்ட படிக்கே நடப்பிவிக்குரோமென்ப தாயி, சேந்திரகிரிச் சீர்மையில் சிறிது பூமி அமர(க)மாக விட்டுக்கொடுத்து யிந்த பூமியை அனுபவித்துக்கொண்டு யென் சமஸ்தானத்தில்க் காத்துக்கொண்டு யிருந்து யேதொரு சுவாமி காரியங்களிலும் சருவசாக்கிருதியாக நடந்துகொண்டு வாரு மென்று வஸ்திர தாம்பூலாதியங்களுங் குடுப்பிவிச்சு அபிமான மாக நடப்பிச்சுக்கொண்டு வந்தார்கள். அந்தபடிக்கி குழந்தை வேல் வல்லக் கொண்டமனாயக்கன் சிறிதுகாலம் அமரக்கிறாமத் தையும் அனுபவிச்சுக்கொண்டு சமஸ்தானத்தில்க் காத்திருக்கும் வரையில் கொட்டிகமனாகமனாயரவர்கள் குமாரராகிய விசுவ நாதநாயக்கரவர்களுக்கு றாயரவர்கள் பாண்டிய தேசாதிபத்தி யங்குடுத்து அனுபவிக்குர முன்னுக்கு விசுவனாதநாயக்கரவர்கள் பாண்டிய தேசாதிபத்தியங்குடுத்து அனுபவிக்குர முன்னுக்கு விசுவநாத நாயக்கரவர்கள், ராயரவர்களைப் பாத்து சொன்ன சமாசாரம் சேத்துநுவாதியள் வாசமாயிருக்குர வெகுதூர

தேசத்துக்கு போரபடியினாலே யிந்த முகத்து மனுஷர்களில் சேவுகர் விருத்தியில் மகாதிறாணிவான்களாயுள்ள மனுஷா ளாகச்சிரிது பேரையென்னுடனே கூட்டியனுப்பிவிக்க வேணு மென்று கேட்டுக் கொண்டதில் அவர்களும் அந்தப்படிக்கே செய்விக்கிறோமென்று குளந்தைவேல் வல்லக்கொண்டம னாயக்கனைப் பாத்து நீ ஒன்னுட செனங்களுடனே விசுவ நாதநாயக்கரவர்கள் தெட்சணம் சீர்மையிக்கிப் போரபடியி னாலே நீயும் அவர் பின்னோட போனால் அவர் வும்மை அதரணையாக நடப்பிவிச்சுக்கொண்டு வருவார்களென்று ஆக்கினாபிச்சு அந்த மெரைக்கி சகல பந்து சனங்களுடனே பிரப்பட்டு விசுவநாத நாயக்கரவர்கள் கூடவே தெட்சணம் சீமைக்கி வந்து சத்துருவாதியா யிருக்கப்பட்ட பேரையெல் லாம் செயிக்கிற காரியங்களுக்கு ரொம்பவும் பிரையாசப் பட்டது. நிசமாங்கள் சித்தத்துக்குத் தொணு நலாக யிருந்து ரொம்பவும் அபிமானித்து திண்டுக்கல்லுக்கு வடக்கே யெரி யோடு கிறாமமும் அதற்நச் சேந்த நிலபூமிகள் மேல்ப் பத்து னாளிகை வளி விஸ்தாரம் தென்வடல் யெட்டு னாளிகை வளிவிஸ்தாரம் யிதற்கு உள்ப்பட்ட பூமியும் பாளையப் பட்டாக விட்டுக்குடுத்து புத்திர பவுத்திர பாரம்பரிய மாகவும் ஆகச் சந்திராற்கமாகவும் ஆண்டு அனுபவித்துக் கொண்டுயிருக்கச் சொல்லி உத்திரவு குடுத்து பல்லக்கு வஸ் திராபரணமுங் குடுத்து, விருது, அனுமக் கொடி, கெருடக் கொடி, வெள்ளைப் பக்கரைடால், முக்த கண்ணாடி யுடையவன், வெண்சாமரை, வெட்டுப் பாவாடை கும்மனாத பரியுடையவன் யிது முதலாகிய விருதுகளெல்லாம் குடுத்து அனுப்பிவிச்சார்கள். அந்தப்படிக்கே குளந்தைவேல் வல்ல கொண்டம நாயக்கன் யெரியோடுக்கு வந்து அரமனையுங் கட்டிக் கொண்டு யிந்தச் செகறம் பூமியில் மேல்ப்படி வுபக்கிறாமபாதை நத்தம் கிறா மம் —1. அயிலூர்—1. நல்லமன்னார் கோட்டை—1. பாடியூர்-1 குளத்தூர் —1. பிலாத்து—1. பெரும்பள்ளி—1. ஸ்ரீராமனத் தம்—1. வேலாயுதம் பாளயம்—1. யிந்த ஒன்பது கிறாமம் உண்டு பண்ணிவிச்சு பாளைப்பட்டும் அனுபவித்துக் கொண்டு வரும் வரையில் கற்த்தாக்களாகிப விசுவநாத நாயக்கரவர்கள் மதுரைக் கோட்டை யெளுவத்தி ரெண்டு கொத்தளமாகப் போட்டுவிச்சு அந்தந்தப் பாளயக்காரர் ஒவ்வொரு கொத்தளத்

துக்கு மனுஷகளை நேமிச்சுக்காத்து வரும்படியாக திட்டம் பண்ணுகுர முன்னுக்கு, மதுரைக் கோட்டையில் வடக்குநெட்டில் திருமஞ்சனக் கோட்டை வாசலுக்குக் கிளக்கு, முதல் பிரதட்சணமாக 4 ம் கொத்தாளம் சிரிது திசை காவல்ப் பூமியாய் வட்ட மதுரைக் கிறாமம் முதல் சீலப்பாடிக் கிறமமும் பாதிகாவலுக்கு விட்டுக் குடுத்து அனுப்பிவிச்சார்கள். அந்தப்படிக்கி சிரிதுகாலம் பாளையப்பட்டு பண்ணிக் கொண்டு இருந்தார்கள். அப்பால் அவர் மகன் ரெண்டாவது அவர் மகன் றாயர் நாகப்ப வல்லக் கொண்டம நாயக்கர் அதே மோரைக்கி நடந்து கொண்டு வந்து கற்தாக்கள் சமஸ்தானத்துக்கு குமாரவற்கமாக நடந்து கொண்டு வந்தார்கள்.

மூணாவது அவர்மகன் ஆறுமுகவல்லக் கொண்டம னாயக்கர் அதே மேரைக்கி நடந்து கொண்டு வந்தார்கள்.

நாலாவது அவர்மகன் ஆருமுகவேல் வல்லக் கொண்டம நாயக்கர் அதே மேரைக்கி நடந்து கொண்டு வருகுர நாளையில் சிரிது கிறாமம் உண்டானது. ஆலக்குவாற்ப்பட்டி கிறாமம், 1. மல்லுவாற் பட்டிகிறாமம் 1. சித்தூர் கிறாமம், 1. தென்னம் பட்டி 1. சிங்காரங்கோட்டை கொல்லம்பட்டி, 1. கோம்பை 1. யிந்த பதினோரு கிறாமமும் அவர் னாளையில் புதுசாய் உண்டு பண்ணி முன்பாளயக் கிராமம் உள்பட கிறாமம் 21. அதுவுடனே சேற்ந்த உபக்கிராம பூமியும் அனுபவித்துக் கொண்டு வருகையில் தொப்பாப்பணம் சேவுகர் சம்பளத்துக்காக மாப்பு பண்ணிக் குடுத்து யிருந்தார்கள். அப்பால் அஞ்சாவது ஆருமுக வல்லக் கொண்டம னாயக்கர் மாமூல்படிக்கி நடந்து கொண்டு வந்தான். ஆறாவது அவர் மகன் முத்துக் குமாருவேல் வல்லக்கொண்டமனாயக்கர் அதே மேரைக்கி நடந்து கொண்டு வந்தான்.

யேளாவது ஆருமுகவேல் வல்லக் கொண்டம னாயக்கன் அதே மேரைக்கி நடந்து கொண்டு வந்தான்.

யெட்டாவது அவர் மகன் முத்துக் குமாற வல்லக் கொண்டம னாயக்கன் அதே மேரைக்கி நடந்து கொண்டு வந்தான்.

ஒன்பதாவது ஆறுமுகவல்லக் கொண்டம ணாயக்கன் அதே மேரைக்கி நடந்து கொண்டு வந்தான்.

பத்தாவது அவர் மகன் முத்துக் குமாருவேல் வல்லக் கொண்டம ணாயக்கன் அதே மேரைக்கி நடந்து கொண்டுவந் தான். பதிநோறாவது அவர்மகன் யேறனாகப்ப வல்லக்கோண் ணாய்க்கன் அதே மேரைக்கி ணடந்து கொண்டு வந்தான். பனிரெண்டாவது ஆறுமுகவேல் வல்லகொண்டம ணாயக்கன் அதே மேரைக்கி நடந்துகொண்டு வந்தான். பதிமுணாவது அவர் மகன் முத்துக்குமாரு வேல் வல்லக்கொண்டம ணாயக்கன் அதே மேரைக்கி நடந்துகொண்டு வந்தார்கள்.

பதினாலாவது ஆருமுகவேல் வல்லக் கொண்டம ணாயக்கன் அதே மேரைக்கி நடந்துகொண்டு வந்தான்.

பதினஞ்சாவது அவர் மகன் குளந்தைவேல் வல்லக் கொண்டம ணாயக்கன் அதே மேரைக்கி நடந்து கொண்டு வந்தான்.

பதினாறாவது முத்துக்குமாருவேல் வல்லக் கொண்டம ணாயக்கன் அதே மேரைக்கி நடந்து கொண்டு வந்தான்.

பதினேளாவது அவற் மகன் ஆருமுகவேல் வல்லக் கொண்டம நாயக்கன் அதே மேரைக்கி நடந்து கொண்டு வந்தான்.

பதினெட்டாவது அவர் மகன் முத்துக்குமாரு வேல் வல்லக் கொண்டம ணாயக்கன் அதே மேரைக்கி நடந்து கொண்டு வந்தான்.

பத்தொன்பதாவது அவர் மகன் குளந்தை வேல் வல்லக் கொண்டம ணாயக்கன் அதே மேரைக்கி நடந்து கொண்டு வந்தான்.

யிறுபதாவது ஆறுமுகவேல் வல்லக் கொண்டம ணாயக்கன் அதே மேரைக்கி நடந்து கொண்டு வந்தான்.

21-வது முத்துக் குமாருவேல் வல்லக் கொண்டம ணாயக்கன் அதே மேரைக்கி பாளையப்பட்டு ஆண்டு வருகை

யில் கற்த்தாக்களாகிய திருமலை னாயக்கரவர்கள் சடைக்கன் சேதுபதி பேரில் படையெடுத்து தளவாயி றாமப்பய்யரவர் களைக் கூட கூட்டி அவர்களுடனே சகலமான பாளயக்காறரை யும் கூடப்போயி சத்துருவைச் செயித்து வரசசொல்லி கற்த்தாக்கள் அவற்கள் உத்திரவாகி அந்த மேரைக்கி சகல மான பாளையக்காறரும் படையோட போரபோது முத்துக் குமாருவேல் வல்லக் கொண்டம னாயக்கனும் தன் சேர்ந்தச் சனசேகரத்துடனே கூடப்போயிச் சண்டை சமரங்களில் அனேகவிதமான உயித்தம் பண்ணி கற்த்தாக்கள் அவர்கள் படை செயங்கை கூடும் படிக்கி செய்விச்சபடியினாலே தாங்கள் அவர்கள் முத்துக்குமாருவேல் வல்லக் கொண்டம னாயக்கன் பேரில் ரொம்பவும் சந்தோஷப்பட்டு அனேகவித மான வெகுமதி செய்து அனுப்பிவிச்சு அந்த மேரைக்கி அவரும் பாளயப்பட்டு ஆண்டு வந்தார்.

இருவத்தி ரெண்டாவது அவர் மகன் குளந்தை வேல் வல்லக் கொண்டம னாயக்கன் அதே மேரைக்கு நடந்து கொண்டு வந்தான்.

இருபத்தி மூணாவது அவர் மகன் ஆருமுகவேல் வல்லக் கொண்டம னாயக்கன் அதே மேரைக்கு நடந்து கொண்டு வந்தார்.

இருபத்தி னாலாவது அவர் மகன் முத்துக்குமாரு வேல் வல்லக் கொண்டம னாயக்கன் அதே மேரைக்கி நடந்து கொண்டு வந்தார்.

இருவத்தி அஞ்சாவது அவர் மகன் ஆருமுகவேல் வல்லக் கொண்டம னாயக்கர் அதே மேரைக்கி நடந்து கொண்டு வந்தான்.

இருவத்தாறாவது அவர் மகன் ஆருமுகவேல் வல்லக் கொண்டம னாயக்கன் அதே மேரைக்கி நடந்து கொண்டு வந்தான்.

இருவத்தேளாவது அவர் மகன் முத்துக் குமாரு வல்லக் கொண்டம னாயக்கன் அதேமேரைக்கி நடந்து கொண்டு வந்தான்.

இருபத்தெட்டாவது அவர் மகன் குளந்தைவேல் வல்லக் கொண்டம ·னாயக்கன் அதே மேரைக்கி நடந்துகொண்டு வந்தான்.

யிறுபத்தொன்பதாவது அவர் மகன் ஆறுமுக வல்லக் கொண்டம னாயக்கன் அதே மேரைக்கி நடந்து கொண்டு வந்தான்.

முப்பதாவது அவர் மகன் குளந்தைவேல் வல்லக்கொண்டம னாயக்கன் அதே மேரைக்கி நடந்து கொண்டு வந்தான்.

முப்பத்தோறாவது அவர் மகன் குமாரு வல்லக்கொண்டம னாயக்கன் அதே மேரைக்கி நடந்து கொண்டு வந்தான்.

முப்பத்தி ரெண்டாவது அவர் மகன் குளந்தைவேல் வல்லக் கொண்டம னாயக்கன் அதே மேரைக்கி நடந்து கொண்டு வந்தான். முப்பத்திமூணாவது அவர் மகன் முத்துக் குமாரு வேல் வல்லக் கொண்டம னாயக்கன் அதே மேரைக்கி நடந்து கொண்டு வந்தான்.

முப்பத்தி னாலாவது அவர் மகன் ஆறுமுக வல்லக் கொண்டம னாயக்கன் னாளையில் பாளையபட்டை ஆண்டு வருகையில் கற்தாக்கள் சமஸ்தானம் யெடுபட்டு சந்தேசாயபு, பட்டே சாயபு கலாபத்தில் திண்டுக்கல் முதல் மேற்குப் பட்ட சீர்மைகளும் அதனுடனே சேந்த பாளையப்பட்டுகளுக்கும் கன்னட தேசத்து றாசாவாகிய கற்தா ஆக்கிரமித்துக் கொண் டார். அவர்களுக்குள்ளாகவும் ஸவியமாகவும் நடந்து கொண்டு வந்தார்.

முப்பத்தஞ்சாவது அவண் மகன் முத்துக்குமாருவேல் வல்லக் கொண்டம னாயக்கன் அதே மேரைக்கி நடந்து கொண்டு வந்தான்.

முப்பத்தாறாவது அவர் மகன் குளந்தைவேல் வல்லக் கொண்டம னாயக்க னாளயில் அயிதர் கர்த்தரைக் கைவசப் படுத்திக்கொண்டு சீர்மை ஆக்கிரமித்துக் கொண்டார்கள். அப்போது அவர்களுக்குள்ளாவும் சவுக்கியமாய் நடந்து கொண்டார்.

முப்பத்தேளாவது அவர்மகன் முத்துக்குமாருவேல் வல்லக் கொண்டமனாயக்கன் அதே மேரைக்கி நடந்து கொண்டார்.

முப்பத்தி யெட்டாவது அவர் மகன் முத்துக்குமாருவேல் வல்லக் கொண்டமனாயக்கன் னாளையில் டீபுசுலுத்தான் அவர்கள் னாளையில் திண்டுக்கல் சீர்மை அதிகாரி சய்யது சாயபு சீர்மையைக் கூட்டிக்கொள்ள வேணுமென்பதாய் படை யெடுத்து யொட்டுக்கொட்டையும் வளைந்து அவரையும் பிடித் துக்கொண்டு திண்டுக்கல் மலயிலே யேளு வருஷம் வரைக்கும் பந்தி கானாவிலே போட்டுக்கொண்டு சீர்மையும் அநுசரித்துக் கொண்டு இருந்தார்கள். அப்படி இருக்கையில்க் கும்பினியார வற்கள் சீற்மைக்கி றாசாவாக வந்ததின் பிறகு யெங்கள் பூரு வீகம் விசாரித்து திண்டுக்கல் மலையில் பந்திகானாவிலே யிருந்து முத்துக்குமாருவேல் வல்லக்கொண்டமனாயக்கனை வரவளைத்து யெங்கள் பாளையப்பட்டு விட்டுக்குடுத்து யெரியோடுச் சீற்மையில் பட்டமுங் கட்டிவிச்சார்கள். அன்றுமுதல் ஆறு வருஷம் வரைக்கும் கும்பினியாரவர்களுக்குண்டான தோப்பா பணமுங்கட்டிக் கொண்டு கும்பினியாரவர்களுக்குப் பிஷ்லியாகக் கீள்ப்பணிந்து நடந்து கொண்டு வருகையில் திண்டுகல்லுக்குக் கலக்கட்டரவர்களாகிய மகாறாஜ மானிய றாஜ ஓஞ்சிதுரை அவர்களுக்கு மேல்பட்டி பேஷ்கார் வாசுதேவப் பிள்ளைக்கும் லஞ்சம் லாவணம் குடுத்த கணக்கு விளங்குரதற்காக மெஸ்தர் அரிட்டன் சாயபு துரையவர்களும் சேலஞ் சீமைக்கி கலக்கட்டர வர்களாகிய மக்களூட்டு சாயபு துரையவர்களும் வந்திருந்து கொண்டு திண்டுக்கல் பாளயக்காரரையெல்லாம் வரச்சொல்லி வுத்திரவாச்சுது. அப்போது முத்துக் குமாருவேல் வல்லக் கொண்டம னாயக்கனுக்குள்ளாக்க காருபாரியாக யிருந்த வெங் கிட சுப்பய்யனென்கிறவன் நீர் திண்டுக்கல்லுக்குப் போகப் படாது போனால் முன்னால் சையிது சாயிபு னாளையில்ச் சிக்கி அவதிப்பட்டது. யிப்போ போனால் அப்படியே நடக்கும் போலேயிருக்கிறதென்று ரொம்பவும் பயமாகச் சொல்லிப் போட்ட படியினாலேயும் அந்த முத்துக் குமாருவேல் வல்லக் கொண்டம னாயக்கன் சிரு பிள்ளையான படியினாலேயும் னானாவித யோசனையாயித் திண்டுக்கல்லுக்குப் போகாமல்ப்

போனான். அதில்க் கும்பினியார் அவர்களுக்கு பாளயக்காரரெல்லாம் வந்து கண்டு பேசிவிச்சுக் கொண்டு போக இவன் வறாமல் போக வேண்டிய தென்னவென்று திண்டுக்கல்லிலிருந்து ஒரு கும்பினி வாரவந்தது. மணப்பாரையிலிருந்து ஒரு கும்பினி வாரவந்தது. அப்படிக்கி வாரவந்தபடியினாலே பிடித்துக் கொண்டு போவார்களென்றெண்ணி தன் பாளையப்பட்டையும் விட்டுப் போட்டு ஓடிப் போயிவிட்டான். காருபாரி வெங்கிட சுப்பய்ய னென்கிறவன் முத்துக்குமாருவேல் வல்லக் கொண்டம னாயக்கனையும் விட்டுப்போட்டு தொண்டமான் சீர்மைக்கி ஓடிப்போய் விட்டான். முத்துக்குமாருவேல் வல்லக் கொண்டம னாயக்கன் அம்மய னாயக்கற் ஊர் வந்து சேர்ந்திருந்தான். அப்போது திண்டுக்கல்லுக்கு கலெக்டராகிய மகாறாஜ மானியரு மேஸ்தர் ஆறடீசு சாயபு துரையவர்கள், அப்போது அம்மைய னாயக்கற் ஊரிலிருந்து முத்துக் குமாருவேல் வல்லக் கொண்டமனாயக்கனை வர வளைத்து சாலுவையுங் குடுத்து னூரு ரூபாயுங் குடுத்து ஒனக்கு கமுட்டிக்கி யெளுதியனுப்பிவிச்சு ஒன்பாளையப்பட்டு வரும்படியாக செய்துவைக்குறேன். நீ அம்மய னாயக்கன் ஊரிலே தானேயிரென்று உத்திரவாச்சுது. உத்திரவான மேரையே அம்மய னாயக்கன் ஊரிலிருந்தான். அப்படிக்கி யிருக்கையில் அதற்கு யிருபத்தி ரெண்டானாள் கமட்டியிலிருந்து உத்திரவு வந்திருக்குர தென்பதாய் வரச் சொல்லி மகாறாஜ மானிய றாஜஸ்ரீ மேஸ்தர் ஆரடீசு சாயபு துரை அவர்கள் சமட்சமத்திலிருந்து உத்திரவாச்சுது. அப்போது போறதற்கு அவருக்கு வசூரிகொண்டு ரொம்பச் சங்கட்டமாயிருந்துது. அது சவுக்கியமாக ரெண்டு மாசங்கிரமிச்சுது.

அதன்பிறகு திண்டுக்கல்லுக்குப் போயி மகாராஜமானிய றாஜஸ்ரீ ஆரடீசு சாயபு அவர்களைக் கண்ட முன்னுக்கு உத்திரவானது. ஒனக்கு மாசம் நூறு ரூபாய் சம்பளம் வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டுச் சுகமே இருக்கச் சொல்லி உத்திரவாச்சுது. அதே மேரைக்கி மாசமாசம் அந்தச்சம்பளம் னூறு ரூபாயும் வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டு அம்மய நாயக்கர் ஊரிலே யிறுந்தார்.

LIBRARY

அப்படி இருக்கையில் போன ஞூ விருபாட்சி லட்சும னாயக்கன் கலாபத்து நிமித்தியமாய் சப்த்தியாயிருந்த பாளய காரரை யெல்லாம் திண்டுக்கல்லுக்கு வரச்சொல்லி உத்திர வாச்சுது. அந்த உத்திரவுப் பிரகாரம் முத்துக்குமாருவேல் வல்லக் கொண்டம னாயக்கன் திண்டுக்கல்லிலாருமாசங் காத் திருந்தான். அதின் பிறகு மகாராஜ மானிய ராஜஸ்ரீ பாரீசு சாயபுதுரை அவர்கள் சப்த்தியாயிருந்த பாளைக்காரரை யெல்லாம் மதுரைக்கி வரச் சொல்லி உத்திரவாச்சுது.

உத்திரவு பிரகாரம் மதுரையில் உசூர்க்கச்சேரியில் ரெண்டு மாசம் வரைக்கும் காத்திருந்தார். அப்போது சப்த்தியா யிருந்த பாளயக்கார் சிலது பேறுக்குப் பாளயப்பட்டு விட்டுக் குடுத்தார்கள். முத்துக்குமாருவேல் வல்லக் கொண்டம னாக்க கருக்குச் சீர்மை விடுகுரதற்கு உத்திரவில்லை யென்று சொன்னபடியினாலே அதே மனதிலே வியாகூலமாயி சரீர சவுக்கிய மில்லாமல்த் தானே ரத்தாட்சி ஞூ, மார்களி மீ", 22 தேதி தெய்வீக மடைந்து போனார்.

அவருக்கு ஆண்பிள்ளையில்லாத படியினாலே அவர் தகப்பனாருக்குத் தாரம் மூணு. அந்த மூணு தாரத்துக் கும் மூணு ஆண்பிள்ளையள் அதில் மூத்ததாரத்துப் பிள்ளை முத்துக் குமாருவேல் வல்லக் கொண்டம னாயக்கன். ரெண்டாந்தாரத்துக்குப் பிள்ளை குளந்தைவேல் வல்லக் கொண்டம னாயக்கன் தெய்வீகமாய் விழுந்துப் போனார். அவருக்கும் பிள்ளையளில்லை. மூணாந்தாரத்துக்கு னான் முத்துக் குமார வேல் வல்லக் கொண்டம னாயக்கன். யென் கூடப்பிரந்த அண்ணன்மார் ரெண்டு பேருக்கும் பிள்ளையளில்லாமல் அவரும் விளுந்துபட்டுப் போனபடி யாலே அவரும் விளுந்து பட்டுப்போனார்.

அந்தப் பட்டத்துக்கு னானுடையவனான படியினாலே யென் பேரில் கும்பினியாரவர்கள் பிள்ளையாகப் பாவித்து யென் பாளையப்பட்டு யெனக்கு வந்து சேரும்படிக்கி கடாட்சம் வைத்து விட்டுக் குடுத்து காப்பாத்தி லட்சிக்கவேண்டியது.

யிந்தப்படிக்கி ஷெடி சமீன்தார் கையெளுத்து

**வல்லங்கொண்டம னாயக்கன்.**

# நத்தம் லிங்கமனாயக்கர் வம்சாவளி

## D: 2831

முதல் குறோதன ஸு பெரட்டாசி மீ 5 தேதி சொக்கலிங்க மனாயக்கர் யெளுதிக் கொண்டது :-

ஆனெ கொந்தி நகரத்து மேலே மொகலாயி படை வந்து யிரங்கி வெகு கால பரியந்தம் தர்மமாஸ்தூர் ஸ்வர்க்கங்கள் விடாமல் வெகு நிர்ப்பந்தனங்கள் பண்ணி சமஸ்தானம் யெடு பட்டுப் போறதாகயிறாக்குந்தருணத்தில் றாய தேவர் மகா ஸ்வாமி அவர்கள் கொலுவு கூடத்துக்கு வந்து அமர்க்காரற் சகிதமாக சகலமான பாளயகாரரையும் சகலமான சருதாற்களை யும் வரவளச்சிக் கொண்டு மந்திறாலோசினை பண்ணி நிச்சயம் செய்து சபையிலிருக்குறவற்களுக்கு ஆக்கினை செய்விச்சது. பிறாணத்துக்கு ஆசைப் படாமல் கீர்த்திக்கி உள்ப்பட்ட ஆண் பிள்ளை தீரறான அவர்கள் யிந்தக் கொலுவில் யிருந்து மஞ் சள்ப்பாவாடை யெடுத்துக் கொண்டு சமரசன்னாக மாகுரவற்கள் லாவணத்தில் யெளுதி பாக்கு வெத்திலை யெடுத்துக்கொண்டும் மஞ்சள்பாவாடை யெடுக்கச் சொல்லுகிரபோது அப்போ அன்பதினாயிரந் தன்ம மஞ்சள் பாவாடை உடுத்திக் கொண்டு பாக்கு வெத்திலையும் யெடுத்துக் கொண்டு சகல சன்னாகமான தில் சந்திரகிரி அமரலிங்கமனாயக்கர் தன் சொந்தம் குடிவகை யில் மரந்த பிள்ளையளுக்கு விவரம் பொட்டியம்மாள் மக்கள் பெரியசாமி, சின்னச்சாமி, பெரிய பாபம்மாள் மக்கள் யெற்ற லிங்கம். முத்துலிங்கம், யிம்மிடிலிங்கம், தாதம்மாள் மக்கள் நல்லன் - பூசனன். சின்னம்மாள் மக்கள் பாபன், சந்திரகிரி. சின்ன பாப்பம்மா வுக்கு பிள்ளையளில்லை. பொட்டுக் கட்டின வைப்புப் பொண்டாட்டி, ரத்தினம்மாள் மக்கள் கிஷ்ணசாமி, வெங் கிடசாமி, அனந்தசாமி, ரங்கசாமி. காமாட்சியம்மாளுக்கு மக்கள் முத்துச்சாமி, தொந்திசாமி யிந்தப்படி குடிக்கிப் பெண்டாட்டியள்5, வைப்பு வகைப் பெண்டாட்டியள் 2. ஆக யேளு பெண்சாதிமாருக்குப் பிரந்த மக்களும் மரு

படி கனிஷ்ட சகோதரர்கள் யமஷ் நாயக்கர், சந்திரகிரி நாயக்கர் முத்து நாயக்கர், தொந்தி னாயக்கர், யெரதாது னாயக்கர், சொக்கய நாயக்கர் யிந்தத்தம்பிமார்களும் யிவற்கள் மக்கள் 15, பேரும் யிந்தப் பிரகாரமாய் மாமன் மச்சினன் மொதல் பெரிய தகப்பனார் சிரிய தகப்பனார் அவர்கள் மக்கள் யிந்தப்பிரகாரமாய் சொந்தமாய் ஒரே ரெத்தக் கலப்பான சனம் அஞ்ஞூறு பேருக்கு யேர்பட்டு மஞ்சள்ப் பாவாடை உடுத்திக் கொண்டுயிருக்கிற சில்லவாரு லிங்கம னாயக்கரைப் பாத்து ராய தேவர் மகாசுவாமி யவர்கள் ஆக்கினாபிச்சபடி உன் பிறகு பின்னும் சிறிது தளம் அனுப்பிவிக்குகிறோம். னீயும் வொரு முகத்தில்ப் போயி ரஸ்து கொண்டு வரச் சொல்லி உத்திரவு பண்ண மகாப் பிரசாதமென்று, பதினாயிரந் தளத் தோட கூடபோயி இவர் போன யிடத்தில் யிருந்து ரஸ்து கொண்டு வருகுரபோது மொகலாயி படை குருக்கிட்டு சண்டை பண்ணயில் லிங்கமனாயக்கர் செனம் மொகலாயி படையை பலாயீனமாகப் பண்ணி வேண்டிய ரஸ்து கொண்டு வந்து சேர்த்ததில் மகா சுவாமி யவர்களுக்கு சந்தோஷம் வந்து சகலமான விருதுகளும் வெகுமதிகளும் குடுத்து சந்தோஷமாகி மருனாள் தளத்துக்கு தளனாயகனாகச் செய்து ராத்திரி கெண்டா பேரியும் கெடியாரமும் பகல் தீ வெட்டியும் றாயமல்லாரி மொதலான சந்திர வாத்தியம், சூரிய வாத்தியம், நகாரா பூசக்கிரக் கொடையும், சூரிய பானு சந்திர பானு, பாவாடைகள், சாமரங்கள், டெக்கியங்கள் கட்டியக்காரர் கடிகம் சமஸ்தான விருதுகளும் குடுத்து பாரி யானை சவுடோல் மேலே உழுக்காரச் சொல்லி பட்டணப் பிரவேசம் பண்ணிவிச்சு நடை நாடகசாலையோடே விடுதிக்கி வந்து யிருந்து மருத்தொருனாள் மொகலாயி அவர்கள் மேலே சண்டைக்கிப் போனயிடத்தில் யெதுர்ப்பாலம் போட்டுக் கொண்டு ஆருனாள்ப் போராடி யேளானாள் ராத்திரி பகல் அருவது னாளிகலும் நித்திராகாரங்கள் யில்லாமல் சண்டை பண்ணுகுரபோது லிங்கமனாயக்கர் செனம் அஞ்ஞூரு செனமும் உழ் புகுந்து முன்னேரி கை கலந்து சண்ட பண்ணயில் அதின் பிரகு யிருக்கிர தளமெல்லாம் உழ்ப்புகுந்த வரையில் மொகலாயி அவர்களும் குதிரையள் போட்டு அனேகமான தளங்களைச் சேதங்கள் பண்ணி மருபடி நிருபாகம்

பண்ண மாட்டாமல் ஓடிப் போய் சமாதானத்துக்கு வந்து சமாதானமாகி அதின் பிறகு ராய மகாதேவர் மகாசுவாமி அவர்கள் ஆக்கினாபிச்சி தளம் வந்து போக்கு சோதினை பண்ணினதில் வீர சொர்கத்தை யடைந்த பேர்கள் போக காயத்தோடே பிளைத்த தளம் ஒன்பதினாயிரத்திச் சொச்சம். வீரசொர்கத்தை அடைந்த யடைந்த பேர்கள் னார்பதினாயிரத்துச் சொச்சம். அதில் சந்திரகிரி அமரம் லிங்கமனாயக்கர் செனம் அஞ்ஞூறு பேரில் மச்சம் லிங்கமனாயக்கரும் இவர் பெண்சாதி பெரிய பாப்பம்மாள் மகன் யெரலிங்கமனாயக்கரும் அன்னியவக பொட்டுக் கட்டின வைப்புவக காமாட்சியம்மாள் மகன் தொந்திசாமியும், இந்த மூனுபேரில் தொந்திசாமி சண்டையில் அனேகம் பேரை வெட்டி தானும் இரவத்தேளு காயத்துடனே மலைச்சரிவு வோடையிலே சருகுலே புதைந்து பிராணங் களிலிருந்து யெடுத்துக் காயங்கள் கட்டி பிளைச்ச படியினாலே ராயல் தேவர் மகாசுவாமி யவர்களுக்கு சந்தோஷம் வந்து யிந்தத் தொந்திசாமியைச் சருகு தொந்தி லிங்கம னாயக்கரெண்று பேருங் குடுத்து யெல்லோரையும் சருகு தொந்தி லிங்கம னாயக்கரென்று கூப்பிடச்சொல்லி ஆக்கினாபிச்சதில் அண்ணு முதல் தொந்தி சாமி, சருகு லிங்கம னாயக்கரென்று இப்படி யிருக்கையில் பாண்டிய ராச்சியம் காடுபடுத்தி மதுராபுரிக்கி யாத்திரை வருகுறவர்களுக்கு வளிபாதை சரகமில்லாம ராச்சியமும் யெங்கே பார்த்தாலும் கள்ளரும் மிருகங்களும் பிரபலமாய் பாதைகள் புதைபட்டு யிந்த வற்தமானம் ராயல் தேவர் மகாசுவாமியவற்களை கேள்விப்பட்டு லிங்கம னாயக்கரை வரவளைத்து மதுரைக்கி வடக்கு பாரிசம் துவாராவதி நாடான பூமி குடுத்து ஆச்செந்திரார்கமாய் புத்திர பவுத்திர பாரம்பரியமாக சுத்தமானியமாக அனுபவித்துக் கொள்ளச் சொல்லி வுத்திரவு கொடுத்து அனுப்பிவிச்சதில் சந்திரகிரி வந்து சகலமான பந்துக்களையுங் கூட்டிக்கொண்டு குலதெய்வ மான சந்திரகிரி மல்லாண்டாற் சகிதமாக சகல பரிவாரத் துடனே வந்து துவராவதி நாடான நத்தம்பூமி ராச்சியம் காடு வெட்டிவிச்சு கண்மாய் கால் குளங்கள் ஊருகள் கிறாமங்கள் சகலமானதும் உண்டுபண்ணிக் கொண்டு ராச்சிய

பாரம் பண்ணின லிங்கம னாயக்கர் ஒன்பது தொரைத்தனம் பண்ணி பரமபதத்துக்குப் போனார். அவருக்குப் பிரகு பெரிய பாப்பம்மாள் மகன் யெற்ற லிங்கம னாயக்கர் யேளு வருஷம் தொரைத்தனம் பண்ணி பிள்ளையளில்லாமல் தெய்வீகமானார்.

அவர் தகப்பனார் அன்னியவகைப் பொட்டுக் கட்டின காமாட்சி அம்மாளுகுமாரனான தம்பி சருகு தொந்தி லிங்கம னாயக்கர் தொரைத்தனம். யிவருக்கு குடிவகைப் பெண்சாதியள் நாரணம்மாள், சந்திரம்மாள், யிந்த ரெண்டு பேரில் னாரணம்மாளுக்கு பிள்ளையளில்லை.

சந்திரம்மாளுக்கு ரெண்டு பிள்ளையள். யிந்த ரெண்டு பிள்ளையளிலே யிமிடி லிங்கம னாயக்கர் பட்டம். யிவருக்கு குடிவகைப் பெண்சாதியள் காமம் சின்னம்மாள், யெர்ரம்மாள். வைப்பு வகையில் ரங்கநாயக்கருக்கு அஞ்சி பெண்சாதியள். யிந்த அஞ்சு பேரில் குடிவகப் பெண்சாதியள் மூணு பேருக்கு பிள்ளையளில்லை. வைப்பு வகையில் ரங்கம்மாளுக்குப் பிரந்த முத்துலிங்கம னாயக்கர் பட்டம். இவர் பெண்சாதியள் வீரக்கம்மாள், காசியம்மாள், கொப்பம்மாள். வைப்பு இல்லை. காசியம்மாள் குமாரன் யிமிடிலிங்கம னாயக்கர் பட்டம். யிவருக்கு குடிவகைப் பெண்சாதியள் பொம்மக்கா, கோனக்கா சென்னக்க. வைப்பு இல்லை. கோனக்க குமாரன் முத்து லிங்கம னாயக்கர் பட்டம். யிவர் பெண்சாதியள் சந்திரம் மாள், புச்செம்மாள், மீனம்மாள், கிருஷ்ணம்மாள், தேவம் மாள். யிந்த அஞ்சு பேரில் சந்திரம்மாளுக்குப் பிரந்த யிம்மிடி லிங்கம னாயக்கர் பட்டம்.

யிவருக்கு குடிவகையில் பெண்சாதியள் காமம்மாள், பாச்சம்மாள், நல்லம்மாள் ஆக மூணுபேர். வைப்பு வகையில் அளகம்மாள். ஆகனாலு பெண்சாதிகளிலே குடிவகையில்ப் பிரந்த பிள்ளையள் வமுசம் நின்று போச்சுது. வைப்பு வகையில் அளகம்மாள் குமாரன் தொந்திலிங்கம னாயக்கர் பட்டம் யிவருக்குக் குடிவகை சவுந்திரம்மாள், சீதம்மாள். சீதம்மாள் குமாரன் முத்துலிங்கம னாயக்கர் பட்டம். யிவர் பெண்சாதியள் அகிலாண்டம்மாள், பாபம்மாள், மீனம்மாள். பாபம்மாள் குமாரன் யிம்மிடிலிங்கம னாயக்கர் பட்டம் இவர் பெண்

சாதியள் தாயம்மாள், அச்சியம்மாள், பூச்சியம்மாள், சைவம்மாள். சைவம்மாள் குமாரன் தொந்தி லிங்கமனாயக்கர் பட்டம்.

இவர் பெண்சாதியள் மல்லம்மாள், லிங்கம்மாள், சின்னம் மாள். வைப்பு வகையில் சின்னத்தாயி, பெரியதாயி. ஆக அஞ்சு பெண்சாதியள். யிந்த அஞ்சுபேற் பெண்சாதியளிலே குடி வகைப் பெண்சாதி மல்லம்மாள் குமாரன் சொக்கலிங்கம னாயக்கர் பட்டம். யிவருக்கு மகன் தொந்திலிங்கம னாயக்க றோடே மல்லம்மாள் வமுசம் நின்று போச்சுது. குறைக் குடி வகைக்கிப் பிள்ளையில்லை. பொட்டுக்கட்டின அன்னிய வகை வைப்பு சின்னத்தாயம்மாள். குமாரன் யெரதாது லிங்கம னாயக்கர் பட்டம். இவருக்குக் குடிவகை பெண்சாதி தாதம் மாள் வயத்தில்ப் பிரந்த குமாரன் குமாருலிங்கம னாயக்கர் பட்டம் ஆள்கையில் ஆணைக் குட்டியா பிள்ளை அதிகாரத் துக்குப் பிறபாடு சொக்கயபிள்ளை யெங்குரவனுக்கு அதிகாரங் குடுத்து யிருந்துது.

அவன் காருபாருலே அசரது நவாபு சாயபு அவர்கள் மதுரை ராச்சியத்துக்கு கான் சாயபுக்கு அமுல் குடுத்து மதுரைச் சீமை வசஞ்செய்து கொண்டு அவன் னபாபு சாயபு அவர்களுக்கு யெதுரு பாவிச்ச முன்னுக்கு, அவனுக்குப் புத்தி சொல்ல வேணு மென்றுப் பாளையம் வருதரதாயிருக்குர முன்னுக்கு கான் சாயபு ஆனவன் னத்ததுக்கு சொல்லியனுப்பிவிச்சு சொக்கயப் பிள்ளயைத் தருவிச்சுத் தனக்கு ஒத்தாசையாயிருந்து னத்தம் கணவாயள் கட்டிக்கொண்டு பாளையம் வறஒட்டாமல் செய்ய வேணுமென்று பேசினதில் அந்தச் செய்திக்கி துரைக்கி யெழுதி அனுப்பிவிச்சு சேர்குறதாகச் சொல்லி னத்தத்துக்கு சொக்கய பிள்ளை சொல்லி அனுப்பிவிச்சதில் குமாருலிங்கம னாயக்கர் சொன்னது. னாம் சர்க்காருக்கு குமார வர்க்கமாயிருந்து சுவாமி காரியம் முக்கியமாக நடந்து கொண்டு வருகுர காரியத்தில் யிப்போது சுவாமித்துறோகம் செய்யக் கூடாதென்று சொன்னார். அப்போது மம்மது இசுபுகான் சொக்கயப் பிள்ளையை கைய்வசமசைவிச்சுக் கொண்டு நத்தத் துரை மகனைப் பிடிச்சி தூக்கிலே போட்டு அந்த ராச்சியம் சொக்கப்ப பிள்ளைக்கி யினாங் குடுத்து சாசுவதமாக நடப்பி விச்சுக் குடுக்குரதாக சொக்கயபிள்ளைக்கி உருதிசொல்லி அவெனி

டத்தில்ச் சத்தியம்கொண்டு கொண்டு யெங்கழுக்குத் திருமலை னாயக்கரவர்கள் னாளையில் கர்த்தாக்களவர்கள் விட்டுக் குடுத்து யிருந்த வெளாங்குடி தத்தனேரியும் தோரணம் வச்சுக்கொண்டு னத்தத்து ராச்சியங் கட்டிக்கொள்ளவேணு மென்று பட்டாளம் குதிரையுங் கூட்டிக்கொண்டு சொக்கய பிள்ளை வருகுரானென அரிஞ்சி குமார லிங்கம னாயக்கரான யென் தகப்பன் யிவையரிஞ்சு கட்டிக்கொண்ட வஸ்தரத்துடனே தப்பி சிவகெங்கை ராச்சியம் ஆத்திக்காட்டுச் சேந்து யித்தியாதி வித்தியமானமெல்லா மன் பாபு சாயபு அவர்களுக்குத் தெரியு மட்டியாக அரிசியெழுதிக் கொண்டு உத்தரவு வந்து யென் தகப்பன் திருசிரபுரத்துக்குப் போயி நபாபுசாயபு அவர் களிடத்தில்க் காத்திருந்தார். படிபுங் குடுத்து வச்சிக்கொண்டு யிவரும் மாசம் ஒண்ணுக்கு முன்னூரு ரூபாயும் வாங்கிப் படிச் சிலவுபண்ணிக் கொண்டு காத்திருந்தார். னத்தம் ராச்சியம் சொக்கபிள்ளை ஆக்கிரமிச்சுக்கொண்டு சறுவச் சொத்தும் ஆக்கிரமிச்சுக் கொண்டு ராச்சியம் எடுத்து சொக்கயபிள்ளை தானாக துரைத்தன செய்குரதாய் யெத்தினிச்சதில் குடியள் கலைஞ்சு ஒடிப்போச்சுது. அந்தக் குடியளுக்கு கவில் குடுத்து அழைச்ச முன்னுக்கு துரையில்லாத ஊரிலே குடித்தனம் செய்குறது இல்லையென்று சொல்லிப்போட்டார்கள். அப்போது சொக்கையப் பிள்ளை ஒரு தொட்டியனுக்கு பட்டங்கட்டி வச்சுக்கொண்டு தாள் துரைத்தனம் செய்ய யெத்தனிச்சு னத்தத்து ராச்சியத்தில் இருக்குர பேர்களில் துரைத்தனத்துக்கு ஒரு பிள்ளைனயக் குடுக்கச் சொல்லிக் கேட்டான். ஒருத்தரும் சம்மதிக்க மாட்டோமென்று சொல்லிப் போட்டார்கள். அப்போது ஆருமாகாணஞ் சீமைக்கு விருதனாயகம்பட்டியில் கம்பளத்தாருக்குத் தங்கள் கண்டவிடத்தில் போக தீர்த்த தண் ணீருத்தி சுத்தம் செய்விக்குர னாயக்கனென்று பெரிய வீட்டுக் காரனுக்கு செய்தி சொல்லி அவன் மகனைக் கொண்டுவந்து துரையென்று வைச்சுக்கொண்டு அந்தனத்தத்துக்குத் தென் புரங் கோட்டையும் போட்டுக் கொண்டு ஆறு மாசம் வரைக்கும் சொக்கயப் பிள்ளை வலுவில்த்தானே துரையாக யிருந்தான்.

றாச்சியத்துக் குடிகளும் சுவாதீன மில்லாமல் அலக்களி வாகவே யிருந்தது. அப்படியிருக்கையில் நவாபு சாயபு

அவர்கள் பாளயம் வருகுர முன்னுக்கு யென் தகப்பனுக்கு சோடு சாலுவையுங் குடுத்து, பல்லாக்குங்குடுத்து பாளைய முங் கூட்டி பூச்சிய னாயக்கரையுங் கூடபோயிருந்து ராச்சி யம் சுவசப்படுத்திக் குடுக்கச் சொல்லி அனுப்பிவிச்சு வந்து கணவாயில் யிறங்கின உடனே கான்சாயபும் பாருங் குதிரை யுஞ் சொக்கயப்பிள்ளையும் கருத்த னாயக்க னெங்குரவனும் ஓடிப்போயி விட்டார்கள். உடனே னத்தம் வந்து சேந்து றாச்சியம் சுவசம் சைவிச்சுக்கொண்டுன பாபு சாயபு அவர்கள் உத்திரவின்பேரில் ஓடிப்போயிருந்த சொக்கயப் பிள்ளையைத் தருவிச்சுக்கொண்டு அவன் கொண்டுபோயிருந்த ஆதிக்கத்துச் சொத்துக்களும் தருவிச்சுக்கொண்டு அவன் மருபடியும் வஞ்ச னைக்கி யிடம் பண்ணின தருணத்தில் அவனெயும் ஆக் கினை செய்து போட்டார்கள்.' அதின் பேரிலே னபாபு சாயபு அவர்கள், கான் சாயபுக்குப் புத்தி சொல்லி திருசிரபுத்துக்குச் சாகி போர முன்னுக்கு மதுரைச் சமீபமாக யிருக்குர விளாங்குடித் தத்தனேரி கர்த்தாக்களவர்கள் முன் யெங்களுக்கு விட்டுயிருந்தது. ராமப்பய்யன் னாளையில் சடைக்கத்தேவன் பேரில் பாளயம் போர முன்னுக்குக் குடுத்து யிருந்து நடந்து வந்த மேரைக்கிக் குடுத்து நடப்பிவிச்ச காரியங்கள். ஸதியோர் சருக்காருக்குக் குமார வர்கமாக நடந்துக் கொண்டு சுகமா யிருந்தார்கள். அதின் பிரகு யெனக்கும் யென் பெரிய தாயாருக்கும் மித்திரம் வந்த விபரம் யென் தகப்பன் குமாரு லிங்கம னாயக்கருக்கு யேழு தாரம். அதில் முதலாவது குடித்தரம். மூணு தாரமும் மூணு பிள்ளையளை வைச்சுப் போட்டு விளுந்து பட்டுப் போனார்கள்.

பொட்டுக் கட்டின வகை யென் தாயாரும் சிரு வயசாக யிருந்துது. அப்போது யிலுப்பூர் காமாட்சி னாயக்கரான பாளையகாரன் னபாபு சாயபு அவர்கள் உத்திரவு தப்பி யெதிரு பாவிச்ச நிமித்தியம் அந்த ராச்சியங் கட்டிக் கொண்டு அவர்களையும் விரட்டிப் போட்டு னபாபு சாயபு அவர்கள் மனவாத்தி வெகும் சாயபு அவர்கள் சாகீராகச் சேத்துக் கொண்டார்கள். அந்தக் காமாட்சி னாயக்கருக்கு யிருக்கயிட மில்லாமல் அவர்களே ஆதரிச்சு வச்சிருக்குர யிடங்களிலும் மித்திரங்கள் செய்விச்சுக் கொண்டு வருகுரதைக் கண்டு

யிருந்த யிடங்களெல்லாம் பகைச்சுக் கொண்டு யிருக்குர வருக்கு மூணு பெண்கள் கலியாணமில்லாமல் புத்தியரிஞ்சு யெளுவருசம் போட்டு வருசம் யிப்படி யிருக்குரத்தில் யிவர் னடத்தையளைத் தொட்டு ஒருதரு கலியாணம் பண்ணிக் கொள்ளப் பயப்பட்டுத் தள்ளிவிச்சு யிருந்தார்கள்.

அப்போது யென் தகப்பன் குமாருலிங்கம் னாயக்கரிடத்தில் யிருக்குர ராசாக்களில் முக்கியமாக யிருக்கிற குமார ராசா அப்பள ராசாவென்று ரெண்டு பேர் வெகு முக்கியமாக யிருந்தார்கள்.

அவர்கள் ரெண்டு பேருக்கும் முன்னூரு பொன் யாவனை குடுத்து அவர்கள் மூலியமாக யிந்த மூணு பெண்களையும் கலியாணம் பண்ணிவிக்கும் படியாகச் சொல்லி யெத்தனிச்சாரப் போது யென் தகப்பன் குமாருலிங்கம னாயக்கருக்குச் சம்மதியில்லாமலும் யிவர்களைச் சேர்த்தால் ஆதிக்கத்துக்குக் கூட கெடுதலை வரும் அவர்கள் சுவாமித்துறேகியளென்று கூடாதென்று சொல்லிப் போட்டார். அப்போது காமாட்சி நாயக்கனும் அப்பளராசாவும் குமாரராசாவும் யென்தாயார் மத்த பேருக்கு நல்ல பேச்சைச் சொல்லி அவர்களைக் கொண்டு சொல்லப் பண்ணி யிந்த மூணுபேரையும் யென் தகப்பன் கலியாணம் பண்ணிக் கொண்டார்.

அப்போது குமாரம்மாளாக யிருக்கிற பெண்சாதி அதி மோக மாயிருந்துது. அந்தச்சாருவிலே யிலுப்பூரான் னத்தம் வந்து சேந்து கிறாமம் பூமியளும் வாங்கிக் கொண்டு யிருக்குரபோதைக்கு இலுப்பூரிலுள்ள ஊளியக்காரர் முதல் அவர்கள் வகைச் சேர்ந்த சனமாக னாளுக்கு னாள் நானூரு சனம் வந்து சேர்ந்துது. இப்படி யிருக்கிற தருணத்தில் யென் தயாருக்கு னாங்கள் மூணு பிள்ளையளும் அஞ்சு பெண்களும் முந்தின குடித்தாரத்தில் யிருக்குர மூணு பிள்ளையளும் யிவாள் மூணு பேருலே ரெண்டுபேருக்குப் பிள்ளையளில்லாமல் குமாரம்மாளும் விளுந்துபோயி சின்ன மீனம்மாளுக்கு ஒரு மகனும் ஆக யேழு புள்ளையும் அஞ்சு பெண்களுமாக யிருக்கிரபோது மூத்த மகன் விளுந்து போனான். குரை ஆரு பிள்ளையளில் னாலு பிள்ளையளுக்கும் ரெண்டு பெண்களுக்கு யிலுப்பூரு காமாட்சி

நாயக்கன் மக்களான மச்சினமாருக்குக் கலியாணங் கூடியெம் தகப்பனார் நாளையில் யேளெட்டு கலியாணம் செய்விச்சு ஒண்ணாகயிருக்குர போதைக்கி சிரிது னாள் போனதின் பேரிலே யிலுப்பூற் காமாட்சி னாயக்கரவர்களான பேர்கள் உள்ளூருக்குள்ளாக துராசெலாசினை செய்விச்சுக் கொண்டு தங்கள் தமக்கைமார்களையும் சுவசமசைவிச்சுக் கொண்டு தங்கள் சின்னங்களாக அரமனை வாசல் வளியிலே முக்கிய மாகும்படியாய் செய்விச்சு ஒருனாளவில் ஆலோசினை செய்தார்களென்று வீட்டுத்தாதியளில் ஒருத்தி வந்து யென் தகப்பனாரிடத்தில் சொன்னது.

யிலுப்பையூரராக யேற்பட்டுத் துரையையும் யிருக்குர பிள்ளை யனையும் சரிபிடிச்சுப் போட்டு சின்ன மீனம்மாள் மகன் துரையென்று அந்தக் குளந்தையை வச்சிக்கொண்டு ராச்சி யத்தைத் தாங்களாயி ஆக்கிரமிச்சுக் கொள்ளுகுரதாக யெத்தினஞ் செய்திருக்குர சமாசாரம் தெரிஞ்சுயிது கண்டரிய வேணுமென்று மனசிலே வைத்துக் கொண்டு யிருக்கிர பிள்ளையளுக்கு ஒவ்வொருத்தரிடத்தில் ஒவ்வொரு ராசாக் களை நேமிச்சு அவர்களிடத்தில்ச் சாக்கிருதியாயிருந்து சமு ரட்சணை செய்துகொள்ளும்படியாகப் பண்ணிவிச்சுத்தானும் சாக்கிருதி மேலேயிருக்கிரபோது, ஒருனாளளவில் இலுப்பையூர் சின்ன மீனம்மாளிடத்தில்ச் சாப்புடுகுர முறை வந்த னாள் முன் னுக்கு நடக்குரதை யரிய வேணுமென்று சுபாவமாகத் தன் பூசை நித்தியதானம் முதலான னேமத்தை முடிச்சுக்கொண்டு மத்தியானச் சாப்பாட்டுக்காக அரமனையில் வந்து யிலுப்பை யூர் வகைத்தாரமான சின்ன மீனம்மாள் முறையில் சாப்புடுகுர போது பாதி சாப்புட்டுக்கொண்டு யிருக்குரதில் சின்ன மீனம் மாள் தம்பித் தமையமார்க் கத்தியளை உருவின கய்யில் வைத்துக்கொண்டு வருகுர பேர்களைக் கண்டு ஒரு னாளும் அரமனைக்குள்ளாக வராதபேர்கள் ராணி வாசலாக யிருக்குர அந்தபுரத்தில் வருகுரபோதே மோசம் வந்துதென்று யெண்ணி உடனே யெச்சக்கைய்யொதரி யெளுந்திரிச்சி அந்த அறைக்கு பக்கத்திலிருக்குர மச்சி விட்டுக்குள்ளாகப் போய்க் கதவு மூடிக்கொண்டு உழ்த்தாப்பாள் சங்கிலி போட்டுக்கொண்டு யிருந்தாரப்போது யிந்தச் சின்ன மீனம்மாளு அந்த மச்சின

10043

மாரும் அவரை கதவு திரக்கச் சொல்லி வெகு தொந்தரை செய்விச்சுப் பாத்ததிலும் கதவு திரக்கவில்லை. யெத்தினை னாள் யிருப்பீரென்று வாசல்ப்படியில்க் காவல் வைத்துப் போட்டு வெளியில் வந்து யிலுப்பையூர் சனம் சேகரமாக பந்துத்தீபு செய்விச்சுக்கொண்டு வாசல் வளிக் காரியஸ் தாளையும் காவல்வச்சி வீடுவாசல்களுந்தடுத்து தலத்து ஊழியக் காருக்கு சனத்துக்குஞ் சுவாதீனமில்லாமல் வச்சுப்போட்டு துரை மக்களாக யிருக்குற துரைமகனை மோசம் செய்ய வேணு மென்று யெத்தினம் செய்குரதுக்குள்ளாக அவர்கள் தெளிந்திருக் குறசனங்கள்......லத்திலுள்ள பேருகளைஅணைவு செய்விச்சுக் கொண்டு அவரவர் வுயிருகள் தப்பிவிச்சுக் கொண்டு யிருந்தார் கள். அதுவரையில் அந்த ராச்சியத்திலுள்ள ராணுவத்தார் குடியள் சகலமான பேருக்கும் தெரியப்பட்டு அந்த ராத்திரியே நாலாயிரம் சனம் வரைக்கும் வந்து கூடி அடைபட்டு யிருக்குரது துரையும் மக்களும் புளைத்திருக்குரார்களென்று சேமத்தை அரிஞ்சி வந்து துரையை வெளிப்படுத்திக்கொண்டு துரைமக்கள் தகப்பன் ஒண்ணுக்கொண்ணு முகம் பார்த்து அங்கலாச்சிக் கொண்டு உடனே அந்த மச்சினமாரைப் பிடித்து வரச்சொல்லி அந்த வகைப்பேரை அடங்கலும் யெல்லெக்கி வெளியிலே போகச் சொல்லி விரட்டிப் போட்டு நன்மை தின்மை ஒண்ணுக் கும் ஆகாதென்று வேலிப்போட்டு இந்தச் சின்ன மீனம்மாளை யும் ஒதுக்கிவிச்சு யிருந்தாரப்போது உபய ராணுவத்தார் முன்னுக்கு சகலத்திராளிடத்திலும் ஆதிக்கத்தில் மித்திரங்கள் செய்குர பேர்களை ராச்சியத்துக்கு வெளியில் விரட்டி ஆலோ சித்து துறோகம் செய்குறதில்லை யென்று (ராச்சி)யத்துக்கு பட்டத்துக்கு யின்னாருக்குப் பிரிதியின்னாரென்றும் நிகிதி செய்விச்சு... பிள்ளைகளுக்கு மத்தன ......வச்த்துவாகனச பூஷண அம்பாராதியும் பகுந்து குடுத்து அவரவர் சிலவு களுக்கு கிராமங்களும் நிகுதி பண்ணிக்குடுத்து வச்சிக் கொண்டு தான தருமங்கள் செய்துகொண்டு யிருக்குற போதைக்கு ராச்சியங் கடக்க விரட்டுப் பட்டு போயிருந்த யிலுப்பையூரார் யென்தகப்பனுக்குச் சூனியம் வைத்து வாய டைத்துப் போகச் செய்து சிரிது னாளிருந்து விளுந்து போனார். அதின் பிரகு முத்துலிங்கம னாயக்கர் பட்ட மாச்சிது

அப்படியிலிருக்கையிலுப்பையூராகிய பேருகள் வெலக்கப் போயிருந்தயிடத்தில் காமாட்சி னாயக்கனும் மக்களும் அந்த வகையில்ச் சேந்த துரையளெல்லாம் சேந்து அவர்கள் பெண்டுகளுஞ் செத்துக் கெட்டலஞ்சி அதில் மீனம்மாள் மருமக்களான காமாட்சி னாயக்கன் பேரமாரென்று தெரிந்து கம்பளத்தார் வீடுகளில் யெறந்து வாங்கிக் குடிச்சுக்கொண்டு தன்னுட அத்தயான மீனம்மாளுக்குச் சொல்லியனுப்பிவிச்சு அவதிப்படுகுறோமென்றும் வகுத்துக்கில்லாமல் செத்துப் போறோமென்று சொல்லியனுப்பிவிச்சார்கள். அதைப் பட்டத்து முத்துலிங்கம னாயக்கரான சக்களத்தி மகனிடத்தில் சின்ன மீனம்மாள் தன்னுட மருமக்கமார் அவதிப்படுகுரார்கள். தரிவிக்க வேணுமென்று கேட்டாளதுக்கு அவர்கள் சுவாமித்துரோகியள் ஆதிக்கத்துக்கு ஆகாத பேரென்றும் னன்மை திண்மைக்குக் கூட தேவயில்லை யென்பதாகத் தள்ளிவிச்சு யிருக்குற பேர்களைத் தரிவிக்கக் கூடாது சோத்துக்கு வேணுமானால் குடுத்துவிடுவோமென்று சொல்லியிருந்தாரப்போது முத்துலிங்கம னாயக்கருக்கும் பிறகு பட்டத்துக்கு யிருந்த சுப்பசாமி னாயக்கருக்கு மேலுக்கு வஞ்சினை வளுவுகண்டு விளுந்து போனார். அந்தக் கபுரு தெரிஞ்சு வஞ்சினை னடக்குறதைக் கண்டு ஆள் வச்சியிருக்கிறபோது மீனம்மாள் வகை ஊழியக்காரிச்சி மலயலங்கார சுவாமியான குலதெய்வங் கோவிலுக்குப் போயி பொங்கல் வைச்சு முத்துலிங்கம னாயக்கருஞ் சாகவேணும். மீனம்மாள் மகனுக்குத் துரைத்தனம் வரவேணும் இருக்குற சொச்சப்பேருகளையுஞ் சரிப்படுத்திப் போட்டு அப்பறம் சின்ன மீனம்மாள் மருமக்கன்மாரைத் தரிவிச்சுக் கொண்டு முன்னின்றபடி முடியவேணும் யென்று சகுனங் கேட்ட சமாசாரம் முத்துலிங்கம னாயக்கருக்கு வந்து கேள்விப்பட்டு தாதியைப் பிடிச்சு வந்துக் கேள்க்குர முன்னுக்கு அவள் அனேக சமாசாரங்கள் உள்ளடக்கிச் சொன்னாள். அவளைத் தலைச்சிரைத்துச் சாணித் தண்ணியூத்தி அடித்து வெரட்டிப் போட்டு யெந்த வேளையில் யென்ன மோசம் செய்யுராளோ தெரியவில்லை. தகப்பனுக்கு வந்த தாயாகச்சே ஒன்றுஞ் செய்யக் கூடாதென்று யென்னண்ணன் முத்தய னாயக்கரும் தானுமாக முத்துலிங்கம னாயக்கர் அளப்புச் செய்து ரெண்டு

பேரிலே ஒருத்தர் பேரத்தில் போயிருந்தால் நல்லது. யிவடத்திலிருக்கிர பேர்களை ஒருத்தரையும் நம்பக்கூடவில்லை. திரிசிராபுரத்துக்குப் போய் நபாபு சாயபு அவர்களிடத்தில் காத்திருந்து ஆருமாகாணஞ் சீமை திருப்பி அவடத்தில் அரமனை மத்ததுங் கட்டிக் கொண்டு யிருப்போமென்று சொல்லி அதுக வைக்காக யென்தமையன் திரிசிரபுரத்துக்கு நபாபு அவர்களிடத்துக்குப் போயிருந்தார்.

அப்போது துரைத்தினமாக யிருக்கிர முத்துலிங்க மனாயக்கருக்கு யேவல் குணமாக அதிகதாபமு காந்தலுங் கண்டு விழுந்து போனார். அப்போது மீனம்மாள் மகனுக்குத் துரைத்தனம் வந்துது.

தன் மகன் துரைத்தினத்தில் முன்பிறத்திக்கிப் போயிருந்த ஆதிக்கத்துத் துரோகி யாரான தன் மருமக்கள்மாரை தருவிச்சுக் கொண்டு அவர்களுக்கு சகல விசாரணையும் தாங்களாகயேர்ப்படுத்து அவாள் மூலியமாக யெனதாய் புள்ளைகள் மச்சினமார் பெண்பிள்ளையள் சகிதமாக யெங்களைக் காவல் வீட்டிலே போட்டு கொண்டு யெங்களை செய்யாத இமிசயளெல்லாஞ் செய்விச்சு கோட்டைக்கிப் போயிருக்குர யென் தமையன் முத்தைய னாக்கரையும் தருவிக்கச் சொல்லியும் உபத்திரம் சைவிச்சு யென் தகப்பன் யெங்களுக்குப் பகுந்து குடுத்திருந்த சருவ சொத்தும் யெடுத்துக் கொண்டு யெங்களையும் கொல்ல வேணுமென்று யெத்தினிச்சதில் யென் தமையனையுங் கூட தருவிச்சுச் கொண்டு அப்புறங் கொண்ணுப் போடத் தக்கதாக யோசனை செய்து யெங்களுயிர் நிண்ணுது.

அப்படியிருக்கையில் அந்தச் செய்தி யென்னண்ணனுக்குத் தெரிந்து ராமநாதபுரத்துக்கு வந்து மகாராசராச் ஸ்ரீ யோநிதுரையவர்களிடத்தில் பிராதி செய்விச்சுக்கொண்டு அவர்கள் கிருபையினாலே யென் தமையன் யெங்களையுந் தப்பிவிச்சுக்கொண்டு முன்யென் தகப்பன் பகுந்து ரெண்டாயிரம் பொன் கிராமங்களும் அனுபவிச்சுக்கொண்டு சிவகெங்கை ராச்சியத்தில் நெத்தத்து யெல்கைச் சதிரி........ராமலையின் அரமனையுங் கூட்டிக்கொண்டு அவரிடத்திலிருந்தோம்.

யென்னண்ணன் முத்தயனாயக்கரையும் யெங்களையும் கொல்லத் தக்கின யெத்தினங்கள் லெக்கய னாயக்கனை வுரவு செய்விச்சுக்கொண்டு அந்த மூலியமாக நத்தம் ஆதிக் கத்தில் யென் தகப்பன் சம்பாதிச்சி வச்சிருந்த ஆனையும் சிருது ஆபரணங்களையும் மருது சேருவைகாரனிடத்துக்கு கொண்டு போயி குடுத்து அவன் மூலியமாக யெங்களுக்குச் செயிவிச்ச யிடஞ்சல் மகாராஜராச ஸ்ரீ கும்பினியாரவர்கள் கடாட்சத்தினாலே யென் தமையன் மதுரைக்கித் தென்புரம் மயிலாப்பூர் யென்று கும்பினியாரவர்கள் கட்டிவிச்சுயிருக்கிர துரைமார்களிடத்துக்குப் போய்ச் சேந்து பிராதி சொல்லிக் கொண்டு அவர்களுடைய தயவுனாலே கும்பினியாரவர்கள் கிருபை பெத்து அந்தப்பிரான் மலையில் தானே வந்து சேந்து முன்னடைந்து வந்த கிறாமங்களும் அனுபவிச்சுக் கொண்டு இருந்தோம்.

யிப்படிக்கி மீனம்மாள் மருமக்கமார்தனக்கு தக்க அதிகாரமும் கணக்கும் காருபாரும் நேமிச்சி வச்சுக்கொண்டு ராச்சியத்தில்த் தெண்டம் பெரும் பிடியள் னானாவிதமான அனிதங்கள் செய்விச்சு வந்ததும் அக்கிராரத்தில் பாதிராத்திரி செவரேரி விளுந்து பிராமணாளை அடிதெண்டமாக அடித்து கள்ளரென்று பேர்பண்ணிக் கொண்டு ராச்சியக் கொள்ளைக்கி விட்டுகை பாதிக்கி நிண்ணு கொண்டதும் அக்கிர காரத்திலிருந்து கொண்டு பிராமண வீடுகளில் ஆட்டுக்கரி சமைச்சுப் போடச் சொல்லியும் ஒடிப்போயிருக்குர லெக்கய னாயக்கரைக் கொண்டு இப்படிக்கெல்லா மீனம்மாள் மரு மக்கமார் தங்களுக்குச் சாதகமாயிருக்கும் படியாக குப்பய்ய னைக் காருபாருக்கு நேமிச்சுக் கொண்டு துரியோதனராச்சி யம் போலே னாங்கள் அக்கிஞனாத வாசமுமாக யிருந்தோம். லோகனாயகரான கிஷ்ணமூர்தி சகாயத்தினால் பாண்டவா ளுக்கு வந்த இடைஞ்சல் யெப்படி நீங்குமோ அப்படி மீனம் மாள் வகை பேர்கள் செய்தயிடஞ்சலெல்லாம் கும்பினியார வர்களுட சகாயத்தினாலேயும் விலக்கிப் பிராமணர்களுடனே தப்பிப்புளைச்சோம்.

யின்னுங் கொஞ்ச நஞ்சம் யிருக்குற அவதி யும் கும்பினியாரவர்களுடைய தயவுனாலே தீரவேணு

மென்று கும்பினியாரவர்களுடைய சிரேயசைக் கோரி னம்பியிருக்குறோம். மீனம்மாள் மகன் பாளயக்காரனாக யிருந்து விளுந்து போன பிற்பாடு யென்னை சேர வேண்டிய ஆதிக்கத்துச் சொத்துக்களும் யெடுத்துக்கொண்டு ஓடிப்போயிருந்து கொண்டு ஆதிக்கம் ஆக ஒட்டாமல் செய் விச்சுக்கொண்டு யிருந்த யிலுப்பையூர் வகை மீனம்மாள் மருமக்கமாரும் விளுந்து போனார்கள். கருத்த னாயக்கனும் விளுந்து போனான். இன்னம் னாலுபேர் அண்ணன் தம்பி யளான காரக்காட்டு வெள்ளாழனும் அவனைச் சேந்த மாமன் முதலான காரக்காட்டாரும் ரெண்டொரு அசல்ச் சீமை ஊழியக் காரருமாகவும் யிலுப்பையூரார் நேமிச்சு வச்சிருந்த காருபாரியா யிருந்த அண்ணன் தம்பியள் ரெண்டு பேர் பிராமணாளும் யின்னம் அந்த மீனம்மாளிடத்திலிருந்து கொண்டு கடைகதமனகாள ஒப்பந்தம் மித்திரமசையிவிச்சுக் கொண்டு ஆதிக்கத்துச் சொத்துகளும் ஆக்கிரமிச்சி வச்சுக் கொண்டு யெங்களுடைய நியாயங்கள் குப்பினியாரவர்களுக்கு கேளிவிஆக ஒட்டாமல் செய்விச்சுக்கொண்டு யிருக்குரார்கள். யென்னுட தாயிபுள்ளையள் சகிதமாக யென் சமுசாரம் னார்ப்பது செனம் வரைக்கும் அவதிப்பட்டுக் கொண்டு கும்பினியில்த் துலக்கமில்லாமல் யேழு வருஷக் காலமாயி அவதிப்பட்டுக் கொண்டு யிருக்குரேன். எங்களுடனியாயம் கும்பனியாறவர்களுக்குத் துலக்கமாக ஒட்டாமல் செய்விச்சுக் கொண்டு யிருக்குரதினாலே யின்னம் அவதிப்பட்டுக்கொண்டு யிருக்குரோம்.

மகாராஜராஜ ஸ்ரீ கும்பினியாரவர்கள் னாளையில் சகல சனங்களும் சுகப்பட னாங்களவதிப்பட்டுக் கொண்டு ராஜ ஸ்ரீ கும்பினியாரவர்கள் உண்டென்று னம்பி யிருக்குற யெங்களுக்கு கும்பினியாரைத் தவிர வேறே கெதியில்லை.

ஆகையினாலே யென்னுட பிதுராச்சியமாகிய பாளையப் பட்டை யெனக்குச் சாரும்படிக்கித் தயவு செய்துக் காப்பாத்த வேணும்.

# ராமகிரிப் பாளயக்காரன் சாமய னாயக்கன் வம்சாவளி

## D. 2833

மகா ராஜமானிய ராஜஸ்ரீ கும்பினியார் அவர்கள் சமட் சமத்துக்கு ராமகிரிப்பாளயக்காரன் சாமய னாயக்கன் வமுசாவளி யெளுதிக் குடுத்தது.

சாலீவாகன சகார்தம் **1342** கலியுகம் **4521** இதின் மேல்ச் செல்லா நின்ற செய ஹு யெங்கள் பெரியவாள் குத்தி தேசத்திலிருந்தாரவர்கள் ராயர் சமஸ்தானத்தில் வத்திப்பால் முத்தமனாயக்கர் என்கிரவர் சேவுகம் சேவிச்சிக் கொண்டிருந்ததில் அவடத்தில்ச் சரிப்படாமல் குஞ்சுகுளந்தையள் பந்துசனங்கள் சகிதமாய் தெற்கே தேவாமரி யென்று காவேரிக்கித் தெற்கே முக்காத வளிக்கி யிப்பரமிருந்துது. தேவாமரி யெங்குர ஆலமறத்துக் கீளே வந்து யிரங்கினோம். அப்போது கிடையிலிருந்து பால்க் கொண்டு வருகுரபோது கல்லுத் தடிக்கி பால்பானை உடைந்துது.

அதென்னவென்று பாற்குமிடத்தில் அவடத்தில் சுவாமி நரசிங்க சுவாமி உண்டானார். யெங்கள் பெரியவர்கள் சுவாமியைப் பூசை பண்ணினார்.

அவருக்கு னாலு பிள்ளையள். மூத்தவர் சக்கமசாம்மய னாயக்கர், இளயவர் திருமலை முத்தய்ய னாயக்கர் முள்ளிப் பாடிக்கிப் போனார். இன்னம் ரெண்டு பேர் கெண்டப்ப னாயக்கர், தொட்டப்ப நாயக்கர். ரெண்டு பேரும் பொது மாட்டை ஓட்டிக் கொண்டு தெற்கு ராச்சியம் வரிசை னாட்டுக்குப் போனார்கள். அதின் பிறகு யெங்கள் சக்கம சாமய்ய னாக்கருக்கு ' குளந்தயள் சகிதமாய் மதுரைக்கி மேற்கு முக்காதவளி காவேரிக்கித் தெற்கு மதுரைக்கி யெளு காதவளிக்கு வடக்கு குந்தி தலையனாட்

டெல்லைக்குக் கிளக்கு வெகு ஆரண்ணியமாக - காடாயிருந்த விடத்தில் யெங்கள் பந்துசனங்கள் குஞ்சுகுளந்தைகளை யெல்லாம் ஷெ காட்டில் கொண்டுவந்து வைத்துக் கொண்டு அப்போது யிந்தக் காடு சந்திரசேகர பாண்டிய றாச்சியமான படியினாலே அவர் மதுறாபுரியிலேயிருக்குர வர்சமட்சமத்துக்குப்போய் பேட்டி சைவிச்சுக்கொண்டு நாங்கள் வடதேசத்திலிருத்து வந்து ரொம்பவுங் கஷ்டப்பட்டுத் தங்க ளுடைய தேசத்துக்கு வந்து யிறுக்கிறோம். தாங்கள் பாண்டிய தேசத்தில் ஷபறானபடியினாலே யெங்களையும் யெங்கள் பந்து சனங்களையம் ரெட்சிக்கும் பொருட்டாக நிலம், பூமி விட்டுக் காப்பாடி ரெட்சிக்க வேணும் இதல்லாமல் தங்களை நாங்கள் கேள்க்குரது நல்ல பூமியாகக் கேள்க்கவில்லை. ஆரணியமான காட்டை விட்டால் கிறாமம் செய்துகொண்டு தாங்கள் சொன்னபடி கேட்டுக்கொண்டு இருக்கிறோம் யென்று சொல்லிக்கொண்டதில் சந்திரசேகர பாண்டிய றாசா அவர்கள் றெம்பவுஞ் சந்தோஷப்பட்டு காடுவெட்டினாப் போலேயும் ஊருண்டுபண்ணி குடிபடையள் யேற்றிவிச்சு சாகுவளி செய்து அரமனைக்கி கூட்டிவரும்படிக்கிச் செய் விக்கிரது. நல்ல காரியந்தான் என்பதாகவும் இதல்லாமல் சேவுவம் பண்ணுகுரவர்களென்று சந்தோஷப்பட்டு உனக்கு யெந்த மூலையில் யெவடத்தில்க் காடு வேணுமென்று கேட்டார்கள்.

அப்போது சக்கமசாமய னாயக்கர் சொல்லிக் கொண்டது. காவேரிக்கி முக்காதவளிக்குத் தெற்கு, மதுரைக்கி யெளுகாத வளிக்கி வடக்கு, மதிரைக்கரைக்கி மேற்கு தலையனாடு குடகுன திக்கிக் கிளக்கு ஆரணியவனமான காடிருக்குது. அதில் னாலு பேர் வேடர் மண்வாடியென்று ஒரு குச்சு போட்டுக் கொண்டி ருக்குறார்கள். அவடத்தில் னாங்கள் வலசை வந்து யிரங்கி யிருக்குறோம். அந்தக் காட்டுக்கு உத்திரவு குடுக்க வேணு மென்று கேட்டுக் கொண்டதில் அந்தப் படிக்கித்தானே சந்திர சேகர பாண்டியறாசா அவர்கள் உத்திரவு செய்த விபரம். கீள்மேல்க் காதவளியும் தென் வடல்க்காதவளி விஸ்தானத்துக்கு உத்திரவு செயிது புத்திர பவுத்திர பாரம்பரியமாயி அனுப வித்துக் கொண்டு நாம் எப்போது வரச்சொல்லி உத்திரவு குடுக்கிறோமோ அப்போது வரச்சொல்லி உத்திரவு கொடுத்

தார்கள். அந்தப் படிக்கித்தானே காடு வெட்டி மண்வாடி யெங்குர ஊரையுங் கட்டி அவடத்தில் யெங்களுடைய குலதெய்வத்துக்குமாலை மடங்கட்டி அவடத்தில்ச் சிரிது னாள் காலச்செபஞ் செயிது கொண்டிருந்தோம். அப்பால் றாயற் சமஸ்தானத்திலிருந்து கொட்டியம் னாகம னாயக்கர் பாண்டிய தேசத்துக்கு அதிகாரத்து வந்தபோது யிதற்கு முன் றாயர் சமஸ்தானத்தில் நாங்களிருக்குர போது அவர்களுக்கும் நமக்கும் றெம்ப சினேகிதமான படியினாலே அவர்களைப் போய் கண்டதில் றெம்பவுஞ் சந்தோஷப்பட்டு யின்னஞ் சிரிது காடு விட்டுக் குடுத்து இந்த காடெல்லாம் சாகுவளி பண்ணிக் குடியேத்தி ஊரை கட்டிவிச்சால் உனக்குப் பாளயப்பட்டாக விட்டுக் குடுக்குறோம்யென்று உத்தரவு கொடுத்தார்கள். அந்த மேரைக்கி அனேகங் காடுகளை வெட்டி ஊர் உண்டு பண்ணிவித்தது வெள்ளியனை, உப்படமங்கலம் துரையூர் செகதாப்பி நாலுகிறாமமும் அதற்குச் சேர்ந்த பட்டிகளும்கட்டி வெள்ளியணையில்க் குளமும்வெட்டி மாவிடை மரவிடை நஞ்சை உண்டாக்கிக் கொண்டு கொட்டியம் நாகமநாயக்கரவர்கள் அளைச்ச போது சேவுகம் செயிது கொண்டு யிருந்தோம். யிப்படிக்கி யிருக்குமிடத்தில் சக்கமசாமயனாயக்கர் பட்டம் ஆண்டது ௵ 45 வருஷம் பட்டம் ஆண்டு மரணமடைந்து போனார்.

அப்போது வகையிறுப்பு 1500 பொன். அவருக்குப் பிற்காலம் அவர் பிள்ளை பாப்பணனாயக்கர் பட்டத்துக்கு வந்தார்.

அப்போது நாகமனாயக்கர் மகன் விசுவநாத நாயக்கர் பாண்டிய தேசத்துக்கு ராசாவாக வந்த போது ஷெ பாப்பணனாயக்கன் போயிகற்த்தாக்களாகிய மகாறாச மானியஸ்ரீ விசுவநாத னாயக்கரவர்கள் சமட்சமத்துக்குப் போயி உங்களுடைய தகப்பனாரவர்கள் யெங்களுக்குக் கொஞ்சம் காடுவிட்டு ஊரைக் கட்டி குடிபடையேத்திவிச்சால்ப் பாளையப்பட்டாகப் பண்ணி விச்சுக் குடுக்குறோம்யென்று உத்திரவு செயிவிச்சார்கள். அந்தப் படிக்கித் தாங்களுங் காடு விட்டுக் குடுத்ததால் குடிபடையேத்திவிச்சுக் கொண்டு தாங்கள் சென்ன சேவுகம் செய்து கொண்டு

யிருக்குரே னென்று சொல்லிக் கொண்டதில் அப்போது கற்தாக் களாகிய விசுவநாத நாயக்கரவர்கள் உத்திரவு செய்தது. மதிள் கரைக்கி மேற்கு யெரியோட்டு யேல்கை யாத்துக்கு வடக்கு குடகு னதி அரவக்குரிச்சித் தலைய னாட்டெல்லைக்கி கிளக்குப் புலியூரன் அகைக்கித் தெற்கு நாடு காணி வெங்க யானக் கோட்டைக்கிக் கிளக்கு இதற்குளகப்பட்ட காடு செடிக ளெல்லாம் வெட்டி ஊர் கிறாமங்களுங் கட்டிவிச்சு மண் வாடிக்கி கீள்புறம் மதுறாபுரியென்று மண்ணாலே கோட்டை யும் போட்டு விச்சு பாளையகாரரென்று பேருங்குடுத்து அப்போது மதுறாபுரிக்கி பாண்டியன் கோட்டைக்கி வெளியாகப் பெரிய கோட்டை போட்டு யெழுவத்தி ரெண்டு கொத்தளமும் வைத்து எழுவத்திரெண்டு பாளையபட்டென்று நெமிக்குர முன்னுக்கு யெங்களுக்குத் திருமஞ்சனக் கோட்டை வாசல்முதல் பிரதட்சணமாக 70தாங்கொத்தளம் கார்க்கச் சொல்லியும் யிந்தக் கிறாம பூமிகள் அனுபவித்துக் கொண்டு வகையறுப்பு 2320 பொன் ஆகத்தீர்த்துத் தாங்கள் யெங்கே சண்டை சாரிக்கி போனாலும் சேவகம் சேவித்துக் கொண்டு ஆசீரிக வரச்சொல்லி உத்தரவு கட்டளையிட்டார்கள்.

அந்தபடிக்கித் தானே நாங்களும் கொத்தளங்காத்து உத்திரவாதம் பண்ணிக்கொண்டு அவர்கள் கட்டளையிட்ட யெல்லைகளும் கேட்டுக் கொண்டிருக்கையில்ப் பாண்டியன் வைப்பாட்டி மகன் தெற்கே அஞ்சு பேர்கள் பஞ்ச பாண்டி யாளென்று கோட்டைகளும் போட்டுக் கொண்டு வெகுபலிட் டாளா யிருந்தார்கள்.

கர்த்தாக்களாகிய ராஜமானிய றாஜ ஸ்ரீ விசுவநாத நாயக்கர் தண்டெடுத்து கயித்தாறுக்குப் போரபோதுப் பாப்பண நாயக்கரை அளச்சு பாப்பண நாயக்கரயுஞ் சனத்தயும் கூட வரச்சொல்லிக் கட்டளை யிட்டார்கள். அந்தப் படிக்கித் தானே கயித்தாத்துக் கோட்டையின் மேலே அமோகமாகச் சண்டையாகும்போது கோட்டைக்கி மேல் புரத்தில் ஆத்தங்கரையில் கோதண்டராம சுவாமி சன்னதி யில் காயத்துடனே பாப்பண னாயக்கர் மறணமடைந்து போனார். அவர் பட்டம் ௵ 38.

அப்போது மகாராஜமானிய ராஜ ஸ்ரீ கற்த்தாக்கள் கேட்டு ரொம்பவும் விசாரப்பட்டு தன்னுடைய தண்டெல்லாங் கொண்டு வந்து அவரையெடுத்துத் தகனம் பண்ணிப் போட்டார்கள்.

அதன் பிரகு அவர் மகன் கதரிநரசிம்ம நாயக் கனுக்கு இருபது வயசுண்டு. அவர் ரொம்ப மனக்கிலேசத் துடனே யிருக்குரவரைக் கற்தாக்கள் வரவளைத்து ரொம்பவுந் தயிரியஞ் சொல்லி வேண்டிய வெகுமதி பண்ணி பட்டமுங் கட்டிவிச்சு தன் பக்கத்தில் வைத்துக் கொண்டார்கள். அப்போது கதிரி நரசிம்ம நாயக்கர் கயித்தாத்துக் கோட் டையின் பேரில் க...............வைனை விடுகுரதில்லையென்று யுத்தம் செய்ததில் ஷி கதிரி நரசிம்ம நாயக்கர் செயஞ் செய்ததினாலே நீயே வெகு நிறுவாகி நல்ல சேவுகனென்று சந்தோஷப்பட்டு நாமே நீயென்று தமக்குப் பெத்த பிள்ளை போல் சொந்தம் யென்று சந்தோஷப்பட்டு நமக்குள்ள விருது உனக்குக் குடுக்க வேணுமென்று சொல்லி அப்போது ஒற்றைக் கொம்பு கூடாரம் சாமித்துரோகாவண்டயம் முத்துத்துராயி வெண்சாமரம், வெட்டுப்பாவாடைப், பூச் சக்கிரக் குடை, மகரக்கொடி, அனுமடால், கெருடடால் வசவசங்கெருடடால் முதலான விருதுகளுங் குடுத்து அப்போது காவேரிதீர வாசத்தில் பாதி காவல்ப்பட்ட விந்தி நிலமானிய மும் விட்டுக்குடுத்து கல்லுங் காவேரியும் புல்லும் பூமியும் சந்திராதித்தர்களுள்ள வரைக்கும் ஆண்டனுபவிச்சுக்கொண்டு யிருக்கச் சொல்லிக் கட்டளையிட்டார்கள். அந்தப்படிக்கித் தானே கதிரி நரசிம்மநாயக்கர் பட்டம் ஆண்டுகொண்டு வகையிருப்பு ஆண்டு ஒன்றுக்கு **3150** பொன் குடுத்துக் கொண்டு யிருந்தார்கள். யிப்படியிருக்குமிடத்தில் அவர் மரணமடைந்து போனார். அவர் பட்டம் ஆண்ட ஸு **35.**

அவர் மகன் கட்டளகு சாமயனாயக்கன் பட்டத்துக்கு வந்தார். அவர் பட்டத்துக்கு வந்தவுடனே சீர்மைகளெல் லாங் குடியேத்திவிச்சு சிரிது குளங்களும் வெட்டிவிச்சு நஞ்சை உண்டாக்கி, மாவிடை மரவிடை தோப்புத் துறவுண்டாக்கி விச்சு தேவாலயம் பிரமாலயங் கட்டிவிச்சு அவர் மக்களுக் கெல்லாம் நிலம் புலம் விட்டுக் குடுத்து நடப்பிவிச்சுக்

கொண்டு அவர் சிரிது ஷூ துரைத்தனம் செயிது கொண்டு அறமனக்குள்ள வகையிறுப்பு வருடம் ஒண்ணுக்கு 4530 பொன்னும் குடுத்துக் கொண்டிருந்து அவர் மரண மடைந்து போனார். அவரது துரைத்தனம் ஷூ 25.

அதன் பிறகு வடிவளகு சாமயனாயக்கர் பட்டத்துக்கு வந்தார். அவர் வெள்ளியனையில் வேங்கடேச பெருமாள் கோவிலுண்டு பண்ணி சின்ன ராவுத்தன் பட்டி யென்றபட்டி கட்டிவிச்சு குளமும் உண்டு பண்ணி நஞ்சை மாவடை மறவிடையும் வைத்து கூடலூர் லெந்தக் கட்டை கொட்டா நத்தம் சுருங்கல்லு யிந்த னாலு கிராமமும் உண்டாக்கி அதில் நஞ்சையும் புஞ்சையும் உண்டாக்கி மண்வாடிக்கிராமத்தில் ஸ்ரீரங்கம் பிறாம்மணாளுக்குச் சிரிது மானியம் விட்டு சிலாசாசனம் பண்ணிக்குடுத்து அவர் நாளையில் அனேகந் தர்மங்கள் நடப்பி விச்சுக்கொண்டு அரமனைக்கி வகையறுப்பு உள்ளது வருடம் ஒன்றுக்கு 5110 பொன்னும் கட்டிக் கொண்டிருந்ததில் அவருக்குத் தேக சவுக்கிய மில்லாமல் மறணமடைந்து போனார். அவர் பட்டமிருந்த ஷூ 53.

அவருக்குப் பிரகு முத்தளகு சாமயநாயக்கர் பட்டத் துக்கு வந்தார். அவர் அந்த மண்வாடி உண்டாக்கி நத்தம னேக நாளாச்சுது. அது விட்டு யிப்பரம் தம்முடைய சீமைக்கி நடு மத்தியில்ப் பாளையம் யென்று ராசதானி ஊருங்கட்டி கோட்டையும் போட்டு அதில் வரதராசபெருமாள் கோவிலுங் கட்டி அதற்கு சிருது நிலம்புலம் மானிய சானியம் உண்டாக்கி அவர் சிரிது ஊர்க் கழிக்காலி ஒல்லியக்கோட்டை, ஆலாம்பாடி, திருக்கூர்ணம், வெள்ளோடு, மல்லப்புரம், சூலப்புரம், கூம்பூர், சின்னிலுப்பை பட்டி, கோம்பை, வடுக்கபாடி, வேம்பூர், னாகய கோட்டை, நல்லூர், புதுக்கோட்டை, பாலையப்பட்டி யிப்படிக் கொற்ற கிராமங்களைக் குடியேத்திவிச்சு பிராமணாள் அக்கிரகாரம் உண்டு பண்ணி சிரிது நஞ்சை புஞ்சை மாவிடை மரவிடை சகலமும் உண்டாக்கி அவர் னாளையிலே சிறுது தருமங்கள் செய்விச்சு அரமனைக்கி உள்ள வகையறுப்பு ஒன்றுக்கு 6550 பொன் குடுத்துக் கொண்டு வந்து சிருது நாள் துரைத்தனம் செயிது கொண்டிருந்ததில் அவருக்குச் சரீரத்தில்

கொஞ்சம் ரோகங் கண்டு முத்தளகு சாமய னாயக்கர் மறண மடைந்து போனார். அவர் துரைத்தனம் ஷ 22.

அதின் பிற்பாடு பாளையத்தில் யிரும்பு முரிக்கிச் சாமய னாயக்கர் பட்டத்துக்கு வந்தார். அப்போது மதுரையில் மகா றாஜ மானிய றாஜஸ்ரீ திருமலை நாயக்கரவர்கள் ராச்சிய பாரம் பண்ணிக் கொண்டு யிருக்குறார்கள். ஷை யிரும்பு முறிக்கிச் சாமய னாயக்கன் கெட்டிக்காரன்; குதிரையை நல்லாகத் திருப்பு வானென்று யிவரை வறச் சொல்லி நிரூபம் வந்துது. அப்போது மதுரைக்கிபோயி மகாறாஜ மானிய றாஜஸ்ரீ கர்த்தாக்களாகிய திருமலை நாயக்கரவர்களைக் கண்டு பேட்டி பண்ணிக் கொண் டதில் நீய் நல்லசேவுகன் குதிரையை நல்லாத் திருப்புவாயென்று கேட்டிருக்கிறோம். குதிரை திருப்ப வேணுமென்று சொன்ன தில் கற்தாக்களவர்கள் குதிரை அரமனை புதுசாகக் கட்டின மேல் மாடியின் பேரில் யிருந்து எழுவத்தி ரெண்டு பாளையக் காரரை வரவளைச்சு குதிரையைக் கொண்டு வந்து நிருத்தி யிந்தக் குதிரை வெகு அறமியா யிருக்குது. பாளயக்காரர் யேறித் திருப்பிக் கொண்டு வாருங்கோளென்று சொன்னதில் பாளயக்காரரெல்லாம் பார்த்து யெங்களாலே ஆகாதென்று சொன்னதில் யிரும்பு முரிக்கிச்சாமய னாயக்கர் அந்தக் குதிரை யின் பேரில் யேறித்திருப்பிக் கையிலிருந்த வரிச்சியை பூமியிலே போட்டதில் வருச்சு முச்சூடும் பூமியிலே புதைஞ்சுபோயி, ஒருசாண் ணீளந் தெரிந்ததில் ஆன வரைக்கும் யிருக்குர பேர்களைப் பிடுங்கிச் சொல்லிச் சொன்னதில் ஒருத்தரும் பிடுங்க மாட்டாமல் இவரைப் பார்த்து நீய் போட்ட வரிச்சு நீய்தானே பிடுங்க வேணு மென்று சொன்னதில் ஷை குதிரையின் பேரில் தானே யிருந்துகொண்டு குதிரை வெகு வேகமாக வருகுரபோது கால் பெருவிரலினாலே யிருக்கிப் பிடுங்கும்போது யெக்கி ஒரு பனைப் பிரமாணம் உயரம் வரிச்சுப்போயி மருபடி குதிரை போட்டு கீளே வருச்சு விழுகு முன்னே கையில்ப் பிடித்துக்கொண்டார். அப்போது கறத்தாக்கள் பார்த்து சந்தோஷப்பட்டு சிரிது வெகுமதியுங் குடுத்து அந்த வருச் சுக்கு வெள்ளிக் கட்டும் போட்டுக்குடுத்து அண்ணு முதல வெள்ளிக்கட்டிப் பாலாவும் பரசிங்க முத்துக்குச்சுங் குடுத்து நவறாத்திரி கொலுவிருக்கச்சொல்லி உத்திரவு கொடுத்தார்கள்.

அப்போது யிறும்புக் கொளுக் கொண்டுவரச்சொல்லி யிரும்பை முரிக்கினதினாலே இரும்பு முறிக்கிச் சாமயனாயக்க னென்று பேருங்குடுத்து அந்த குதிரையும் அனுப்பிவிச்சார்கள். அவர் துரைத்தனம் வருஷ 23.

வகையறுப்பு பணம் 7120 பொன். அதின் பிறகு அவர் மகன் ஆண்டிச்சாமி நாயக்கன் பட்டத்துக்கு வந்தார்.

அவருடைய தொகப்பனார் கட்டிவிச்ச தேவதாயம் பிரம்ம தாயம் கிறாமங்கள் சகலமும் றட்சனை செயிது கொண்டு அரமனைக்குள் வகையறுப்பு 7550 பொன் குடுத்துக் கொண்டு கற்தாக்கள் சொன்னபடி கேட்டுக் கொண்டு யிருந்தார். அவர் துரைத்தனம் வருஷ 19. அதன் பிறகு அவர் மகன் லண்டக்கதி சாமய னாயக்கர் பட்டத்துக்கு வந்தார்.

அப்போது பாளயம் விட்டு சக்கரகிரி மலைச் சார்வுக்கு வேட்டைக்கி வந்த போது மலையோரத்தில் ஒரு ஆலமறமும் கொஞ்சமாக ஒரு கிணரும் இருந்தது. அதில் ஒரு கிளியிருந்து தன்னாலே றாமாறாமாவென்று சொன்னதினாலே, அந்தச் சொல்லை இவர் காதுநாலே கேட்ட மாத்திரத்தில் இந்த இடம் நல்ல புண்ணிய ஸ்தலமென்று இதில் நாம் குடித்தனம் செய்ய வேணுமென்று பாளயத்தில் வெகு நாளாச்சுது பேத்து கட்ட வேணுமென்று யோசித்து அவடம் விட்டு மலையோரத்தில் மேலே கிளி சொன்ன விடத்தில் ஊர் மற்றதுங் கட்டி றாமகிளி யென்று பேரும் வைத்து கலியாண நரசிம்ம கோவிலுங் கட்டி அரமனையுங் கட்டி குடியிருந்து துரைத்தனஞ் செய்து கோட்டை யும் போட்டுக் கொண்டிருக்கையில், கற்தாக்களாகிய சொக்க னாத நாயக்கர் றாச்சிய பரிபாலனம் பண்ணிக் கொண்டிருக்குர போது தஞ்சாவூர் விஜய றாகவனாயக்கரவர்கள் வீட்டுப் பெண்ணை சொக்கநாத நாயக்கரவர்கள் கேட்டதில் உங்கழுக்கும் நமக்கும் சம்பந்தஞ் சரிப்படாதென்று சொன்னதில் யெங்களுடைய பாட்டனாருக்கு தங்கள் வீட்டுப் பெண்ணைக் குடுக்கவில்லையா யிப்போ நமக்குக் குடுக்குரதற்கு யென்ன வென்று கேட்டதற்கு அப்போ சம்மந்தம் நல்லதாயிருந்துது. இப்போது சம்பந்தம் சரிப்படாதென்று யேக தேசமாயி சொன் னதினாலே விசையறாகவ நாயக்கரவர்கள் பேரில் சொக்கநாத

நாயக்கரவர்கள் தண்டு தயார்ப் பண்ணி, மணப்பாரை பாளையப்பட்டாரை யெல்லாரையும் வரவளைத்து மணப்பாரை பாளையப்பட்டுக்கெல்லாம் நீய் பெரிய பாளையப்பட்டல்லவா தண்டுடனே நீ கூட முன்னே நடக்கவேணுமென்று சொன்னதில் அப்போது பாளையத்துடனே சிறிது சனத்துடனே தஞ்சாவூரின் பேரில் போயி அனேகம் சண்டை சாரிகள் நடப்பிவிச்சதில் தஞ்சாவூர்க் கோட்டையும் சுவாதீனப் படுத்திக்குடுத்ததில் அவடத்தில் சண்டையில் காயம் பட்டு காயத்துடனே ஊர்வந்து சேர்ந்து மரணமடைந்து போனார். அவர் பட்டம் ௵ 11. வகையறுப்பு 8500 பொன்.

அதன் பிறகு அவர் மகன் குமாரஎகு சாமய னாய்க்கன் பட்டத்துக்கு வந்தார். அவருக்குப் பதினாறு வயசுபாலக னானத்தினாலே கற்தாக்களாகிய சொக்கநாத னாயக்கரவர்கள் இவரைப் பார்த்து சந்தோஷப்பட்டு உன்னுடைய தகப்பனார் நமக்கு றெம்பவும் பாடுபட்டு நம்முட காரியங்களெல்லாம் செயங்கொண்டு வந்தார் யென்று அவருக்கு நடப்பிவிக்குர உடுகரை உனக்குக் குடுக்க வேணுமென்று யானையும் பல்லாக்கும் சிம்மலாட விருதும் மகறமீன் கொடியும் வெள்ளித் தண்டிகை கலிக்குத்துராய் குடுத்து தன் மனுஷளையும் கூட்டி றாமகிரிக்கி அனுப்பிவிச்சு பட்டமுங் கட்டிவிச்சு கற்னாடக சமஸ்தானத்துக்குக் குமாரவர்க்கமானதினாலே மைசூறார் தண்டுகள் கணவாய்க்கி யிப்பரம் வறாமல் சாக்கிருதியாக இருந்துக் கொண்டிருக்கச் சொல்லி உத்திரவு கட்டளை யிட்டு அனுப்பி விச்சார்கள்.

அப்போது மைசூறார் பாளயம் கணவாய் விட்டிரங்கி உப்படமங்கலம் கரூர் முதலாகிய கெடிகளெல்லாம் கட்டிக் கொண்ட போதுயென் பேரிலும் சண்டை பண்ணி யெண் கிறாமம் வெள்ளியணை உப்படமங்கலம் துரையூர் மண்வாடி நாலுக்கிறாமமும் கட்டிக் கொண்டார்கள். அப்போது கர்த்தாக்கள் சமட்சமத்தில் அரிக்கை செய்விச்சதில் உங்கள் சீர்மை உங்களுக்கு வாங்கி விடுகிறோமென்று கட்டளை யிட்டார்கள்,

அதேமேரைக்கி யிருந்தோம். அவர் துரைத்தனத்தில் சிரிது னாளைக்கி மேல் துலுக்காணமாச்சுது. அப்போது வகையறுப்பு 10,155 பொன் தீர்த்து விட்டதில் அந்தப் படிக்கி பணமுஞ் செலுத்திவிச்சுக் கொண்டு சிறுது காலஞ் துரைத்தினம் செயிது கொண்டிருந்து மறண மடைந்து போனார். அவர் துரைத்தனம் ஹ 74.

அவர் மகன் சின்னஎளகுசாமய னாயக்கர் துரைத்தனத்துக்கு வந்தார். அப்போது வெள்ளியனை, உப்புடமங்கலம், துரையூர், மண்வாடி யிந்த நாலு கிறாமம் மயிசூறார் கட்டிக் கொண்டது போக மற்ற யிருவது கிராமமும் ஆண்டு அனுபவித்துக் கொண்டு உள்ள வகையறுப்பு 10,185 பொன் குடுத்துக் கொண்டு யிருந்ததில் அவர் மரணமடைந்து போனார். அவர் துரைத்தனம் ஹ 12.

அவர் மகன் வசந்தக்கதிர்சாமய நாயக்கர் பட்டத்துக்கு வந்தார். அப்போது மைசூறார் கலாபத்தில் தீரவாசம் பிறாமணாள் அனேகம் பேர் கொள்ளை குடுத்துப் போட்டு இவடத்துக்கு வந்ததில் அவர்களுக்கு வஸ்திரம் மற்றதும் சாப்பாட்டுக்கும் குடுத்து சமரெட்சணை செய்ததினாலே அவருக்கு மானங் காத்த சாமநாயக்கரென்று அசரத்து நபாபு சாயுபு அவர்கள் பேருங் குடுத்தார்கள். அப்போது வெள்ளியனை உப்புடமங்கலம் னாலு கிறாமம் கட்டுப்பட்டது கும்பினியாரவர்கள் சீமை கட்டினபோது ஒரு வருஷம் யெங்களுக்கு விட்டிருந்தார்கள். மருபடி கும்பினியாரவர்கள் கட்டின சீர்மை மைசூறாருக்கு விட்டுவிட்ட முன்னுக்கு இந்த கிராமம் நாலும் விடச் சொன்னார்கள். அப்போது விடுகிற தில்லை யெங்கள் சீர்மை யென்று கர்ன்னல் லாங்குதுரை அவர்களிடத்தில் சொன்னதில் யிப்போ விட்டுவிடுங்கோள் பின்னாலே தரியாபத்து பண்ணி உங்களுக்கு வாங்கிக் கொடுக்குறோமென்று சொல்லியிருந்தார்கள். அப்போது வகையறுப்பு 10,185 பொன் குடுத்து அவர் சரீரத்துக்கு லேகுவில்லாமல் விழுந்து போனார். அவருடைய துரைத்தினம் ஹ 24.

அதின் பிறகு வத்தண நாயக்கர் துரைத்தனம் ஹ 2.

அதின் பிறகு வச்சிர நாயக்கர் துரைத்தனம் ஸ்ரீ 2. காணிக்கை 10,185 பொன். அதின் பிறகு நரசிம்ம நாயக்கர் துரைத்தனம் மாசம் 3. அதுவரையில்க் கும்பினியிலும் வகையறுப்பு 10,185 பொன் குடுத்து வந்தோம். யிப்போது முத்தளகு சாமய நாயக்கரவர்கள் துரைத்தினம்.

# ஆயக்குடி வம்சாவளி

## D. 2834

யெங்கள் வேடர் குலம் உண்டானது யெப்படியென்றால் பூறுவ காலத்தில் கயிலாச பதியாகப் பரமேசுபாரக் கடவுளாற் மலை வாசம் வனவாசங்களாக இருந்து யோக நித்திரை சாதிக்க வேணுமென்று மிறுக பாஷை தாங்கள் பொராமல் நந்திகேசு ரருக்கு துணையாக வேண்டியும் தமக்கு கல்லாக இறுக் கும்படியாகவும் திருவிளத்திலே நினைந்த உடனே நாங்கள் பிறந்தது. பிறக்குரபோதே வெற்றிச் சேலையும், வில்லும், அம் பும், பாணாத்திரங்களும் கைதத்தி யெங்கள் வம்சத்தார் பிறந்து யெதிரே வந்து நின்ற உடனே மகாதேவர் கருணை கூர்ந்து நான் மலை வேடன், நீங்கள் சிலை வேடரென்று திருனாமம் சாத்தும்படி பண்ணி ஆண்டுகொண்டு வருகுரகாலத்துலே வால்மீகரென்று, கண்ணப்பரென்று, ஆங்கிலியரென்று, பேர் பெத்தார்கள்.

வால்மீகரானவர் குரு தேசியினுடைய உபதேசங்களினலே றாமாறாமாவென்று வெகு காலம் தபசு பண்ணிக் கொண்டு இருக்குர தருணத்துலே தேவலோகத்துலே தேவாந்தரியிலே ஆலோசினை செய்ததை நாரத மகாமுனி வந்து சொல்லத் தெரிந்து றாமாயணத்தை உண்டு பண்ணிநார். கண்ணப்ப நானவற் காளாஸ்திரி வனத்துலே வேட்டையாடி வராகத்தை யெயிதார். அந்த வறாகமானது காயத்தை வாங்கிக் கொண்டு வராகம் முன்னும் இவர் பின்னுமாக துடற்ந்து போறபோது அந்த மலைமேலே காளாஸ்திசுரன் சன்னதி முன்பாக விராகம் விழுந்து மடிந்துபோன படியினாலே அந்த காளாஸ்திசுவ னுடைய மகிமை யிப்படியாயென்று அனேக அம்பு பூர்ந்து பக்திப் பிரய விசுவாசத்துடனே பக்கத்தில் சென்று கட்டித்தளிவி ஆலிங்கனம் பண்ணிக் கொண்டு அவடெத்துலே மடிந்து போன வராகத்தை சுடுவான் கரி செய்து தான் தின்று ருசிபாத்து நன்றா யித் தித்தீப்பான கரியை தேக்கிலையில் வைத்துக் கொண்டுவ

லது கையிலே வில்லு யிடது கையிலே கரியும் வாயுள்ளே அடக்கிய செலத்தை சுவாமி வாயிலே வாயி செலத்தை வார்த்து சுவாமி வாய் அலம்பச் செய்து தித்தீப்பாயிறுக்கப்படாநென்ற இடது கையிலே இறுக்குர கரியெடுத்து சுவாமி திறுவாயி அலர்ந்து சாப்பிடச் சொல்லிக் குடுத்தான். இந்தப் படிக்கு அஞ்சு நாள் மான் மரை கொன்று ருசியான கரியாய்த் தின்று பாத்துக் குடுத்தான். ஆறா நாளாகுரவரையில் அதே யீசுரனை பூசை பண்ணுகுர பிராம்மணன். இவன் ஆரோ செண்டாளன். ஈசுரன் சன்னதியில் யிலும்பும், யிரைச்சியும், சதையும் வெகு அசுசி பண்ணிநாநென்று அந்த ஈசுரனை மெத்தவும் நொந்து கொண்டு இப்படிக்குச் செய்தவனை நான் கண்ணிலே கண்டால் அவனுக்குப் பிறாயச்சித்தம் பண்ணுவேனென்று ஆக்கினா பதம் செய்வேநென்று சொல்லிக் காலினாலே அந்த யிலும் புயிரச்சி யெல்லாம் தள்ளி சுகி கரம் பண்ணி பூவும் புற்ப்பமும் போட்டுப் பத்தி பூசை செய்குர போது அந்தப் பிறா மணனை பாத்து சுவாமி சொன்ன வசனம். அந்த வேடனு டைய பத்தி விசுவாசத்தை நீரரிய வேணு மென்றால் யென்பிறகே நீர் மறைத்துக் கொண்டிரும். அந்தச் சோதினை யுனக்கு ஒப்புவிக்குரே (ரெ)னென்றார். அப்படியே யந்த அந்த பிராமணனும் ஒளிந்து கொண்டு யிறுந்தார். அந்த வேளையிலே வேடனாகுரவன் யெதாப் பிரகாரம் தலையிலே மானும், வலது கய்யில்வில்லும் இடது கயிலே கரியும் யேந்திக்கொண்டு வாயிலே சலமும், செறுப்புக் காலுடனே கோவிலுள்ளே புகுந்து யென் சாமி வெகுநேரம் பசிச்சிருக்குராரென்று வெகுபத்தி விசுவாசத்துடனேத் தலையிலே இருக்குர மானைக் கீளே போட்டுவிட்டு சுவாமியைப் பார்த்து வாயி திறக்கச் சொல்லி வாயி சிலத்தை குடுத்து வாயை அலம்பச் சொல்லி ருசியான கரியைத் தின்று தின்றுப் பார்த்துக் குடுத்தான். சுவாமிக்கு வெகு சந்தோசம் வந்து சாப்பிடுகுரபோது சுவாமிக்கு இடது கண் கர கர வென்று சுத்தி கண் ஒளுகவிட்டார். அதை வேடன் கண்டு யென் சுவாமிக்கு கண் ஒளிகிப் போனதுக்கு மேல் நம்முட யெடது கண்ணை யெடுத்து சுவாமிக்கு வைத்துப் போடுவோ மென்று அம்புனாலே கண்ணைத் தோண்டியெடுத்து சுவாமி கண்ணுலே தன் கண்ணைப் பதித்ததை சுவாமி கண்டு வலது

கண்ணையும் ஒளுகவிட்டார். வலது கண் ஒழுகுரதைக் கண்டு தன் செருப்புக் காலுனாலே சுவாமி கண்ணுலே குறிப்பாக வைத்துக்கொண்டு தன் வலது கண்ணையும் அம்புனாலே தோண்டினான். அப்போது சுவாமிகாள் கண்டசதுற்புசத் துடனே பார்வதி சமேதராக ரிஷபவாகனரூடறாயித் தோன்றி யென் கண்ணப்பா யென்று பேறுங்குடுத்து கையைப்பிடித்து, கண்ணுக்கு கண்ணும் குடுத்து கண்ணப்பாவென்று பேறுங் குடுத்து அனேகம் சாட்சியும் குடுத்தார். இதை யெல்லாம் பிராம்மணண் கண்ணுனாலே கண்டான். கண்டு நடு நடிங்கி பயந்து இருக்குரபோது மண்டகத்தில் மேல் உத்திரம்நகண்டு முரிந்து சரிந்தது. மண்டகம் இடிந்து சுவாமி சிரசுலே விளு மென்று வலது கையிலே இருக்குற வில் மொனையினாலே கல்லைத் தாங்கினான். அந்த வேளையில் ஒளிஞ்சிருந்த பிராம்மணன் நமக்கு உயிர்ச்சேதம் வருமென்று மெத்தப் பயந்து கொண்டு ஓடிப்போனான். அதுவும் பரமேசுரன் கண்ணுனாலே கண்டு கண்ணப்பனுக்கு அனேகம் முத்தி குடுத்தார்.

அங்கிலிய நாகுரவன் அகோபல தேச வனத்தில் வேட்டை க்குப் போனார். அந்த அகோபல ஸ்தல வனத்துலே வேட்டை யாடுகுரபோது ஒரு வேங்கையானது யெதுப்பட்டு அதிக பல பறாக்கிறமத்துடனே மிரட்டி வேங்கை முன்னும், வேடன் பின்னுமாகத் துடர்ந்து வருகுரபோது அவடத்தில் ஒரு வில்லை மரம் யெதிர்ப்பட்டு இருந்தது. அதுலே வேடன் பத்தியேரினான். அதைக்கண்டு வேங்கையானது காரியம் சாதிக்க வேணுமென்று வில்லை மரத்தடியிலே படுத்துக் கொண்டிருந்தது. அந்த வேடனாகுர அங்கிலியன் பயந்து நடுநடிங்கி வில்வதளையை யுறுவி விடியமட்டுக்கும் அந்தப் புலியின்பேரில் போட்டான். அந்த தளைகளெல்லாம் புலியின் பேரிலே விழுந்தது. அது பரமேசுவரனுக்கு அர்ச்சினை யாக இருந்து புலியானது ரிஷபமாய் சமைந்து அப்பால் விடிந்த உடனே வில்வபத்திர அர்ச்சினை பலன் குடுக்க வேண்டிய ரிஷப வாகனரூடறாயி பார்வதி பரமேசுவர ராய் நீலகண்ட சதுர் புசத்துடனே பரமேசுவரக் கடவுளார் யெளுந்தருளி வந்து அங்கிலியனுக்கு முத்தி மோட்சம் குடுத்தார். அங்கே வேடனைத் தேடிவந்த மனையாளுடனே உத்திர

தேசம் பேறுங் கொண்டராச்சியம் போயிச் சேர்ந்து சிருது காலம் பந்து சென்வர்த்தங்களாயிருக்குர னாளையில் தில்லிப் பாற்ச்சாயாகுரவன் யெங்களை பெண் குடுக்கச் சொல்லிக் கேட்டான். நாமள் துலுக்கனுக்குப் பெண் குடுத்தில்லே பிளைப்புப் பண்ண வேண்டியிருக்குதென்று குஞ்சு குளந்தை சகிதமாயி வலசையெடுத்து வருகுரபோது ஆறு வெள்ளம் பெருகி வந்தது. அப்போது யெங்கள் யிட்ட தேவதையை பிறார்த்திச்சுக் கொண்டதில் இக்கரைக்கும் அக்கரைக்கும் ஒரு புங்கமரம் இருந்துது. அது வளி கொண்டு அந்த ராச்சியத்தை விட்டு ராயர் சமஸ்தானத்துக்கு வந்து விட்டோம். சிறுது நாளைக்குப்புரகு அவர்களையுங் கண்டு பேட்டி பண்ணிக் கொண்டு அவர்களிடத்தில் ஊளியம் செய்து கொண்டிருந்தோம். அந்த நாளையில் கொட்டியம் நாகம னாயக்கர் யெதுறுக் காவலாக இருந்து யெங்கள் பேரில் ரொம்பவும் சந்தோஷம் வந்து யெங்கள் வங்கசத்திலே பெரிய அகோபல கொண்டம னாயக்கருக்கு பதினெட்டு வகை பிறுதும் குடுத்து சிங்கமுக வெள்ளிப் பல்லாக்கும் குடுத்து இம்முடிப் பட்டமும் குடுத்துக் கட்டாரி சாளுவறாயனென்று பேருங் குடுத்து தெட்சண பூமியில் விராககிரி சாற்வையிலே போய் ஆறண்ணியமான வனத்துலே நடுறாச்சியம் செயிது துரைத்தனம் அம்சை செலுத்திக் கொண்டிருக்கச் சொல்லி உத்திரவு பண்ணி அனுப்பி விச்சார்கள்.

அதுவே மேரைக்கு வந்து சேந்து விராககிரி சாற்வை யிலே வனாந்திரகளாக இருந்த ஆரண்ணியமான வனத்தை யும் நடுறாச்சியம் செயிது யெங்கள் குலதெய்வமாகிய அகோ பல யீசுரப் பெருமாள் கோவிலு முண்டுபண்ணிவிச்சு ஆயக் குடி பாளையப்பட்டென்று பேரும் வைச்சி ஊருங் கட்டி அம்பாபுரி நாடென்று பேற் விளங்கி துரைத்தனம் பண்ணிக் கொண்டு வருகுற நாளையில் மதுரை சமஸ்தானம் கற்த் தாக்கள் னாளையில் யெங்களையும் வரவளைத்து பதினெட்டு விறுதும் குடுத்து யிம்முடிப்பட்டம் குமார அகோபல கொண்டம னாயக்கரென்று பேருங் குடுத்து அனேக விமற் சைகள் செயிது யெங்கள் ஆயக்குடி பாளையப்பட்டுக்குச் சேற்ந்த நாங்கெல்கையும் சேத்துக் குடுத்து மதிரை திருமஞ் சனக் கோட்டவாசல் பிறதஷ்ணமாக வடக்கு மூலை 37

கொத்தளமும் காத்திருக்கச் சொல்லி உத்திரவு செய்து அனுப்பிவிச்சார்கள்.

அதே மேரைக்கி பாளயப்பட்டு செலுத்தி விச்சிக் கொண்டு இருக்குற னாளையில் இம்முடி பட்டத்து குமாரர் பெரிய அகோபல கொண்டம னாயக்கர் வருஷம் 41.

ஷெ குமாரன் கொட்டுக் கொண்டம னாயக்கர் துரைத் தனம் ஸ்ரீ 32.

மூணாம் பட்டம் அவர்குமாறர் பகடால் கொண்டம னாயக்கர். அவர் துரைத்தனம் ஸ்ரீ 60.

நாலாம் பட்டம் அவர் குமாறர் குமாரமுத்தாலு கொண்டம னாயக்கர். அவர் துரைத்தனம் ஸ்ரீ 55.

அஞ்சாம் பட்டம் அவர் குமாற குமாரகொண்டம னாயக்கர் துரைத்தனம் ஸ்ரீ 1.

ஆராம் பட்டம் அவற் குமாரற் அகோபல கொண்டம னாயக்கர் துரைத்தனம் ஸ்ரீ 2.

ஏளாம் பட்டம் அவர் குமாரர் குமார கொண்டம னாயக்கர் துரைத்தனம் ஸ்ரீ 2. யெட்டாம் பட்டம் அவர் குமாரன் குமார அகோபல கொண்டம னாயக்கர் துரைத்தனம் ஸ்ரீ 1. ஒன்பதாம் பட்டம் அவர் குமாரற் குமாரக் கொண்டம னாயக்கற் துரைத்தனம் ஸ்ரீ 3.

பத்தாம் பட்டம் அவர் குமாரர் அகரோபலக் கொண்டம னாயக்கர் துரைத்தனம் ஸ்ரீ 2. பதிநோராம் பட்டம் அவர் குமாரற் அகோபலக் கொண்டம னாய்க்கர் அவர் துரைத்தனம் ஸ்ரீ 1.

பனிரெண்டாம் பட்டம் அவர் குமாரற் அகோபல கொண்டம னாயக்கர் துரைத்தனம் ஸ்ரீ 2 மீ 6. பதிமூணாம் பட்டம் அவர் குமாரற் முத்து கொண்டம னாயக்கர் துரைத்தனம் ஸ்ரீ 2.

பதினாலாம் பட்டம் அவர் குமாரற் கருங்கொண்டம னாயக்கர் துரைத்தனம் ௵ 29.

பதிநஞ்சாம் பட்டம் அவர் குமாரர் குமாரக் கொண்டம னாயக்கர் துரைத்தனம் ௵ 25.

பதினாராம் பட்டம் அவர் குமாரற் முத்தகோபல கொண்டம னாயக்கர் துரைத்தனம் ௵ 40 ௴ 6.

பதிநேளாம் பட்டம் அவர் குமாரர் அகோபலக் கொண்டம னாயக்கர் துரைத்தனம் ௵ 39.

பதிநெட்டாம் பட்டம் அவர் குமாரர் முத்துக் கொண்டம னாயக்கர் துரைத்தனம் ௵ 57.

ஆக பட்டம் பதிநெட்டுக்கு மேல் பத்தொன்பதாம் பட்டம் இம்மடிப் பட்டத்து குமரர் பெரியகோபலக் கொண்டம னாயக்கர் துரைத்தனம் ௵ 16.

யென்னுடைய னாளையில் மகாராசமானிய ராசஸ்ரீ ஆர்டீசு துரை அவர்கள் துரைத்தனத்தில் சீரெங்கப்பட்டணத்தின் பேரிலே கும்பினியாரவர்கள் தஸ்தோமம் தண்டு போற போது யென்னையும் யென்னுட சனத்தையும் வரச்சொல்லி உத்தரவாகினொனும் செனமும் கோயம்புத்தூறு வரைக்கும் அஞூறுசெனம் வரைக்கும் சேவுதம் சேவித்தேன். மருபடி விருபாட்சியான பேரில் கும்பினியார் ஸ்தோமம் வருகுர போது நானும் யென் செனம் அஞூறு செனம் வரைக்கும் கும்பனியாரவர்கள் உத்தரவுப் பிரகாரம் ஊளியம் செயிது மேற்க்கே தளியேற்றமனாயக்கன் சீம வரைக்கும் போயி அவடத்திலும் ஊளியம் செய்து கிளக்கே துட்டனாகிய சிவகெங்கை வெள்ளை மருதன் பேரில் கும்பினியாரவர்கள் பாளையம் போர போது யென் சனம் அஞூறு செனம் கூடப்போயி தண்டு சேவித்து உத்திரவாதம் பண்ணிநேன்.

மகாராச மானிய ராசஸ்ரீ கும்பினியாரவர்கள் தயவும் அபிமானமும் மேன் மேலும் வர வேணுமென்றுனான் பிறார்த்திச்சிக் கொண்டு கும்பினிக்கு பெத்த பிள்ளையாகவும் நடந்து கொண்டு வருகுரேன்.

# பளைய கோட்டை சக்கரைக் கவுண்டன் வமிசாவளி

## D: 2835

தாறாபுரம்துக்குடி காங்கயம் தாலுகாவுக்குச் சேர்ந்த பளைய கோட்டை கிராமத்துலேயிருக்கும் செக்கரை கவுண்டன் யென்னப்பட்ட பட்டக்காருடைய கைபிது முதலானது களுடைய புக்கு.

தாறாபுரம் துக்குடிக்கு சேந்த காங்கயம் தாலுக்காவுக்குச் சேந்த பளையகோட்டையிலேயிருக்கும் செக்கரைக் கவுண்டன் யெண்ணப்பட்ட பட்டக்காரருடைய வம்சாவளி முதலானதுக்கு மதுரையிலேயிருக்கும் திருக்கியான சம்பந்த மூற்த்தி யெண்ணப் பட்ட பண்டாரம் மடாதிபதியிடத்தில் யிறுக்கப்பட்ட மற பட்டவணை யெண்ணப்பட்ட புஷ்தகத்தில் யிருக்கப்பட்ட கைபீதுக்கு நகல்.

பாட்டு. **கலித்துறை**

*கலியிற னூர்தி விசயாண்டு மீனஞ்சில காற்புரந்த*
*மலிபுக ளான் கரியான் சயமாது வலிமியநாள்*
*புலிதுணை வுத்தம காசோளன் யேவிய யூதவலி*
*துலவி செயிதேன ரிபுசாதன னாலமுடி சூடினனே.*

கலியுக சகாபுதம் 200க்கு மேல் செல்லா நின்ற விசய ௵ பங்குனி மீ 5 குறு வாரம் பச்சமி மிற்க சீறிஷம் கூடிய தினத்தில் கறியான சக்கரைக்கி பட்டாபிஷேகம் சத்துரு சாசன பாண்டியன் சூடிநான்.

யெதுநாலே யென்றூல் சொன்ன தேசாதிபதியாகிய வுத்தம காசோளன், பாண்டிய தேசாதிபதியாகிய சத்துருசாசன பாண்டியனை செயிக்க வேண்டி நாகப்பட்டிணத்தில் சமீபமாயி

யிறுக்கப்பட்ட பொன்பத்தியூரிலே வாசமாயிருக்கப்பட்ட பவுத்தமதோதாரகளாகிய மித்திர னென்னப்பட்டவனை கொண்டு பூதயாகம் செய்விச்சான். அந்த யாகத்துலே நிச்சிதன் யென்னப்பட்ட ஒரு பூதம் ஆயிரம் பேய் கூட்டங்களுடனே புரந்து அந்த மித்திரனென்னப்பட்ட பவுத்தரசாரியனை நமஸ் காரம் பண்ணி யென்ன புத்தி யென்று கேட்டது. அந்த பவுதன் உத்தமகாச்சோளன் வுத்திரவு பிறகாரம் பாண்டிய தேசாதி பதியாகிய சத்துரு சாசன பாண்டியன் பேரிலே போஇ பாண்டிய தேசத்தை அளிவு பண்ணச் சொன்னான். அப்பொளுது அந்த னிச்சிதன் னெனப்பட்ட பூதம் அனேக வுத்தமகாராசபுத்துடனே ஆயிரம் பேயிக் கூட்டம்ங்களையும் கூட்டிக்கொண்டு வந்து மதுறாபுரி பட்டணத்துக்கு சமீபமாயி வுத்திரபார்சத்துலே யிருக்குர சோமகிரி யென்ங்குற பருவத்திலே யிறுந்துக்கொண்டு பாண்டிய தேசம்ங்களை யிமிசே பண்ணி நற்பலி வாங்கிகொண்டு பாண்டியன் நிம்பமாலிகாபரணமான படியினாலே யிவரிடத் துலே வருகுரதுக்கு பயம்காரமாயி சிறுதுநாள் அந்த மலையிலே யிறுந்துகொண்டு அந்த தேசங்களை அளிவு செயிது கொண்டு யிறுந்தது. அந்த யிமிசே பொறாமல் அந்த தேசம்ங்களிலே யிறுக்கப்பட்ட செனங்கள் பயந்து சத்துருசாசன பாண்டியனி டத்துலே வந்து முரையிட்டார்கள். அப்பொளுது யிந்த சத்துரு சாசன பாண்டியன் தன்னிடத்துலே யிறுக்கப்பட்ட வீரபராக் கிரமம் பொருந்தியிறுக்கப்பட்ட வசீருளையும், மதிரயே மதிரத மத்திரம் பொறுந்திய அனேகம்பேற் மந்திரவாதி களையும் அந்த பூதத்தை செயிக்க விட்டான். அப்பொளுது யித்தியாதி பேறுகளும் அந்த பூதத்தை செயிக்க மாட்டாமல் அந்த பூதத்தினிடத்துலே போயி மாண்டு போனார்கள்.

அப்படி யிறுக்கச்சே சோள சமுஷ்தானத்துலே ஓரைந்தை பாசம் யென்ங்குர வூறுலே யிறுக்குர வேளாளரிலே கரியநென்று பேற் ஒடய வேளாளன் அவன் பிள்ளை சக்கரை யென்று பேறு டையவன் அவுதார புருஷராயி வீரலட்சுமி வுபவாசகநாயி அனேக வீரபறாக்கிரமம் பொறுந்தி மத்திர தந்திர யெதிர் வல்லவநாயிறுக்கப்பட்டவன் யிந்த சத்துறு சாசன பாண்டி யனிடத்திலிருந்து அனேகம் பேற் வசிக்குற நாளிலே இவன் ஒருத்தநாக யிறுந்தான். யிவனிடத்திலே யிருக்குற வல்லமையும்

வீரபறுக்குரமமும் கண்டு யிவனை வினாவும் யெடத்தில் யிவன் அப்பனை வாங்கிகொண்டு அனேகம் பவுசுகளுடனே பிறப்பட்டு சோமகிரிக்கு வந்து வீரலட்சுமி கடாஷத்துநாலே சறப மென்குற மமர தீரத்துலே திகப்பரைதனம் பண்ணி சிமத்தா மணி யெங்குற மந்திரவாளுநாலே அந்த நிச்சினன் னென்னப் பட்ட பூதத்தையும் சம்மாரம் பண்ணிநான்.

அதின் பிறகு சோள சமுஷ்தானத்தில் பேறிலே போயி வுத்தமகாச்சோழனையும் செயம்பண்ணி வராகமாலை சூடி வந்தான்.

அதின் பிறகு சத்துருசாசன பாண்டியன் மெத்தவும் சந்தோஷப்பட்டு கதியான சக்கரை உத்தமக்காமிண்ட ரென்னப்பட்ட பேறும் குடுத்து பட்டாபிஷேகமும் பண்ணி மகர மீன் கொடியும், வேப்பமாலையும், சுவேதச்சேத்திரமு சரியாசனமுங் குடுத்து பாண்டி சமுஷ்தானத்தில் குமார வற்க்க மாக தன்னிடத்திலே வச்சுக்கொண்டு காங்கய நாட்டுலே நத்தக் காரையூரும் வள்ளியரச்சலும் முத்தூரும் மருதுரை யிந்த னாலுகிராம வும்பளம் குடுத்தார்கள்.

அதின் பிறகு சத்துரு சாசன பாண்டியன் முதல் பாண்டி யன் பட்டம் யிறுவத்தி ஒன்பது பட்டம் வரைக்கும் பாண்டியன் சமுஷ்தானத்துக்கு குமார வற்க்கமாக யிறுந்தார் கலம்.

அதின் பிறகு பாண்டிய சமுஷ்தானம் போயி ராயர் சமுஷ் தாணம் ஆனதின் பிறகு:

பாட்டு.

**கலித்துறை**

தோற்றும் கலியுகம் முவ்வாயி ரத்தித்தொ ளாயிரத்தின்
சேற்றிகும் கீலகம் தைய்யென் குறுதேச மித்தினத்தில்
போற்றும் நல்லசக்கரை வச்சிரவாகுவே போறதடிந்து
மாற்றிபோரட்சி தகராயற் கய்யில் வாங்கினேனே.

யிதற்படிக்கு.

கலியுக சகாபுதம் 3905க்கு மேல் செல்லானின்ற கீலக ஞு தை மாசம் 7 ஷ குறுவாரம் தெசமி புனற்பூசம் கூடிய தினத்துலே

றாயற் சமக்ஷமத்திலே நல்ல சக்கர யுத்தமக் காமிண்ட னெங் குரவன் பிறுது வாங்கினான் கலம்.

யேதுநாலே யென் ஷெடி டில்லி சமுஷ்தானத்துலேயிறுந்து வச்சிரபாகு யெங்குர ஒறுவசீரன் சொட்டவித்தேயிலே பொகு வல்லவநாயி வீர கேடையம் முதலாகிய அனேகம் பிறுது களுடனே பிறப்பட்டு சமுஷ்தானம்ங்களிலே யிறுக்கப்பட்ட சொட்ட வித்தை கற்றவனை யெல்லாம் செயிச்சு செயபத்திரிகே வாங்கி கொண்டு றாயர் சமுஷ்தானத்தில் வந்து முளங்கால் மீசை முதலாகிய பிறுதுகளுடனே வந்து றாயரை கண்டு வுங்கள் சமஷ்சமத்துலே யிறுக்கப்பட்ட வீரவித்துவாம்சாளை அளைச்சு யென்னிடத்திலே விட்டு யென்னுடைய வீரவித்தையினுடைய வல்லவம் அறிய வேணும்யென்று சொல்லச்சே அப்பொளுது றாயற் சமுஷ்தானத்திலே யிறுக்கப்பட்ட பட்டக்காற் பாளயக் காற் வசீரற் முதலான பேரையும் அளப்பிவிச்சு அந்த வச்சிர வாயிலின் பேறிலே விட்டார்கள். அப்பேற்ப்பட்ட பேற்களும் செயிக்க மாட்டாமல் போனாற்கள்.

அதின் பிறகு யிந்த காங்கிய நாட்டிலே பளையகோட்டை யிலே யிறுக்கப்பட்ட நல்ல சக்கரை வுத்தமக்காமிண்ட நெங் குரவன் வீரலட்சுமி கட்டாஷ்சத்து நாலேயும் பூற்வ புண்ணி யத்து நாலேயும் தயிரிய வீரிய பறாக்கிரமத்தொடனே றாயரி டத்துலே வுத்திரவு வாங்கிகொண்டு அந்த வஞ்சிறவாயி வனிடத்திலே முஷ்டியுத்தம் பண்ணி அவனை பதுமாசன பந்தனம், கந்தாசனம், பந்தனம், னாகபதனம், கேசகேசற பந்தனம், கெறுடமூஷிக பந்தனம் யறிணியவத பந்தனம் மறக்கட்ட பந்தனம் மாற்ச்சால பந்தனம் முதலாகிய துவாதச முஷ்டியுத்தமும் பண்ணி யிறிணியவத பந்தனத்துநாலே அவனை அடிச்சு முளங்கால் மீசை முதலாகிய பிறதுகளையும் வாங்கி வச்சார்.

அதின் பிறகு றாயர் பாத்து மெத்தவும் சந்தோஷப்பட்டு நம்ம சமுஷ்தானத்தில் அவுமான மில்லாமல் செயிச்சானென்று அனேகம் விறுதுகளும் வீரவண்டயம் குடுத்து யெட்டுதிக்கு சொட்டக் காற்கண்டன் யெங்குர பிறுதாவளியும் குடுத்து சறியா சனமும் குடுத்து வரிசெயும் குடுத்தார்கள்.

காங்கயம் தாலூகாவுக்குச் சேற்ந்த பளையகோட்டை யிலே யிறுக்கும் செக்கரை கவுண்டற் யெண்ணப்பட்ட பட்டக் காரருடைய வம்சாவளி முதலான வரலாறு யென்னமென்றால் :

1. பூற்வத்தில் கலியுகம் ஹு 807 இதுக்கு மேல் சோளறாசா தொரதனத்தில் ஆத்தொண்டச் செக்கிரவற்த்தி நாளையில் தன்னுடைய தேசத்துலே யிறுக்கப்பட்ட வேளாளசாதியில் கலியாணம் பண்ண வேணும்யென்ங்குரதாக யெத்தினம் பண்ணுயிடத்தில் சம்மதிச்சு றாசாவே வரச்சொல்லி சகல சன்னாகதொடனேயும் றாசா வந்தயிடத்தில் பெண் நாய்யை அலங்கறிச்சு பந்தக்காலில் பிடிச்சுகட்டி போட்டு 48000 கோத்திரத்து வேளாளற் சோள றாசாவுக்கும் விரோதமாயி பிரப்பட்டு சேறதேசாதிபதியிடத்தில் வந்து சேந்தாற்கள்.

2. சேறனுக்குகொங்கனெண்ணும் பேற்வரப்பட்டு யிறுக்குர படியனாலேகொங்கு வேளாளரெண்ணு பேற்வரப்பட்டு காங்கய நாடு யெண்ணு பேற் வரப்பட்டுயிறும்க்கும் நாளையில் யெங்கள் வம்ச் பரம்பரயிலே முன்ன பூற்வத்தில் யிறுக்கப்பட்ட கரியான் சக்கரை யெண்ணப்பட்டவரை றாச்தேவ பாண்டிய நாளையில் வுத்தமக்காசோளன் அங்காமியிலே சோள றாசவிடனே யுத்தம் பண்ண வேண்டியதுக்காக மேலே யெளுத்தப்பட்ட பயர குலத்தில் கரியான் சக்கரை யென்னப்பட்டவரை தளநாயகனாக நேமுகம் பண்ணி அனுப்புகையில் சேதுரங்க பலசமேதமாயி போயிச் சோளறாசாஓடனே யுத்தம் பண்ணி செயிச்சிக் கொண்டு மதுறாபுரிபட்டணம் ஆளப்பட்ட பாண்டிய றாசா சமுகத்துக்கு வந்த விடத்தில் மிகவும் சந்தோஷப்பட்டு கலியுக சகாப்தம் 901க்கு சுபகிறுது ஸ்ரீஆவணி மீ 23-ந் தேதி சுக்குர வாரம் பூற்வபஷ்சம் தெசிமி மகர நஷ்சத்திரமும் சிம்மலக்கினம் வணிககரணம் சிவ நாம யோகமும் கூடின சுபதினத்தில் கரியான் செக்கரை வுத்தமக்காமின்டன் யெண்ணப்பட்ட கிதாபையும் குடுத்து, பட்டாபிஷேகமும் பண்ணி சகல விபவ தொடனேயும் பொகுமதிகளுடைய வரிசைகளும் நடப்பி விச்சார்கள்.

3. மேல யெளுதப்பட்ட கரியான் சக்கரை உத்தமக்காமிண்டன் யெண்ணப்பட்ட பேரையும் பெற்று பெறசுத்தி

புறுஷறாயி சகல விபவத்துடனேயும் தம்முடைய ஸ்தலத்துக்கு வந்து வாசம் பண்ணிக் கொண்டுயிறுந்தாற்கள்.

4. அந்த நாள் முதல் யெங்கள் வம்ச பரம்பரையாயி செக்கரை உத்தமக்காமிண்டன் யென்னப்பட்ட பேற் வரப் படுகுரது.

5. யிப்படிக்கி வம்சபரம்பரையாயி பிறசுத்தி புறுஷறாயி காங்கய நாட்டிலே வாசம் பண்ணிக் கொண்டுயிறுக்கும் காலத்தில் கலியுகம் 4344க்கு மேல் யெங்கள் வம்சத்துலே சோம செக்கரை உத்தமக்காமிண்டன் குமாரன் அளகன் சகரை உத்தமக்காமிண்டன் நாளையிலே நறபதி சிம்மாசனாதிபதி யான விசய நகரம் ஆளப்பட்ட பேறுவுட தேவறாயரவற்கள் காரியத்துக்கு கற்த்தறாகிய நஞ்சறானாசய்யனவற்கள் தாறா புரத்துக்கு யெளுந்துறுளி யிறுக்கும் காலத்தில் மணலூற் நாட்டில் வேட்டுவ சாதியில் வெங்கச்சி குலத்தில் கொங் கறாயன் யென்னப்பட்ட காவல்க்காரன் தலைக்கட்டு வரிக்காக சீமைகளிலே சில்லரை அங்காமி பண்ணிந படியநாலேயும் றாச்சியம் பிறுபுவத்தம் பண்ணப்படவற்களுக்கு அகப்படாமல் யிறுந்தபடியநாலேயும் யிது சேதிகள் யெல்லாம் விசயநகரம் ஆளப்பட்ட றாயரவற்கள் காரியகற்தறாகிய நஞ்சறாசய்யன் நவர்கள் மிகவுங் கேள்விப்பட்டு கொங்கு தேசத்தில் யிறுக்கப் பட்ட நாடனவரையும் தரிவிச்சி கொங்கறாயனெங்குர வேட்டு வனை பிடிச்சி தலைய வெட்டி கொண்டு வரச்சொல்லி சொன்ன இடத்தில் னாடனவறும் அளகனுத்தமக்காமிண்டன் சூற நானபடியநாலே அவரை தொட்டு ஆகுர காரியமே அல்லாமல் யெங்களை தொட்டு ஆகமாட்டாது யென்று சொல்லிக் கொண்டாற்கள்.

6. நஞ்சறாசயரானவற் கட்டளையிட்ட படிக்கு அளகன் சக்கரை உத்தமக்காமிண்டன் பிறப்பட்டு விசயநகரத்துக்கு போயிறாயரவர்களை பேட்டி பண்ணிக்கொண்டு சிறிது சன்னப்பாயரை கூட்டிக்கொண்டு மறுபடி தன்னுடைய சேர தேசத்துக்கு வந்து மணலூற் நாட்டில் தென்னிலை கோட்டை யில் யிறுக்கபட்ட வெங்கச்சி வேட்டுவரில் கொங்கறாயன் தலைய்யை கலியுகம் 4346க்கு சாலிவாகன சகம் 1168க்கு செல்லா

னின்ற பறாப ஸு மாசி மீ 7 பூற்வ பக்ஷசம் திரயோதசி சுக்குர வாரம் நாள், வெட்டிக்கொண்டு அளகன் சக்கரை உத்தமக் காமிண்டன் தன்னுடைய செனங்களுடனே கூடா இறாதா புரத்தில் போயி நஞ்சராய்யனரவர்கள் சமூகத்திலே கொங்க றாயன் தலையரைக் கொண்டு போயிவெச்சான்.

7. றாயரவர்கள் காரியத்தில் கர்த்தறாகுய நஞ்சறாசய்ய னரவர்கள் மிகவும் சந்தோஷப்பட்டு கொங்கு தேசம் யிறுவத்தி னாலும் நாட்டு அனவரையும் தரிவிச்சுக் கொண்டு அளகன் சக்கரை உத்தமக்காமிண்டனுக்கு வும்பளிக்கையாக காரையூர் கிறாம ஒண்ணு கொடுமணலு கிறாம ஒண்ணு ஆக கிறாம ரெண்டுக்கு நாற்ப்பாங்கு சதிரத்தில் வுளப்பட்ட பூமியும் ஆச் சதிர்ராக்கமாக அனுபவிச்சுக் கொண்டு வறும்படியாக தாம்பரப் பட்டயம் யெழுதிவிச்சுக் குடுத்தார்கள்.

8. அது முதல் நத்தகாரையூர் குடியிறுப்புக்காரறாயி அளகன் சக்கரை உத்தமக்காமிண்டன் யெண்ணப்பட்ட பேற் பெறசுத்திப்பட்டு காங்கய நாட்டில் நாட்டு ஆதிபத்தியம் உண்டு பண்ணிக்கொண்டு மேல்யெழுதப் பட்ட கொங்கு யிறுவத்திநாலு நாடு அனவற்நாலேயும் பட்டக்கார வரிசைகளும் நடப்பிவிச்சுக் கொண்டு றாச்சியம் ஆளப்பட்ட பெறபுக்கள் தயவுக்கு காரியஸ்தர்களாகி யிறும்ந்தார்கள்.

9. மேல் யெழுதப்பட்ட அளகன் சக்கரை உத்தமக்கா மிண்டன் நாள் முதல் நாளது ஆசறுலே யிறுக்கப்பட்ட நல்ல சேனாபதி சக்கரை உத்தமக்காமிண்டன் வரைக்கும் பட்டம் 22.

யிதுக்கு பட்டங்களுடைய வரிசைகளும் பேற்களும் மன்ன்றாடி யெண்ணபட்ட பேற்வரப்பட்ட வயணமும் யிதின் கீளை யெழுதப்பட்டதில் தெரியப்படுகுரது.

அளகன் சக்கரை உத்தமக்காமிண்டனுக்கு றாயர வர்கள் கடாக்ஷயத்துநாலே பிரசுத்தி புறுஷராயி யிறுவத்தி நாலு நாட்டு ஆனவற்கையிநாலேயும் பட்டம்ங்கள் அனுப விச்சுக்கொண்டு வறும்படியாயி மன்ன்றாடி யெண்ணப்பட்ட பேற்வரப்பட்டது.

சாலிவாகன சகம் 1168க்கு பறாபவ ௵ முதல் சாலிவாகன சகம் 1729க்கு பறாபவ ௵ வரைக்கும் ௵ 561க்கு பட்டம்ங் களும் வருஷம்ங்களுடைய தபசீல்.

1. சாலிவாகன சகம் 1168 பறாபவ ௵ முதல் சகாப்தம் 1190க்கு பறாபவ ௵ வரைக்கும் அளகன் சக்கரை உத்தமக்கா மிண்ட மன்ன்றாடி பட்டம் ௵ 21, ௴ 2.

2. யிவற் குமாரன் விபவ ௵ சித்திரை ௴ 1 முதல் சித்தர பானு ௵ வரைக்கும் சொக்கன் சக்கரை உத்தமக்காமிண்ட மன்றாடி பட்டம் ௵ 15.

3. யிவற் குமாரன் சுபானு ௵ சித்திரை ௴ முதல் பிலவங்க ௵ கார்த்திகை மாதம் 13-ஆம் தேதி வரைக்கும் கரியான் சக்கரை உத்தமக்காமிண்டமன்ன்றாடி பட்டம் ௵ 24, ௴ 7 னாள் 12.

4. யிவற் குமாரன் பிலவங்க ௵ கார்த்திகை ௴ 14-ந் தேதி முதல் பிரமோதூத ௵ தை ௴ 13 வரைக்கும் சோமன சக்கரை உத்தமக்காமிண்ட மன்ன்றாடி பட்டம் ௵ 23 ௴ 2.

5. யிவற் குமாரன் பிறமோதுத ௵ தை ௴ 14 தேதி முதல் விக்குறுதி ௵ பங்குனி ௴ 13-ஆம் தேதி வரைக்கும் அளகன் சக்கரை உத்தமக்காமிண்ட மன்ன்றாடி பட்டம் ௵ 20 ௴ 2.

6. யிவற் குமாரன் விகுறுதி ௵ பங்குனி ௴ 14௳ முதல் காளயுக்தி ௵ ஆடி ௴ 10 வரைக்கும் கரியான் சக்கரை உத்த மக்காமிண்ட மன்ன்றாடி பட்டம் ௵ 27 ௴ 3 னாள் 27.

7. யிவற் குமாரன் காளயுகுத்தி ௵ ஆடி ௴ 11 முதல் சறுவதாரி ௵ வய்யாசி ௴ 19 தேதி வரைக்கும் அளகன் சக்கரை உத்தமக்காமிண்ட மன்ன்றாடி பட்டம் ௵ 29 ௴ 10 னாள் 9.

8. யிவற் குமாரன் சறுவதாரி ௵ வய்யாசி ௴ 20௳ முதல் பரியதாபி ௵ அற்ப்பிசி ௴ 12 தேதி வரைக்கும் கரியான் சக்கரை உத்தமக்காமிண்டன் மன்ன்றாடி பட்டம் ௵ 24 ௴ 4 னாள் 22,

9. யிவற் குமாரன் பறியதாபி ஸூ அற்ப்பிசை மீ 13 தேதி முதல் விக்கிரம ஸூ பங்குனி மீ 30 தேதி வரைக்கும் பெரிய சக்கரை உத்தமக்காமிண்ட மன்றாடி பட்டம் ஸூ 28 மீ 5 னாள் 28.

10. யிவற் குமாரன் விசு வறுஷம் சித்திரை மீ 1 தேதி முதல் சவும்மிய ஸூ தை மீ 30 வரைக்கும் பிள்ளை சக்கரை உத்த மக்காமிண்ட மன்றாடி பட்டம் ஸூ 28 மீ 10.

11. யிவற் குமாரன் சவும்மிய ஸூ மாசி மீ 1 தேதி முதல் விக்கிரம ஸூ ஆவணி மீ 20 வரைக்கும் பாப்பான் சக்கரை உத்தமக்காமிண்ட மன்றாடி பட்டம் ஸூ 30 மீ 6 நாள் 20.

12. யிவற் குமாரன் விக்குரம ஸூ ஆவணி மீ 21 முதல் பிலவங்க ஸூ பிறட்டாசி மீ 15 வரைக்கும் பெரிய சக்கரை உத்தமக்காமிண்டன் மன்றாடி பட்டம் ஸூ 27 னாள்25.

13. யிவற் குமாரன் பிலவங்க ஸூ பிறட்டாசி மீ 16 முதல் விபவ ஸூ மாற்களி மீ 10 தேதி வரைக்கும் விசுவனாத சக்கரை உத்தமக்காமிண்டன் மன்றாடி பட்டம் ஸூ 21 மீ 3 னாள் 5.

14. யிவற் குமாரன் விபவ ஸூ மாற்களி மீ 11 முதல் சுபானு ஸூ ஆனி மீ 20 தேதி வரைக்கும் கந்தன் சக்கரை உத்த மக்காமிண்டன் மன்றாடி பட்டம் ஸூ 14 மீ 6 னாள் 10.

15. யிவற் குமாரன் சுபானு ஸூ ஆனி மீ 21 முதல் விசுவா வசு ஸூ கார்த்திகை மீ 14 தேதி வரைக்கும் பாலசக்கரை உத்தமக்காமிண்ட மன்றாடி பட்டம் ஸூ 22 மீ 4 நாள் 25.

16. யிவற் குமாரன் விசுவாவசு ஸூ கார்த்திகை மீ 16 ட முதல் விக்குரம ஸூ தை மீ 30 தேதி வரைக்கும் நஞ்சய சக்கரை உத்தமக்காமிண்ட மன்றாடி பட்டம் ஸூ 35 மீ 2 நாள் 15.

17. யிவற் குமாரன் விக்கிரம ஸூ மாசி மீ 1 தேதி முதல் நள ஸூ ஆடி மீ 15 தேதி வரைக்கும் பெரிய சக்கரை உத்த மக்காமிண்ட மன்றாடி பட்டம் ஸூ 35 மீ 10 னாள் 15,

18. யிவற் குமாரன் நள ஡ு ஆடி மீ 16 தேதி முதல் சறுவதாரி ஡ு அற்பிசை மீ 20 தேதி வரைக்கும் நல்லதம்பி சக்கரை உத்தமக்காமிண்ட மன்றாடி பட்டம் ஡ு 32 மீ 3 னாள் 5.

19. யிவற் குமாரன் சறுவதாரி ஡ு அற்ப்பிசை மீ 21 முதல் சாதாரண ஡ு மாசி மாசம் 10-ந்தேதி வரைக்கும் கொற்றவேல் சக்கரை உத்தமக்காமிண்ட மன்றாடி பட்டம் ஡ு 22 மீ 3 னாள் 20.

20. யிவற் குமாரன் சாதாறண ஡ு மாசி மீ 11 தேதி முதல் நந்தன ஡ு அற்ப்பிசை மீ 10 தேதி வரைக்கும் சேநாபதி சக்கரை உத்தமக்காமிண்ட மன்றாடி பட்டம் ஡ு 41 மீ 8.

21. யிவற் குமாரன் நதன ஡ு அற்ப்பிசை மீ 11 தேதி முதல் சார்வரி ஡ு பங்குனி மீ 10 தேதி பவறரனமாவாசை வரைக்கும் நல்ல தம்பிச் சக்கரை உத்தமக்காமிண்டன் மன்றாடி பட்டம் ஡ு 7 மீ 6 நாள் 10.

| | |
|---|---|
| 21 | 533-8 |

மேல் யெளுதப்பட்ட யிறுவத்தினாலு தலைமரை பட்டமங்களுடைய வரிசைகளிலே யென் தோப்பநார், நல்லதம்பி சக்கரை உத்தமக்காமிண்ட மன்னாறடியாற் அயிதரல்லிகான் துரைதனத்தில் தெயிவிகமாயி போனபடியனாலே அக்காலத்தில் நான் சிரு பிள்ளையாயியிறுந்தபடியனாலே யென் தோப்பநார் அரமனை அதிகாரம் பண்ணப்பட்டத்தில் சேமதலையான மேகுவளி பயணத்துக்காக யென்னையும் யென்னைச் சேந்த சனம்ங்களையும் டிப்புசுலுதான் தொரத்தனத்தில் தாறாபுரம் கடியில் கையிதுலே வைச்சுக் கொண்டுயிறுந்தார்கள்.

அதின் பிற்க்காலம் சாலிவாகன சகாப்த்தம் 1700 சுபகுறுது ஡ு யென்னையும் யெனெச் சேந்த செனம்ங்களையும் விடதலை பண்ணி, நானும் யென்னேச் சேந்த செனங்களும் காரையூறுக்கு வந்து சேந்துயிறுக்கும் நாளையிலே டிபுசுலுதான் பத்தரவற்கள்

காறியத்தில் கற்த்தராகிய கேயூர் சாயபு அவர்கள் நாளையில் நாளது ஷு ... சுபதினத்தில் நாடனவறும் குடிவந்து யெனக்கு பட்டாபிஷேகம் பண்ணி நல்ல சேனாபதி சக்கரை உத்தமக் காமிண்ட மன்னறாடி யென்னப்பட்ட பேரை வெளங்க பண்ணி நார்கள்.

மேல் யெழுதபட்ட யெங்கள் பெரியவாள் நாளையில் யெங்களுக்கு மிறாசியாயி நடக்கப்பட்ட காங்கய நாட்டில் பளையகோட்டை கிறாமம் 1. மூதூரு கிறாம 1. வள்ளியரச்சல் கிறாமம் 1. மறுதுரை கிறாமம் 1.

பாபிணி கிறாமத்தில் பாதி பிறுவுக்கு சேந்ததோடப்பிரிவு கிறாமம் 1. ஆக கிறாமம் 4. பாதி பிறிவில் கிறாமம் 1. யிதுக்கு வுள்ப்பட்ட நால்ப்பாங்கு சத்திரத்துக்கு வுள்ப்பட்ட பூமி முதலானதுகளுக்கும் மிறாசு குடித்தனம் அனுப்பவிச்சு கொண்டு அந்தந்த கால றாச்சியத்தில் பண்ணப்பட்ட பிறபுக்கள் தயவு நாலே கட்டளையிட்டபடிக்கி மேல் யெழுதப்பட்ட கிறாமங் களுக்கு யெங்கள் வம்சபறம்பரையாயி அரமனைக்கி பணமும் செலுத்திகொண்டு அரமனையாற் தயவு கோரி காத்துக் கொண்டு யிறுந்தாற்கள்.

யெனக்குப் பட்டமான நாள் முதல் சாலிவாகன சகாப்தம் 1717 ஷு வரைக்கும் டிபுசுலுதான் பக்தரவர்கள் துரைதனத்தில் முன்ன யெங்கள் வம்ச பறம்பரையாயி நடந்து கொண்டு வரப் பட்ட னத்தக்காரையூற் பளையக்கோட்டை கிறாமத்தில் பட்டக்காற மானிய மென்று நடந்து கொண்டு வந்த புஞ்சக் காடு பெரியவள்ளம் 80 தோட்டம் 20. யிது சறுவமானியமாக விளாற்கட்ட யிதுவும் பளையக்கோட்டை னத்தகாரையூற் கிறாமத்தில் வற்த்தர்காளள் கொண்டு வரப்பட்ட பல சிறுசு களுக்கு மேலும் பலபட்டரை சாதிக்கு வுள்ள மங்கவறி முதலான மகமைகளும் சாரியாயி நடப்பவிச்சு கொண்டு வந் தாற்கள்.

மேல் யெழுதப்பட்ட யெங்கள் வம்ச பரம்பரையுலே பாண்டிய றாசா நாள் முதல் நடந்து வரப்பட்ட பிறுதுகள் ஆயுதம்ங்கள் வாகனங்கள் வகைறா தபசீல்.

1. பல்லாக்கு, 2. உபயசாமரம், 3. சூரிய பான், 4. சேதச்சதிரம், 5. கட்டியம், 6. டமக்கா, 7. கொம்பு 8. கனகதப்பட்டை, 9. துத்தாரி, 10. அலகோசா, 11. வெட்டுப் பாவாடை, 12. சங்கீத மேளம், 13. வாத்தியம், 14. சோடு தீவட்டி, 15. காளஞ்சி. கலிங்கதூறாயி, ஸ்ரீபோசு, கபாயி முதலான வஸ்துகள்.

1. பட்டத்துக் கத்தி, 2. வெடி, 3. சமுதாடு, 4. வலயம் யிது முதலான ஆயுதம்ங்கள். மேல் யெளுதப்பட்ட பிறுதுகள் ஆயுதங்களுடனே யெங்கள் வம்ச பரம்பரையாயி பளைய கோட்டை குடியிருப்புக்காரராயி அனுபவிச்சுக்கொண்டு வந்தோம்.

சாலீவாகன சகாப்தம் 1720 முதல் மகாறாசறாசஸ்ரீ துரை தனத்தில் கும்பினியாற் துரைதனத்தில் மேல் யெளுதப்பட்ட பளைய கோட்டை கிறாமத்தில் குடியிறுப்புக்காரராயி தொரை களுடைய தயவுக்கு பாத்திரராயி காத்துக்கொண்டுயிறுக்குரேன். யெங்கள் வம்ச பரம்பறயிலே ராச்சிய பரிபாலநம் பண்ணப் பட்ட பிறுபுகள் தயவு பண்ணி விட்ட சறுவமானியம் முதலானதுகளும் சாரியாக நடப்பிவிக்க வேணுமென்றும் யென்னுடைய மானம் மரியாதி தெரிஞ்சி காற்ப்பாத்தி ரெஷ் சிக்க வேணுமென்று நான் மிகவும் வணக்கத்துடனே கோரி கொண்டு யிறுக்குறேன்.

1807 ஹு சூலாயி மீ 12

**நல்ல செனாதிபதி சக்கரை உத்தகமக்காமிண்டன் மன்றாடி ருசுவு.**

நாளது ஆசறுலே யிறுக்கப்பட்ட நல்லசேனாபதி சக்கரை உத்தமக்காமிண்டன் மன்ன்றாடி பளையகோட்டை குடி யிருப்புக்காரறாயி குடித்தனம் பண்ணிகொண்டு சறுகாறுக்கு றுசுவும் மஞ்சூறுகாறராயி யிறுக்கும் னாள் அவருடய வயசு முப்பத்தஞ்சி யிறுக்கும். சித்தமரிய வேண்டியது.

முகாம்நத்தக்காரையூறில்.

இக் கைபீது பளைய கோட்டை பாளையப்பட்டுக் காரருது. (இவ்வரி தெலுங்கில் உள்ளது).

# முத்து ரங்கப்ப நாயக்கன் வமிசாவளி

## (D: 2836)

தாறாபுரம் துக்குடி செக்கிறகிரி தாலுகா பாளையக்கார் கைபீது புக்கு 1. மேட்டளுதி 1. மைவாடி 1. வேடப்பட்டி 1. துங்காவி 1. சோதம் பட்டி.

தாறாபுறம்துக்குடி சக்கிறகிரி தாலுக்கா மேட்டளுதி பாலம முத்து றங்கப்பனாயக்கறென்குற பாளேகர் வமுசாவளி முதலான கைபீது யென்னமென்றால்: பூற்வத்தில் யாதவ குலமான கம்பள சாதி அனவரும் பாதுஹா சீமயில் யிருக்கும். னாளையில் என்வம்சமான பாலம னத்தமனாயக்கன் என்குற வன் சாக்கிறி செயிதுக் கொண்டுயிறுந்தாற். அந்த சமயத்தில் பாதுஷா எங்கள் கம்பளசாதியில் தமக்கு பெண்குடுக்கச் சொல்லி கேட்டப்படியினாலே எங்கள் சாதியாறனவரும் பாபபட்டு வருகுற முன்னுக்கு எங்கள் பாலமனத்தம னாயக்கர் பறப்பட்டு றாயர் சமஸ்தானத்துக்கு வந்து சேர்ந்தாற்கள்.

றாயர் சமுஸ்தானத்தில் கலியாணபுறம் என்குற கிறாமத் தில் குடியிருப்புக் காறனாயியிருக்கும் னாளையில் ஒருநாள் சமயத்தில் றாயரவர்கள் பாலமனத்தம னாயக்கரை தருவிச்சு நீ யாரு எவடம்? இவடத்தில் வந்திருக்குற தென்னாவென்று கேட்டார்கள். அந்த சமயத்தில் பாலமனத்தம னாயக்கன் தம்முடைய கஷ்டநிஷ்டூறதர்ம பண்ணிக் கொண்டு யிருந்த பளைப்பும் பாதுஷா பொண் கேட்டபடியினாலே எங்கள் கம்பளசாதி சகலமான பேரும் பாபபட்டு தங்கள் சன்னிதானத் துக்கு பரப்பட்டு வந்தோமென்று சொல்லி றாயர் சன்னிதானத் தில் அரியப் பண்ணி கொண்டாற்கள்.

றாயரவர்கள் பாலால சித்தமனாயக்கரை நீர் சேவுகத்திறா ணியான படியினாலே னம்முட சமுஸ்தானத்திலே சேவுகம் வச்சுக் குடுக்குறோமென்று சொல்லி அயினூறு சனத்துக்கு சருதாறாக னே(முகம்) செயிது காக்க வச்சாற்கள்,

STATE DEPARTMENT OF ARCHAEOLOGY
LIBRARY,

றாயரவர்கள் சன்னிதானத்தில் சாக்கிறி பண்ணிக்கொண்டு பேனுகொண்டைலே யிருக்கும் னாளையில் தெர்க்கு பிற தேசத்திலே கள்ளர், புலியிப்படி சில்லரை உபத்திறவங்கள் றொம்ப யிருக்குறதென்று றாய சமுஸ்தானாதிபதியாகிய கிஷ்ண தேவறாயர்களுக்கு சமாசாறம் வந்துது. அந்த ஷணம் பாலம னத்தம னாயக்கறுக்கு உத்திரவு செயிது தரிவிச்சு தெர்க்கு பிறதேசத்தில் மேட்டுவாவி என்குற சறகத்து காட்டுகளிலே சில்லரை உபத்திறவங்களை அடைக்கி போட்டு வரவேணு மென்று சொன்னாற்கள்.

கிருஷ்ண தேவறாயர் அவர்கள் உத்தறவுபடிக்கி பால சித்தம னாயக்கர் தம்முடய சேர்ந்த சனங்களை எல்லாம் அழைச்சு கொண்டு பரப்பட்டு வந்து மேட்டு வாவியிடத்து சமீபம் சஞ்சாறம் பண்ணப் பட்ட கள்ளர் புலி முதலான முற்கங்களை எல்லாம் சம்மாறம்பண்ணிப் போட்டு மேட்டு வாவி யிடத்தில் யிறுக்கப்பட்டக் காடு எல்லாம் வெட்டிவிச்சு, ஊடுகள் உண்டு பண்ணி மேட்டுறாதி யென்று ஊருக்கு பேற்வச்சாற்கள்.

அதின் பிறகு பாலாலனத்தம னாயக்கன், மறுபடிக்கி பேனு கொண்டைக்கி கிருஷ்ணறாயர் அவர்கள் சன்னிதானத் துக்கு போயி கள்ளர் முறிகங்களை சம்மாறம் பண்ணிப் போட்டு மேட்டுவாவியிருக்குற யிடத்தில் காடுகள் வெட்டி ஊடுகள் கட்டி விச்சு அதே ஊருக்கு மேட்டுறாதி என்று பேர் வச்சுயிருக்குரேனென்று அரிக்கை செயிது கொண்டாற்.

கிஷ்ண தேவராயரவர்கள் றொம்பவும் சந்தோஷப்பட்டு அந்த காடு வெட்டி ஊர் உண்டு பண்ணின மேட்டறாதிக்கிறா மங்களுக்கு நியே மன்சுபேதாறனாயி அனுபிவிச்சுக்கொண்டு வரச் சொல்லியும் றாய சமுஸ்தானத்துக்கு புத்திறவர்க்கமாக னடந்துக் கொண்டு வரச் சொல்லியும் கட்டுப்பண்ணி, பல் லாக்கு, உபயசாமறம், சுறிட்டி, தீவிட்டி, விறகங்கணம், யிது முதலான 32 பிறுதுகள் 18 வாத்தியங்களும் குடுத்து வெகு மதிகள் பண்ணி மேட்டறாதி பாளேகாற் என்று பட்டமும் கட்டி மன்சுபேதாரன் பாலம னத்தமனாயக்கரென்று பேற் குடுத்தாற்கள்.

பாலமனத்தம நாயக்கர் றாயர் சமுஸ்தானத்தில் சகல பகுமதிகளும் சகல வாத்தியங்களும் பெத்து பிறசித்தி புறுஷனாயி மேட்டுறாதிக்கி வந்து சேந்து மேட்டுறாதி கிறா மத்துக்கு னாலு திக்குலேயும் கீழ்மேல் மூணுனாளி வழி தென் வடல் ரெண்டுனாளி வளி சதுறத்துக்கு சதிறம் காடுகள் வெட்டி ஊர்பட்டிகள் உண்டு பண்ணி மேட்டுறாதிக்கி சேந்த அஞ்சு கிறாமமும் சுத்த சாறியாக அனுபவிச்சுக் கொண்டு பாளேக ரெண்று பிறசித்தியாக யிருந்தார்கள்.

அந்த னாள் முதல் சாலிவாஹன செகாப்தம் ௵ 1301 முதல் 1712க்கு விறோதிகுறுது வருஷ வரைக்கும் பட்டங்களுடைய வரிசைகளும் அவாளுடைய னடத்தைகளும் யிதின் கீளே எழிதப் பட்டத்தில் தெரியவருகுறது.

குல்லு ௵ 411 யிதுக்கு பட்டங்கள் வரிசை எழிதிகுறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | பாலமனத்தம னாயக்கன் பட்டம் ஆண்ட | ௵ | 50 |
| 2. | யிவர் குமாறன் முத்து றங்கப்பனாயக்கன் பட்டம் ஆண்ட | ௵ | 45 |
| 3. | யிவர் குமாறன் கஸ்தூரி னாயக்கன் பட்டம் ஆண்ட | ௵ | 32 |
| 4. | பெத்த வீர னாயக்கன் பட்டம் ஆண்ட | ௵ | 41 |
| 5. | யிவர் குமாரன் னத்தம னாயக்கன் பட்டம் ஆண்ட | ௵ | 22 |
| 6. | யிவர் குமாறன் பொம்மய னாயக்கன் பட்டம் ஆண்ட | ௵ | 18 |
| 7. | யிவர் குமாறன் றங்கசாமி னாயக்கன் பட்டம் ஆண்ட | ௵ | 35 |
| 8. | யிவர் குமாறன் தமிளகொண்டம னாயக்கன் பட்டம் ஆண்ட | ௵ | 16 |
| 9. | யிவர் குமாறன் பொம்மய னாயக்கன் பட்டம் ஆண்ட | ௵ | 24 |
| 10. | யிவர் குமாறன் னத்தம நாயக்கன் பட்டம் ஆண்டு | ௵ | 18 |
| 11. | யிவர் குமாறன் முத்து ரெங்கப்ப னாயக்கன் பட்டம் ஆண்ட | ௵ | 15 |

| | | | |
|---|---|---|---|
| 12. | யிவர் குமாறன் பொம்மய னாயக்கன் பட்டம் ஆண்டு | ஷு | 60 |
| 13. | யிவர் குமாறன் ஊத்தம னாயக்கற் பட்டம் ஆண்டு | ஷு | 35 |
| 13 | | | 411 |

பாண்டிய தேசாதிபதியான திருமலனாயக்கர் கணியூர் பாதி காவலும் முங்கலடிகு மாநிலம் ஊஞ்சை மானியம் விட்டாற்கள்.

முதல் பட்டக்காறறான பாலமனத்தம னாயக்கற் னாளை யில் றாயர் சமுஸ்தானத்தில் சகல பகுமதிகளும் பெத்து மெட்டுறாத்திப்பாளையக்காற் எண்று பேற் பிறசித்திப்பட்ட வறாயி கிறாமங்கள் சம்பாதிக்கப்பட்டம் ஆண்டுக்கொண்டு வாராற்கள். அவா னாள் முதல் பதிமூனாம் பட்டம் என் தோப்பனாறான ஊத்தம னாயக்கற் னாள் வரெக்கும் எங்கள் வம்சபறம்பரையாயி மேட்டறாதி பாளையகாற் யென்று பேற் பிறசித்திப்பட்டவர்களாயி அந்தந்த காலத்தில் றாச்சியபாறம் பண்ணப்பட்ட றாசாக்கள் கட்டளை யிட்ட படிக்கி னடந்து கொண்டு வந்தாற்கள். மீ 4 கட்டுப் பத்து.

சாலிவாஹன செகாபத்தம் 1712-க்கு எனக்கு பட்டமாயி மேட்டறாதி குடியிருப்புக்காரறாயி மேட்டறாதிக்கிச் சேந்த பட்டிகளுடனே ஆறுகிறாமத்துக்கும் ஷு பிறதியும் சமாபந்திப் படிக்கி மூணு வொண்டூறு தயவு செயிது யிறுக்குறபடியினாலே வருஷ வருஷம் பத்திக் கோண் அனுபவிச்சுக் கொண்டு னாற்பது சனம் சம்சாறத்துடனே மகாறாசஸ்ரீகும்பினி துரைகள் கட்டளை படித்துக்கு பாத்திரனாயி காத்துக்கொண்டு மேட்டுறாதியில் ஆசறுலே காத்துக் கொண்டுயிருக்குறேன்.

1808 ஷு செனவரி மீ 4 உ

**முத்து ரெங்கப்பனாயக்கர் ருசுவு.**

# மயிலாடி பாளையக்காரன் சின்னம நாயக்கன் வமிசாவளி

## R. 2837

ஷெ தாலுகா மைலாடி பாளையக்காரர் சின்னம னாயக்கன் யென்குற பாளையக்கார் வம்சாவளி முதலான கைபீது யென்ன வென்றால் பூர்வத்தில் பாதுஷஹ சீற்மையில் பாளையகற் பாளயப்பட்டா யிறுக்கப்பட்ட கம்பள சாதி அனவறும் றாயற் சமுஸ்தானத்தில் வந்த தறுணத்தில் றாயற் சமுஸ்தானத்தாற் யெங்கள் வம்ச சிரோமணியான பாலால சித்தமனாயக்கன் றாயற் சமுஸ்தானத்தில் குமாரவற்க்க மென்று பேற் பெறசுத்திப் பட்டவற்களாஇ யிறுக்குற நாளையில் அவருடைய புள்ளையன் யேளு பேறிலேயும் ரெண்டாம் புள்ளை யெத்துல முத்து நாயக்கனுக்கு ஒரு புள்ளை புரந்து ஒடனே அந்த புள்ளைக்கு தாயார் தெய்வகொதி யானாள்.

அந்த தாஇ யில்லாத குளந்தையை வச்சுக் கொண்டு பரிதாபத்துநாலே யிறுக்குற சமயத்தில் யெத்துலமுத்து நாயக்கர் பறிதாபத்துநாலே ஈணாதபத்தினி பசுவுயிடத்தில் குளந்தயைப் போட்டு பிறதட்சணம் பண்ணி வேண்டிக் கொண்டபடியநாலே அந்த பசு தினபிறிதியும் தானாக குளந்தயிடத்தில் வந்து மூணுகாலமும் பால் குடுத்துக்கொண்டு வருகுரபடியனாலே யிது சேதிகள் றாயற் சமுஸ்தானாதிபதியான சோம தேவறாயற் அவர்கள் கேட்டு அந்த பசு மாட்டேயும் அந்த கொளந்தையும் தறிவிச்சு பாத்து மஹா ஆச்சறியப்பட்டு அந்த குளந்தயிடத்தில் றொம்பவும் பீரிதியாக அபிமானம் வச்சபடியநாலே தினம் தினம் பிறவர்த்தமாஇ வளந்து கொண்டு யிறுந்தான். றாயற் அவர்களும் தின காலமும் அந்த குளந்தை சுகமா யென்று விசாரிச்சுக் கொண்டுயிறுப்பார்கள். அந்த குளந்தை பசுவு பா்ல் குடுத்து வளந்த சின்னமனாயக்கன் யெங்குறவனுக்கு முணு வயிசு ஆன ஒடனே றாயர் சமுஸ்தானத்தில் அரண் மனைக் கூட்டிப் போஇ வச்சுக் கொண்டு பிதுறார்ட்சயமாஇ அபிமானமாஇ வளந்து கொண்டு யிறுக்கும் நாளையில் விபா

லாதி சுபயோகங்கள் பண்ணிவிச்சு வித்தியாப்பியாசம் தனுர் வித்தியாதிகள் முதுலானதுகளிலே மிகவும் வல்லவனாயி அப்பியாசித்துக் குடுத்து பசுவின்பால் வுண்டு வளந்த படியநாலே றாயற் அவற்கள் வுண்டாடி கோத்திரம் சின்னமநாயக்கன் யென்று பேறும் குடுத்து நம்பிபுத்தூற் இடங்களில் யிவறுக்கும் மன்னவேட்டாஇ விடவேணுமென்று னினைச்சு பதினாறு வயிஸான ஒடனே பல்லாக்கு உபயசாமரம் றாயக்கணம் ரணபாசிங்கம், முத்துதுறாயி, பூச்சக்கிறகுடை, முத்தொண்டி, பச்சொண்டி, சொகுசாலுவை, வெள்ளைபக்கறடால், சங்கு சக்கிற சுறுட்டி முதல் பின்னும் முப்பத்திரெண்டு விறுதும் பதிநெட்டு மேளவாத்தியமும் குடுத்து வேண்டிய வெகுமதிகளும் பண்ணி தட்சணப் பிறதேசத்தில் நம்பி புத்தூற் கெடியும் கொறிக் கடவும் கெடியும் யிந்த ரெண்டு கெடிக்கி சேற்ந்த சீமைக்கு னீய்யே மன்சுபேதாரறாயிறுமென்று பட்டாபிஷேகம் பண்ணிநார்கள்.

வுண்டாடி சின்னமனாயக்கற் யென்று பேற் பிறசுத்திப் பட்டவாறாயி சகல பிருதுகள் வாத்தியங்களுடனே சிறுது பவுசுக்களையுங் கூட்டிக்கொண்டு தெற்க்கு (தேசத்தில்) கரூறுக்கு மேற்க்கு நம்பிபுத்தூறில் வாசமாஇ யிருந்து கொண்டு நம்பிபுத்தூர் கெடியும் கோரிக்கடவு கெடியும் ரெண்டு கெடிக்கும் சேற்ந்த சீற்மையும் பந்தோபஸ்து பண்ணி கொண்டு மன்னறிக்கைமாஇ பிறபுத்துவம் பண்ணி கொண்டு வந்தாற்.

இவற் குமாரன் நுசம்பேனாயக்கன் சொவுரியோதாறிய காம்பிறியங்களிலே பிறபவிச்சு பவுருஷம் உண்டு பண்ணி கொள்ள வேணுமென்று யோசிச்சு தாமாக விங்கடமாஇ றாயர் சமுஸ்தானத்துக்கு போயி தம்முடய பவுறஷம் வல்லாண்மை யெல்லாம் காண்பிவிச்சு ஒப்புதலை பண்ணி சிஞ்சிவாடி பாளையகறாயி பட்டமுங் கட்டிக் கொண்டு வந்து விங்கடமாஇ சிஞ்சிவாடி பாளைக்கறாயி யிறுந்தாற்.

வுண்டாடி சின்னமனாயக்கன் நாள் முதல் சாலிவாகன சகாபுதம் **1212** முதல் சகாபுதம் **1704** வரைக்கும் ஞூ **492**க்கு பட்டம்ங்களுடைய வரிசைகளும் அவாளவாளுடை நடத்தையளும் யிதின்கீள் யெளுதி வறுகுரது.

1. வுண்டாடி சின்னம நாயக்கற் பட்டம்
ஆண்ட ௵ 40
2. யிவற் குமாறன் பாளையத்து நாயக்கன்
பட்டம் ஆண்ட ௵ 16
3. யிவற் குமாரன் வேலப்ப நாயக்கன்
பட்டம் ஆண்ட ௵ 19
4. யிவற் குமாரன் குமார னாயக்கர்
பட்டம் ஆண்ட ௵ 22
5. யிவற் குமாரன் பொம்மே னாயக்கற்
பட்டம் ஆண்ட ௵ 30
6. யிவற் குமாரன் வீரபத்திர னாயக்கற்
பட்டம் ஆண்ட ௵ 20
7. யிவற் குமாரன் றாஜகோபால னாயக்கர்
பட்டம் ஆண்ட ௵ 11
8. யிவற் குமாரன் சிவறாம னாயக்கற்
பட்டம் ஆண்ட ௵ 9
9. யிவற் குமாரன் பொன் மலையாண்டி
நாயக்கற் பட்டம் ஆண்ட ௵ 18
10. யிவற் குமாரன் முத்து மலையாண்டி
நாயக்கற் பட்டம் ஆண்ட ௵ 31
11. யிவற் குமாரன் குமாரவேல் னாயக்கற்
பட்டம் ஆண்ட ௵ 23
12. யிவற் குமாரன் வஜிரவேலாயுத நாயக்கற்
பட்டம் ஆண்ட ௵ 38
13. யிவற் குமாரன் முத்து வேலப்பனாயக்கற்
பட்டம் ஆண்ட ௵ 15
14. யிவர் குமாரன் யெத்துலப்பனாயக்கற்
பட்டம் ஆண்ட ௵ 6
15. யிவற் குமாரன் சின்னமலையாண்டி
நாயக்கற் பட்டம் ஆண்ட ௵ 13
16. யிவற் குமாரன் கட்டியாண்டி நாயக்கற்
பட்டம் ஆண்ட ௵ 18
17. யிவற் குமாரன் நாகமனாயக்கற்
பட்டம் ஆண்ட ௵ 26
18. யிவற் குமாரன் நறசிம்ஹ னாயக்கன்
பட்டம் ஆண்ட ௵ 22

| | | | |
|---|---|---|---|
| 19. | யிவற் குமாரன் சின்னசாமி னாயக்கன் பட்டம் ஆண்ட | ஷெ | 7 |
| 20. | யிவற் குமாரன் அளகாத்திறி நாயக்கற் பட்டம் ஆண்ட | ஷெ | 13 |
| 21. | யிவற் குமாரன் முத்து வீரப்ப நாயக்கற் பட்டம் ஆண்ட | ஷெ | 18 |
| 22. | யிவற் குமாரன் மலையாண்டி னாயக்கற் பட்டம் ஆண்ட | ஷெ | 30 |
| 23. | யிவற் குமாரன் அளகப்ப னாயக்கற் பட்டம் ஆண்ட | ஷெ | 47 |
| 23 | | | 493 |

முதல்ப்பட்டக் காரறான உண்டாடி சின்னம நாயக்கற் நாளையில் றாயற் ஸமுஸ்தானத்துலே அன்னேக பிறுதுகள் ஆயுதங்கள் முதலான பிறுதுகளும் பெற்று நம்ப்பிபுத்தூர் கோறிக்கடவு இந்த ரெண்டு சீற்மையும் சம்பாதிச்சு மன்னறிக மாஇ பாளையப்பட்டு ஆண்டுகொண்டு அனேக தேவாலயங்கள் உண்டு பண்ணி அனேகதான தற்மத்துடனே பிறசுத்தி புருஷ றாயி யிறுந்தாற்கள். ரெண்டான் பட்டக்காரனான பாளையத்து நாயக்கர் நாள் முதல் அஞ்சான் பட்டக்காரன் பொம்மைய னாயக்கற் நாள் வரைக்கும் நம்பிபுத்தூற் வாசஸ்தறாய்யி ரெண்டு கெடிசீற்மையும் பாளையப்பட்டு மன்னவட்டமாஇ பாளையப்பட்டுக்கு ஆண்டு கொண்டு பிறசித்தி புருஷாளாஇ றாயற் சமுஸ்தானத்தில் குமாரவற்க்கமாஇ யிறுந்தாற்கள்.

ஆறாம் பட்டக்காரனான வீரபத்திர னாயக்கற் நாளையில் அக்காலத்தில் பாண்டிய ச்முஸ்தானாதிபதியான திருமல நாயக்கற் அவர்கள் நாளையில் நம்பிபுத்தூர் கோறிக்கடவு இந்த ரெண்டு கெடிக்கும் அறமனைக்கு தோபாபணம் குடுக்கச் சொல்லி கேட்டு அனுப்பிவிச்ச படியநாலே வீரபத்திர நாயக்கற் தோபாபணங் குடுக்குரது இல்லை யென்றும் றாயற் சமுஸ்தானத்தில் மன்னறிக்கமாஇ விட்ட கெடிகளுக்கு மன்னறிககைமாஇ அனுபவிச்சு கொள்ளுமே அல்லாமல் பணம் குடுக்க மாட்டோம் யென்றும் சொன்னபடியனாலே திருமலை நாயக்கற் அவற்கள் சிறிது பவுசுகள் போஇ வீரபத்திர னாயக்கரை கைப்பிடியாஇ பிடிச்சுக் கொண்டு வறச்சொன்னபடியநாலே

திருமலை நாயக்கற் அவர்கள் பவுசு வந்து சண்டை பண்ணி னாற்கள். அந்த சண்டையிலே நம்பி புத்தூற் கெடிவிட்டு கொறிக்கடவு கெடிக்கு வந்த சமயத்தில் யுத்த முகத்துக்கு ரண ரங்கத்துலே வீரபத்திர நாயக்கற் வீரஸ்வர்ங்க பிறுது பித்தி யானாற்கள்.

அதின் பிறக்காலம் பெண்டுகள் குளந்தையள் மதுரைக்கு போயிச் சேற்ந்து நாயக்கற் அவற்களைக் கண்டு பேட்டி பண்ணிக் கொண்டு றாயர் சமுஸ்தானத்துலே மன்னறிக்கமாக நடந்து வந்த மறியாதிகளை யெல்லாம் அறிக்கை பண்ணித்து யுத்தரங்கத்துலே யெடுபட்டு போன ஸமாசார மெல்லாம் அறிக்கைகள் செயிது கொண்டபடியநாலே வீரகர்ம்மானுடைய வாற்தைகளுக்கு பறிதாபபட்டு சந்தோஷத்துனாலே அந்த பெண் பெண்டாட்டிய்யோடய குமாரறான றாஜகோபால நாயக்கன் யெங்குற குளந்தைக்கு சகலவெகுமதிகளும் பண்ணி றாயற் குடுத்த பட்டத்தில் நீயே பட்டாதிகாறியாஇ யிறுமென்று உத்திரவு செயிது கோறிக்கடவு கெடிக்குச் சேற்ந்த ஆம்பிறா வதிக்கு மேற்க்கு யிறுக்கப்பட்ட வனாத்திரங்களிலே தென் வடல் நாளிகை 2. கீள் மேல் 3 யிந்த நிலம் சுத்த சறுவமானிய மாக அனுபவிச்சுகொண்டு வறச் சொல்லியும் சோளமாதேவி யிலே, அஞ்சுமாநிலமும் பெறிய மானிய மென்று குடுத்து சுகத்துலே யிறுக்கச் சொல்லி கட்டளையிட்டாற்கள். நாயக்கர் அவற்கள் உத்திரவு படிக்கி கோறிக்கடவுக்கு சேந்த ஆம்பி றாவதி மேற்க்கு யிடத்தில் வந்து சேற்ந்த சமயத்தில் அவடத் துலே மயிலும் ஆடின படியனாலே அவடத்தில் வீடுகள் உண்டு பண்ணி மயிலாடி யெண்ணு வூருக்கு பேறவச்சுக்கொண்டு அந்த காட்டுகளையெல்லாம் வெட்டி பின்னையும் அஞ்சுகிறாமமும் வுண்டுபண்ணிகொண்டு மயிலாடி ப்பாளையக்கார றாஜ கோபால னாயக்கற்யெண்ணப்பட்ட பேற பிறசித்திப்பட்ட வற்களாகி ௫ கிறாமமும் சாறியாகி அனுபவிச்சுகொண்டு யிருந்தாற். அதின் பிற்காலம் யெட்டான் பட்டக்காரறான சிவறாம னாயக்கற் நாளையில் அக்காலத்தில் மதுரை ஸமுஸ் தானத்தில் கற்த்தறாகிய நாயக்கர் அவற்கள் கூட்டத்தில் மைலாடி கிறாமம் 6க்கு ஷ 1க்கு றாஜகோபாலி 90 பொன் னிகுதி செய்தபடியநாலே வருஷப்பிறிதியும் னிகுதிப்படிக்கு அர மனைக்கு பணம் செலுத்தி கொண்டு யிறுவதாம் பட்டம் அளகாத்திறி நாயக்கற் நாள் வரைக்கும் பதிமுணு தலைமுரைக்கு

மயிலாடி கிறாமம் 6 சோளமாதேவி மானியமும் சுத்த சாறியாஇ அனுபவிச்சு கொண்டு வந்தாற்கள்.

யிருவத்திஓறான் பட்டக்காரனான முத்து வீரப்ப நாயக்கற் நாளையில் அக்காலத்தில் மயீசூரு ஸமுஸ்தானத்தில் கற்த்தறாகிய சாமறாஜ ஒடய்யறய்யனவற்கள் நாளையில் மயிலாடி பாளையப்பட்டுக்கு றாஜகோபாலி பணம் 100 பொன் னிகுதி செயிதபடியநாலேயும் சோளமாதேவி மானியத்திர்க்காக பாதிக்காவல் காற்க்கச் சொல்லி உத்திரவு ஆன படிய நாலேயும் வறுஷம் பிரிதியும் அரமனைக்கு பணம் செலுத்திக் கொண்டு பாதிகாவலும் காத்துக் கொண்டு யிறுவத்தி ரெண்டான் பட்டம் மலையாண்டி னாயக்கற் நாள் வரைக்கு மயிலாடிகிறாமம் 6 ம் சோளமாதேவி பாதி காவலும் சுத்தசாறியாஇ அனுபவிச்சு கொண்டு வந்தாற்.

இருவத்தி மூணாம் பட்டக்காரனான அளகப்ப நாயக்கற் நாளையில் அக்காலத்தில் மயிசூறு ஸமுஸ்தானாதிபதியான நபாபு அய்தறல்லிகான் துரைதனத்தில் சீமை ஒப்பந்தமாஇ மயிலாடி பாளையப்பட்டுக்கு வறுஷம் 1க்கு விறாயன் பணம் 150 பொன் நிகுதி செயிந்தபடியனாலே வருஷ பிறிதியும் நிகதிபடிக்கு அறமனைக்கு பணம் செலுத்திக் கொண்டு மயிலாடிக்கு சேந்த கிறாமமும் ஆறும் சோளமாதேவி பாதிகாவல் மானியமும் சாறியாஇ அனுபவிச்சு கொண்டு துரைகள் சித்தானுசாறமாயி நடந்துக் கொண்டு வந்தாற்கள்.

அளகப்பனாயக்கற் குமாரன் சின்னம நாயக்கன் நாளையில் அக்காலத்தில் மைசூறு சமுஸ்தானாதிபதியான டிபுசுலுத்தான் அவற்கள் துரைதனத்தில் மையிலாடி பாளையப்பட்டுக்கு விறாயன் 200 பொன்னிகுதி செயிவிச்சு குடுத்த படியநாலே அறமனைக்கு வருஷம் பிறிதியும் பணம் செலுத்திவச்சு கொண்டு பாதிக்காவலால் மானியமும் சாறியாஇ அனுபவிச்சு கொண்டு பாளையப்பட்டும் அனுபவிச்சு கொண்டுவந்தேன்.

அதன் பிற்க்கால மஹாறாஜறாஜ ஸ்ரீகும்பிணி துரையவற்கள் துரைத்தனத்தில் மஹாறாஜஸ்ரீ ஆற்டீசுசாயபு துரையவர்களை பேட்டி பண்ணிகொண்டு தொரைகள் நிகுதி பண்ணினபடிக்கு பணம் செலுத்திவிச்சுக் கொண்டு வந்தேன். அதின் பின்ப்பு றுத்திறோஷ்தாக்காரி ஹூ துரையள் வுத்திரவு

படிக்கு விருபாஷ்சி லட்சும னாயக்கனை பிடிச்சுக் கொண்டு வந்து துரையள் சன்னிதானத்திலே கொண்டு வந்து ஒப்பிவிச்ச படியனாலே மஹாறாஜஸ்ரீ கிறீம் சாயபு துரையவற்கள் யென் பேறில் கடாஷ்சம் செயிது வெகுமதி பண்ணி அயினூறு புலீவிறாகன் யினாம் குடுத்தாற்கள்.

மஹாறாஜஸ்ரீ கும்பிணிதுரையவர்கள் கட்டு பண்ணின நிகுதி படிக்கு மயிலாடி கிறாமமும் 6 க்கு வண்டான பேறீசு படிக்கு வறுஷம் பிறிதியும் பத்தில் மூணு குடுக்குற படியநாலே அனுபவிச்சு கொண்டு கடாஷ்சயத்துக்கு பாத்திரராஇ காத்துக் கொண்டு யிருக்குரேன்.

**மைலாடி சின்னமனாயக்கர் ருசுவு.**

# வேடப்பட்டி திம்மநாயக்கன் வமிசாவளி

## D. 2838

ஷெடி தாலுகா வேடப்பட்டி பாளையக்கற் திம்மனாயக்கன் வம்சாவளி முதலான கைபீது: பூற்வத்தில் ஆனைகுந்தி சமுஸ் தானத்துலேயிறுந்து கம்பள சாதியாற் அனவறும் அவரவர் களுக்கு பாளயபட்டு நிகுதி செயிவிச்சு கொண்டு புறப்பட்டு தெற்க்கு னோக்கிவறும் நாளையில் ஆம்பிறாவதி ஆத்துக்கு மேற்க்கு சதிரத்தில் சேந்த ஒரு நாளிகை வளிக்கி காடு யெனக்கு வும்பிளிக்கையாக விட்ட படியநாலே யெங்கள் வம்சத்தில் பொடிதலை கும்மனாயக்கன் அந்த காடுகள் யெல்லாம் வெட்டி வூற்கள் வுண்டு பண்ணின படியநாலேயும் யெங்கள் கம்பள சாதியில் வேடக்கம்பளமான படியநாலே அந்த வூறுக்கு வேடப்பட்டி யென்று பேற்பிறசுத்திப்பட்டு பாளையக்கற் யென்று வும்பிளியாக அனுபவிச்சுக் கொண்டு யிறுக்கும் நாளை யில் யிந்த வியாக்கிறங்களிலே யெதுத்து வேட்டை பண்ணுகுர தில் வல்லவனான படியநாலே றாயற் ஸமுஸ்தானத்தில் அறிஜீ பெற்புக்குள் கடாட்சம் செயிது புலிகுதிகும்ம னாயக்கன் யென்று பேறும் குடுத்து சோளமாதேவியில் நஞ்சை, ரெண்டு மானிலம் சறுவ மானியமாக விட்டாற்கள். அந்த நாள் சாறியாகி அனுபவிச்சு கொண்டு வந்தாற்கள். அந்த நாள் முதல் தலை முரையாஇ வும்பளிக்கை கிறாமமும் வேடப்பட்டி (மானி)யமாஇ அனுபவிச்சு கொண்டு வந்தாற்கள். அதன் பிர்க்காலம் மதுரை சமுஸ்தானத்தாற் நாளையில் றாஜ கோபாலி 5 பொன் னிகுதி பண்ணின படியனாலே வறுஷம் பிறிதியும் அறமனைக்கு பணம் செலுத்திக் கொண்டு தலைமுறை தலை முறையாஇ அற மனையாற் கட்டுபண்ணின மேரைக்கு செலுத்தி கொண்டு கிறாமமும் அனுபவிச்சு கொண்டு வந்தாற்கள். ஶ்ரீமஹாறாஜ றாஜஶ்ரீ கும்பிணிதுரையவர்கள் கடாட்ஷம் செயிது வேடப் பட்டிகிறாமமும் வுண்டான சமாபந்தியில் பத்தில் மூணு யெனக்கு சாறி பண்ணி யிறுக்குர படியனாலே பத்துக்கு யேளு அரமனைக்கு பணம் செலுத்திவிச்சு கொண்டு கிறாமமும் நான் அனுபவிச்சுக்கொண்டு வேடப்பட்டி குடியிறுப்புக்காரனாயி துரைகள் கடாட்ஷயத்துக்கு பாத்திரனாயி காத்துக் கொண்டு யிறுக்குரேன்.

**வேடப்பட்டி கும்மனாயக்கன் ருசுவு.**

# சோத்தம நாயக்கன் வமிசாவளி

## D. 2829

ஷெ தாலுக்காவுக்குச் சேந்த சோத்தம்பட்டி பாளைக்காற் சோதனாயக்கன் வமுசாவளி முதலான கைபீது யென்ன மென்றால்.

பூற்வத்தில் கம்பள சாதியில் அனவரும் டில்லி பாதுஷா சீமையில் யிருந்த துலுக்க சாதிக்கு பெண்குடுக்க மாட்டோ மென்று ஏக கூட்டமாயி றாய சமுஸ்தானம் வந்து சேந்து யிந்த சாதியாற் அனவர்களுக்கும் அவரவர்கள் சூற பறாக்கிரமங்கள் யெல்லாம் பறமளிச்சு அவர் அவர்கள் சூற பறாக்கிரமத்துக்கு தசாதாயி மன்னத்தனம் உம்படிகை நிலங் கள் குடுத்துப்பட்டமும் கட்டுகுற சமயத்தில் அக்காலத்துக்கு எங்கள் வமுசத்தில் சல்லிகுச்சி பொம்மயனாயக்கற் என்குறவர் வேட்டையாடுகுற வளியிலே மிகவும் வல்லவனானபடியினாலே யிவர் வேட்டையாடுகுற வித்தைக்கி சந்தோஷப்பட்டு தெற்க்கு பிறதேசத்தில் ஆமிறாவதிக்கு மேற்க்கு கணியூருக்கு மேற்க்கு கிழக்கு மேற்க்கு ரெண்டு னாளி வளி தெற்க்கு வடக்கு னாலு னாளி வழி யிந்த சதிரத்து பூமிக்கு நீயே மன்னற்தனமாயி அனுபிவிக்கச்சொல்லி கட்டளை யிட்டு பல்லாக்கு உபயசாமறம் யிது முதலான வெகுமதியும் குடுத்து அனுப்பிவிச்சாற்கள். றாயரவர்கள் கட்டளை படிக்கி தெற்க்கு னோக்கி வந்து ஆமிறா வதிக்கு மேற்க்கு கணியூர் மேற்க்குக்காட்டுலே வந்து சேந்து தன் புள்ளை பெண்டுகள் குழந்தைகளாலே காடு வெட்டி ஊடுகள் உண்டுபண்ணி புள்ளையான சோதுலனாயக்கன் பேறாலே சோதம்பட்டி என்று பேர் வச்சு சோதம்பட்டி பாளேக் காற்யென்று பேற்பட்டவறாயி முறுக வுபத்திறவங்கள் யில்லாமல் பண்ணிக்கொண்டுயிறுந்தாற்கள். அந்த நாள் முதல் எங்கள் வமுச பறம்பரையாயி சோதம்பட்டி கிறாமம் ரெண்டும் உம்பளிக்கையாகஅனுபவிச்சுக்கொண்டு வந்தாற்கள்.

அதின் பிற்க்காலம் மதிரை சமுஸ்தானத்தில் சோதம்பட்டி கிறாமம் ரெண்டுக்கும் ஷூ 1க்கு நிகுதி கோபாலிசக்கிறம் 7 பண்ணினபடியினாலே நிகதிப்படிக்கி பணம் செலுத்தி கொண்டு

கிறாமம் ரெண்டும் சாரியாக அனுபவிச்சுக் கொண்டு வந்தாற்கள். அதன் பிற்க்காலம் எங்கள் வமுசத்தில் யிருக்கிற வற்களுக்கு கணியூர் பாதி காவலுக்கு அஞ்சுமாநிலம் மானிய மாக விட்டப் படியினாலே பாதிகாவலும் காத்துக் கொண்டு சோதம் பட்டிகிறாமம் 2க்கு நிகதி படிக்கி அரேமனேக்கு பணம் செலித்திக் கொண்டு கிராமம் சாரியாக அனுபவிச்சுக் கொண்டு வந்தாற்கள்.

சோதம்பட்டி பாளேகாரெண்றுயிருக்கும் னாளையில் மஹாராாசஸ்ரீ கும்பினியாற் துரைத்தனத்தில் சித்தாற்தி ஞூ முதல் என்கிராமத்துக்கு சமாபந்திக்கி 10க்கு 3 சாறி பண்ணி யிறுக்குர படியினாலே பத்தில் மூணு அனுப்பிவிச்சுக் கொண்டு கிராமம் என் வசம் வச்சுக் கொண்டு பதில் (எழ) அரேமனேக்கு செலித்திவிச்சுக் கொண்டு தொரைகள் தயவுக்கு பாத்திறனாயி யிருவது சமுசாரத்துடனே ரொம்ப ஏளையாயி கட்டிக்கத் துணியில்லாமல் ஆசறுலே காத்துக் கொண்டு யிறுக்குரேன்.

**சோத்தனாயக்கன் ருசுவு.**

# சீலமநாயக்கன் வமிசாவளி

## D. 2840

ஷெ தாலுகா துங்காவி பாளையக்கற் சீலினாயக்கன் யெண்ணப்பட்ட பாளைக்கறுடைய வம்சாவளி முதலான கைபீது யென்னவென்றால்.

பூற்வற்றில் வடதேசத்தில் டில்லி பாதுஷஹ சீமையில் யிறுக்கப்பட்ட யாதவ குலமான கம்பள சாதி அனவறும் துலுக்கறுக்கு பெண் குடுக்குறதுயில்லை யென்று யேகராத்திரி யில் பிறப்பட்டு ஆனை குந்தி சமுஸ்தானத்துக்கு வந்து சேற்ந்த கட்டத்திலே, யென் வம்சத்தில் பாலம சித்தமனாயக்கற் யெங் குறவற் ராயர் அவற்கள் சமஷத்துலே பேட்டி பண்ணி கொண்ட யிடத்தில் ஒன்னுடைய புட்டு பூறுஓத்திரம் யென்ன வென்று கேட்டாற்கள். அப்போ பாலம சித்தம நாயக்கற் சொல்லப் பட்டது. பாதுஷஹ சீற்மையில் கிறஷ்ட்டண மதுரைக்குச் சேந்த கோட்டை மறுதூற்ப் பாளையக்கற் மன்சுபைதாற் யென்றும், பாதுஷஹாயெங்கள் சாதியில் பெண் கேட்ட படிய னாலே துலுக்கனுக்கு பெண் குடுக்க மாட்டோ மென்று யெங்கள் சாதியார் அனைவரும் யேகராத்தியில் பிறப்பட்டு தங்கள் சன்னி தானத்துக்கு வந்தாற்கள் யென்று வீரநரஸிம்ஹராயற் அவற்கள் சமக்ஷமத்தில் அறிக்கை செயிதுக் கொண்டாற்கள். பாலம சித்தமனாயக்கறுடைய சவுறிய தயிறிய காம்பீறிய குணாதிசயங்களுக்கு சந்தோஷப்பட்டு அனேக பொகுமதிகள் பண்ணி குமாரவற்க்கமாக பேற் பிறசித்திப்பட்டு யிறுக்கும் நாளையில் அக்காலத்தில் பாலம சித்தமநாயக்கருக்கு யேளு பேற்பிள்ளையள். இந்த யேளு பேற் பிள்ளைகளில் ஒருத்தறுக் கொறுத்தற் தாள்வுயில்லாமல் சவுறிய பராக்கிறமங்களிலே யோக்கியஸ்த்தாளாஇ யிறுக்குறத்தை ராயற் செமுஸ்தானத் துலே அறிந்து அவற்ரவர்க்கு மன்னற்தனத்தை நிகுதி செய்குற சமயத்தில் யென் வம்சத்தினான னாலான்பிள்ளை சீல முத்து நாயக்கறுக்கு ஆம்பிராவதிக்கு மேற்க்கு யிறுக்கப்பட்டவனாத் திரங்களை கேள் மேல் னாளிகை '5' தென் வடல் ரெண்டு நாளிகை வளி யிந்த பூமிக்கி னீயே மன்சுபைதாரானாயி இறு மென்றும், துஷ்ட சனங்களையும் மிறகங்களையும் ஹதம்

பண்ணி போடச் சொல்லியும் கட்டளையிட்டு பல்லாக்கு உபைய சாம்பறம் ரண புஷிக்கிம், வீர கட்டாமணி, அஞ்சிரேக்கு துராயி, கனக பீதாம்பரம், கொத்து சறப்பணி, முத்துமாலை, மோகனமாலை, முத்து துராயி, ரணக்காணம், சாம தொரஹா வெண்டயங் குடுத்து ஒட்டைகை மேல் நாகாறு, குதிரை மேல் டக்கா, யெறுத்து மேல் தம்பட்டம், வெங்கல ஒத்துதுடிமி, பூச்சக்கிற கொடை, பஞ்சவற்னடால், அனுமடால், கெறுடடால், சந்திரகாவிடால், பச்சடால் குதிரைக்கு முன்ஞ்சல்லி, பின்ஞ் சல்லி, அண்டஞ்சல்லி, தொப்புள் மணி யிப்படிக்கு சகல பிறுது களுங் குடுத்து சகல வாத்தியங்களுடனே பட்டத்து ஆயுதமுங் குடுத்து பட்டமுங் கட்டி விச்சாறுகள்.

சீல முத்தே நாயக்கற் றாயற் ஸமுஸ்தானத்துலே சகல பொகுமதிகளும் பெற்றவர்களாஇ பட்டம்முங் கட்டி கொண்டு தம்முட சொந்த சனத்தோடனே ஆம்பிறாவதிக்கு மேல் பாற்சத்தில் வனாத்திரத்துலே வந்து யெரங்கி கொண்டு காட்டு களிலே சஞ்சாறம் பண்ணப்பட்ட துஷ்ட்ட மிற்கங்களேயும், துஷ்ட்ட சனங்களையும் சம்ஹாரம் பண்ணிப் போட்டு, காடுகளை யெல்லாம் வெட்டி வீடுகள் உண்டு பண்ணிக் கொண்டு பூமியும் திட்டப்படுத்தி பயிர்களும் உண்டாகும் படியாக பண்ணின படியிநாலே அந்த யிடங்களுக்கு ஆம் பிறாவதியில் தாமரை படைந்து யிறுக்கப்பட்ட யிடத்தில் உண்டு பண்ணின வீடுகளுக்கு தாமரைப் பாடியென்றும், காரை செடிகள் வெட்டி பசுபட்டுகளை அடச்சவூருகளுக்கு காரதொளுவு யென்றும் பேறுகள் வச்சு காறத்தொளுவில் வாசஷ்தராயி இருந்தாற்.

மறுபடியும் சுத்து பக்கத்திலே யிறுக்கப்பட்ட வனங்கள் செடிகளை யெல்லாம் அண்ணாடகம் சோதிச்சு போட்டு துங்க வாவி யெண்ணப்படவூரும் கட்டி விச்சு அதுக்கு சேந்த மஞ்சற பட்டி கிராமம் உண்டு பண்ணி துங்காவிபாளையக்கற் யென்று பேற் பிறசித்திப் பட்டவற்களாஇ மேல் யெளுதப்பட்ட கிராமங்கள் மன்னறிக்கமாஇ ஆண்டு கொண்டு வந்தாற்கள்.

அந்த நாள் முதல் சாலீவாஹன சகாபுதம் 1412 முதல் சகாபுதம் 1689 வரைக்கும் வறுஷம் 1க்கு 277-க்கு பட்டங்களு டைய வறிசைகளும் அவாளவாளுடைய நடத்தைகளும் யிதின் கீளே யெழுதி வறுகுரது.

| | | | |
|---|---|---|---|
| 1. | சீலமுத்தெ நாயக்கற் பட்டம் ஆண்ட | ஷூ | 39 |
| 2. | இவற் குமாறன் ராமசந்திரனாயக்கற் பட்டம் ஆண்ட | ஷூ | 22 |
| 3. | யிவற் குமாரன் லிங்காண்டி நாயக்கற் பட்டம் ஆண்ட | ஷூ | 18 |
| 4. | யிவற் குமாரன் பொம்மனாயக்கற் பட்டம் ஆண்ட | ஷூ | 14 |
| 5. | யிவற் குமாரன் சீல கோபால நாயக்கற் பட்டம் ஆண்ட | ஷூ | 24 |
| 6. | யிவறுடைய குமாரன் சீலமுத்தே னாயக்கற் பட்டம் ஆண்ட | ஷூ | 20 |
| 7. | யிவற் குமாரன் பெறியாண்டி னாயக்கற் பட்டம் ஆண்ட | ஷூ | 11 |
| 8. | யிவற் குமாரன் பெரிய தம்பி னாயக்கற் பட்டம் ஆண்ட | ஷூ | 9 |
| 9. | யிவற் குமாரன் பெறுவாஇ சீலநாயக்கற் பட்டம் ஆண்ட | ஷூ | 11 |
| 10. | யிவற் குமாரன் கொண்ட குலிக்கி சீலி னாயக்கற் பட்டம் ஆண்ட | ஷூ | 30 |
| 11. | யிவற் குமாரர் சீலி நாயக்கற் பட்டம் ஆண்ட | ஷூ | 23 |
| 12. | யிவற் குமாரன் ரங்கசாமி னாயக்கற் பட்டம் ஆண்ட | ஷூ | 12 |
| 13. | யிவற் குமாரன் பெரியாண்டி னாயக்கற் பட்டம் ஆண்ட | ஷூ | 16 |
| 14. | யிவற் குமாரன் பெரிய தம்பி நாயக்கற் பட்டம் ஆண்ட | ஷூ | 28 |
| | | | 277 |

முதல் பட்டக்காரனான சீல முத்தேனாயக்கற் நாளையில் ராய சமுஸ்தானத்துலே அனேக பிறுதுகளும் வாங்கி கொண்டு செவுறிய பராக்கிறமசாலியாஇ தெற்க்கு னோக்கி வந்து ஆம்பிராவதிக்கு மேல்ப்பட்ட இடத்தில் காடுகள் வெட்டியும் பூமி சிதப்படித்தி தாமரபாடி யென்றும் காரை தொளுவு

யென்றும் துங்காவி யென்றும் கிராமம் உண்டு பண்ணி கொண்டு காரைதொளுவில் நஞ்சை நிலம் ஹுாத்தி யிறுவது மாவு நிலமும் உண்டு பண்ணி சவுரியசாலியாஇ யிறுந்து கொண்டு அவற் நாள் முதல் அஞ்சான் பட்டக்காரனான சீல கோபால நாயக்கற் நாள் வரைக்கும் ஷு 117 வரைக்கும் ராயற் ஸமுஸ்தானத்து பிறபுக்கள் கடாஷ்சயத்துநாலே துங்காவி பாளைகற் யென்று பேற் பிற சித்திப் பட்டவற்களாஇ மன்னற்தனமாஇ பாளைப்பட்டு ஆண்டு கொண்டு இறுந்தாற்கள்.

ஆறான் பட்டக்காரனான சீல முத்தே னாயக்கற் நாளையில் அக்காலத்தில் மதுரை சமுஸ்தானாதிபதிகளான நாயக்கற் அவற்கள் ரங்ககிறஷ்ட்டண முத்து வீரப்ப னாயக்கற் அவற்கள் நாளையில் துங்காவி பாளையகறுக்கு ஷு 1க்கு ராஜ கோபாலி 50 பொன் னிகுதி செயித படியனாலே வருஷ பிறிதியும் னிகுதி படிக்கு அறமனைக்கு பணம் செலுத்திக் கொண்டு அறமனையாற் கட்டளையிட்ட படிக்கு கணியூர் கிறாமமும் பாதி காவலும் காத்துக் கொண்டு பாதி காவலுக்கு வுண்டான மிறாசு களும் அனுபவிச்சுக் கொண்டு துங்காவி பாளையக்கற்யென்று யெட்டான் தலைமுறை பெறிய தம்பினாயக்கற் னாள் வரைக்கும் அனுபவிச்சு கொண்டு வந்தாற்கள்.

அதின் பிற்க்காலம் ஒன்பதாம் பட்டமான பெறுவாஇ சீலி நாயக்கற் அவர்கள் நாளையில் அக்காலத்தில் மயிசூறு ஸமுஸ் தானாதிபதிகளான தேவறாஜ ஒடையறய்யனவற்கள் நாளை யில் காணுவாயி கீள்ப்பட்ட பதினெட்டு கெடியும் தங்கள் சமுஸ்தானத்தில் சேந்துயிறுந்து அக்காலத்தில் தாறாபுரம் கெடியின் பேறிலே மயிசூறுக்கும் மதுரையாறுக்கும் லடாயி வந்து அந்த சமயத்துலே ஆருமாச வரைக்கும் சண்டை முகத்திலே மதுரையாற் தாறாபுரம் கோட்டையை விடாமல் வச்சு கொண்டுயிருந்த படியனாலே அந்த சமயத்தில் மகிசூற் கற்தாக்களுடனே கூடா பச்சகந்தய்ய ஒடயற் யென்ங்குற குறுவையும் கூட்டிக் கொண்டு வந்து கற்த்தாக்கள் தங்கள் குறு வான பச்சகந்தய்ய ஒடையறவற்களை அந்தரங்கமாஇ நம்முடய சனம் அனேக பவுசுகள் ஆருமாசமாஇ சண்டை பண்ணியும் தாறாபுரம் கோட்டை கயிவசம் ஆகுரதுக்கு யெடுபட

மாட்டால் யிருக்குற வயணம் யென்னமோ தெறியமாட்டாது யென்று சொல்லிக் கொண்ட படியநாலே குருவானவற் சிஷ்னை பாத்து சொல்லப்பட்ட வயணம் யென்ன வென்றால் :

யென்ன வென்று யிந்த தாறாபுரம் கோட்டை மேற்க்கு புறம் வடக்கு கொத்தளத்து மூலையில் ஒரு முனிவாசமா இறுக்குரது. அதுநாலே அந்த கோட்டை யாற்நாலையும் சண்டை பண்ணி கைவசம் பண்ணுகுரதுக்கு ஆகுரதுயில்லை.

ஆனாலும் நாம் வெள்ளிக் கிளமை தினத்தில் ஜெப காலத்தில் விபூதியும் சக்கிறமும் யெளுதி குடுக்குரோம். கோட்டை நாலுமூலைக்கும் னாலுசக்கிறம் ஸ்தாபிச்சு மதிறோ சாட்டணமான விபூதியை வடக்கு கொத்தளத்து மூலையில் யெறச்சி போட்டு வுங்கள் பவுசுகள் சற்ங்கமாகி கோட்டைக் குள்ளே போயி சாற்ங்கமாஇ ஓங்கள் கைவசம் பண்ணிக் கொள்ளலா மென்று சொன்னார்கள்.

கற்த்தாக்கள் குறுவாக்கியம் பரிபாலனம் பண்ணி வெள்ளிக் கிளமை தினத்தில் உச்சி வேளையிலே தம்முடய பவுசுகளை யெல்லாம் ஆசறு படித்தி கோடை நாலுவாசசிலாலேயும் சற்ங்க மாக கோட்டைக்குள்ளே போஇ பூந்து கோட்டை பேறில் சண்டை பண்ணி கோட்டையை கைவசம் பண்ணிக் கொண்டாற்கள். மதுரையாற் தண்டு முறிஞ்சி ஓடிப்போஇ விட்டது. கற்த்தாக்களுக்கு குறுவு சொன்ன வார்த்தை சித்திச்ச தென்று ரொம்பவும் சந்தோஷமாச்சுது. அந்த சமயத்தில் பச்ச கந்தய்ய ஒடையற் பாத்து வுங்கள் மத்திரோச்சாடனத்து நாலே தாறாபுரம் கோட்டை கைவசமான படியநாலே வுங்களுக்கு வேண்டியது கேட்டு கொள்ளுங்கள் குடுப்பிவிக்குரோ மென்று சொன்னார்கள். அந்த சமயத்தில் குறுவானவற் யெனக்கு மடம் கட்டுகுறதற்கு பூமி வேணுமென்றும் செலவு களுக்கு பணம் வேணுமென்றும் கேட்டுக் கொண்டாற். அப்போ சக்கிறகிரி கெடியிலே சேற்ந்த அறமனை கிறாமங்களிலே யாவது பாளையப்பட்டுகளிலேயாவது மத்தயெவடங்களிலே யாவது ஓமக்கு சம்மதமானயிடம் பாத்து சொன்னால் ஓங்கள் மனசும்படிக்கு நடப்பிவிக்குரோ மென்று சொன்னாற்கள். அக்காலத்தில் பச்சக்கந்தய்ய ஒடய்ற் செக்கிறகிரி கெடிக்கி சேற்ந்த இடங்களிலே யெல்லாம் சுத்திபாத்து ஆம்பிறாவதிக்கு

மேற்க்குப்பட்ட காறதொளுவு யிதில் வுண்டான நஞ்சை னூத்தி யிறுவது மாவு நிலமும் கல்லுபட்டி சீலினாயக்கன் பட்டி துங்காவி யிந்தாநாலு கிறாமமும் உள்பட்ட நஞ்சை புஞ்சை சறஹத்துகள் பாத்து லிங்க முத்திரை போட்டு கற்த் தாக்களிடத்துக்கு போஇ ஆம்பிறாவதிக்கு மேல்ப்பட்டயிடம், நாம்குலம் யோக்கிய மானபடியநாலே அவடத்துலே நாங்கல் யெல்லைக்கும் நம்மலிங்க முத்திரை போட்டு வந்து யிறுக்குரோ மென்று சொன்னாற்.

கற்த்தாக்கள் துங்காவி பாளையப்பட்டுக்கு சேற்ந்த யிடமான படியநாலே அந்த பாளையகாரரை தறிவிச்சு சொல்லி னிகுதி பண்ணவேணுமென்று னெனச்சு அன்னேறமே மேல்படி துங்காவி பாளைகறான பெறுவாஇ சீலி னாயக்கரை தறிவிச்சு யெங்கள் குறுவானவற்களுக்கு நம்முடைய றாச்சியத்தில் அனேக மாயி யெடங்கள் யிறுக்க வும்முடைய பாளைப்பட்டு பூமியிலே அபேஷ்சையாஇ நாலு திக்குலேயும் அவருடைய லிங்க முத்திரை போட்டு கல் பாரைகளிலே அடையாளம் போட்டு வந்து யிறுக்குரபடியநாலே வும்முடைய பூமியிலே சம்மதியான யிடத்தில் மடம் கட்டி கொள்ளட்டும். அவற்நமக்கு குறுவான படியனாலே ஒனக்கும் குறுவு. அவற் சன்னியாசியான படியனா லேயும் மஹா பெரியவற் ஆனபடிய நாலேயும் னிதியும் அனுதினமும் அவறுடைய தறிசினமாகும். னீ புண்ணிய சாலி ஆனபடியநாலே அந்த பலன் வுனக்கு லபிச்சுது. அந்த பாளயப்பட்டுக்கு நமக்கு குடுக்குர பகுதி ஸ்ரீ 1க்கு றாச கோபாலி னூறு பொன்னும் குறுவுக்கு மடத்துக்கு செலவுக்கு குடுத்துகொண்டுவா வென்று கட்டளையிட்டாற்கள்.

அதின் பிறகு பச்ச கந்தய ஒடயார் பச்சபல்லாக்கு பின்பறம் சீவியாற் யெடுக்குரது. முன் கொம்பு காரணாற்த்தமாஇ போ குரது. ஆஹாரம், காத்தளையும் சோறும் பால் யிப்படிக்கு யிறுக்கப்பட்டவற் கற்ப்ப முரையாக சாப்புடுகுரது. யிப்படிப் பட்டவற் ஆம்பிறா வதிக்கு மேல்பறம் காறதொளுவு கிறாமத்தில் மடம் கட்டி வச்சு கொண்டு வாசம் பண்ணிக்கொண்டு யிறுக்கும் நாளையில் பெரிய சீலி னாயக்கறும் அவறுக்கு சிஷியவற்க்கமாக நடந்து கொண்டு வறுஷம் பிறிதியும் நிகுதிபடிக்கி னூறு பொன்னும் செலுத்திக்கொண்டு வந்தாற்.

அதின் பிற்க்காலம் பத்தான் பட்டக்காரனான கொண்டை குலுக்கி சீலி னாயக்கற் நாள் முதல் பதிமூணாம் பட்டமான பெறியாண்டி சீலி னாயக்கற் நாளை வரைக்கும் யெங்கள் கிறாமமும் 7. சுத்த சாறியாக அனுபவிச்சுக் கொண்டு அரமணை நிகதிப்படிக்கு வறுஷ பிறிதியும் குறு மடத்துக்கு செலுத்திவிச்சுகொண்டு வறும் நாளையில் அந்த குறுவுனுடைய மகிமையினாலே காறதுளுவு கிறாமத்தில் கிறாம தேவதையான அழனாச்சி யம்மனுக்கு வறுஷபிறிதியாஇ நடக்கப்பட்ட படங் கணி சாட்டியிறுந்தது. கிடாவும் பிடிச்சு கட்டியிறுந்தது. அந்த நாளில் பளனிசீர்மைக்கி சேற்ந்த ஆம்பிறாவதிக்கு கிளக்கு கீறனூறு கிறாமத்து கிறாம தேவதையான அளகி நாச்சி அம்மனுக்கு படங்கணி னோன்பு சாட்டி அந்த அம்மனுக்கு வுண்டான யெறிமைகெடா கட்டிவச்சு யிறுந்தவிடத்தில் அந்த யெறிமைக்கிடா தானாக பிறப்பட்டு காறதுளுவு கிறாமத்து அளகினாச்சியம்மன் சன்னதியில் வந்து நிண்ணது. அது னுடனே துடந்து அந்த கோவில் பூசாறியும் வந்து நிண்ணான். அந்த சமயத்தில் காறதுளுவு அம்மன் கோவில் பூசாறியின் பேறில் ஆவேசம் வந்து கீறனூற் அம்மன் கிடாவையும் அந்த பூசாறியையும் நம்ம கிடா கூடவே வெட்டிபொதச்சி போடச் சொல்லி அம்மன் சொன்னபடியனாலே அந்தபடியே அந்த கிடாவயையும் பூசாறியேயும் வெட்டிப் பொதைச்சுபோட்டார் கள்.

பளனி பாளைகற் ஆன விஞ்சயகிறி சின்னோபனாயக்கன் தம்முடய பளையப்பட்டுக்குச் சேற்ந்த கிராமத்து பூசாரியெயும் கெடாவியெயும் துங்காவி பாளையக்காரன் வெட்டகாரண மென்ன வென்று பளனியாற் படையெடுத்து அறவது தண்டிகைக் காற்றுடனே பன்னீறாயிரம் செனம் பிறப்பட்டு சண்டைக்காக துாங்காவிக்கு சேற்ந்த காறதுளுவு கிராமத்துலே வந்து யெறங்கினாற்கள்.

பழனியான் படையெடுத்து சண்டைக்கு வாரான் யென்ங்குர சேதிகளை முன்னதாக துங்காவி பாளைக்கரான கொண்ட குலிக்கி சீலி நாயக்கறுக்கு தம்முடய குறுவான பச்சகந்தய்ய ஒடயார் பழனியான் படையெடுத்து வருகுர படியநாலே நீ பயப் பட வேண்டாம். வெடிதுண்டு பலாயுதந்துடனே செனசேகற மாஇ யிறுமென்றுச் சொல்லி பழனியானுடனே யுதம் பண்ணி

செயிச்சு போடுஓமென்று அம்மன்யெனக்கு சொல்லியிறுந்த படியனாலே னீ சாக்குறுதுயாஇ யிறுமென்று சொல்லியிருந் தாற்கள்.

பழனியான் காறதுளுவுலே சண்டை முகத்துக்கே வந்து யெறங்கி சண்டை பண்ணுகுற சமயத்தில் துங்காவி பாளைக்கறசனம் ஒரு வெட்டி சுட்டால் பத்து வேட்டாக யெது றாளியே அடிச்சு யிப்படிக்கு யுத்த சன்னாகத்துக்கு ஒண்ணுக்கு பத்து - பத்துக்கு னூறு - நூறுக்கு ஆயிரம் யிப்படிக்கு அளகநாச்சியம்ம சான்னித்தியத்துனாலே பழனியானுடைய செனங்கள் யெல்லாம் மாண்டு போன படியநாலே பளனியான் ஓடி போஇ விட்டான். பழனியானுடைய செனமெல்லாம் யெறந்து போன சனங்கள் பேறில் போட்டு யிறுக்கப்பட்ட ஆபறணங்களை யெல்லாம் யெடுத்து காட்டி கிறாமத்தில் அளகனாச்சியம்மன் சன்னதிக்கு தெற்க்கு கொண்டு வந்து போட்டு குறுவு உத்திரவு படிக்கு தற்ம்ம தானம் பண்ணி நாற்கள். அந்த ஒடைமைகள் கொண்டு வந்து போட்ட யீடத்தில் பொன்பறப்பி களமென்றும், பட்டு போன படகளை யெல்லாம் யிளுத்து போட்ட யிடத்தில் அளுவார் ...... கரை யென்றும் பேற் பிறசித்திப் படலாச்சுது.

பச்சகந்தய்ய ஒடயற் குறுமடத்தில் பெறியாண்டினாயக்கற் பகுத்தபிறய சிஷியனாக நடந்து கொண்டு குறுவாக்கியம் பறிபாலனம் பண்ணி கொண்டு வந்த படியநாலே ஒன்னிடத்தில் நமக்கு ரொம்பவும் சத்தோஷமாச்சுது. யிந்தமடத்தில் பரம் பரையாஇ யென் பேறுலே குறுமாற்க்கம் செயிது வச்சு கொண்டு னீயும் அந்த யிடத்தில் குறுமறியாதிகள் நடப்பிவிச்சு கொண்டு வரவேணுமென்றும் னீ பாளைகற் தொரையானாலும் நான் சன்னியாசியாஇறுந்தாலும் யெனக்கு னீ குமாரவற்க்கமென்றும் றாமலிங்க முத்திரை போட்டு யிறுக்கப்பட்ட பூமிக்கி னீயே அதிபதியாக வுன்வம்ச பறம்பரையாஇ செந்திறாதித்தர் உள்ள வரைக்கு அனுபவிச்சுக் கொண்டு வாவென்று குறுகடாஷம் செயிது அவற் தெயிவீகமானாற்.

பச்சகந்தய்யற் தெய்வீகமான சமயத்தில் ஒரு குறகை உண்டு பண்ணி தெயிவமாகனிறுத்தி பசுவேஸ்வர கோவிலென்று பேறும் வச்சு பிறஷ்டனம் பண்ணி அந்த மடத்துக்கு பறம்பரை

யாக ஆதீனத்தில் குறுபட்டம்ங்களாக நேமிச்சுக் கொண்டு மடத்தில் தாள்வுயில்லாமல் நடப்பிச்சு கொண்டு மடத்துக்கு ஷெ கிறாமத்தில் நஞ்சையில் பத்துமானிலமும் விட்டு கோவிலுக்கும் திற காலத்திலும் பூசை நடப்பிவிக்கும் படியாக பண்ணி விச்சுக் கொண்டு நடப்பிவிச்சு கொண்டு வந்தாற்கள்.

அதின் பிற்க்காலம் காறதுளுவு யெண்ணப்பட்ட கிறாமத்தில் அரமனைக்கு சேத்திக் கொண்டாற்கள்.

பதிநாலாம் பட்டக் காரனான பெறிய தம்பி னாயக்கற் நாளையில் அக்காலத்தில் கிறஷ்ட்டண தேவறாய ஒடயற் துரைதனத்தில் அந்தியத்தில் மகாதேவய்யன், செங்கற சாஸ்திறி ரெண்டு பேறும் யென்ன பாளையப் பட்டுக்கு சேற்ந்த காரைத் தொளுவு கிறாமத்தில் மணியம் யேத்துகொண்டு நிறூபம் வாங்கிகொண்டு வந்தபடியநாலே மயிசூறு சமுஸ்தானத்தில் பெரியதம்பி நாயக்கற் போஇ யென் பாளையப்பட்டுக்கு சேந்த கிறாமத்துக்கு பிறாமணாளுக்கு மணியம் குடுத்து நிறூபம் குடுக்க வேண்டியது யென்ன வென்று மனுவுகேட்டு கொண்ட படியநாலே கற்த்தாக்கள் வுனக்கு கிறாமம் விடுகுர வரைக்கும் னீபண்ணப்பட்ட தற்மமங்களுக்கு குறுமடத்துக்காக பத்து மானிலமும் வுனக்கு சறுவ மானியம் பத்து மானிலமும் யிந்த யிறுவது மாவு நஞ்சை நிலமும் சறுவ மானியமாக அனுபவிச்சு கொண்டு காரைதுளுவு நஞ்சை னிலங்களுக்கு நீயே பாதி காவல் காவல் காத்து கொண்டு புஞ்சை பூமி யெல்லாம் ஓன் யிலாகாவுக்கு சேத்தி கொள்ள சொல்லியும் யென்ன பாளையப்பட்டு கிறாமங்களுக்கு ஷு 1க்கு விறாயன் 300 பொன் னிகுதி செயித படியனாலே அறமனையாற் கட்டளை யிட்ட படிக்கு னிகுதி பணமும் செலுத்தி கொண்டு கிறாமங்கள் சாறியாஇ அனுபவிச்சு கொண்டு வந்தாற்கள்.

நாளாது ஆசறுலே யிறுக்கப்பட்ட மசயாண்டி நாயக்கற் னான் பட்டத்தில் வந்த தறுணத்தில் மயிசூறு ஸமுஸ்தானத்துக்கு நபாபு அயிதரல்லிகான் துரைதனத்தில் முன்னாலே யென் தோப்பனாற் நாளையில் மேற்டியாயன் பாளைக்கற் கிறாமங்களுக்குச் சேற்ந்த புஞ்சை னிலங்கள் யெல்லாம் நஞ்சைக்கு சேற வேணுமென்று மகாதேவய்யன் யெண்ணப்பட்ட பிறாமணன் அடத்து

நாலே மயிசூறு சமுஸ்தானத்துக்கு போஇ காத்துயிறுந்து நிறுபம் வாங்கி கொண்டு வந்த படியனாலே ஹூறு முடாக் காடு நஞ்சைக்கி தாகல் பண்ணிக் கொண்டாற்கள் யென்று அறமனைக்கு அறியப்பண்ணிக் கொண்டு னிகுதி பண்ணின படிக்கு விறாயன் யெறணூற் போன வறுஷம் பிறிதியும் குடுத்துக் கொண்டு கிறாமங்கள் தங்கள் வசமாக வச்சுக் கொண்டு யிறுந்தாற்கள்.

மஹா-ா-ஜ ராஜ ஸ்ரீ கும்பிணி சறுக்காறுலே சாதாரண ஷ மஹா ராஜ ஸ்ரீ சென்னமெடிசு துரையவற்கள் பேட்டி பண்ணிக் கொண்டு பாளையக்கற் வரலாறு யெல்லாம் சொல்லிக் கொண்டபடியநாலே துரைகள் கடாட்சம் செய்து யென் பாளையகற் கிறாமங்களுக்கு காரதுளுவுக்குச் சேந்த புஞ்சை நிலம் ஹூறு முடாக்கு கல்லுபட்டியும் சேத்து னிகதி விறாயன் 250 பொன்னிகுதி செய்த படியனாலே நிகதி படிக்கு அற மனைக்கு பணம் செலுத்திக் கொண்டு காரைத்துளுவு நஞ்சைக்கி பாதி காவல் மிறாசிலே வறப்பட்டு குடிகள் குடுக்கப் பட்ட வீறாயன் 100 பொன் பேறும் அன்பது சலிகை நெல்லும் அனுபவிச்சு கொண்டு வந்தேன்.

நாளது மஹா ராஜ ராஜ ஸ்ரீ கும்பினி துரையவற்கள் கடாஷ்சம் செயிது யென் கிறாமங்களுக்கு வறுஷப் பிறிதியும் சமாபந்திபடிக்கி பத்தில் மூணு யெனக்கு சாறி செயிது கிறாமங்களுக்கு உண்டான சமாபந்தி படிக்கி பதில் யேளு அறமனைக்கு செலுத்தி கொண்டு அன்பது செனம் யென் சொந்த சனத்துடனே துங்காவி குடியிறுப்புக்காரனாயி மிகவும் வணக்கத்துடனே துரைகள் கடாட்சயத்துக்கு பாத்திரனாயி ஆசறுலே காத்துக் கொண்டுயிறுக்குரேன். யிதுக்கு தகவலாகி யிறுக்கப்பட்ட பளைமுனி ஆதறவுகள் முதலானதும் காலாதிரங்களிலே றாசீகங்களிலே கை தப்பிபோஇ விட்டது. யென் வம்சபறம்பரையிலே சொல்லப்பட்ட கேள்வீநாலே யும் யென்னுடைய அனுபவத்துநாலேயும் தெறிஞ்சி யெளுதலாச்சுது. யென் வம்சபறம்பரையாகி பட்டம் ஆண்டு வறுகுரவாளுக்கு சீலிநாயக்கற் யென்று பட்டபேறாயி வெளங்கி கொண்டு வருகுரது.

**சீலனாயக்கன் ருசுவு.**

# சிதம்பர வன்னியன் வமிசாவளி

## D. 2841

*யேழாயிரம் பண்ணை பாளையப்பட்டு கைபீது*

ஆதிகாரண பூறுவமாகிய தென் மதுராபுரிப்பட்டணத்துலே யெழுந்தருளி யிருக்கப்பட்ட சுவாமி சொக்கனாதருந் தேவி மீனாட்சியும் காட்சி கூர்ந்து காரணம் விளைக்க வேண்டிய கருணாலையும் சகப்பிரசத்தியாயி அறுபத்தினாலு திருவிளை யாடல் கொண்டருளி அதில் ஒரு காரண விளையாட்டில்ப் பன்றிக் குட்டிக்கி அம்மன் திருமுலைப்பாலமுர்தங் கொடுத்த தில் அந்த வரப்பிரசாத மகிமையினாலே பன்றிக் குட்டியள் சின்னச்சுரூபம் நீங்கி மாணிடவடிவாயி மகா சவுந்தரீகாளாய் விவேகவிசட்சண சூரத்ததுவ தீர்காயி சூரிய சம்பன்னர் களானதினாலே பாண்டிய நாட்டுக்கு அதிபதியாயிருக்கப் பட்ட பாண்டிய ராசாவிடத்தில்ச் சரியொத்த மந்திரிமார்களா யிருந்தார்கள். அப்படிக்கி இருக்கிற நாளையில் பாண்டிய றாசாவினுடைய பிறுதி யுண்டாயி மதுரைக்கு கிளக்கு சிறுது சீர்மையை பாளயப்பட்டாக விட்டுக் கொடுத்து அதில் சிறுது பட்டம் ஆண்டனுபவித்து யிருந்துவரும் நாளையில் ஒரு பட்டக் காரன் பாண்டிய றாசாவைக் கண்டுவரவேணும் என்று மதுரைக்கிப் போயி பாண்டிய ராசாவைக்கண்டு சரி யிருப்பாக யிருந்ததில் பாண்டிய றாசாவானவர் பார்த்து நீரிப்படிக்கி வந்து நம்முடைய யிடத்தில் சரியாக யிருக்க வேண்டியதென்ன வென்று நிற்தயவாயி சொன்னதற்குப் பாண்டிய ராசாவை பாற்து சொன்னது : நாங்கள் அக்கினி கோத்திரமானதினாலே அந்த மகுத்துவந் தெரிந்து முன்னிறுந்த பாண்டிய ராசாக்கள் எங்களுக்குச் சரியிறுப்புக் குடுத்து வெகு மரியாதமாக நடப்பி விச்சு வந்த படியினாலே அப்படிக்கி யிப்போதும் மேரை மரியாதியாக நடப்பிவிச்சுக் கொள்ளவேணு மென்று சொன்ன தில் அதற்கு நீர் அக்கினி கோத்திர மகுத்துவத்தினாலே உண்டான மரியாதமென்று சொன்னதற்குத் திட்டாந்திரம் இப்போது அக்கினிச் செப்புக் குதிரை யேறி நடத்தினால்

ஒப்புக் கொள்ளலாமென்று பாண்டிய ராசா சொன்னபடியி னாலே அந்த படிக்கே செப்புக் குதிரை உண்டு பண்ணி அக்கினிச் சுரூபமாயி அக்கினியில்க் காச்சி அந்தக் குதிரை யேறி மதுராபுரிப்பட்டணத்தில் மாசி வீதி நாலுபக்கமும் நடத்தி மீனாட்சி சுந்தரயிசுபராள் சன்னிதான முன்பாக வந்து குதிரை விட்டிறங்கி சுவாமி தெரிசனமுஞ் செயிது கொண்டு பாண்டிய ராசா விடத்தில் வந்த படியினாலே உடனே பாண்டிய ராசா வுக்கு நிரம்ப சந்தோஷம் உண்டாயி அனேகம் வரிசையளும் செயிது பின்னும் அனேகஞ் சீமையளும் விட்டுக் கொடுத்து பிறுதியா யனுப்பிவித்தார்களந்தப் பிரகாரத்துக்கு சிறுது பட்டம் ஆண்டு வந்தார்க ளப்படிக்கி யிருக்கும் நாளில் அப்போது யிருந்த பட்டக்காரன் அய்பைத் தறைக்குடி யாண்டு கொண்டாரை பாண்டியராசா ஆனவர் வரவளைத்து தட்சணஞ் சீர்மையில் சுண்ட னென்றொறு பள்ளன் சிறுது துஷ்ட்டாளை யுஞ் சேகரித்துக் கொண்டு வெகு சல்லியங்கள் செய்து வருகுரான். ஆன படியினாலே நீரவடத்துக்குப் போயி அந்த துஷ்ட்டாளை நிற்கிரகத்துப் போட்டு வரவேணுமென்று சொல்லி யனுப்பிவிச்சார்கள். அந்தப் பிரகாறமே பிறப்பட்டு வந்து சுண்டனென்று சொல்லப்பட்ட பள்ளனையும் அவனுடனே சேந்த துஷ்ட்டாளையுஞ் செயம் பண்ணிவிச்சுப் போட்டு மறுபடியும் பாண்டிய ராசாவிநிடத்துக்குப் போயிக் கண்டு சமாசாரம் பேசிக் கொண்டதில் வெகு சந்தோஷமாயி அனேக வரிசயளும் விருதுகளுங் கொடுத்து யின்னும் அந்த தெட்சணஞ் சீர்மையில் சில துஷ்ட்டாளிருந்து கொண்டு சல்லியங்கள் செய்து கொண்டு யிருப்பதுனாலே அந்தத் தெட்சணத்தில் உமக்கு சிறுது சீர்மை விட்டுக்குடுக்குரோம். அதுலேயிறுந்து கொண்டு துஷ்டாளையும் ஒடிக்கி சல்லியம் யில்லாமல் செய்து கொண்டு யிறுமென்று உத்திரவு செயிது அந்தப் பிரகாரம் சீர்மையுஞ் சுதாவாக விட்டுக் குடுத்து அனுப்பிவிச்சார்கள்.

அப்படிக்கிப் பிறப்பிட்டு வந்த துஷ்டாளையுஞ் செயம் பண்ணி ஒடிக்கிவிச்சு தெட்சண சீர்மையில் ராசா விட்டுக் குடுத்த பூமியை ஆண்(ட)னுபவித்துக் கொண்டு வரப்பட்ட மும்முடி ஆண்டு கொண்டார். கவுசிலை ஆண்டு கொண்டார்.

விருசடை ஆண்டு கொண்டார். மதகனிரராண்டு கொண்டார். பொன்னாண்டு கொண்டார். காத்தவண்டு கொண்டார். சின்னப் பிள்ளை ஆண்டு கொண்டார். பொன்னின் குடுக்கைத் தலை ஆண்டு கொண்டார். சகத்துரை ஆண்டு கொண்டாரவர்கள் நாளையில் தென்காசியில் ராசரிக்கமாயிறுக்கப்பட்ட ராமவர்ம்ம குலசேகர பாண்டிய ராசாவுக்கு பிறுதி வாதியாயி வந்த தாயாதிக்காரர றா செய்த யிடைக்கூறினாலே விபத்து வந்ததில் அந்த விபத்துக்கு ராமவர்மகுலசேகர பாண்டிய ராசா ஆனவர் சகத்துரை ஆண்டு கொண்டாரை வரவளைத்து யிந்த விபத்தைத் தீற்க வேணுமென்று சொன்னபடிக்கி அந்த வேளை முன்னின்று ஆரம்ப ... தத்துவத்தினாலே உத்திரவாதஞ் செயிது சல்லியத்தைத் தீற்துக் கொடுத்தப்படியினாலே ராமவர்ம குலசேகரப் பாண்டிய ராசாவுக்குப் பிறுதி யுண்டாயி ராமவர்ம்மகுல சேகர ஆண்டு கொண்டாரென்று பேறுங்கொடுத்து தென்காசி மூப்புக்கூறும் விட்டுக்கொடுத்து அதற்குப் புலியூர் மேட்டில்க் கல்நாட்டி மால் வைத்து அது முதல் நான்கெல்லையிலும் சிறிது சீற்மையும் விட்டு சந்திராதித்தாளுள்ள மட்டும் ஆண்டனுபவித்துக் கொண்டு வரச்சொல்லி உத்திரவு செயிது அனுப்பிவிச்சார்கள்.

அது முதல் ராமவர்மகுலசேகரன் ஆண்டுகொண்டார். தென்னம்பை யாண்டுகொண்டார் நாளையில் வடக்கே றாய சமஸ்தானத்திலிறுந்து கொட்டியம் நாகமநாயக்கரவர்கள் குமாரர் விசுவநாதநாயக்கரவர்கள் பாண்டிய தேசத்துக்கு அதிபதியாக வந்து மதுராபுரி பட்டணத்தைச் சுத்தி எழுபத்திரெண்டு கொத்தளத்துடனே கோட்டையும் போட்டுவிச்சு அந்தந்த பாளையக்கார ரெல்லோரையும் வரவளைத்து அவரவரை ஒவ்வொரு கொத்தளத்துக்கும் மனுடரை நேமித்து கார்க்கச்சொல்லி உத்திரவு செயிது அந்தபடிக்கி நாங்கள் தெற்கு நெட்டில் ஒரு கொத்தளமுங் காறத்து வந்ததில் அது நிமித்தியம் திசை காவல் விட்டுக்கொடுக்கிர முன்னுக்கு தென்னம்பை ஆண்டுகொண்டாரை வரவளைத்துத் திசைகாவல் பூமியும் விட்டுக் கொடுத்து சிறுது வெகுமதியுஞ் செயிது அனுப்பிவிச்சார்கள். அப்புரம் தலத்துக்கு வந்து சீமை ஆண்டு கொண்டு வந்தார்.

அதின் பிறகு குமார சுவாமி ஆண்டுகொண்டார். நள்ளி யாண்டு கொண்டார். அளசுப்ப ஆண்டு கொண்டார். திருமலை ஆண்டு கொண்டார். வடமலை யாண்டு கொண்டார். சிதம்பரம் ஆண்டு கொண்டார். சிவனுத்தம்பி ஆண்டு கொண்டார். சிவநணைஞ்சு ஆண்டு கொண்டார். அதுவரை யில் கர்னாடக சமுஸ்தானத்தில் உள்ள காணிக்கைப்பணமுங் கொடுத்துக்கொண்டு பூமியும் ஆண்டனுபவித்துக்கொண்டு வந்தார்கள். அதின் பேரில் அன்னதானச் சிதம்பர ஆண்டு கொண்டார். முத்துசுவாமி ஆண்டு கொண்டார். குலசேகர ஆண்டு கொண்டார் நாள் வரைக்கும் திவாணத்துக்கும் ரொம்ப வும் ஒடுக்கமாயி உத்திரவுப் பிரகாரம் நடந்துகொண்டு உள்ள காணிக்கைப் பணமும் கொடுத்துக்கொண்டு சொந்தப்பூமியும் காவல்ப்பூமியும் ஆண்டனுபவித்துக் கொண்டு வருகிறபோது பாஞ்சாலங்குறிச்சி கட்ட பொம்மு நாயக்கன் நெடுகிலும் யெந்த நாளும் யிந்த யிடத்துப் பட்டக்காரரைக் கும்பிட்டுக் கைகட்டிக்கொண்டு நிற்குற அவன் கும்பிடும் நிறுத்தி சரியிறுப்பு யிறுக்க வேணுமென்று யிவடத்துக்கு மனுஷர் முகாந்திரம் பேச்சுவிட்டான். அதச்சிரமமில்லா நெடுகிலும் மா:மூலாயி நடந்து வருகுர காரியந் தப்பி யிப்போது நூதனமாயி உண்டு பண்ணிக்கொள்ள வேணுமென்று நினைத்தாலதற்கு நாங்கள் சம்மதிக்குரதில்லை யென்று சொல்லிவிட்ட படியினாலே கட்டபொம்மு நாயக்கன் வருவாற்காரமாகச் செயிது கொள்ள வேணுமென்று அப்போது தெட்சணஞ் சீற்மை அமுலாகியிறுக்குர போது பாருகானுக்குச் சிறுது திரவியங் கொடுத்து யிந்த யிடத்தை யெடுபடுத்திப் போடுவதற்கு நான் யெத்தினஞ் செய்குறேன். அதற்கு அவர்கள் வந்து உன்னிடத் தில் பிரியாது செய்விச்சுக் கொண்டால் அதற்கு நீங்கள் பரா முகமாக யிறுந்து விடவேணுமென்றுப் பேசி பந்தோபஸ்து செயிது கொண்டுச் சனசேகரமாக வந்து ஊர் புகுந்து சனங் களையுங் குத்திவெட்டி அனேக உயிர் வதையள் பண்ணி சகல ஆஸ்திபாஸ்தி எல்லாம் மூன்று நாள் வரையிலிறுந்து அன்னுவளவில்ப் பக...ஒதுங்காத படிக்கிக் கட்டுப்படுத்திவிச்சு கொள்ளையிட்டுக் கொண்டு போய் விட்டான். அது சமாசாரம் எல்லாம் தீவாணத்தாரிடத்தில் அரியச் செய்விச்சதற்கு கேழ்வி

யில்லாதே போச்சுது. அன்று முதல்க் கட்ட பொம்மு நாயக்கன் செயிது வந்த சல்லியம் மிதமில்லை.

அப்படிக்கி இருக்குர வரையில் முத்துசுவாமி ஆண்டு கொண்டார் நாளையிலுங் கும்பினியாரவர்களே தெய்வமென்று யெண்ணி ஆக்கினாபிச்சபடிக்கி நடந்து கொண்டு உள்ள காணிக்கைப் பணமுஞ் செலுத்திவிச்சுக் கொண்டு வரும் வரையில் சிவகிரி பாளையக்காரனுக்கும் அவன் குமாரனுக்கும் நிர்ப்புத்தப்பாயிப் பாளையக்காரர் குமாரனும் அவன் மச்சினன் கறுப்பு வன்னியனும் விலகி வந்ததில்க் கறுப்பு வன்னியன் மட்டும் யிந்த யிடத்தில் வந்து குடித்தினஞ் செய்து கொண்டு யிருக்குறேனென்று அவனும் அவனுடைய பெண் பிள்ளையுமாக வந்து யிருந்ததில் அந்தக் கறுப்பு வன்னியன் ஆகிறவன் அவன் பெண் பிள்ளையளை மட்டும் வைத்துப் போட்டு பக்க பாரிசத்தில்ப் போயிருந்தவன் பாஞ்சாலங் குரிச்சுக்குப் போய் அவடத்தில் யேதோ பேசிவிச்சுக் கொண்டு யவ்வடத்திலிறுந்து கட்ட பொம்மு நாயக்கன் வகைச்சனங் களையுங் கூட்டிக்கொண்டு பக்கவளியாகச் சிவகிரிக்கிப் போறவன் எளையரசநேந்தலில் யிருந்துகொண்டு யெங்களை யும் வரச் சொல்லி அனுப்பிவிச்சானதற்கு நாங்கள் சொன்னது : கும்பினியாரவர்கள் உத்திரவல்லாத படிக்கி நாங்கள் வருகுற தில்லை என்று வரையறுத்துச் சொல்லி யனுப்பி விச்சதற்கு நீங்கள் சேகரத்துக்கு வராதே போனால் உன் பூமியைப் பாளை யப்பட்டி கொள்ளையிட்டுச் சேதப்படுத்திப் போடுவோமென்று சொல்லி அந்தப் பிரகாரம் எங்கள் கிராமம் அம்மையாப் பட்டியைக் கொள்ளையிட்டுப் போடுவதாயி வகினம் செயிது கொண்டு போனதினாலே அப்படிக்கிச் செயிது போடுவா னென்பதாயிப் பயபீதி யுண்டாயி அந்தக்கிறாமத்தைப் பாது காற்கும்படிக்கு யிவடத்திலிருந்து சனம் அனுப்பிவிச்ச தேயல்லாது வேரே சல்லியத்துரையளுக்கானக் காரியத்துக்காக சனம் யனுப்பிவிக்கவில்லை. அப்படிக்கு யிருந்தும் யெங்களுடைய காலம் கும்பினியாரவர்கள் கறுத்தில் ஆயாசந் தோண வேண்டி யிறுந்து பூமியுஞ் சபுத்தி செய்து ஏலமும் போட்டு முத்துசாமி ஆண்டு கொண்டாரையுஞ் சென்னப்பட்டணத்தில்க் கொண்டு போயி வைத்திறுந்து தீபாந்திரத்துக்கு அனுப்பி வச்சிருக்

கிறார்கள். யெங்களுக்கு தாய் தகப்பனும் கும்பணியே தாரக மென்று நிரம்பவும் நம்பியிறாக்குரோம். ஆகையினாலே முத்துசுவாமி ஆண்டு கொண்டாரையும் விட்டு பூமியும் எங்களுக்குச் சாரும்படிக்கித் தயவு செயிதுக் காப்பாடி ரட்சிக்க வேண்டியது. இந்தப்படிக்கி முத்துச்சுவாமி ஆண்டு கொண்டார் தம்பி சிதம்பர வன்னியன்.

—★—

# குடையூர் கைபீது

## டி. 2842

தாறாபுரம் துக்குடி அறவகுறுச்சி தாலுக்கா குடையூறு கைபீது.

ஆதி காலத்துலே பறாபறாவஸ்துவாகிய, பறமீசுவரன் இந்த மாயா பிறபஞ்சத்தில் தேவாசுறமுனிறிஷி 3. மிறுக ஸ்தாபர சங்கம் ஒங்களுக்கு னமற்றிக் குடுக்கும் படியாக ஆதி சத்தியாகி பாற்பதியை பத்திரகாளி யென்பதாக அவதரிக்கச் சொல்லி பிறம்மா, விஷ்ட்டணு, சறசுவதி, தும்புறு, நாறதற் முதலாகிய பேரை மத்தள தாள வீணைகள் நாதிக்கச் சொல்லி, முப்பத்தி முக்கோடி தேவற்கள் முதலாகிய சகல பிரபச்சறும் பாத்து பறவசத்தை அடைந்து முகுத்தி பெத்ததாக, பறமேசுவரறும் பத்திகாளியும் வாது செயிது னிற்த்தனம் பண்ணுகுர போது ஒருத்தருக் கொறுத்தர் தோற்வை யில்லாது கண்டு அவர் காதில் குண்டலத்தை நளுவி விளும் படியாஇ செயிதாற்.

அந்த வேளையில் விஷ்ட்ணு மூற்த்தி சயிற்கப் பண்ணக் கண்டு, அந்த குண்டலத்தை தமது காலிநாலே யெடுத்து காதிலிட்டு கொண்டது பத்திரகாளி கண்டு இதுவும் ஒறு னிற்த்தமென்று யெண்ணி தானுமப்படி காலு தூக்கி ஆட மாட்டாமல் தோற்வையாகி னின்றாள். அப்படி பறமசிவன் நிற்த்தம் பண்ணப்போது, குண்டலம் தவிள்ந்து யெடுத்துக் கொண்டபடியனாலே குண்டலீசுபறரென்றும், குங்குமவல்லி அம்மனென்றும் பேறாச்சுது. சகலதேவாசுற முனீசுபற நர மிறுக பசுபட்சி ஸ்தாபசக்கங்களுக்கு முகுத்தி குடுத்த ஸ்தல மான படியநாலே யிந்த வூறுக்கு குடையூற் றென்றும் பேற் விளங்கப்பட்டது.

பிறம்ம தேவரானவரை சுப்பிறம்மண்ணிய சுவாமி சிவதியாரம்பன் பண்ணிவிக்க வேணுமென்று ஈசுபறறும் உமையவளும் அனுக்கிரஹம் பண்ணினபடிக்கி சுப

தினத்தில் சுப்பிறமண்ணியறுக்கும் அறியோநமாவென்று சொல்ல சொன்ன போது சுப்பிறமண்ணியக் கடவுள் அந்த பொறுளுக்கு உதாரணை யென்ன மென்றால் கேள்க்க : பிறம்ம தேவற் நமக்கு தெறியாது ஈசுபறற் ஒருத்தறுக்கே யன்றி மற்ற ஒறுத்தறுக்கும் தெரியாது வென்ற மாத்திரத்தில் பிறம்மாவை யிகள்ந்து தாமேஸ்ரீஷ்ட்டிக்க கற்த்தாவாகிய அவசறத்தில் மகா மேறுவுக்கு நிகரான நாமதேயத்தையுடைய கனககிறி மேல் யெளுந்துறுளிய வேலாயுதசுவாமி யென்று பேற்வறலாச்சுது. யிந்த ஸ்தலம் குத்துவூர் சைவ புராணத்திலும் ஸ்தல புராணத்திலும் சொல்லி வறுகுது.

★

# திருமலைமுத்து மாதா நாயக்கன் வமிசாவளி

## D. 2846

*மகாராஜ மானிய ராசஸ்ரீ கும்பனியாரவர்கள் சமட்சமத்துக்குத் தம்மம்பட்டிப்பாளையக்காரன் திருமலை முத்து மாதா னாயக்கர் வம்முசாவளியள்.*

*ஆதியில் யெங்கள் பெரியோர்கள் அக்கித் திருமலை மாதா னாயக்கரும் யெங்களைச் சார்ந்த பந்துக்கள் னூரு வீட்டுக்காரரும் வடக்கே கதிரியிலிருந்து வலசை சகிதமாயிப் பிரப்பட்டு சோள தேசத்துக்குச் சேகறமாகிய கொல்லி மலைச் சார்விலே வந்து யிரங்கி அவடத்தில் ரெம்பவும் வனாந்திரமான காடாயி யிருந்ததில் அந்த காட்டில் குடுசு கட்டிக் கொண்டு யெங்கள் பந்துக்களாகிய னூரு வீட்டுக்காரரும் யெங்கள் பெரியோர்களும் வாசம் பண்ணிக் கொண்டு யிருந்த விடத்தில் அப்போது வீர சேகர சோளராசா திரிசுரபுரத்திலிருக்குரபோது யெங்கள் பெரியோர்களாகிய அக்கித் திருமலை மாதானாயக்கர் திருசிர புறத்துக்குப் போயி வீரசேகர சோள ராசா சமுகத்துக்குப் போயிக் கண்டு யெங்கள் பெரியோர்களாகிய அக்கித் திருமலை மாதா னாயக்கர் சொன்ன சமாராரம் யென்ன வென்றால் நாங்கள் வடக்கே கதிரியிலிருந்து யென் பந்துக்களாகிய னூருவீட்டு சனமும் னானும் வலசைபிரப்பட்டு கொல்லி மலைச் சார்விலே ரொம்பவும் வனாந்திரமாயிருக்கப் பட்ட காட்டில் வந்து யிரங்கி குடிசையழும் போட்டுக்கொண்டு யிருக்குறோம். சுவாமி யவர்கள் வுத்திரவு குடுத்தால் அந்த வனாந்திரமாகிய காட்டை வெட்டி யெங்கள் னூரு வீட்டுக்காரரும் வீடுகள் கட்டிக்கொண்டு அவடத்தில் காடு கரை வுழுது சீவனம் பண்ணிக்கொண்டு சுவாமி யவர்கள் கட்டளை யிட்ட புத்தி கேட்டு னடந்து கொள்ளுகுறோமென்று கேட்டுக் கொண்டார்கள். அதே மேரைக்கி ஆகட்டு மென்று அந்த வனாந்திர மான காட்டை வெட்டி காடுகரை வுளுகச் சொல்லி வுத்திரவு*

குடுத்து அனுப்பிவிச்சார்கள். அந்தப்படிக்கே வுத்திரவு வாங்கிக்கொண்டு வந்து கொல்லிமலை சார்வில் றொம்பவும் காடாரண்ணியமான வனத்தை வெட்டி வீடுவாசல்க்கட்டி ஊர் உண்டு பண்ணிவிச்சு முன் கதிரியிலிருந்து வருகுரபோது கொண்டுவந்த குலதெய்வமான நரசிங்க சுவாமிக்கிக் கோவிலுங் கட்டி பிரதிட்டைப் பண்ணிவிச்சு அக்கித் திருமலை மாதா னாயக்கர் தாயாறாகிய தம்மம்மாள் பேரை அந்த வூருக்குத் தம்மம்பட்டி யென்று பேரும் வச்சி குலதெய்வ மாகிய நரசிங்கசுவாமியை கதிரியிலிருந்து கொண்டுவந்த படியினாலே கதிர் நரசிம்மப் பெருமாளென்று பேரும் வச்சி ரெண்டு காலமும் பூசை நெய்வேத்தியம் நடப்பிவிச்சு சிரிது காடுகள் வெட்டிப் பயிரிட்டுக் கொண்டு சிலதுனாள் வாசம் பண்ணிக் கொண்டு யிருக்குரபோது வீரசேகர சோள ராசா வேட்டைமார்க்கம் பிறப்பட்டுத் தம்மம்பட்டிக்கி வந்து யெங்கள் பெரியோர்களாகிய அக்கிதிருமலை மாதா னாயக்கரை யுங் கூட்டிக் கொண்டு கொல்லிமலைச்சார்விலே வேட்டை யாடிக் கொண்டு வருகுரமுன்னுக்கு அத்தக் காட்டிலே யிருவத்தினாலடி வேங்கைப் புலியானது குறுக்கே பிரப்பட்டுது. அப்போது அந்த வேங்கைப் புலியைக் கண்டு நல்ல சருதார்கள், சிபாயள் அந்த வேங்கைப் புலியை அப்பறம் விடாமல்ச் சுத்தி வளைஞ்சு கொண்டார்கள். அதிலே ஒரு சிபாயி ஆனவன் கையிலே வேல் வாங்கிக் கொண்டு அந்தப்புலியின் பேரில் போயிக்குத்தினான். அந்தப்புலிக்கிக் கொஞ்சங் காயமாகி அதிககோபமுண்டாகிக் குத்தின சிபாயானவனை யெட்டி அடித்தது. உயிர்வதை செய்து பின்னும் பக்கத்தில்ச் சேகரமாய் நின்றபேரை சிறுத்தை சேதப்படுத்திப் போட்டுது. அப்போது எங்கள் பெரியோர்களாகிய அக்கித் திருமலை மாதா னாயக்கர் வீர சேகர சோளராசா அண்டைக்கிப் போயி சுவாமி பெரிய பெரிய சருதார்கள் சிபாயள் யிவர்களெல்லாம் புலியைக் குத்தமாட்டாதே போனார்களே. அடியேன் கொஞ்சச் சிபாயி யிருக்குரேன். அடியேனுக்கு வுத்திரவு குடுத்தால் ஒருகை பாற்குரேன் என்று உத்திரவு கேட்டார்கள். அந்தப்படியே அந்தப் புலியைக்குத்தச் சொல்லி வுத்திரவு குடுத்தார்கள்.

அந்த வுத்திரவு வாங்கிக் கொண்டு யிடுப்பில் கட்டி யிருந்த வேட்டியை அவுள்த்து யிடது கையிலே சுத்திக்கொண்டு

சமுதாடு வாங்கிப் புலிக்கிட்ட போரபோது அந்தப் புலியானது யிவர் பேரில் வேகமாய்ப் பாஞ்சுது. அப்போது வேட்டி சுத்தி யிருக்கிர கையை புலியின் வாயிலே குடுத்துச் சமுதாடு கொண்டு புலியைக் குத்தி சங்காரம் பண்ணி அந்தப் புலியினுடைய பின்னங்கால் ரெண்டையும் பிடித்து இரு பிளவையாகப் பிளந்து போட்டார். அப்போது அதுவெல்லாம் வீர சேகர சோள றாசாவாகுரவர்ப் பாத்து யிப்படியாக்கொற்ற சுத்த வீரனை னாம் யிதுவரையில் யெங்குங் கண்டதில்லையென்று வெகு சந்தோஷப்பட்டு அந்தப் புலியைக் குத்தின கையிக்கு அஸ்தகடயமும் போட்டு வெகுமதியுங் குடுத்து அப்போ புலி குத்தி அக்கித் திருமலை மாதா னாயக்கரென்று பேருங்குடுத்து ரணபாசிங்கம், ரணகங்கணம் ரெண்டு விருதுங் குடுத்து கொல்லிமலையினுடனே சேற்ந்த தளுகைப்பாளையம், செந் தாரைப்பட்டி, நரசிங்கபுரம் யிதுக்குச் சேகரமாகிய சுத்துக் கிறாமங்களையும் சேர்த்து விட்டுக் குடுத்து வனாந்திரமான காட்டை வெட்டி கிறாமம் பூமி குளங்கள் காலுகள் உண்டு பண்ணிவிச்சுக்கொண்டு பாளையக்காரனாயிருந்து துரைத்தனம் பண்ணி புத்திர பவுத்திர பாரம்பரியமாய் அந்த பூமியை ஆண்டு சுகமேயிருக்கச் சொல்லி நிறை வுத்திரவுக் கட்டளையிட்டார்கள். அதின் பிறகு அந்தப் புலி குத்தின காட்டை வெட்டி அதைப் பெரிய பட்டணமாக வுண்டுபண்ணிவிச்சு நரசிங்க சுவாமிக்கித் திருப்பணியுங் கட்டிவிச்சு பிரதிட்டையும் பண்ணிவிச்சு அந்தப்பட்டணத்துக்கு பேர் புலிபிலமென்று பேரும் வைத்து அந்தப் புலிபிலத்தில் ராஜதானியம் பிரபலிய மாகக் கட்டி அதில்க் குடியிருந்து கொண்டு வனாந்திரமாயி யிருக்கப்பட்ட காடுகளை யெல்லாம் வெட்டி வூருகள் கிறாமங்கள் வுண்டுபண்ணிவிச்சு குளங்கள், காலுகள் முதலானதும் உண்டு பண்ணிவிச்சு நஞ்சையள் உண்டு பண்ணிப் பிரபலஞ் செயிது துரைத்தனம் பண்ணிக்கொண்டு யிருக்கிர ணாளையில், சந்திரசேகர பாண்டியனுக்கும் வீரசேகர சோளனுக்கும் சண்டையான முன்னுக்கு யெங்கள் பெரியோர் களாகிய புலிக்குத்தி அக்கித் திருமலை மாதானாயக்கர் சந்திர சேகர பாண்டிய னோடே யெதுத்து சண்டை பண்ணி சந்திர சேகர பாண்டியனை செயம் பண்ணினார். அப்போது வீரசேகர சோள ராசாவுக்கு மிகுதியுஞ் சந்தோஷம் வந்து பஞ்சவர்ன

டெக்கியம், சாமத்துரோக வெண்டையம், வீர கெண்டாமணியும் யிந்த மூன்று விருதுங் குடுத்து, அப்போது சிரிது சீர்மையும் விட்டுக்குடுத்து அப்போ வகையருப்பு ஷ க்கு 1000 பொன் குடுத்துக் கொண்டு சுகமேயிருக்கச் சொல்லி உத்திரவு செயிதார்கள். அந்தப் படியே வகையருப்புப் பணமுஞ் செலுத்தி விச்சுக் கொண்டு வந்தார். அப்பால் அவர் பட்டம் ஆண்டது ஷ 42 பட்டம் ஆண்டு புலி குத்தி அக்கித் திருமலை மாதா னாயக்கர் சொற்கலோகப் பிராப்தியானார்.

அவர் மகன் கொண்டத் திருமலை மாதானாயக்கர் பட்டத் துக்கு வந்து, அவரும் தோப்பனாரைப் பார்க்கிலும் அதிகமாயி நடந்து கொண்டு சிரிது அக்கிரகாரங்களும் உண்டு பண்ணி அந்தப் பிராம்மணாளுக்குச் சிரிது பூமியள் தானம் பண்ணி சகல தற்மங்களும் நடப்பிவிச்சுக் கொண்டு யிருக்கையில் கொட்டியம் நாகம னாயக்கர் சந்திர சேகர பாண்டிய னோடே சேர்ந்து வீரசேகர சோள ராசா பேரில் சண்டை சமரங்கள் செய்த போது கொண்டத் திருமலை மாதா னாயக்கர் வீர சேகர சோள ராசாவினுடனே சேர்ந்து சந்திர சேகர பாண்டிய ராசா, கொட்டியம் நாகம நாயக்கர் இவாள் பேரில் யெங்கள் பெரியோர்களாகிய கொண்டத் திருமலை மாதா னாயக்கர் யெதிர்த்துச் சண்டை பண்ணினதில் கொண்டத் திருமலை மாதானாயக்கருக்கு காயப்பட்டு மரண மடைந்தார்.

ஷை கொண்டத் திருமலை மாதானாயக்கர் பட்டம் ஆண்டது ஷ 4. அப்பால் ஷையார் மகன் மாதினாயக்கர் சிறுபிள்ளையா யிருக்குரபோது கொட்டியம் னாகம னாயக்கரவர்கள் யெங்கள் பாளையப்பட்டாகிய தம்மம்பட்டியை ஷ சவுத்தி பண்ணிப் போட்டார்கள். அதின் பிரகு கொட்டியம் னாகமனாயக்கர வர்கள் யெங்கள் பெரியோர்கள் மாதினாயக்கரை வரவழைத்து ஓங்கள் தோப்பனார் வெகு சூரத்துவமாயிருந்து காயம் பட்டு மரணமடைந்து போனார். நீய் சுகமாயிரு வென்று பட்டமுங் கட்டிவிச்சு மதுரைக்கிச் சேர்ந்த பாளயப்பட்டாக நேமிச்சு வகையருப்பு 5000 பொன் குடுக்கச் சொல்லி வுத்திரவு குடுத்து தம்மம்பட்டிக்கி அனுப்பிவிச்சார்கள். அந்த மேரைக்கி சிலது னாள் பட்டம் ஆண்டு கொண்டு யிருக்கயில் கொட்டியம்

னாகம னாயக்கரவர்கள் அதிகாரம் போயி ஷெ மகன் மகா ராஜமானிய ஸ்ரீ விசுவனாத னாயக்கரவர்கள் பாண்டிய தேசத்துக்கு ராஜாவானதின் பிரகு தெட்சணம் கைய்த்தார், தென்காஞ்சி முதலாகிய தலங்களுக்கு சண்டைக்கிப் போர முன்னுக்கு யெங்கள் பெரியோர்களாகிய மாதினாயக்கருங் கூடப் போயி சண்டை சமரங்கள் செய்து செயம் பண்ணி வந்தார்கள்.

அப்போது அரியனாயக முதலியாரவர்களுக்கும் மாதா நாயக்கரவர்க்கும் ரொம்பவும் சினேகிதமாகி அப்போது திரிசுர புரத்துக்கு மேற்குப்பட்ட சீற்மை காடுஞ் செடியும் வனாந்திரங்களாயிருந்தது. அந்த முன்னுக்கு அரியனாயக முதலியார் அவர்களை மாதானாயக்கர் கூட்டிப் போயி அந்தப் பூமி சமமாயிருக்குற பூமியான படியினாலே யிந்தக் காட்டை வெட்டி வாய்க்காலுண்டு பண்ணிநால் தண்ணீர் பாயும். நஞ்சை அனேகம் உண்டாகும் யென்பதாயி மாதா னாயக்கர் சொன்னதில் அரிய நாயக முதலியாரவர்கள், ரொம்பவும் சந்தோஷப்பட்டு நீய் கெட்டிக்காரனென்று சந்தோஷப்பட்டு யிந்த யோசினை ஒருத்தருக்குந் தோண மாட்டாது. நீய் புத்திவானானபடியினாலே ஒனக்குத் தோணுச்சு. பின்னே ஒருதரை யிந்தவேலையில் வைச்சால் ஒனக்குத் தோணினபுத்தி மத்தொருத்தருக்குத் தோண மாட்டாது. ஆனதாலே யிந்த காடுகள் செடியள் வெட்டி வாய்க்கால் உண்டு பண்ணி மேட்டுப்புரங்களெல்லாம் நஞ்சை யாய் உண்டுபண்ணிவிச்சால் ஒனக்குச் சிரிது சீர்மையும் குடுத்து வெகுமதியும் செய்து அனுப்பிவிக்குரோமென்று உத்திரவு செயிது சிருது திரவியமும், மாதா னாயக்கர் கையிலே குடுத்து சீர்மையில் காமாட்டங்களுக்கு நெரை உத்திரவு குடுத்து அனுப்பிவிச்சார்கள். அப்போது மாதா னாயக்கர் வந்துயிருந்து கொண்டு சீர்மையிலுண்டாகிய காமாட்டக்காரரையும் வர வளைச்சு வைத்துக்கொண்டு செடிகள் காடுகள் முதலாகியதும் வெட்டி வாய்க்காலுகளும் வெட்டி நஞ்சை உண்டு பண்ணி விச்சார். அதை பார்த்து சீர்மையிலிருக்கப்பட்ட பேறகள் யெல் லோரும் காடுகள் வெட்டி, வாய்க்காலுகள் உண்டு பண்ணி, நஞ்சை விபரீதமாயி உண்டாச்சுது. அப்போது காவேரி தீரத்தில் அஞ்சு லட்சம் பொன் சீர்மை வதைக்கும் உண்டாச்சுது. அதின்

பேரில் அனேகமான அக்கிரமகாரங்களுந் தோப்புகளும் உண்டாச்சுது. அதின் பிறகு மகாராஜ மானிய ராஜஸ்ரீ விசுவனாத னாயக்கரவர்களுக்கும் அரிய னாயக முதலியாரவர் களுக்கும் யெங்கள் பெரியோக்களாகிய மாதா னாயக்கர் பேரில் வெகு சந்தோஷம் வந்த முன்னுக்கு மகாராஜமானிய ராஜஸ்ரீ விசுவனாத நாயக்கரவர்கள் சமஷ்சமத்தில் அரிய நாயக முதலியாரவர்கள் சொன்னது. திருச்சிரபுர கோட்டைக்கு மேற்கு வனாந்திரமான காடுகளை வெட்டி வாய்க்காலுகள் உண்டுபண்ணிவிச்சு கிறாமங்களும் ஊருகளும் கட்டிவிக்க சொல்லி மாதா நாயக்கருக்கு நாம் சொல்லி அந்தப்படிக்கி உண்டுபண்ணிவிச்சால் அதில் யெட்டுலே ஒரு பங்கு குடுக்குரோ மென்பதாயிச் சொல்லியிருந்தோம். அதே மேரைக்கி சுவாமி காரியம் பிறதானமாயி மாதா னாயக்கர் நடப்பிவிச்சார். ஆனதாலே முன் நாம் சொல்லியிருந்த மேரைக்கி நடப்பி விச்சுக் குடுக்கவேணுமென்பதாயி அரியனாயக முதலியா ரவர்கள் கர்த்தர்களாகிய விசுவனாத நாயக்கரிடத்தில் சொன்னதற்கு மகாராஜமானிய ஸ்ரீகற்தாக்களாகிய விசுவ னாத னாயக்கரவர்கள் உத்திரவு செயித விபரம் : யிப்போது உண்டுபண்ணிவிச்ச சீர்மையை விடப்படாது. அவன் சீர்மைக் கிச்சேகரமாயி அன்பதினாயிரம் பொன் சீர்மையை விட்டுக் குடுக்கச் சொல்லி மகாறாஜ மானிய ஸ்ரீ கர்தாக்களாகிய விசுவ னாத னாயக்கரவர்கள் உத்திரவு ஆகி முன்யிருந்த சீமைக்கும் யிப்போது விட்டுக் குடுத்துயிருக்கிர சீர்மைக்கும் வகயருப்பு 11500 பொன் வருஷம் 1க்கு குடுத்து வரச்சொல்லி உத்திரவு குடுத்துச் சாலுவையுங் குடுத்து, ரெண்டாயிரஞ் சனம் சீவிதம் வைத்துக் கொண்டு சேவிக்கச் சொல்லி உத்திரவு குடுத்து அனுப்பிவிச்சார்கள். பின்னும் கொஞ்சனாளக்கிப் பிர்ப்பாடு மதுறாபுரியில் பாண்டியன் கோட்டைக்கி வெளியாக அரியனாயக முதலியாரவர்கள் கோட்டையும் போடுவிச்சு யெளுவத்தி ரெண்டு கொத்தளமும் போட்டு யெளுவத்திரெண்டு பாளயக் காரரையும் காக்கச் சொல்லி நேமிக்குர முன்னுக்கு திருமஞ் சனக்கோட்டை வாசலுக்கு பிரதட்சணமாயி 49-ம் கொத் தளத்தை யெங்கள் பெரியோர்களாகிய மாதா னாயக்கரைக் கார்க்கச் சொல்லி நேமிச்சு நீ நமக்குக் குமாரவர்க்கமென்று

சொல்லி சிரிது பாதிகாவலும் விட்டுக் குடுத்து அனுப்பி விச்சார்கள்.

அந்த மேரைக்கே கொத்தளமுங் கார்த்துக் கொண்டு வகை யருப்பு 11500 பொன்னும் செலுத்திவிச்சுக் கொண்டு ரெண்டாயிரஞ் சனம் சீவிதம் கட்டி சேவிச்சு அன்பது ஹூ பட்டம் ஆண்டு மரணமடைந்தார்.

அவர் மகன் மந்தை மாதானாயக்கர் பட்டத்துக்கு வந்து தோப்பனார் சம்பாதிச்ச பூமியை பரிபாலனம் பண்ணிக் கொண்டு 55 ஹூ பட்டம் ஆண்டு மரணமடைந்தார்.

அவர் மகன் சாமி மாதா னாயக்கர் பட்டத்துக்கு வந்து 33 ஹூ துரைத்தனம் பண்ணி மரணமடைந்தார்.

அவா மகன் முத்து மாதா னாயக்கர் பட்டத்துக்கு வந்து துரைத்தனம் பண்ணிக் கொண்டுயிருக்கிர னாளையில் மகாறாஜ மானியஸ்ரீ திருமலை னாயக்கரவர்கள் தம்பி முத்துல னாயக்கரவர்கள் பாளயம் தண்டெடுத்து மைசூரார் பேரில் சண்டை சமரஞ் செய்து கெச்சலூட்டு வரையில் அடித்து கொண்டு போரபோது முத்து மாதா னாயக்கர் ரெண்டாயிரஞ் சனத்துடனே அகடியில் போயி கணவாயி வரைக்கும் மைசூரார் பேரில் சண்டை பண்ணிக்கொண்டு போரபோது மகா ராஜஸ்ரீ முத்துலநாயக்கரவர்கள் கெச்சலூட்டுக் கணவாயில் தணாக்கன் கோட்டை முகத்தில்ப் பாளயம் யிரங்கி வாசம் பண்ணிக் கொண்டு யிறுந்தார்கள். அப்போது மகாராஜமானிய ஸ்ரீ திருமலை நாயக்கரவர்கள் யெங்கள் பெரியோர்களாகிய முத்து மாதா நாயக்கரை மதுரைக்கி வரச் சொல்லி நிரூபம் வந்துது. நிரூபத்தைக் கண்டவுடனே யெங்கள் பெரியோர் களாகிய முத்து மாதானாயக்கர் மதுரைக்கி வந்து சேர்ந்து மகா ராஜ மானிய ஸ்ரீ திருமலை நாயக்கரவர்கள் சம சமஷ்த்துக்குப் போயிக் கண்டு கொண்டதில் முத்து மாதானாயக்கர் பேரில் மிகுதியுஞ் சந்தோஷம் வந்து வெகுமதியள் பூஷணம் பறார்தி யளும் குடுத்து நீய் நமக்கு குமாரவர்க்கமான படியினாலே நம்முடைய பேரை உனக்குக் குடுக்குறோமென்று சொல்லி

திருமலை முத்துமாதா நாயக்கரென்று பேருங் குடுத்து பாளயப் பட்டுக்குப் போகச் சொல்லி அனுப்பிவிச்சார்கள்.

ஷெ திருமலை முத்து மாதா நாயக்கரும் 30 வருஷம் பட்டம் ஆண்டு மரணமடைந்தார். ஷெயார் மகன் சின்னமாதி னாயக்கற் பட்டத்துக்கு வந்ததின் பிரகு மைசூரார் தண்டெடுத்து திரிசிரபுறக் கோட்டையின் பேரில் வந்தார்கள். அப்போது சின்ன மாதாநாயக்கரை மைசூறார் பிடிச்சுக் கொண்டு போயி சீரங்கப் பட்டணத்தில் ஹ 1 வச்சிருந்து சிரிது பனங் குடுக்கச் சொல்லி வாங்கிக் கொண்டு வகையருப்பு பணந் தங்களுக்கு குடுக்கச் சொல்லி தம்மன்பட்டிக்கி அனுப்பிவிச்சார்கள். அந்த படிக்கி சிருது நாள் வகையருப்பு பணம் சீரங்கபட்டண மயெசூ றாருக்கு கட்டிக் கொண்டு வந்தார்கள். திரும்பவும் மகாறாச மானிய ஸ்ரீ கர்த்தாக்கள் தம்மம்பட்டிமேலே சிருது குமுக்கு அனுப்பிவிச்சு மயெசூறாறுக்கு பணங் குடுக்க வேண்டிய தில்லை ; மாமூல் மேரைக்கி திருசுரபுரங் கோட்டைக்கி பணங் குடுக்கச் சொல்லி உத்திரவு செயிதார்கள்.

அந்த மேரைக்கி திருசிரபுரங் கோட்டைக்கி பணஞ் செலுத்திவிச்சு கொண்டு அருவது வருஷம் பட்டமாண்டு மரண மடைஞ்சுபோனார்கள்.

அவர் மகன் சாமி மாதா நாயக்கர் பட்டத்துக்கு வந்து யெளுவது வருசம் வரைக்குந் துரைத்தினம் பண்ணி திருசுர புரங் கேட்டைக்கி பணஞ் செலுத்திவிச்சு பட்டம் ஆண்டு கொண்டு யிருந்தபோது சொக்கநாத நாயக்கரவர்களை ருசு முகான் காவல் வச்சிருக்குரபோது கோவிந்தப்பய்யரவர்கள் தளவாயா யிருந்தார்கள். அப்போது தளவாயிக் கோவிந்தப் பய்யரவர்கள் யெங்கள் பெரியோர்களாகிய சாமி மாதா நாயக்கரவர்களையும் சேதுபதியையும் அளைப்பிச்சு ரகசிய மாயி சமாசாரஞ் சொல்லி அனுப்பி விச்சுது. நீங்கள் ரெண்டு பேரும் சமஷ்த்தானத்துக்கு பிள்ளையானபடியினாலே, கோட்டைக்குள்ளே பணஞ் செலுத்திவிக்கப் போற பாவகமாயி போயி ருசுமுகான் பேட்டி பண்ணி உனக்கு உத்திரவு வாங்கிக்கொள்ளுகிர முன்னுக்கு யெப்படியும் ருசுமுகான் தலையை அருத்துப்போட வேணுமென்று தளவாயிக் கோவிந்

தப்பய்யரவர்கள் சொன்னார்கள். அந்தபடியே செய்குறோமென்று சேதுபதியவர்களும் யெங்கள் பெரியோர்களாகிய சாமி மாதா நாயக்கரும் சம்மதிச்சு ரெண்டு பேரும் யிரநூறு சனத்துடனே கோட்டைக்குள்ளே வந்து பணமுஞ்செலுத்தி விச்சு ருசுமுகான் பேட்டிக்கிப்போயி பேசிவிச்சு உத்திரவு வாங்கிகொண்டு வருகுறபோது தங்களுடனே கூடவந்த யிரநூறு சனத்துக்கும் வருதி சொல்லியிருந்தபடிக்கி ருசுமுகான் பேரில் யிரநூறு துப்பாக்கியுஞ் சுட்டார்கள். அப்போது ருசுமுகானுக்கும் குண்டு காயம் பட்டு பக்கத்திலேயிருந்த சருதார்கள் பெரிய மனுஷாளில் நாற்பது பேர் வரைக்கும் பட்டுப் போனார்கள்.

யிந்த யிரநூறு சனமும் போயி அவாள் பேரில் கைகலந்து அவாளுடைய தலைகளையெல்லாம் வெட்டிப் போட்டார்கள். அது சமாசாரம் தளவாய் கோவிந்தப்பய்யரவர்களுக்கு அரிக்கையான உடனே மகாராஜமானிய ஸ்ரீ சொக்கநாத நாயக்கரவர்கள் கிட்ட தளவாய் கோவிந்தப்பய்யரவர்களும் சேதுபதியும் சாமி மாதா னாயக்கரும் போயி ருசுமுகான் பட்டுப் போனான். சுவாமியவர்கள் வெளியிலே வரலாமென்று சொன்னதுக்கு ருசுமுகான் தலையை நம்முடயிடத்துக்குக் கொண்டுவந்தால் நாம் கண்ணாலே பாற்து அதின் பிறகு நாம் வெளியே வருகிறோமென்று சொன்னார்கள். அதர்க்கு யிவாள் சொன்னது: ருசுமுகான் தலையை யெங்களுக்கு அடையாளம் தெரியிரது யெப்படி யென்று கேட்டார்கள்.

ருசுமுகானுக்குக் காதிலே சீய்வடிஞ்சு கொண்டிருக்கும். அதை அடையாளம் பாற்து யெடுத்துக் கொண்டு வாருங் கோளென்று உத்திரவு செய்தார்கள்.

அதேமேரைக்கி யெங்கள் பெரியோர்களாகிய சாமி மாதா னாயக்கர் போயி காதிலே சீய்வடியிர அடையாளம் பாற்து ருசுமுகான் தலையை யெடுத்துக் கொண்டு வந்து மகா றாஜ மானிய ஸ்ரீ சொக்கநாத னாயக்கர் அவர்கள் சமட்சமத்தில் வைச்சார்கள். அதின் பிரகு மகாராஜமானிய ஸ்ரீ சொக்கனாத னாயக்கரவர்கள் பாறா விட்டு வெளியே வந்து யெப்போதும் போலே தொரைத்தனம் பண்ணிக் கொண்டு யிருந்தார்கள். அப்போது

சேதுபதிக்கி ஒரு யானையும் யெங்கள் பெரியோர்களாகிய சாமி மாதா னாயக்கருக்கு குதிரையும் அஸ்திரபரணங்களுங் குடுத்து ஊருக்கு அனுப்பிவிச்சார்கள். ஷெ சாமி மாதா னாயக்கரும் ஷெ 70 வருஷம் பட்டம் ஆண்டு மரணமடைந்தார்.

ஷெ யார் மகன் சின்ன மாதா நாயக்கர் பட்டத்துக்கு வந்து சிரிது னாள் தொரைத்தனம் பண்ணிக் கொண்டு யிருக்கிர னாளையில் கர்நாடகம் போனதின் பிரகு மைசூரார் கணவாயிக் கீள்ப்பட்ட கெடிகளை கட்டுகுர போது யெங்கள் தம்மன்பட்டி பாளையப்பட்டையுங் கட்டி சின்ன மாதா நாயக்கரை சீரங்க பட்டணத்துக்கு வரவளைச்சு பேட்டி பண்ணிக் கொள்ளச் சொல்லி உத்திரவு குடுத்து சின்ன மாதா னாயக்கரும் சீரங்க பட்டணத்துக்கு போயி மகாறாசஸ்ரீகர்த்தரை பேட்டி பண்ணிக் கொண்டதில் யெங்கள் பெரியோற்களாகிய சின்னமாதா நாயக்கருக்கு சோடுசாலுவையும் குடுத்து வகை யருப்பு 2000 பொன் குடுக்கச் சொல்லி அனுப்பிவிச்சார். அந்த மேரைக்கி சம்மதிச்சு கொண்டு தம்மன்பட்டிக்கி வந்து பதி மூணுவருஷம் துரத்தினம் பண்ணிக் கொண்டு யிருக்கயில் சீரங்கப்பட்டணத்துக்கு அயிதர் துரத்தினத்துக்கு வந்ததின் பிரகு அயிதர் தண்டெடுத்து கணவாயிக் கீள்ப்பட்ட கெடிகளை யெல்லாம் சுவாதீனப்படுத்திக் கொண்டு வருகுர போது அயிதர் பாளையஞ் சயிதமாயி தம்மம்பட்டிக் கோட்டை மேலே வெந்திரங்கி சண்டை பண்ணினதில் சின்ன மாதா நாயக்கர் தம்பி மாச்சி நாயக்கரும் சிருது சனமும் பட்டுப் போய் கோட்டைக் குள்ளேயிருக்குரதுக்கு நிருபாகமில்லாமல் சின்ன மாதா நாயக்கருக்கு முன் யெங்கள் பெரியோர்கள் தலமுறை தலமுறை யாயி சம்பாகினை செயித திரவியங்கள் முதலாகியதை யெல்லாம் யெடுத்து பூமி தாமதங்கள் பண்ணிப் போட்டு கோட்டையை விட்டு வெளியே பிரப்பட்டு துரையூர் ரெட்டிமார் சீர்மைக்கிப் போயிருந்து சிரிது நாளைக்கி பிரகு அவடத்தில் தானே மரண மடைஞ்சு போனார். அவர் மகன் கிஷ்ண கோபி மாதா நாயக்கர் துரையூருச் சீர்மையிலிருந்து கொஞ்ச நாளைக்கி பிரகு வீரிய பாளயத்துக்கு வந்திருந்து கொஞ்ச் நாளைக்கி பிரகு சென்னப் பட்டணத்திலிருந்து மகாராச மானிய ஸ்ரீ வாலிசு மேடொசு துரையவர்கள் பாளையந் தண்டெடுத்து சீரங்கபட்டணம் டீப்பு ச்சாயபு அவர்கள் பேரில் சண்டைக்கி போர முன்னுக்கு யெங்கள்

தொகப்பநார் கிஷ்ண கோப மாதா னாயக்கர் மகாறாச மானிய ஸ்ரீ வாலி சுமேடீசு துரையவர்களைக் கண்டு பேட்டி பண்ணிக் கொண்டு சிருதுசனங்கட்டிக் கொண்டு சேவிச்சு பாளையத்துக்கு வேண்டிய மாடாடுரஷத்து மற்றதும் சம்பாரிச்சு குடுத்து கெச்சி லூட்டு கணவாயி வரைக்கும் கூட போயி மகா றாச மானிய ஸ்ரீ வாலிசு மேடீசு துரை யவர்கள் சமஷ்சமத்தில் யெங்கள் தகப்ப நார் கிஷ்ண கோப மாதா நாயக்கர் சொன்ன விபரம், யென் பாளையப்பட்டுலே அயிதர் சிருது சனத்தை தானையும் போட்டு யிருக்குது, யெனக்கு உத்திரவு குடுத்தால் நானும் யென்சனமும் தம்மன்பட்டிக்கி போயி கோட்டை பண்ணி கோட்டையை வாங்கி தமம்பட்டியிலிருக்குரேன். மாமூல் மேரைக்கி அர மனைக்கி உண்டாகிய பணமுஞ் செலுத்தி வச்சுகொண்டு வருகுரேனென்று கேட்டதுக்கு மகாராசமானிய ஸ்ரீ வாலீசு துரையவர்கள் மேடேசு துரையவர்கள் உத்திரவு செயித விபரம் நாம் சீரங்கபட்டணம் போயிச் சேந்து பாளையமிரங்கி கோட்டையும் வாங்கி சீரங்க பட்டணங் கைவசமானவுடனே ஒன் பாளையப்பட்டு ஒனக்கே தருகிறோம். இப்போது ஒன் சனமும் நீயும் ஒன் பாளையப்பட்டு தம்மன்பட்டிக்கி போயி கோட்டை மேலே சண்டை பண்ணி கோட்டையும் வாங்கி தம்மன்பட்டியிலே யிருயென்று உத்திரவு கொடுத்தார்கள்.

அதே மேரைக்கி யெங்கள் தகப்பநார் கிஷ்ணகோபமாதா நாயக்கரும் சனமும் தம்மன்பட்டிக்கி வந்து சண்டை பண்ணி கோட்டையும் வாங்கி ஷெ ஊருலே நாலு அஞ்சு மாசம் யிருந்தார்கள். அதின் பிரகு மகாராசமானிய ஸ்ரீ வாலீசு மேடீசு துரையவர்கள் பாளையஞ் சயிதமாயி பின்வாங்கி வந்ததின் பேரில் டீப்பு சாயபு அவர்கள் சிருது குமுக்கு அனுப்பி விச்சு தம்மன்பட்டிக் கோட்டையில் தானையும் போட்டு யெங்கள் தகப்பநார் கிஷ்ணகோபமாதா நாயக்கரை முடிக்கி விட்டார்கள். மாமூல்படிக்கி யெங்கள் தகப்பநாரை கிஷ்ண கோப மாதா நாயக்கர் வீரிய பாளையம் வந்து சேந்து நாலஞ்சு வருஷத்துக்கு பிரகு யெங்கள் தகப்பநார் கிஷ்ணகோபமாதா நாயக்கர் சென்ன பட்டணத்துக்கு போயி கமட்டியில், துபாசி சின்னயா முதலியாரவர்கள், வாசு தேவம் பிள்ளை யவர்களைக் கண்டு பேசி அவாள் முகாந்திரமாயி மகாராசமானிய ஸ்ரீ

கமட்டியாரவர்களுக்கு புட்டீசனெளுதிக் குடுத்து சென்னப் பட்டணத்தில் ரெண்டு வருஷம் வரைக்கும் காத்திருந்தார்கள். அப்போது எங்கள் தகப்பநார் கிஷ்ணகோப மாதா நாயக்கருக்கு சரீரபக்குவமில்லாமல் சின்னியா முதலியாரவர்கள் வாசுதேவம் பிள்ளையவர்களிடத்தி லனுப்பிவிச்சு கொண்டு வீரிய பாளையம் வந்து சேந்தார்கள்.

கொஞ்ச நாளைக்கி பிரகு முன்னாலே யெங்கள் பிதாக்கள் சம்பாரிச்ச திரவியங்களை யெடுக்க வேணுமென்று யோசினை செயிது யெங்கள் தகப்பனார் கிஷ்ணகோப மாதா நாயக்கர் சேலம் கலக்ட்டர் மகாராாசமானிய ஸ்ரீ கோபுரஞ் சாயபு அவர்கள் கிட்ட போயி புட்டீச னெளுதிக் குடுத்தார்கள். உடனே புட்டீசனை யிங்கிலும் சுட்டுத்திப் பாத்து யெங்கள் தகப்பநாரை அளைச்சு ஆதியோடந்தமாயி நடந்த விறாந்தங்க யெல்லாங் கேட்டு தம்மன்பட்டிக்கு போயி பணமெடுத்துக் கொள்ளச் சொல்லி உத்திரவு கொடுத்து அந்த சீர்மை தாசில்தார் அருக்கத்து பண்ணாமல் கடுதாசி குடுத்தார்கள். அந்த கடுதாசியும் வாங்கிக்கொண்டு தம்மம்பட்டிக்கி போயி தாசில்தார் கிட்ட குடுத்து கொல்லி மலை அஞ்சு நாட்டுக்கு போயி யெங்கள் பெரியோர்கள் சம்பாரிச்சு பூமியில் ஸ்தாபிதஞ் செய்திருக்குர யிடம் பிள்ளி அரிஞ்சு பணமிருக்குர யிடமுங் கண்டு வெட்டவேணுமென்று போனதில் அந்த மலையாளர் நாலந்துபேற் கூடிவந்து நீயாறோ தெரியவறாது; யிந்த பாளையப்பட்டுக்கு பாத்தியக்காரன் மாதிநாயக்கன் மூணு தலமுரைக்கி முன்னே போட்டபணம் யிந்த பணத்துகு சுயந்திர வாதி வந்தால் பணமெடுக்க விடுவோம் யில்லாதவரையில் பணமெடுக்க விடமாட்டோம். நாங்கள் சம்மதிச்சு விட்டாலும் பணமெடுபட மாட்டாது, யென்று சொன்னார்கள். அதுக்கு மலையாளரிடத்தில் யெங்கள் தகப்பநார் கிருஷ்ணகோபமாதா நாயக்கர் சொன்னது: யெங்கள் தகப்பநார் சின்ன மாதா நாயக்கர் துரத்தினம் பண்ணிக் கொண்டிருக்கயில் அயிதர் வந்து தம்மம்பட்டியின் பேரில் சண்டை பண்ணுகுர மூனுக்கு முன்னோர்கள் சம்பாரிச்ச பணங் காசு தங்கபாளையங்கள் நகை வகை முதலாகியதெல்லாம் உங்கள் மலை மேலே புதைச்சு யெங்களுக்குபட்ட பஞ்சாதனங்களுண்டாகியதும், உங்கள் பிதாக்கள் வசம் ஒப்பிவிச்சுப்போனார்கள். இப்போது

அந்த பணங்காசு யெடுக்க வேணுமென்று சேலம் கலக் கட்டறாகிய கோபுரஞ்சாயபு அவர்களுக்கு புட்டீச னெழுதிக் குடுத்து அவர்களும் பாத்து யென்னை அளைச்சு தரியாபத்து பண்ணி தம்மம்பட்டிக்கி போய் உங்கள் பணமெங்கே யிருந்தாலும் சோதிச்சு யெடுத்துக் கொள்ள சொல்லி உத்திரவு குடுத்து தாசீல்தாருக்கும் காயிதங் குடுத்தார். காயிதமும் கொண்டு வந்து தாசீல்தார் குடுத்து தாசீல்தார் உத்திரவு வாங்கி கொண்டு வந்திருக்கிறோம். ஆனதினாலே யெங்கள் பெரியோர்கள் உங்கள் கிட்ட குடுத்திருக்குர பட்டயஞ் சாதனங்களெல்லாம் நம்மிடகிட்ட குடுக்க வேணுமென்று யெங்கள் தகப்பநார் கிஷ்ணகோபமாதா நாயக்கர் கேட்டதுக்கு யெங்கள் கிட்ட பட்டயமேது காரிய மேது ஒன்றுங் கிடையாது. நீங்கள் மலை மேலே யிருக்க வேண்டியதில்லை கீளே தம்மம்பட்டிக்கி போயிருங்கள். நாங்கள் அவடத்துக்கு வந்து யெல்லா வயனமும் பேசிவிச்சு கொள்ளுறோ மென்று மலையாளர் சொன்னுர்கள். அப்படியே ஆகட்டு மென்று மலையாளரை தம்மம்பட்டிக்கி வரச் சொல்லிப் போட்டு யெங்கள் தகப்பனார் கிஷ்ணகோபமாதர் நாயக்கர் மலை விட்டிரங்கி தம்மம்பட்டிக்கி வந்தார்கள். உடனே அந்த மலையாளர் நாலுபேற் பெறப்பட்டு திருசிரபுரங் கோட்டைக்கிப் போயி மகா ராசமானிய ஸ்ரீ கலக்ட்டர் வாலீசுதுரையவர்கள் கிட்ட யெங்கள் தகப்பநார் கிஷ்ணகோபமாதா நாயக்கர் பேரில் அனேகமாயி மித்திரங்களை சொல்லி மகா ஸ்ரீ வாலீசு துரையவர்கள் முத்திரி சேவுரை அனுப்பிவிச்சு யெங்கள் தகப்பநார் கிஷ்ண கோப மாதா நாயக்கரையும் யென்னையும் பிடிச்சு பாறுப்போட்டு, திருசுரபுரங்கோட்டைக்கி கொண்டு போயி கொத்தவாலுலே விலங்கு போட்டு, ஒரு வருஷம் வரைக்கும் வச்சிருக்குர போது, யெங்கள் தகப்பநார் கிஷ்ண கோப மாதா நாயக்கருக்கு சரீர பக்குவ மில்லாமல் சங்கட்டப் பட்டு பாறாவிலேயிருக்குரபோது தானே மரண மடைஞ்சு போனார்.

நானும் விலங்குக் காலோடே கொஞ்ச நாளிருந்தேன். மகா-ா-ா-ஸ்ரீ அதாலம் கோட்டு ஞாயம் விசாரனை கர்த்தறாகிய சச்சாரீட்டு துரையவர்கள் திருசுரபுரங் கோட்டைக்கி வந்து

குத்தவாளியன் ...ாயம் விசாரிக்கு முன்னுக்கு யென்னையும் அளைச்சு தீர்க்க விசாரிச்சு ஒன் பேரில் குத்தமில்லை நீ கும்பினிக்கி நல்ல பிள்ளையானபடியினாலே நீ ஊருக்கு போ வென்று உத்திரவு கொடுத்து விலங்கு வெட்டி பாறா விட்டார்கள். நானும் வீரிய பாளையத்துக்கு வந்து நாலு மாசம் வரைக்குமவடத்திலே தானேயிருந்து யென் ஆஷ்த்தி உண்டானதை வித்து ஷெ 200 பொன் படிச் சிலவு சேகரிச்சு கொண்டு சேலத்துக்கு போயி சேலம் சில்லா சர்தாறாகிய மகா-ா-ா-ஸ்ரீ ஆப்பிரேசு துரையவர்கள் சமஷசமத்துக்கு புடீசனெளுதிக் குடுத்தேன். அவர்கள் நன்றாயி யெங்களுடைய பூருவத்தார் சங்கதிகள் சகலமானதும் விசாரனை செயிது தம்மன் பட்டிக்கிப் போயி உங்கள் பிதாக்கள் சம்பாரிச்ச திரவியம் யெங்கே போட்டிருக்குதோ அது வெல்லாஞ் சோதிச்சு யெடுத்துக் கொள்ள சொல்லி உத்திரவு குடுத்து பணம் யெடுக்குர போது அவடத்தில் ஒருதரும் அருக்கத்து பண்ணாமலும் பணமிருக்குர தாவில் வெட்டி யெடுக்குரத்துக்கு காமிட்டம் குடுக்கச் சொல்லி யும் யிந்த படிக்கி தம்மம்பட்டி மிட்டாதாரருக்கு ஒரு கடு தாசியும் அஞ்சு நாட்டு மலையாளருக்கு ஒரு கடுதாசியுங் குடுத்தார்கள்.

அந்த ரெண்டு கடுதாசியும் வாங்கி கொண்டு தம்மம் பட்டிக்கி போயி அவடத்தில் ரெண்டு பக்கத்தில் திரவியம் போட்டு யிருக்குரயிடங்களுங் கண்டு பாத்துக் கொண்டு அஞ்சு நாட்டுக்கு போயி மலை மேலே போட்டு யிருக்குர யிடம் அஞ்சு யிடமும் பாத்து ரெண்டு யிடத்தை வெட்டி சோதிக்குர போது ரெண்டுயிடத்திலிருந்த திரவியத்தையும் மலையாளர் யெடுத்துப் போட்டார்கள். அதின் பிரகு அதை விசாரிக்கும் யிடத்தில் அந்த மலைனாட்டாமை வெள்ளயக் கவுண்டன் யிறுவது முப்பது காமாட்டத்தைக் கூட்டிக் கொண்டு போயி ஷெ ரெண்டு யிடத்திலிருந்த திரவியமும் யெடுத்துக் கொண்டார்கள் யென்று சாட்சி ருசுவுடனே வாக்குமூலம் யெழுதிக் குடுத்து யிருக்கிறார்கள். மேலேளுதிய ரெண்டு கொடத்தையும் வெள்ளையக் கவுண்டனும் அவனைச் சேர்ந்த பேருமாயி பங்குப் போட்டுக் கொண்டார்களென்று சாட்சி ருசுவு ஆட்சி யுடனே நாச்சிக்கவுண்டன் யெளுதிக் குடுத்துயிருக்குறான்.

அதையும் வாங்கிக்கட்டிக் கொண்டு மலையை விட்டியிறங்கித் தம்மம்பட்டிக்கி வந்து ரெண்டு மாசம்வரைக்கும் யிருந்து அவடத்திலும் ரெண்டு மூணு பக்கத்திலும் பணம் யிருக்குற தாவு பின்னியனைப் பார்த்துக்கொண்டு படிச்சிலவுக்கும் யில்லாமல் திரிசுரபுரங் கோட்டைக்கிப்போயி கடனுடன் வாங்கிக்கொண்டு வரவேணுமென்று திரிசிரபுரத்துக் கோட்டைக்கி வந்து விட்டேன். யிவடத்தில்க் கடனுடன் அமறாமல் திண்டுக்கல்லுக்குச் சேற்ந்த யெரியோட்டுத் தாலூகாவில் யிருக்குரேன். தங்கள் கிட்டவந்து சொல்லிக் கொண்டால் கிறாசாரம் விலகி யெனக்கு நன்மையாகும். னான் வருகுரதுக்கு படிச்சிலவுக் கில்லாதுநாலே நான் வரக்கூடாமல் கஷ்டப்பட்டு கொண்டிருக்குறேன். ஆனதாலே தம்மன்பட்டி பாளைய பட்டுக்கு யெனக்கு பட்டமுங் கட்டிவிச்சு குமுக்குபண்ணிநால் அந்த பாளைப்பட்டுக்கு உண்டாகிய வகையருப்பு பணமுஞ் சர்க்காருக்கு செலுத்திவிச்சுக் கொண்டு யெங்கள் முன்னோர்கள் சம்பாதிச்ச பூமி தாபிதஞ் செய்திருக்குர பணத்தை நான் யெடுத்து கும்பனியார் கிட்டக் குடுக்குறேன். கும்பனியார் யெடுத்துக் கொண்டு யென்பேரில் தயவு செயிது கொஞ்ச நஞ்சம் குடுத்த மட்டுக்கு வாங்கிக் கொள்ளுகுறேன். நான் மெத்த யெளியவநானபடியிநாலே யென்னைக் காபாட்டி ரெட்சிக்க வேண்டியது.

**இந்தப்படிக்கு தம்பட்டி பாளையகாறன்**
**திருமலை முத்து மாதா நாயக்கன்.**

# மருதப்பதேவன் வமிசாவளி

## D. 2847

ஊத்துமலைப் பாளையப்பட்டு வங்கிச வளிக்கும் மறக்குல பூருவோத்திரத்துக்கும் கைபீது.

ஆதி ஆரப்பியம் எங்கள் மரக்குலம் உண்டானது மலையத்துவச பாண்டியனுக்கு வெகுனாள் குளந்தையில்லாமல் அனேகந் தவசுகள் பண்ணி பார்வதி தேவி மும்முலைத் தடக்கை யாயி மலையத்துவச பாண்டியனுக்கு குமார்தியாக யிருந்து ராச்சியபாரஞ் செய்து கொண்டுயிருக்கு நாளையில் திக்கு விசயஞ் செய்யவேண்டிய காரணத்துக்காக பறாக்கிரம வீரத்துடனே சிறிது சயினியங்கள் வேணுமென்று அம்மனுட திருவுள்ளத்துலே தோன்றி அம்மனுட விலாப்புரத்திலிருந்து அனேக சயினியங்கள் சிறுஷ்டித்தா ளந்தசயினியங்கள் பிறக்குற போதே அவளை தடியுங் கைய்யுமாக வெகுபறாக்கிரமமாய் பிறந்தார்கள். உடனே அவர்கள் யெங்களுக்கு பணிவிடை என்னவென்று அம்மனுடனே கேட்டதற்கு திக்கு விசயார்த்த மாக சிறுஷ்டிச்சே(ாம்) உங்கள் சாதிமரவுக்கு மரமென்று பேரிருக்கட்டும். நாம் சிறுஷ்டித்தபடியினாலே தேவனென்றும் பட்டபேரிரு . வாயி...அதில் அனேகம் பேருக்கு சேனாதிபத்திய முங் கட்டளையிட்டு அந்த சுத்தவீரம் பொருந்திய மரச்சயினியத் துடனே அம்மன் திக்கு விசயத்துக்கு யெளுந்தருளினாள்.

அப்படிப்பட்ட மரவங்சத்தில் நாகறாசாவின் மகன் திண்ணராசா ராச்சிய பரிபாலனஞ் செய்யும் நாளையில் வேட்டை மாற்கத்தில் ஸ்ரீ காளகஸ்தி பருவதச்சார்பில் வரும் போது சயினியங்களை விட்டுப்பிறிந்து யேகாயேகியாயி அந்தப் பருவதத்தின் மேலே மரக்குலத்திண்ண ராஜாமட்டும் தனித்து வேட்டயாடுகுரபோது அந்தப் பருவதத்தில் காளகஸ்தி மகாலிங்கம் யெளுந்தருளியிருக்கிறது. அந்த மரக்குலத்து திண்ண ராஜாவுக்கு அற்புதமாயி திருஷ்டி கோசரமான உடனே பக்த்தி ... வசத்தினாலே ஸ்தோத்திரம் பண்ணினது.

பெரிய புராணக் கவிதை என்னவென்றால்... "என் மரக்குலத்து வந்த வேட்டுவ சாதியார் பொற்பமலை கரடி வேங்கை அரிதிரி கானந்தன்னுள்...ம் முடன்றுணை யாறாள்ளா ரொருவரன்றிக் கேட்டே னிம்மலை தனியே நீரிங்கி...ப்பதே னென்றுனைந்தான். பொதுவர் மீண்டு செல்வா புலர்குவாமீள்ப மவர் காதலிநோக்கி நிற்பர் கனற்கல் புனித...னே அமுது செய்யநல்...கோ...ாத தெரிந்து வேரு கொண்டிங்கு வருவே னென்றான்". யிந்தப் படி அனேக ஸ்தோத்திரங்கள் செய்து ஆருனாள் பூசை செயிதார். பூசை செயித விதமெப்படி என்றால் அந்தப் பருபதத்தில் தானே வேட்டைக்குப் போரது மான் மறை மிருகங்களைப் பிடித்து அக்கினியில் பக்குவஞ் செயிது ஒவ்வொரு துண்டாயெடுத்து தான் மென்று ருசி பாற்பதில் ருசியாயிருந்த எச்சில்த் துண்டை ஒரு கையிலே சுவாமிக்கு வைத்துக்கொண்டு ருசி தப்பாயிருக் குரதை தான் புசித்து சுவாமிக்கு அந்த நெவேத்தியங் கொண்டு வருகிரபோது தனுற்ப்பாணம் ஒரு கய்ய... அபிஷேகத்துக்கு சலம் வாயிலேயும் அற்சனைக்கும் புஷ்பங் காட்டுப்பூவும் குளையுஞ் சிரசுலே வைத்துக் கொண்டு மகாலிங்கத்துக்கு சமீபத்தில் வந்து நம்பியார் அற்சித்திருக்குர பத்திர புட்பங்களை அவருடைய செருப்புக் காலனாலே தள்ளிப் போட்டு, வாயிலே யிருக்குர சலத்தை அபிஷேகம் பண்ணி தலையிலே யிருக்குர பூவுங் குளையுந்தான் குனிந்து சுவாமி சிரசுலே போட்டு, தான் ருசி பாத்து கையிலே கொண்டு வந்த எச்சில் மாங்கிசத்தை ஒவ்வொன்றா யெடுந்து சுவாமிக்கு நெய் வேத்தியங் கொள்ள வேணுமென்று கொடுக்கிரது. சு......... லாந்து யிவர் கொடுத்த மாங்கிச கண்டத்தைக் கொண்டு கொள்ளுகுரது. யிப்படி ஆருளாள் நடப்பதில் படித்தரமாக அற்சித்து வருகிற நம்பியார் வந்து பார்த்த உடனே தாம் அற்சித்திருந்த பத்திர புஷ்பங்களை யெல்லாம் பரி கிரித்துப் போட்டு மாங்கிச கண்டங்களையும் சிந்தித்தேவராக மில்லாமல் அனுசிதமாக யிருக்குர காட்டுப் பூவுங் குளையுங் கொண்டு வந்து போட்டிருக்குரதாரோவென்று வருத்தப்பட்டு அதுவெல்லாஞ் சுத்தி செய்து தாமெப்போதும் போலே பூசை செயிது போட்டு போவார். யிப்படி அபசாரஞ் செய்யுர தாரென்று நம்பியாரும் நிரம்ப விசாரப்பட்டு நிராகாரமாய்ப் படுத்திருப்பதில், அஞ்சா னாள் ராத்திரி நித்திரையில் நீ

யாயாசப் பட வேண்டாம், நம்முடைய பத்தனோருத்தன் மரக் குலத்து திண்ண னென்குர ராசா பூசை பண்ணுகிறான். அவனுடைய நிச்சய மாற்கத்தை நீயொளித்திருந்து பாரென்று நம்பியாறுக்கு சுவாமி சொற்பனமாச்சுது ஆறாநாள் நம்பியார் வந்து படித்தார பூசை பண்ணிப்போட்டு அடுத்த விருட்சத்தின் பேரிலே ஒளித்திருந்து பாற்குரபோது மரக்குலத் திண்ண ராசா வேட்டையாடிக் ... மேலே எழுதி யிருக்குரபடித் தாம் பூசை பண்ணி சுவாமியைத் தருசனம் பண்ணுகுரபோது சுவாமிக்கு ஒரு கண்ணுலே ரெத்தம் வந்துது. அதுகண்டு சுவாமி கண்ணை ஆரோ மோசப்படுத்திப் போட் டார்களென்று கண்ணினில் வருகுர ரத்தத்தை உருக்கத்துடனே துடைத்தான். துடைத்ததிலும் மரிபடாமல் அதிக ரத்தம் வந்த படியினாலே தன் கண்ணுலே ஒரு கண்ணைப் பிடிங்கி சுவாமி கண்ணுலே சாத்தினான். உடனே சுவாமிக்கு ரத்தம் மரிபட்டு, பளைய கண்போல யிருந்துது. அப்பால் சுவாமிக்கு அடுத்த கண்ணில் ரத்தம் வந்துது. அதுகண்டு நிரம்ப ஆ ... யாயி ஒரு கண்ணைப்பிடிங்கி சாத்திப்போட்டபடியினாலே யின்னும் ஒரு கண்ணையும் பிடிங்கி சாத்தினால் யிந்தக் கண்ணும் சவுக்கியப் படுமென்று யிவர் புத்திக்குத் தோன்றி தம்முடைய ஒருகண்ணை யும் பிடிங்கி சாத்துகுரதற்கு அடையாளந் தெரிய வேண்டியதற் காக தன் செருப்புக்காலிலே சுவாமியுடைய கண்ணில் அடை யாளந் தெரிய மிதித்துக்கொண்டுபிடிங்கி சுவாமி கண்ணில் வைத் தார். உடனே சுவாமி பிரத்தியட்சமாயி யென் கண்ணப்பனோ என்று கட்டிக்கொண்டு சாயிச்சி...உதவி கட்டளையிட்டு அயிக் கியம் பண்ணிக்கொண்டார். அப்பால் அந்த மரக்குலத்திண்ண ராசாவுக்கு 'கண்ணப்ப'னென்று பேராகி, அவருடைய பத்தி விசேஷங்கள் சைவ புராணங்களில் யிருக்குது. பெரியவாள் தோத்திரம் பண்ணினதில் கிரந்த காவியத்திலிருக்குர சுலோகம்:

मार्गावर्तितपादुका पसुपतेस्ङ्गस्य कूर्चायते
गण्डूषाम्बुनिषेवणं पुररिपोर्नव्याभिषेकायते ।
किंचिज्ञतुखण्डितमांसशेषकबलं नव्योपहासयते
भक्ति : किंनकरोत्यहो वनचरो भक्तान्तरङ्गायते ॥

அப்பால் திராவிடத்திலும் பெரியவாள் தோத்திரம் பண்ணியிருக்குரார்கள். அது என்னவென்றால் "...ருமந்த வஞ்சற்று மில்லாத வேடுவன்தன் செறுப்பு மறுவுந்து வேணிக்கி மாமலராம், அவன் வாயி நன்னீர் திருமஞ்சனக்கோடம் பல்ல தனால் மென்றுதந்த தசை அரும் போசனம் அன்றோ நங்காளத்தியப்பனுக்கே."

யிப்படி பெரியவாள் அவனை தோத்திரஞ் செய்திருக்குரார்கள். யிதுவுமல்லாமல் அப்பேர்பட்ட மரக்குலத்தில் கவியனென்றொரு ராஜா ஸ்ரீரெங்க நாயகருக்கு திருப்பணி செய்ய வேணுமென்று புத்தி தோன்றி தம்முடைய பொற்கிசத்திலுள்ள திரவிய ஆபரண தன கனகவஸ்து வாகனங்களுக்கு சிலவு செய்து திருப்பணிக்கி திரவியங் காணாமல் தம்முடைய தேசத்தையும் விக்கியஞ் செய்து சப்த்தப் பிராகார கோபுரங்களும் வந்ததில் திரவியங் காணாமல் தம்முடைய பாச வற்கமாயிருக்குர மச்சினன் மாமனாகிய நீரில் நடப்பான், நிழலில் மறைவான், தாளூதுவான் தொ...ராவி...ளக்கன்...நாலு பேர் மாவிருமாய் சேகரித்து அளப்பிட்டு திரவியங் கொண்டு வரவேணுமென்று வளிப்பரி பரித்து ஸ்ரீரங்கா திருப்பணி வேலை நடந்ததிலும் திருப்பணிக்கி திரவியங்காணாமல் ஒரு ராச்சியத்தில்ப்போயி அஞ்சனம் போட்டு பார்த்ததில் நிலவறையில் சொர்ண்ணப்பிரதிமையளு மாத்தினாபரணங்களும் சொற்ன பாத்திரமும் யிருக்குரயிடத்துக்கு வாசாலி சிறுசாகவிட்டு அங்கே ஒரு ஜந்துக்கள் முதல் ஒருவரும் போக்குவரத்துல்லாமல் யெந்திர சூத்திரம் வைத்திருந்ததைக் காணப்பட்டு வாசல் சக்கிரத்தில் யெப்படிப் போரதென்று யோசித்து நின்றதில் வாளைத்தண்டு கொடுத்தால் உள்ளே போகலாமென்று சுவாமி தயவுனாலே அசரீர வாக்கு உண்டாச்சுது. அந்தப்படிக்கி வாளைத்தண்டைக்கொண்டு வந்து சக்கிரத்தில் கொடுத்த உடனே விசை நின்று போச்சுது. உடனே தாளூதுவான் கதவுத்தாளிலே ஊதின உடனே கதவு திறந்தது.

நிழலில் ஒதுங்குவான் உள்ளேபோயி விக்கிரகத்தை எடுத்து வெளியிலே குடுத்து நாடி வந்த காரியம் ஆச்சுதென்று மகிழ்ச்சியினாலே பூரிப்பாயி அவன் வெளியிலே வருகுரபோது தலை மட்டும் வெளியிலே

வந்தது. தேகம் வ ர மா ட் டா தே போச்சுது. வெளி யிலே நின்ற பேர் அடையாளந் தெரியலாகாதென்று அவன் தலையுங் கொய்துகொண்டு பதார்த்தங்களையுங் கொண்டு ஸ்ரீரெங்கத்துக்கு வருகுரபோது மாற்கத்தில் ஒருவூருக்கு சமீபமாக அருணஉதைய சமீபமான படியினாலே பகல் போகப்படாதென்று யோசினை பண்ணி அடுத்தாப் போலே நஞ்சை தெளிவாயி ... யலி திருடிக் கொண்டு வந்த பாத்திரங்களைப் புதைத்துக் கொண்டு னாலுபேறும் அந்த வரப்புலே யிருந்தார்கள். அந்த வயல் சமுசாரி விரைக்க வந்தான். அவனைப் பாற்து யிந்த வயலுக்கு எங்களுக்கு விபகாரம் யிறுக்கு தென்று மறித்துப் போட்டான்.

சாயங்காலம் வரையில் மரியலிருந்தார்கள். இராத்திரி மரியல்த் தேவையில்லை என்று வூரார் தீத்தார்கள். அப்பால் அஸ்த மிச்ச பிறகு யிவாள் பதார்தங்களையும் யெடுத்துக் கொண்டு வந்து அனேகந் திருப்பணியுஞ் செயிவிச்சார்கள். அந்தக்களவு கொடுத்தவன் சீர்மை எங்குந்தேடிப் பாற்து ஸ்ரீரெங்கத்துக்கு வந்து விசாரிச்சதில் யிவர்களைக் கண்டு யெங்களுரில் சொற்னப் பிரதிமையள் களவு போயிருக்குது. உங்கள் பேரில் சுகையிருக் குது. முதல் உத்திரவோதஞ் செய்ய வேணுமென்று சொன் னான். மேலே யெழுதியிருக்குர தோராாவனக்கன் சொன்ன நாங்கள் கொண்டு வந்ததற்கு அத்தாட்சி ஒப்பிவிச்சால், அந்த பிரதிமை சுண்டு விறல் நகத்திலே யெள்ளளவாகுலுங் குறையா மல்த் தருகுரோமென்று சொன்னான். அந்தப் படிக்கி ருசு அத்தாட்சி உடனே வாங்கிக் கொண்டு போனான். திரும்ப வெகு னாளைக்குப் பிரகு சீட்டுங் கொண்டு மச்சமுங் கண்டு கொண்டு வந்து உபகாரப்படுத்தினான். அப்போது யிந்த தோராாவனக்கன் நான் எழுதிக் குடுத்த சீட்டுப்படிக்கி உத்திர வாதம் செயிகுறேனென்று சொன்னான். விபகாரியளும் சீட்டுப் படிக்கித் தான் நடக்க வேணுமென்று தீர்த்தார்கள். சீட்டுப்படி ஒரு எள்ளொரு தட்டிலும் அந்த யிடைக்குச் சரியான பிரதிமை சுண்டு விரல் நகத்தில் நரிக்கி ஒரு எள்ளளவு நிரைத்தங்கமும் ஒரு தட்டில்ப் போட்டு நிறுத்துக் கொடுத்தான். அப்பால் தோராவிளக்களுடனே விபகாரத்துக்கு வந்தவன் விபகார மிழந்து போயிவிட்டான். இப்படி யெல்லாம் திருப்பணி செய்ததிலும் திரவியங்காணாமல் திருப்பவும் வளிப்பரிக்கிப்

போனதில் வளிப்பறி கிடையாமல் ஸ்ரீ ரெங்கனாயகரை தோத்திரம் பண்ணிக் கொண்டு போர மாற்கத்தில் சுவாமி ரெங்கநாயகர்தானே யிவன் பத்திக்காக நரரூபமாயி ஒருகுதிரை யும் ஏறிக்கொண்டு ரற்றினகேசிதமாயிருக்குர சருவாபரண பூஷிதராயி வருகுரபோது யிந்தக் கள்வரியிடத்தி லகப்பட்டு யிவர்களுக்குப் பயப்பட்டு ஒடிங்கினது போலே தோத்திரம் பண்ணி குதிரை முதல் சருவாபரணமும் யிந்த மரக்குலத்துக் கவிய்ராசா கிட்டப் பிடுங்கிக் கொடுத்தார். சுவாமித்தி...... தொங்குட்டத் துலோரற்றின மிஞ்சி யிருந்ததை கய்யினாலே களத்தினதில் வராததுனாலே பல்லுனாலே கடித்துக் கவிய் ராஜா களத்தினார். சுவாமியுடைய திருப்பாதம் நாவிலே ஸ்பரிசித்தவுடனே கவிய்ராஜாவுக்கு ஞானம் வந்து சுவாமியை ஸ்தோத்திரம் பண்ணினார். சுவாமி அனுக்கிரகஞ் செய்து அந்த மரக் குலத்துக் கவிய்ராஜாவுக்கு கள்ள மங்கை ஆள்வாரென்று நாமகரணமுங் கட்டளை யிட்டு ஆள்வார்கள் ஒன்பதிமாருடனே பதின்மராகயிருக்கும் படிக்கி அனுக்கிரகித் தவுடனே தோத்திரம் பண்ணின திருமொளி என்னவென்றால்: " வாடிநேன் ! வாடி வருந்தினேன் ! மனத்தால் பெருந் துயரிடும் பையோப் பிறந்து, கூடினேன், கூடி எளையவர் தம்மோடவர் தருங் கல்வியே கருதி ஓடினேன், ஓடி உயர்வதோர் பொருளா லுண்பெறும் பெரும்பதந் தெரிந்து நாடினேன், நாடி னான் கண்டு கொண்டேன் நாராயணா யென்றநாமம்..."

"வாரணங்களிடர் கடிந்த மாலை நீல மரகதத்தை மனை முகிலே போல் வாரான்றன்னை சீரணங்கு மரையாளர் நிரந்த செல்வத்திருக்கோவிலூர்தனில் கண்டேனென்று, வாரணங்கு முலைமடவார் மங்கைவேந்தன் வான்க்கவிய னோவி ஐந்துமைந்தும் வல்லார் காரணங்க லுனாலத்தங் கலந்தெங் கேத்த காளதெங்கும்...தாளைக்காண்பதாமே!'' யிந்தப்படிக் கவிய்ராஜா வென்குற மரவன் சுவாமியினுடைய கிறுபயிநாலே கள்ளத்திருமங்கை யாள்வாராகயிருந்து அனேகம் ... ரசாங்கள் சாதித்துக் கொண்டிருந்தார். யிப்படி எல்லார் பேர்பெற்ற மரக் குலச் சரித்திரங்கள் மதுராபுரியில்ச் சங்கத்தார் செய்யொளிலும் சொல்லியிருக்குரது. அந்தச் சங்கச்செய்யுள் காரிகை, உதாரணத் திலிருப்பது யென்ன வென்றால்:

"செல்வப்போர் கத்தக்கண்ணன் சயிர்த்தெரிந்த சினவாளி
முல்லைத்தார் மரமன்னர் முடித்தளையை முரிக்கிப்போயி
யெல்லைநீர் வியங்கொண்மூ விடைநொளையும்
மதியும்பொன்
மல்லலோம் கேளிலியா னைமறுமம் பாய்ந்தொளித்ததே.."

யிப்படி புராணங்கள், கலம்பகங்கள், கம்பராமாயணம் மற்றப் பிரபந்தாதியளிலும் சொல்லியிருக்குறார்கள்.

அப்படிப்பட்ட மரக்குலப் பரம்பரையாயிருக்குர வங்கிசத்தில் யெங்கள் முன்னோர்கள் கிளுவைக் குண்டையங் கோட்டையிலிருக்குர நாளையில் மேல் நாடு திருச்சினாப்பள்ளி மட.... சீமைக்கள்ளர் குண்டையங்கோட்டை நாட்டுக்கு வந்து சல்லியஞ் செய்தார்கள்.

அப்போது யெங்கள் முன்னோர்கள் மருதப்பத் தேவர் அந்த மேல்நாட்டுக் கள்ளரையும் அதம் பண்ணி திருச்சினா பள்ளி மடம் மேல் நாடு ஆ...... போயி அதிலிருந்த கள்ளரையும் யில்லை எனச் செய்விக்குர வூ...யில் யிது செய்து அப்போதிருந்த பாண்டிய ராஜா கேட்டு மருதப்ப தேவரை வரவளைத்து திருச்சுளி, பள்ளிமடம் சீமைக்கள்ளராகுர பேர் சோரத்துவமாக யிதுவரையில் முன்னின்று அயேனபடாமல் அவாள் சோர் பாரா செய்யிரது சகிக்கக் கூடாமலே யிருந்துது. இப்போது உம்மிடமாய் அந்த பிராந்தியத்திலுள்ள குடிகளுக்கு சவுக்கியமாச்சுது. அதிலும்முடைய பாசவற்க பந்து சனங்களுக்கு சேதம் வரும்படியாயி நீய் பிரையாசப்பட்ட படியினாலே உமக்கு திருச்சுளி, பள்ளிமடஞ்சீர்மை பாளையப் பட்டாகக் குடுத்தோமென்று உத்திரவாயி விசைய வரகுண றாம பாண்டிய மருதப்ப தேவரென்று பேருங்கொடுத்து சிங்கல்லாடம் வைத்த பல்லாக்குங் கொடுத்து உபையசாமரம், புலிக்கொடி, மகரக்கொடி, வரிக்கொடியுங் குடுத்து பாளையப்பட்டு பண்ணிக் கொண்டிருக்கச் சொல்லி அனுப்பிவிச்சார்கள். திருச்சுளிப் பள்ளிமடஞ் சீர்மையில் வந்து கோட்டையும் போட்டுக்கொண்டு விசைய வரகுண ராம பாண்டிய மருதப்ப தேவர் பாளயப் பட்டு பண்ணிக்கொண்டிருந்தார். அவர் குமாரர் திருமணிநாத மருதப்பத் தேவர், அவர் குமாரர் சுவர்னக்காளை மருதப்பத் தேவர், அவர் குமாரர் பாண்டிய

மருதப்பத் தேவர், அவர் குமாரர் சுவர்ணக்காளை மருதப்பத் தேவர், அவர் குமாரர் மீனாட்சி சுந்தர மருதப்பத் தேவர், அவர் குமாரர் ஜயப்பிரதாப மருதப்பதேவர், அவர் குமாரர் குவிண மருதப்பத்தேவர், அவர் குமாரர் ஜயப்பிரதாப மருதப்பதேவர். யிப்படி ஒன்பது தலைமுறையாகப் பட்டம் ஆண்டு கொண்டு யிருக்குரபோது, ஜயப்பிரதாப மருதப்ப தேவர் நாளையில் குண்டையங்கோட்டைக் கிளுவ நாட்டில் ஒருபெண் அதிரூப லாவண்ணியமாயிருந்து ராமீசுபரங் கன்னிமார் குமாரிக்குப் போர கன்னடிகப்பரதேசிகள் கோசாவிகள் வந்தவர் யாசகம் வாங்குகுரபோது யிந்தப்பெண்ணைக் கண்டு சாமுத்திரிகா லட்சணபடிக்கி யிருக்கிறது, ராஜாதி ராஜாக்களுக்கு யோக்கியம் உள்ளபெண், உங்கள் குலத்தில்ப் பிறந்திருக்குது என்று சொல்லியிருந்தார்கள். அந்தக் கன்னடிகப்பரதேசிகள் கோசாவியள் முன்னிலையாக சீர்மையில்த் தெரிந்து குருநில மன்னராகி உள்ள ராஜாக்கள் சிறுதுபேர் அந்தப்பெண்ணை வந்து கேட்டார்கள். பெண் குடுக்குரதில்லை யென்று சொன்ன நிமித்தியம் யுத்தமாயி அந்த ராஜாக்களையும் நிக்கிரகம் பண்ணிவிச்சு அவர்களுடைய ஆனை குதிரை ஆயுதங்கள் விருதுகள் கிரீடங்கள் முதலானதும் பிடிங்கிக்கொண்டு அந்த ராஜாக்களையும் துரத்தி விட்டார்கள். யிப்படி யிருக்கும் நாளையில் மதுரையில் அப்போயிருந்த பாண்டிய ராஜா யிந்தப் பெண்ணைக் கேட்டு திருமுகம் அனுப்பிவிச்சு ராஜாவினுடைய மனுடரையும் அனுப்பிவிச்சார்கள். நான் குடுக்குரதில்லை என்று உங்கள் சூரிய வங்கிசத்துக்கும் எங்கள் மச்ச(வம்சத்து)க்கும் ஒரு நாளுஞ் சம்பந்தமில்லை. யிதற்குமுன் குறுநிலை மன்னராகிய ராஜாக்கள் வந்து பெண் கேட்டு அவர் களுக்கு நடந்த செய்தி சீர்மைக்கி எல்லாந் தெரியும். அதுவென் றால் அவர்களுடைய ஆயுதங்களெல்லாம் பிடிங்கி நாங்க ளிருக்குர யிடத்துக்கு வேலி போட்டிருக்குது. அவர்கள் கிரீடங் களெல்லாமாக...... ல நாளியாக வைத்து அளக்குறோம். சாமான்களெல்லாம் கூரைக்குக் கரை போட்டிருக்குது. குடை சுருட்டி எல்லாம் நிரைச்சலுக்குப் படல்க் கட்டிவைத்திருக்குது. நாங்களிப்படியாங் கொத்த மரச்சாதி. யெங்களிடத்தில்த்தானே பாண்டியன் தானே பெண் கேட்டது தென்னவென்று மாத் திரஞ் சொல்லி அனுப்பிவிட்டார்கள்.

அந்த வசனங்களை பெரியவர்களும், வித்துவச் சனங்களும், மதுரைக் கலம்பகங் கோவில்க் கலம்பகம், யித்தியாதி பிரபந்தங் களிலும் பாடியிருக்குரார்கள். அந்தக் கவிதைகள் யென்ன வென்றால் :

"கொற்றவன்றன் திருமுகத்தைக் கொணந்த தூதா
குறையுடலுக் கோமறவர் கொம்பைக் கோட்டயம்
அற்றவர்சேர் திருவரங்கப் பெருமான் தோழன்
அவதரித்த திருக்குலமென் றறியார்போல"
"மற்றதுதான் திருமுகமே ஆனால் ந...வாய்
செவிகண் மூக்கெங்கே மன்னர் மன்ன
பெற்றயிள வரசர்னா லாலின் கொம்பை
பிறந்த குலத்தினுக் கேற்கப் பேசுவாயே"

'பேச வந்த தூதாசன் னத்த ஓலை பேசுமோ பெருயங்க ரிரு வரங்கா பிள்ளை கேள்வர் தாளிலே......பாசம் வைத்த மரவர் பெண்ணை நேசம் வைத்து முன்னமே பட்டமன்னர் பட்ட தங்கள் தீப்புகுந்து பாராட வாசலுக் கடும் படாகவித்து வந்த கவிகை மாங்கிட கொடிதினை அளக்க வைத்த காலும் நாளியும் வீசுஞ் சாமறங் குடிதொடுத்த கற்றைச்சுற்றிலே வேலியிட்ட தவர் கூவிட்ட வில்லும் வாளும் வேலுமே... அரவர் புகள் மதுரை அம்பல வாணன்றான் உறவுபெற அடுமையுற்றோ மாவரினக் குப் பத்துண்டாப் பெண்ணென்று சொல்லும் வேந்தன் தனக்கு பத்துண்டாத் தலைமறுக்குந் தான்கேட்ட வாமா மரைக்காட் டீசன் தீந்ததிலைத் திருமகனுமன்றி பிறந்தவனி காப்பானும் பெண் தருக வென்ரான் கடையில் ஒரு பாப்பானும் கேள்க்கப் படும்...... யித்தலத்துயில் கொண்டு பாதி வனத்திலே புகவிட்ட தார் வெண்சிறைபுக நின்றதார் துகிலுரிய விட்டு விளித்ததார் உத்ததாரம் விரும்பி யின்னமும் மன்னர் பெண் கொள ஆசையோ உமியடா மண் மென்று வாய் கிளி ஓலை கரத்தி லுருட்டா யத்தனாள் வரைக்காத்த வாயுகளை பெற்றிடும் சுளிவஞ்சியூர் யேற்றி மாவரை மாவாயா மட்டாயெங்களெச் சிலு கந்தவன் பெற்ற வேலவனுக்கு முன்னொரு பெண் வளர்த் த தளித்தனம். பெற்ற பிளையை கொடுப்பவர் பேய் பிடித்தலை தூதரே...'

யிதல்லாமலும் அனேக பிரபந்தாதிகளிலும் பாடியிருக்குது. அப்பால்...வேடுவரிடத்தில் யிருக்குர ராஜா மனுடாள் திருமுகங் கொணந்து குடுத்து நடந்த செய்தியைப் பாண்டிய ராஜாவி னிடத்தில் போய்க் கண்டு சொன்னார்கள். அந்த செய்தி கேட்ட மாத்திரமே பாண்டிய ராஜாவுக்கு கோபமாயி சமர் முயர்ச்சைக்கி யெற்றினிச்சு பாளையந் தயாராகிற செய்தி கேட்டு நமக்கு ராஜாவாக யிருக்குர மதுரைப் பாண்டிய ராஜா உடனே நாம் யுத்தம் பண்ணி ரதஸ் வென்று யென் ஒப்பரவாயி பிரப்படும் போது சிறிது போத வீர ம...யிச சேகரத்தினுடனே அந்த கோட்டை கொத்தளஞ் சீமை பூமியும் வெறுத்துப் போட்டு, ஜயப்பிரதாப மருதப்ப தேவர் பிரப்பட்டு உத்திரா திக்கிப் போயி சுந்தரராஜபுரத்தி லிருக்குரபோது, கோடகை நாட்டார் ஒன்றுக்கொன்று திவிவிதப்பட்டு ஒரு ராஜாவும் சிறுது கும்மக்குடனே அரண்ணிய வாசமாயிறுந்து கொண்டு அந்த சீர்மையெல்லா மாரக் காலங்களில் சூறையாடி காலங்கிரமித்துக் கொண்டு ஒறுத்தறுக்கும் ஒடுங்காமல் இருந்தார்கள்.

அவர்கள் சுந்தரராஜபுரத்தி லிறுந்து சல்லியஞ் செய் தார்கள். ஜயப்பிரதாப மருதப்பத்தேவர் படை சேகரித்துக் கொண்டு போயி கோடகை நாட்டாரை வெகு சாகசம் பண்ணி நிக்கிரகஞ் செய்து போட்டான்.

அது சமாசாரம் ராயர் சமுத்தானத்தில் அறிந்து ஜயப்பிரதாப மருதப்பத் தேவரை வரவளைத்து கோடகை நாட்டார் சல்லியம் ஒருவராலும் ஒடுக்கப்படாது. நீரானபடியி னாலே ஒடுக்கிநீரென்று, நிரம்பவுஞ் சந்தோஷப்பட்டு ஆனை அம்பாரியுங்கொடுத்து உபைய சாமரம், பஞ்ச வர்னப் பாவாடை அனுமத்துவசம், கெருடத்துவசம், ரற்றினத்துராயும் குடுத்து, சுந்தரராஜபுறமும் அதினுடனே சேர்ந்த கிராம பூமியும் பாளையப் பட்டாக விட்டுக் கொடுத்து கோடகை கேசரி ராயன் மருதப்பத் தேவரென்று பேருங் கொடுத்து அனுப்பிவிச்சார்கள். அந்த சுந்தரராச புரத்திலிருத்து பாளையப்பட்டும் பண்ணிக் கொண்டுயிருந்தார். அவர் குமாரர் விஜயவரகுணபாண்டிய மருதப்பத் தேவர், அவர் குமாரர் ஜயப்பிரதாப மறுதப்பத் தேவர், அவர் குமாரர் கோடகை கேசரிராயன் மருதப்பத்தேவர், அவர் குமாரர் விசைய வரகுணராம பாண்டிய மருதப்பத்தேவர்,

அவர் குமாரர் ராமசந்திர மருதப்ப தேவர், அவர் குமாரர் வெங் கல மருதப்பத்தேவர். அவறுக்கு குளந்தையில்லாமல் திருப்பதி வெங்கடாசலபதியைப் பிரார்த்திச்சு அனேகங் கயிங்கிரியங்கள் செய்து வெங்கடாசலபதி வரப்பிரசாதத்துனாலே பட்டத்துக்கு ஆண்பிள்ளை பிறந்தது. அவருக்கு பேர் திருவேங்கிட னாத மருதப்பத்தேவர் ஆக பட்டம் 7.

அவர் குமாரர் கிஷ்ணராய மருதப்பத் தேவர் னாளையில் பாதுஷாகான் பாளையம் மிகுந்து வந்தது நிமித்தியம் சுந்தர ராஜபுரம் விட்டு பயணம் பிரப்பிட்டு தட்சண சீர்மைக்கி வருகிரபோது வீர சிங்க நாட்டுக் கள்ளர் வந்து மரித்தார்கள். அதில் யுத்தமாயி வெகுச்சேதம் வந்து, கள்ளரையும் சின்னா பின்னப் படுத்திப் போட்டு வீரசிங்க நாட்டில் யிருக்குர போது பாண்டியர்களில் உக்கிர பாண்டியராஜா உக்கிரன் கோட்டையிலிருந்து வீரசிங்க நாட்டை ஒடிக்கின பிரதாபங் களெல்லாம் கேட்டு கிஷ்ணராய மருதப்பத் தேவரை வரச் சொல்லி உத்திரவு அனுப்பிவிச்சு அந்தப்படி பிரப்பட்டு கிளுவைக் கொண்டயங்கோட்டை நாட்டு மார்க்கமாயி உக்கிரங் கோட்டைக்கி வந்து உக்கிரபாண்டிய ராஜாவைக் கண்டு பேட்டி பண்ணிவிச்சுக் கொண்டதில் உம்முடைய பிரதாபங்களெல்லாம் கேட்டிருக்குறோம். யிவடத்திலும் நெச்சூர்க் குறுமரைத் தடா தகை நாட்டில் லக்குறும்பரை ...அனேகத் தும்மாற்காளாக யிருக் குறார்கள். அவர்களும் உம்மாலே ஒடுக்க வேணும். நீர் ஒடிக்கி விச்சால் அந்தச் சீர்மை முழுவதும் பாளயப் பட்டாகத் தருகுறோ மென்று உக்கிரபாண்டிய ராஜா உத்திரவு கொடுத்தார்கள்.

அந்தப் படிக்கி நெச்சூருக்கு அரைத்தடாதகை நாட்டுக்கு வந்து குரும்பரிடத்தில் வெகு சாகசம் பண்ணினதில் தனது ஜனங்களும் அனேகச் சேதப்பட்டு குறும்பர்களையும் வெட்டி ஒடிக்கி வேரறச் செய்து அதுசெய்தி உக்கிர பாண்டிய ராஜா விடத்துக்குப்போய் அரியப்பண்ணின உடனே நிரம்ப அபிமானமாய் அநேக மரியாதையுஞ் செய்து வெகுமதியளுஞ் செய்து நெச்சூற் குறுமரைத் தடாதகை நாடு முழுவதும் பாளையப்பட்டாக விட்டுக்குடுத்து பாளையப்பட்டுக்கு ஊத்து மலை என்று பேறுங் குடுத்து வடநாடு விட்டு தென்னாட்டுக்கு ‹கு படியினாலே தென்னாடு ராய விசைய வர குணராம

பாண்டிய மருதப்பத் தேவரென்று பேருங் கொடுத்து அனுப்பி விட்டார்கள். அந்த படிக்கி நெச்சூர் குருமடை தடாதகை நாட்டில் ஊத்துமலைக் கோட்டையும் போட்டு மனமாக யிருந்ததெல்லாம் கிராமம் உண்டுபடுத்திவிச்சு பாளையப் பட்டு ஆதிக்கம் பண்ணிக் கொண்டு யிருந்தார்கள். அவர் குமாரர் மருதப்பத்தேவர், அவர் குமாரர் வெங்கல மருதப்பத் தேவர், அவர் குமாரர் பலபத்தி ராமமருதப்பதேவர், அவர் குமாரர் பாண்டிய மருதப்பத் தேவர், அவர் குமாரர் சொற்னக்காளை மருதப்பத் தேவராகியவர் பாண்டியர்களில் சீவல்லப மகாராஜாவிடத்துக்கு நவராத்திரிக் கொலுவுக்கு ராஜாவைக் காணப் போனார். சீவல்லப மகாராஜா நவராத்திரிக் கொலுவில் சிங்காரம் யென்ன ... றால் மல்யுத்தம் ஒரு நாள், சிரமக்காரற்கேற்றப் பிரகார யுத்தம் ஒரு னாள், மகிஷ யுத்தம் ஒரு னாள், சூகாசார தூல யுத்தம் ஒரு னாள், சுசூகா யுத்தம் ஒரு னாள், அச யுத்தம் ஒரு னாள், நடந்து கெச யுத்தம் ஒரு னாள், நடப்பதற்கு ரெண்டு ஆனையை மதம்மூட்டிக் கொண்டு வந்து நிறுத்தினதில் ஒரு யானை மதம் மீறி விடுபட்டு பட்டனத்திலுள்ள பரிசைளையும் அ[மிச்சுச்] சேதப்படுத்தி ராவுத்தாரம் முதலாயுள்ள சுத்த வீரர்கள் அனேகம் பேர் போம்த்தருக்கினத்திலும் நில்லாமல்ப் பட்டணமெல்லாம் அதலகுதலப் படித்தினதில் சொற்னக்காளை மருதப்பத் தேவர் வெளியிலே பிரப்பட்டு... கொந்துகளில் வருகுர சங்கதி...த் தார் யானை வாலையும் வீசித் துதிக்கையும் வீசி சுத்தி யிவரை மோசப்படுத்த வேணுமென்று யானை வேணபடி பார்த்ததிலும், யிவர் யானை வாலை விடாமல் யானையைத் தவிக்கப் பண்ணினதின் பிறகு...தமார் முதலாகிய பேரும் வந்து யானைக்கு...நிகழமுரு செய்து குத்தீட்டிக்காரறும் வளைந்து கொண்டு ராஜா சமுகத்தில்க் கொண்டு வந்து நிறுத்தின உடனே, யானையைப் பிடித்ததாரென்று மாவுத்தன்...னே கேட்டதற்கு, யானையை ஊத்துமலை சொற்னக்காளை மருதப்பத் தேவர் வெகு சாகாசம் பண்ணி யானையைப் பிடித்தார். யானைத்தனை கண்ட பிறகு நிகழப்படுத்தி நாங்கள் கொண்டு வந்தோம் என்று மாவுத்தமார் முதலாகிய சகலத்திராளுஞ் சொன்னார்கள். உடனே ராஜாவுக்கு மிகுந்த மகிழ்ச்சியாய் அந்த யானையில் அம்பாரி வைத்து குடுக்கச் சொல்லி உத்தர

வாய் ஒட்டகையின் பேரில் நகாராவுங் குடுத்து, சத்திரவாத்தியம் சூரவாத்தியம், தவளச்சங்கு முதலான விசேஷ வாத்தியமுங் கொடுத்து, உபைய சாமரம், பஞ்சவர்ணப் பாவாடையும், புலிக் கொடியுங் குடுத்து குமுதமடக்கி ஸ்ரீ வல்லபமார் சொர்னக்காளை மருதப்பத் தேவரென்று பேறுங் குடுத்து அனுப்பிவிச்சார்கள். அவர் குமாரர் திருவேங்கிடநாத மருதப்பத்தேவர் அவர் குமாரர் குமிண மருதப்பத்தேவர், அவர் குமாரர் மருதப்பத்தேவர் நாளையில் கற்தாக்கள் மதுராபுரி ஆவர்ண சம்ரட்சணார்தமாக பாளையக்கார ரெல்லோரையும் வரவளைக்குரபோது யிவர்களும் போய் ஆவர்ண சம்ரட்சணத்துக்கு மனுஷரை நேமித்து வூருக்கு போகுரபோது திசை காவலுக்கு உத்திரவுசெய்தது. தென் வடல் தொவளைக்கு வடக்கு சங்கர நயினார் கோவில் வரையும், கீள் மேல் கங்கைகொண்டான் முதல்த் தென்காசி வரையிலும் நிலமையாகவிட்டுக் குடுத்து அனேகவெகுமதியும்செய்து அனுப்பி விச்சார்கள். அந்த மருதப்பத் தேவர் குமாரர் பலபத்திர ராம மருதப்பத் தேவர். அவர் குமாரர் மருதப்பத் தேவர், சுந்தரபாண்டிய புரத்தில் மருதப்பப் பூபால சமுத்திர மென்று அக்கிரகார பிரதிஷ்ட்டையுஞ் செய்து, அந்த அக்கிர காரத்துக்குப் பெருமாள் கோவிலும் பிரதிஷ்டையும் செய்தார்.

அவர் குமாரர் ஸ்ரீ வல்லப மார மருதப்பத் தேவர், அவர் குமாரர் நவநீதகிஷ்ண மறுதப்பத் தேவர், அவர் குமாரர் ஸ்ரீவல்லப மாற மருதப்பத் தேவர் நாளையில் தட்சண சீமை முளுதும் கற்தாக்கள் அக்கிரகாரம் பண்ணினதில் உக்கிரன் கோட்டையில் அறுபத்தினாலு வீடு அக்கிரகாரம் பண்ணி னார்கள். அந்த அக்கிரகாரத்தை குத்தவாளி கூட்டத்தார் அக்கினி பாதை செய்து போட்டார்கள். அப்போது கற்தாகள், தலங்கள் தருசனஞ் செய்ய வேண்டியதற்காக திருநெல்வேலிச் சீர்மைக்கு வந்தார்கள். யிந்த குத்தவாளி கூட்டத்தை நிக்கிரகம் பண்ண வேண்டியதற்காக ஸ்ரீவல்லவமார் மருதப்பத் தேவரை அளைத்து குத்தவாளிக் கூட்டத்தாளை ஓடிக்கிப் போடச் சொல்லி உத்திரவு கொடுத்தார்கள்.

அந்தப்படிக்கி வந்து குத்தவாளிக் கூட்டத்துடனே சாகதம் பண்ணினதில் தனது சுய சனங்களும் அனேகச் சேதப்பட்டு குத்தவாளியானையும் துவசம்மிசப் படுத்தி அதில் பிள்ளிக்

காராக அருபத்தினாலு பேரையும் பிடித்துக் கட்டி வைத் தார்கள். முன்பாகக் கொண்டு போய் விட்டதில் இப்படி பிரமத்துரோகம் பண்ணின துஷ்டர்களை ஒடிக்கி நீறே உம் முடைய சுயாதியன் வெகுசனஞ் சேதமாய் போச்சுதென்று கேட்டோம். அதைத் தொட்டு நீர் ஆயாசப்படத் தேவை யில்லை என்று அபிமானமாகச் சொல்லி காடுபட்டியும், அது னுடனே சேந்த பூமியுமர்த்த காணிக்கையாக விட்டுக் கொடுத்து சிங்கல்லாடம் வைத்து, தண்டிகையுங் கொடுத்து, அனுமத்துவசம் கெருடத்துவசமும், குலாபுரங்கு, சிக செம்புக் குடையும், ஒத்தை சல்லி, புலித்தோல்க் கண்ணை கட்டின குதிரையுங் குடுத்து, அந்த குத்தவாளி துஷ்டர் அறுபத்தி னாலு பேரையும் அவர்கள் அக்கினி பாதை பண்ணின அக்கிரகாரத்தில் வீட்டுக்கொருவ ராக சிரக்கண்டனஞ் செய்து போடச் சொல்லி உத்திரவு குடுத்தார்கள்.

உத்திரவுப் படிக்கி குத்தவாளி துஷ்டர் அறுபத்தி னாலு பேரையும் அருபத்தி னாலு வீட்டுக் காரரையும் வைத்து சிரக்கண்டனஞ் செய்து போட்டார்கள். அந்தச் சீவல்லபமார மருதப்பத்தேவர், குமாரர் பூசை மருதப்பத் தேவர், அவர் குமாரர் சீவல்லபமார மருதப்பத்தேவர், அவர் குமாரர் பலயத்திரராம மருதப்பத்தேவர், அவர் குமாரர் நவநீத கிஷ்ண மருதப்பத்தேவர் நாளையில் திருநெல்வேலிச் சீற்மை அராசிகப்பட்டு அவரது கேபிலை நபாபு சாயாபு அவர்கள் மகமதுயிசுமுகானவர்களை அனுப்பிவிச்சு அவர்கள் வந்து ராஜீகம் உண்டாக வேண்டியதற்கு நவநீத கிஷ்ண மருதப்பத் தேவரையும் சேகரித்துக்கொண்டுப்போய் வடகரைச் சுவுகிப் பெருமாபிள்ளை திவாணத்திக்கு கீள் பணிந்து நட வாமல் துஷ்டத்தினம் செய்து கொண்டு யிருந்த வரையும் யில்லை எனச்செய்து, பின்னும் அனேக சில்லரை சல்லியங்கள் தீர்த்ததிலும், நெல்க்கட்டும் செவ்வலார் சீமையளிலும் சல்லியம் செயிதுகொண்டு அறமனைக்கி கீள்பணிந்து நடவாமல் தோப் பாவுங்கொடாமல் யிறுந்தபடியினாலே, யிராமனாதபுரஞ் சிவகெங்கை, நாஞ்சநாடு யிந்த ஸ்தோமங்களையும் வரவளை த்துக்கொண்டு மத்தப்பாளையப்பட்டுச் சனமும் நவநீத கிஷ்ண மருதப்பத்தேவரையும் சேகரித்துக்கொண்டு மகம்மது

யூசுபுகான் அவர்கள் நெல்க்கட்டுஞ் செவ்வலூரு போயிரங்கி மோர்ச்சாத்தம், தமாக்கைவேலி முதலானதே...நவநீத கிஷ்ண மருதப்பத்தேவர் நெல்க்கட்டுஞ் செவ்வல்க்கோட்டை கன்னி மூலையில் மெத்தவுஞ் சமீபமாக மோர்ச்சாத்தம் தமர்நெருக்கி வெகு முட்டையாய்க் குசஞ் செய்த நிமித்தியம் நெல்க்கட்டுஞ் செவ்வலா யிருந்தானப் படாதென்று கவிலிலே வாங்கி ராம னாதபுர சீமைக்குப் போய் விட்டார்கள்.

அப்பறம் யிசுபுகானவர்களுக்குச் சந்தோஷமாயி நவநீத கிஷ்ண மருதப்பத் தேவருக்கு ஆனைமேலம்பாரியும் ஒட்டகை நகாரையும் தம்புரு புல்லாங்குளலும் வாணப் பாதார வெள்ளி ரத்தினப்பாலாவும், ரெண்டு கொடியும், மொக வாயிச் சுருட்டியும் குடுத்து, குல சேகரமங்கலம் பிடாகையும் விட்டுக் குடுத்தார்கள்.

அப்படியிருக்கும் நாளையில் அராஜீகம் வந்து திருநெல் வேலிச்சீமை கிராமாந்திரங்களி லங்கே வெகு சல்லியம் நடந்து கொண்டிருந்ததுனாலே அந்தச் சல்லியத்துக்காக ௱-௱- யிடங்குட்டின பக்தா துரையவர்கள் நவநீத கிஷ்ண மருதப்பத் தேவரை வரவளைத்து நீறும், ரெண்டாயிரஞ் சனமும் திருநெல்வேலியில்க் காத்திருக்க வேணுமென்று சொல்லி அந்தப்படிக் காத்திருந்ததில் திரும்ப அந்த அராஜிகந் தீர்ந்து தலத்துக்கு அனுப்பிவிக்குரபோது ஒட்டகையும் பெரிய நகராவும் குடுத்து, யென்றைக்கும் யிந்தப்படி அரை மனைக்காரியத்தில் ஜாக்கிறுதியாக நடந்து கொள்ளச் சொல்லி அனுப்பிவிச்சார்கள். அந்த நவநீத கிஷ்ண மருதப்பத் தேவர் நாள் ஆண்ட பட்டம் முப்பத்தினாலு. அதற்கிப்பால் முப்பத் தஞ்சாம் பட்டம் என்னுடைய நாளையில் ராஜமானிய ஸ்ரீ கர்னல் மாக்கிசுவேல் துரையவர்களும் கும்பினித்துகமும் தெட்சணத்துக்கு வந்து பாளையப்பட்டு எல்லோரையும் வரவளைத்ததில் உத்திரவின்படி வாராமல் கிஷ்த்தியும் குடாம லிருந்த பேரையும் அதற்கானபடி ஒடிக்கிவிச்சு மத்தப்பேர் கிட்ட கிஸ்தியும் தீர்த்து சிறுது பாளையப்பட்டார் கிஸ்தி குடுக்கு ரதற்கு தாமிதஞ் சொன்ன பேரிடத்துக்கு யென் மனுடர் நேமித்து பணத்துக்கு வகையிட்டுக் குடுக்கச் சொல்லி பல்லக்குங் குதிரையும் குடுத்து அபிமானமாக அனுப்பிவிச்

சார்கள். அப்பால் ஸ்ரீ லண்டன் துரையவர்கள் நாளையிலும் அந்தப்படியே அபிமானித்து தொண்டி முதல் ஆத்தூர் வரையிலும் காத்திருந்து ஸ்தலத்துக்கு அனுப்புகுரபோது அவலக்கு மட்டமும் பச்சைக்குடையுங் கொடுத்து அபிமானமாக அனுப்பிவிச்சார்கள். யிப்பால் ஸ்ரீ செங்கன் துரையவர்கள் நாளையில் வெள்ளை மருதன் சல்லியத்தில் அருனூரு ஜெனமும் அனுப்பிவிச்சு ஸ்ரீ ஆக்கினீசு துரையவர்கள் மக்கானி துரையவர்களிடத்திலுங் காத்திருந்து, சின்ன மருதன் பெரிய மருதன் ஜனத்துடனே சணசை செயிது கும்பினிக்கி கருத்துமாக நடந்து கொண்டு இரண்டுமூன்று வதளி யெதிரிவகைக் குரிக்காரர் தலையை அறுத்து கும்பினித்துரையவர்கள் முன்னே கொண்டு வந்து போட்டு என் வகை ஜனத்திலும் அனேகஞ் சனம் படுகாயமாயி இப்படியெல்லாம் உத்திரவாதம் பண்ணினபடியினாலே ா-ா-ஸ்ரீ கும்பினியாரவர்களுக்கு தயவு வந்து குதிரையுங் குடுத்து அனுப்பிவிச்சார்கள்.

இப்படிக்கி கும்பினியாரவர்களுக்கு தயவு வரும்படி நடந்து கொண்டு யிருக்குறேன். கும்பினிக் காரியத்தில் மிகவும் கீழ்ப் பணிந்து வணக்கத்துடனே நடந்து கொண்டு அவர்கள் தயவும் அபிமானமும் வர வேணுமென்று பிரார்த்திச்சுக் கொண்டிருக்குறேன்.

**இந்தப்படி ஊத்து மலை மருதப்ப தேவர்**

# பால முத்தைய நாயக்கன் வமிசாவளி

## டி. 2848

*பாலமுத்தைய னாயக்கர் வமுஷாவளி விபரம் :—*

*பூருவம் யெங்கள் பெரியவர்கள் பாலமுககொண்டு முத்தைய னாயக்கர் மகாராச மானிய ஸ்ரீ ராயர் சமுஸ்தானத்தில் கொட்டியம் நாகம னாயக்கரிடத்தில் கோவிச்சுக் கொண்டுயிருந்தார்கள். அப்போது வடக்கே யிருந்து ராயற் சமஷ்தானத்தை யெடுபடுத்திப் போடுகுரதுக்காக உத்தராதி பாட்சா பாளையமும் ராசக்களும் ஷேதோமத்தமும் வந்து ராயற் சமஷ்தானம் யெடுபடுத்திப் போரமுன்னுக்கு கற்த்தாக்களாகிய விசுவநாத னாயக்கர் படைவேட்டைப் போரமுன்னுக்கு நாங்கள் யெங்கள் பெரிவற்களையும் கண்டறக் கோட்டைத் துர்க்கத்தாரையும் கூட்டா கூட்டி படைவேட்டுக்கு அனுப்பிவிச்சார்கள் அப்போது அசநல்லிகான், வல்லவகான்சருதார் ரெண்டு பேர் மேலையும் நாங்கள் சண்டைக்கிப் போயி அவனவன் அனேக சூர(த்)துவமாயிருந்து யெங்கள் சனத்தை, அனேக சனத்தை சேதம் பண்ணிப் போட்டான். அப்போது யெங்களுக்கு நிருபாகமில்லாமல் இந்த சமாசாரங் கர்த்தாக்கள் விசுவநாத னாயக்கரவர்களுக்கு யெழுதிக் கொண்டதிலும் யெங்கள் பேரில் ரெம்பவும் கோவப்பட்டு, திரும்பி ராயற் சமஷ்தானத்துக்கு வரச் சொல்லி யெழுதினார்கள். அப்போ பாலமுககொண்டு முத்தைய னாயக்கரை, நாகம நாயக்கரண்டையில் வைத்துப் போட்டு தன்சனம் குதிரை சயிதமாயி சண்டைக்குப் போனாற்கள்.*

*அப்போது நாகமனாயக்கர், விசுவநாத னாயக்கர் வாலியமான படியினாலே அவர் கோவிச்சுக் கொண்டு போனாலும் நீ வந்து விடல்லாமா வென்று பாலமுக கொண்டு முத்தை யனாயக்கரையுஞ் சிருதுசனத்தையுங் கூட்டி யனுப்பிவிச்சார்கள்.*

*அப்போ நாங்கள் போரத்துக்கு முன்னாலே கற்த்தாக்களாகிய விசுவநாத னாயக்கருக்கு காயம் பட்டு ரெம்ப ஆயாசமா*

யிருக்குர தருணத்தில் பாலமுககொண்டு முத்தைய னாயக்கர் போயி யெதிர்த்து அனேக சண்டை பண்ணி கற்த்தாகளை அளைச்சுக் கொண்டு ஒரு நாளியல் வளிக்கி அப்பரம் வந்துவிட்டார்கள். அந்த தருணத்தில் யெதிரியாயி வந்திருந்த றாசாக்களும் துலுக்கரும் நம்முடைய சேவுகற் விளுந்து போனபேருடைய சாமானும் ஆபரணங்களும் ஆனை குதிரைகளும் அனேக உடமைகளைப் பரித்துக் கொண்டு போயி ரெண்டு நாளியல் வளிக்கப்பாலே போயி சாமானெல்லாம் யிரக்கிவிச்சுப் போட்டு சமையல் சாப்பாடு பண்ணிக் கொண்டிருக்கிர தருணத்தில் இந்த சமாசாரம் பாலமுக கொண்டு முத்தைய னாயக்கர் வளைத்துக் கண்டறகோட்டை துற்கத்துக் கம்மவாடு சின்னதிம்மா னாயக்கற் ரெண்டு பேருமாயிக் கூடி ரெண்டானையின் பேரில் அவுதான் வந்து யேரி கற்த்தாக்களாகிய விசுவநாத னாயக்கரண்டையில் சிறுது சனத்தை வைத்துப் போட்டு ரெண்டுபேரும் அந்த யெதிரி யண்டைக்கிப் போனார்கள். அப்போது அவர்கள் அடுப்பிலே உலை வைத்துக்கொண்டிருக்குர பேரும் உலையில் அரிசி போடுகிர பேரும் இப்படியாக இருக்கிர தருணத்தில் யானைக்கி காதுகளிலே சாலுவயளைச் சுருட்டி வைய்த்து ஆனை காலுகளுக்கு விலங்குப் போட்டு சண்டை குடுத்தார்கள். அப்போது யெதிரியா யிருக்கிரவன் பட்டுப் போன பேரும் சொத்துக்களை விட்டுப் போட்டு ஓடிப்போன பேரும் இப்படியாயி யிருக்கையில் துடர்ந்து போயி யானை குதிரைகள் ஆடை யாபரணங்கள் சகல விருதுகளும் பரித்துக் கொண்டு போயி றாயர் சமஷ்தானத்தில் விசுவநாத நாயக்கரிடத்தில்க் கொண்டு போயி வைத்தார்கள். அப்போது கற்த்தாக்களாகிய விசுவநாத னாயக்கரிடத்தில்க் கொண்டு போயி வைத்ததில் ரெம்பவும் சந்தோஷப்பட்டு பால முக கொண்டு முத்தைய னாயக்கறுக்கு அநேக வஸ்திர பூஷணாதிகளையும் குடுத்து நீ எனக்கு குமார வர்க்கமென்பதாயி சொன்னார்கள். அந்தப் படிக்கி நாங்களும் நடந்து கொண்டு விசுவநாத னாயக்கற் கூடா றாயற்சமஸ்தானத்துக்கு வந்தோம் அப்போ நாகம நாயக்கர் பாற்து ரொம்பவும் சந்தோஷப்பட்டு உங்கள் தகப்பனாரும் நம்முட குமாரவர்க்கமாக நம்பி சேவிச்சு காசிக்கிப் போரபோது கூடாவந்து சாக்கிரிதியாயிக் காற்துக் கொண்டு யிருந்தார்கள். யிப்போது தகப்பனுடைய சூரத்துவம்

மறக்காதபடிக்கு விசுவநாதனாயக்கரை நமக்கு திரும்பவும் பிள்ளையாகக் கொண்டு வந்து விட்டாயென்று அநேக வெகு மதியள் பண்ணி நம்முடைய பாளையம் எங்கேயென்று பிரப் பட்டாலும் உன்னுடைய கூடாரம் முன்னாலே வருகுறதென்று உத்தரவு குடுத்தார்கள். அந்தப் படிக்காக கற்த்தாக்கள் காற்த்துக் கொண்டு யிருந்தார்கள். சிறுது நாளைக்கிப்பிறகு கற்த்தாக்களாகிய நாகம னாயக்கரவர்கள் சந்திர சேகர பாண்டியன், வீரசேகர சோளனை அடிச்சு சந்திரசேகர பாண்டி யனுக்குப் பட்டங் கட்டுகிரதுக்காக நாகம னாயக்கரவர்கள் வந்தார்கள். அப்போது சிறிது நாளைக்கிப் பிறகு நாகம னாயக்கர் பேரில் ராயருக்கு ரொம்பவுங் கோபமாகி நாகம னாயக்கர் தலைகொண்டு வருகிர பேர் ஆரென்று ராயற் சபையில்க் கேள்க்கிற முன்னுக்கு ஒருத்தரும் என் கையால் ஆகா தென்று சொல்லிப் போட்டதில் விசுவநாத னாயக்கர் யென் தகப்பனார் தலையை நான் தானேக் கொண்டு வருகிறேன் னென்று யனுப்பிவிச்சுக் கொண்டு போர முன்னுக்கு யிந்தப் படைக்கெல்லாம் பாலமுககொண்டு முத்தையனாயக்க ருக்குப் பெரியதலம் குடுத்து பாண்டிய ராட்சியத்துக்கு வந்தார்கள். அப்போது நாகம னாயக்கறவர்களுக்கு விசுவநாத நாயக்கருக்கும் சண்டையாகிர முன்னுக்கு, அப்போது விசுவநாத னாயக்கர் பாலமுக கொண்டு முத்தைய னாயக்கரை அளைத்து நாகமனாயக்கர் பேரில் முன் சண்டைக்கிப் போகச் சொன்னதில் அப்போ பாலமுககொண்டு முத்தைய னாயக் கரைக் கேட்டுக் கொண்டது யென்னமென்றால், இதுவரையில் நாகமனாயக்கற உப்பு சாப்பட்டுக் கொண்டிருந்தோம். இப்போது அவற் பேரில் கத்தியெடுத்து வெட்டுகிரதுக்குத் தோணவில்லை யென்று சொன்னதில் நான் கூடா தகப்பனாற் பேரில் கத்தியெடுக்கிரபோது உனக்கு யென்ன மென்று ரெம்பவும் கோபப்பட்டார்கள். திரும்பியும் விசுவநாத னாயக் கரைக் கேட்டுக் கொண்டது. நாகமனாயக்கரை கைப்பிடியாயிக் கொண்டு வாரோம். அவற் சாரீரத்துக்கு அபாயமில்லாத படிக்கி மனுகுடுக்க வேணுமென்று கேட்டுக் கொண்டார்கள்.

அப்போது விசுவநாத நாயக்கரும் அந்தப்படியே செயிவிக்கு ரோம்யென்று உத்தரவு குடுத்தார்கள். அதுவே மேரைக்கி,

சண்டைக்கிப் போயி நாகமனாயக்கருக்கு காயம் படாமல் பிடிச்சுக்கொண்டு வந்ததில், காயம்படாமல் பிடித்துக் கொண்டு வந்ததினாலே விசுவநாத னாயக்கரும் மிகுதியும் சந்தோஷப் பட்டு, இந்த பாண்டிய றாச்சியத்திலேதானே உனக்குப் பாளையப்பட்டாக விட்டுக் குடுக்குரோமென்று வுத்திரவு குடுத் தார்கள்.

அப்போ நாகம னாயக்கருக்கு விலங்கு தச்சு றாயர் சமஷ்தானத்துக்கு கொண்டு போயி றாயற் முன்புதாக யென் தகப்பனாற் தலையை நான் தானே வெட்டுகிரேன் னென்று விசுவநாத னாயக்கற் கத்தியுருவினதில் பாலமுக கொண்டு முத்தைய னாயக்கர் போயி முன்னாலே அவர் உயிருக்கு அபாயஞ் செய்குறதில்லை யெனக்கு உருதி குடுத்து யிருந்தியள்; இப்போ வெட்டப் போறதுநாலே அவரை வெட்டு கிரத்துக்கு யென் தலையை வெட்டுங்களென்று தலை குடுத் தப்போ றாயறவர்கள் பாறத்து விசுவநாத னாயக்கருக்கு சொன் னது: உன் தகப்பனார் செயித குத்தம் உன் விசுவாசத்துநாலே விட்டுவிட்டோம். தலையை வெட்ட வேண்டாமென்று உத்தரவு குடுத்தாற்கள். அப்போது றாச்சியம் கறத்தாக்களாகிய விசுவநாத நாயக்கருக்கு பட்டாபிஷேகம் சூட்டிநாற்கள். பாண்டிய றாச்சியமாகிய மதுறாபுரிக்கு விசுவநாத னாயக்கற் வந்த பிற்ப்பாடு மதுறாபுரிக்கு வட மேற்கு மூலையில் திண்டிக் கல்லுச் சீமையில் முத்துனாகொட்டை, தாமரைப்பாடி, கோவி லூரு, கானப்பாடி, றாமனாதபுரம், கொங்கறாயங் கோட்டை, சித்துவார்ப்பட்டி, யெரியோடு, பாதநத்தம், தென்னம்பட்டி. இந்தக் கிறாமங்களும் பாலமுக கொண்டு முத்தைய னாயக்கருக்கு விட்டுக் குடுத்து, முத்தநாக்கோட்டையில் றாசதானி யென்ப தாயிக் கோட்டையும்ப் போட்டுக்கச்சொல்லி கட்டளையிட்டார் கள். அப்பால் அரியநாயக முதலியாரு விசுவநாத னாயக்கரும் மதுறாபுரியில் பாண்டியன் கோட்டைக்கி வெளியாகக் கோட் டையும் போட்டு யெளுவத்திரெண்டு கொத்தளமுண்டு பண்ணி யெளுவத்திரெண்டு பாளையக்காரையும் யெளுவத்திரெண்டு கொத்தளமும் காற்க்கச் சொல்லி யுத்தரவு குடுத்தபோது திரு மஞ்சன வாசல் முதல்க் கொண்டு பிரதிட்சணமாய் 41ங் கொத் தளம் காற்க்கச்சொல்லி வுத்திரவு செயிதாற்கள். அப்போது

இன்னு சிருது கிறாமம் விட்டுக் குடுக்குரோமென்று பிலாறு, கொம்பேருபட்டி, பெரும்பனி, பாடியூறு, குளத்தூறு இந்த நாலு கிறாமம் விட்டுக் குடுத்து, சாசுபதமாக அனுபிவித்துக் கொண்டு கொத்தளங் காணியாச்சியாக காற்த்துக் கொண் டிருக்க சொல்லியும், அரமனைக்கி காணிக்கை ஆயிரத்தைஞ் னூறு பொன் சக்கரம் தீர்புங் கட்டளையிட்டார்கள்.

யிதுவல்லாமல் அரியநாயக முதலியாரும் கற்த்தாக்களாகிய விசுவநாத னாயக்கரும், கயித்தாத்துச் சண்டைக்கிப் போர முன்னுக்கு றாசதானிக்கி யீசானிய மூலையில் காதவளிக்கி கிளக்கு மேற்க்கு காதவளி தெற்க்கு வடக்கு சதிரம் சுத்துக் கோட்டை போட்டாப்பிலே மலையும், இதற்குத் தெற்க்கு வாசலும், வடக்கு வாசலும், மேற்க்குப் பறமலையில் ரம்பா நதியென்று ஒருநதியும், அந்த மலைக்கிப் பேருகருணைகிரி யென்ங்கிர பேரு கருணை கிரி வாசரென்கிரதா வொரு பெருமாள் கோவிலும்உண்டு; யிப்படிப் பட்ட கெடிஸ்தலம் யிதுவல்லாமல் அதுக்குள்ளாக வெள்ளாமை விளைச்சல் சமஷ்த்தமானது முண்டு. இந்தக் கெடிஷ்த்தலத்தில் பாண்டியன் வைப்பாட்டி பிள்ளை யொருத்தன் இருந்து கொண்டு அந்த சதிரத்துக்குள்ளாக அனேக தோப்புகளுந் துரவுகளும், சிங்காரத் தோட்டங்களும் வச்சுக் கொண்டு அய்யா யிரம் செனத்தோட யிறுந்து தெற்க்கு வாசலும் வடக்கு வாசலும் பிலகஞ் செயிதுக்கொண்டு ஒருத்தரும் வரவொட்டாத படிக்கி யிருக்கிரதும், ரெண்டாயிரம் முவ்வாயிரஞ் சனத்தோடே வெளியே வந்து ஊறிலேக் கொள்ளையிட்டுக் கொண்டு போயி வைத்துக் கொள்ளுகிரது. இந்தப் படியாகயிருந்தான். தெற்க்கு வாசலிலேயும் வடக்கு வாசலிலேயும் பத்துச் சனம் இருந்தால் வீட்டுக் கதவு போட்டாப்பிலே யிருக்குமேய் யல்லாது யெப்பிடிக் கொத்த மனுஷனும் உள்ளே போறது பிரையாசம். அப்படிப் பட்ட கெடிஸ்தலத்தை பாலமுக கொண்டு முத்தைய னாயக் கரை சாதீனம் பண்ணச் சொல்லி கற்த்தாக்கள் கட்டளையிட்ட அனுப்பிவிச்சார்கள்.

அப்போது அரமனைப் படை... ன் சேர்ந்த சனமும் ஒட்டுக்குப் போயி யவனக் கோட்டை மேலே யெரங்கி சுத்து முட்டடிப்போட்டு, ஆரு மாசம் ஊருக்கு சாமான் போகொட் டாதப்படிக்கு யிருந்தால் அவனுக்கு சமஷ்தமான பாக்கியமும்

உள்ளே தானே விளைந்து அனுபவித்துக் கொண்டு இருக்கிரதே யல்லாது அவன் வெளியே வருகிரதில்லை. அதில் உள்ள இருக்கிர சனத்துக்கு உப்பு மாத்திரல்லாத படிக்கிப் போட்சுது. அந்த பாண்டியன் தன்னுடைய சனத்தை அளைத்து கிளக்கு முகமா வளிவிட்டுக் கொண்டுபோ யுப்புக் கொண்டு வரச் சொல்லி யனுப்பி விச்சாற்கள். அந்த தருணம் பால முத்தைய னாயக்கற் பாத்துக்கொண்டிருந்து, அந்த வளியை கண்டு பிடிச்சு, தன் படையை உள்ளேயனுப்பிவிச்சு கத்தியுருவிக் கொண்டு போய் யனேக யுத்தம் பண்ணி, அந்த பாண்டி யனைப் பிடித்துக் கற்த்தாக்களண்டைக்கி யனுப்பிவிச்சு, அந்த பூமியுங் கைவசப்படுக்திக் கொண்டு பால முத்தையனாயக் கருக்கு காயங்கள் பட்டு அங்கே தானே மரணமடைந்து போன்னாற். அவற் வயசு 80. பட்டம் 40 ௵. ரெண்டாம் பட்டம் அவற் குமாரன் வெகுசூரவா னானதுநாலேயும் தகப்ப னாறுக்கு உள்ள சடங்கு முடித்துப்போட்டு அந்த பூமியும் தன் கைவசம் படுத்திக் கொண்டு. இந்த சமாசாரம் மெல்லாங் கற்த்தாக்களுக்கு யெளிதினார்கள். கற்த்தாக்கள் பெரியவற் கூடபோனதுக்கு இப்படிப்பட்ட சூரத்துவமும் விசுவாசமும் நாம் பார்த்ததில்லை யென்று மிகுதியும் சந்தோஷப்பட்டு ரெண்டாம் பட்டம் பாலமுககொண்டு முத்தையனாயக் கனுக்கு யெளுதின வயனம், உங்கள் தகப்பனாறும் வெகு சூரத்துவமும் விசுவாசமாகச்செயும், நீயுமப்படியே தானே சூரத்துவமும் விசுவாசமாகச்செயும். நீயந்த பூமியையும் இன்னஞ் சிறிது கிறாமங்களும் விட்டுக்குடுத்து உன்தகப்ப னாரைப் பார்க்க நீ சூரவானென்று சிருது விருதுகளும் குடுத்து ஆண்டனுபவித்துக் கொண்டிருக்கச் சொல்லி யுத்திரவு குடுத்தார்கள். அதுவே மேரைக்கி அனேகநாள் அதியாரம் பண்ணிக் கொண்டுண்டிருந்தார்கள்.

வடக்கை கடவூருத் தெற்க்கே கோவிலூரு வரைக்கும் ஆண்ட னுபவித்துக் கொண்டிருந்து கர்த்தாக்கள் சொன்னபடியுங் கேட்டுக் கொண்டு காணியாச்சியாக கொத்தளமும் காற்த்துக் கொண்டிருந்து மரணமடைந்து போனாற். அவர் துரைத் தனம் பண்ணின வருஷம் ௵ 25.

மூணாம் பட்டம் அவர் குமாரனாகிய பாலமுக கொண்டு முத்தைய னாயக்கர் பட்டம். அப்போது அவர் நாளையில் சுக்காம் பட்டியும் காடு வெட்டி, கிறாமம் உண்டாக்கி சுக்காம் பட்டி யென்ம்பதாயிப் பேரும் வைத்து ரெண்டு குளங்களும் உண்டு பண்ணி, மாலை மடம் கோவில்களும் உண்டு பண்ணி வைத்து காணியாச்சியாகிய கொத்தளமுங் கார்த்துக் கொண்டு கர்த்தாக்கள்ச் சொன்ன படியுங் கேட்டுக் கொண்டுயிருந்தும் அவர் துரைத்தனம் பண்ணின வருஷம் 15.

நாலாம்பட்டம் அவர் குமாரனாகிய பாலமுக கொண்டு முத்தைய னாயக்கர். சிருது காலம் துரத்தனம் செயிது கற்த் தாக்கள் சொன்னபடியுங் கேட்டுக் கொண்டு காணியாச்சியாகிய கொத்தளமுங் கார்த்துக் கொண்டுயிருந்து அவர் துரைத்தனம் பண்ணின வருஷம் 20.

அஞ்சாம் பட்டம் அவர் குமாரனாகிய பாலமுக கொண்டு முத்தைய னாயக்கற். அவருமப்படியே சிறுது காலதுரைத்தனம் செயிது காணியாச்சியாகிய கொத்தளமுங் கார்த்துக் கொண்டு அவர் துரைத்தனம் பண்ணின வருஷம் 20.

ஆறாம் பட்டம் அவர் குமாரனாகிய பாலமுக கொண்டு முத்தையனாயக்கற். அவறுமப்படியே அவர் அவர் தகப்பனாற் சம்பாதிச்ச பூமியும் ஆண்டனுபவித்துக் கொண்டு கர்த்தாக்கள்ச் சொன்னபடியும் கேட்டுக் கொண்டு காணியாச்சியாகிய கொத் தளமுங் கார்த்துக் கொண்டிருந்து அவர் துரைத்தனம் பண்ணின வருஷம் 40.

ஏளாம் பட்டம் அவர் குமாரனாகிய பாலமுக கொண்டு முத்தைய னாயக்கர். அவருமப்படியே அவற் தகப்பனாற் சம்பாதிச்ச பூமியும் ஆண்டனுவித்துக் கொண்டு கற்த்தாக்கள் சொன்னபடியுங் கேட்டுக் கொண்டு காணியாச்சியாகிய கொத்த ளமுங் கார்த்துக் கொண்டிறுந்து அவர் துரத்தனம் பண்ணின வருஷம் 20.

யெட்டாம் பட்டங் பாலமுக கொண்டு முத்தைய னாயக்கற் வெகு சூரவனாகச்சே தளவாயி ராமப்பய்யற் சேதுபதி மேலே படையெடுக்குரபோது பாலமுக கொண்டு முத்தையனாயக்கரை

கூடா வரவளைத்து சண்டைக்குக் கூடாப் போனதில் வெகு யுத்தம் பண்ணி அந்த சண்டையில் அவற் மரணமடைந்து போனாற். அவர் துரைத்தனம் பண்ணின ஸ்ரீ 25.

ஒம்பதாம் பட்டம் பாலமுக கொண்டு முத்தைய னாயக்கர் துரைத்தனத்தில் சிறுபிள்ளையாகச்சே இவர் தகப்பனாற் சுவாமி காரியத்தில் வுத்திரவாதம் செயிது விளுந்து போனதினாலேயும் ராமப்பய்யற் தளகர்த்தற்களுக்கு தோர்த்து தலாகச் சேதிபதி மிகுதியுசந்தோஷம் வரத் தக்கதாகச் சொன்னதில் கர்த்தாக்களும் அதிக சந்தோஷப்பட்டு யின்னம் சிருது கிராமம் சித்தூரு கிராமம், நத்தம், மாறம்பாடி, மல்லுவார்பட்டி, ஆலக்காற்பட்டி, தென்னம்பட்டி, வேலாயுத பாளையம், சிங்காரக்கோட்டை, அயிலூரு, புத்தூறு, கோம்பை, பஞ்சம்தாங்கி, கோம்பை, பெரியக்கோட்டை, கம்பிளியம்பட்டி இந்த கிராமமெல்லாஞ் சமஷ்த்தமும் விட்டுக்குடுத்து சமாஷ்தாளத்துக்கு நீ முக்கிய குறுமாறனென்று ரொம்ப சந்தோஷப்பட்டு இந்தக் கிராமங்களெல்லாம் ஆண்டு அனுபவித்துக் கொண்டு யிருவென்று வுத்திரவு குடுத்தார்கள். காணியாச்சியாக யிருக்குர கொத்தளங்கள் கார்த்துக் கொண்டு அனேக தான தருமங்கள் பண்ணிக் கொண்டு யிருந்தார்கள். அவர் துரைத்தனம் ஸ்ரீ 23.

பத்தான்ம் பட்டம் ஸ்ரீ 24. பாலமுக கொண்டு முத்தைய னாயக்கற் தகப்பனாற் சம்பாதிச்ச கிராமங்கள் விடாதபடிக்கும் காணியாச்சியாக யிருக்குர கொத்தளம்ங் காற்த்துக் கொண்டு அவர் துரைத்தனம் பண்ணின ஸ்ரீ 30.

11-ம் பட்டம் பால முத்தைய னாயக்கற் பட்டம் ஸ்ரீ 51. 12-ம் பட்டம் பால முத்தைய னாயக்கற் பட்டத்துக்கு வந்தப் பிற்பாடு மகாறாஜமானியறாசஸ்ரீ கற்த்தாக்களாகிய சொக்கனாதனாயக்கரவர்களுக்கும் தஞ்சாவூரு விசைய றாகம னாயக்கறவர்களுக்கும் வுயுத்தமான போது படை வெட்டுக்குர முன்னுக்கு அப்போது பாளையக்காற்யெல்லாம் வரவிளைக்கிற முன்னுக்கு நமக்கு முன்னாக செகப்பு வஷ்திரங்கள் குடுத்து முன்னாக நடக்கச் சொல்லிச் சொன்னதில், கோட்டை செயமாச்சுது. செயமானவுடனே, நமக்கு வெகுமதிகள் பண்ணி அனுப்பிவிச்சார்கள். காணியாச்சியாகிய கொத்தளம் கார்த்துக் கொண்டுயிருந்தாற்களே அவற் துரைத்தனம் ஸ்ரீ 10.

13-ம் பட்டம் பால முத்திய னாயக்கறும் ஷ25. 14 பட்டம் ஷ 33. பால முத்தைய னாயக்கருந் துரத்தனம் பண்ணிக் கொண்டுயிருந்தார்கள். 15 பட்டம் ஷ 33. பால முத்தைய னாயக்கற் நாளையில் கர்ன்னாடகம் யெடுபட்டுப் போயிட்டுது. 16-ம் பட்டம் ஷ 14. பால முத்தைய னாயக்கறவற்கள் நாளையில் மைசூறாற் கட்டினாற்கள். தோப்பா பணம் 1515 அவற்களுக்குக் கட்டிக் கொண்டு யிருந்தார்கள். 17-ம் பட்டம் ஷ 15. பால முத்தைய னாயக்கற் நாளையில் கும்பினிக்குப் பணம் கட்டிக் கொண்டு யிருந்தோ முறைக்கு பணம் காணாதபடியினாலே கும்பினியில் கட்டிக் கொண்டாற் கள். திரும்பியும் விட்டுக் குடுத்து ரேகை 2500 பொன்னாகக் கட்டிக் கொண்டு யிருக்கச் சொல்லி கட்டளையிட்டார்கள். 18-ம் பட்டம் ஷ 21. ஆக பட்டம் 18. ஆக ஷ 414. அந்த ஆக்கினை தப்பாத படிக்கி நடந்து கொண்டு வருகிறேன்.

வல்லக் கொண்டம னாயக்கர் சிறுனாயக்கராயிருந்தவர் வந்ததின் பேரில் வல்லக்கொண்டமனாயக்கர் ஊர் துரைத்தனம் பண்ணவேனுமென்று போனார். அப்பால் யெங்களுக்கு சீற்மை குரஞ்சு போட்சுது.

★

# அளகாபுரி ஜமீன்தார் வமிசாவளி

## D. 2849

*அளகாபுரி சமீந்தார் பூறுவோத்திரம் கைபீது.*

*துவாபர யுகத்தில் யெங்கள் முன்னோர்கள் ரிஷி சாபத்தாலேப் பன்றி வயற்றில் பிறந்து மீனாட்சியம்மன் திருமுலைப்பால் கொடுத்து அந்தப் பன்றிச்சன்மம் விமோசனமாயி அவர்களுக்கு அப்போது மதுரையிலிருந்த பாண்டிய ராசாக்கள் தெய்வ கடாட்சம் பெற்றவர்க ளென்றறிந்து அபிமானித்துச் சிறுது சீற்மையும் விட்டுக்கொடுத்து சிறுதுகாலம் நடந்து வந்திருந்ததில் அவர்கள் வங்கிஷத்தில் வரகுண ராமனென்று ஒருதன் சென்மித்திருந்ததில் அப்போது மதுரையிலிறுந்து பாண்டிய தேசாதிபத்தியம் பண்ணிக்கொண்டிருந்த பாண்டிய ராசாக்களுக்கு ஒரு இடுக்கம்வந்து யிவராலே அந்த யிடுக்கம்ந் தீர்க்கப்பட்ட படியினாலே சயதுங்க வரகுணராம பாண்டிய வன்னியனென்று பேருங்கொடுத்து திருப்பூவனத்தில் ஷெ சீர்மையுங் காவலும் விட்டுக்கொடுத்து பாண்டிய தேசத்துக்கு அதிபதியாகிய சயசிங்க...பாண்டிய ராஜா வரகுணராம பாண்டிய வன்னியனாரை வரவளைத்து சொன்ன சமாசாரம்: நம்முடைய தகப்பனராகிய பம்புறுவாக...பாண்டிய ராசாவுக்கும் அவர் தகப்பனார் அரிச்சுனருக்கும் உயித்தம் நடக்கும் போது யெங்கள் பெரியவாள் நம்முடைய தகப்பனாருக்குக்கும் மதக்காக யிறுந்து சயங்கை கூடும்படிக்கிச் செய்விச்சபடியினாலே அதுமுதல் நீங்கள் யெங்கள் சமஸ்தானத்தில்க் காத்திருக்குர படியினாலே உங்களுக்கு சிறுது பூமிவிட்டுக் கொடுக்குரோமென்று உத்திரவாகி, மீனக்கொடி விருதுங் கொடுத்து சிங்கமுகத் தண்டியகையுங் குடுத்து சயதுங்க வரகுண ராம பாண்டிய வன்னியனென்று பேருங்கொடுத்து திருப்பூவனஞ் சீமையும் சொந்தமாக விட்டுக் கொடுத்து பிறமலைக் நாட்டுக் காவலும் விட்டு மதுரை பட்டணங் காவலும் விட்டுக் குடுத்து, வஸ்திர பூஷணங்களுங் கொடுத்து அனுப்பவிச்சு, சயதுங்க வர*

குணராம பாண்டிய வன்னியனார் திருப்பூவனம்போய் சேர்ந்து சீமை ஆண்டு கொண்டுயிருக்கும் வரையில் மதுரை சயதுங்கப் பாண்டிய ராசா திருப்பூவனத்தில் திருப்பூவணனாத சுவாமி கோவிலாதோசபத்துக்குப் போகவேணுமென்பதாயி பயணம் பிறப்பட்டு ஒரு மாசம் வரையில் திருப்பூவனத்திலிருக்குர சய துங்க வரகுண ராமப்பாண்டிய வன்னியனார் பாண்டிய ராசா வருகுர சமாசாரங் கேட்டு வளி செப்பநிட்டு மகர தோரணமுங் கட்டி பொன்னினாலே சன்னச்சம்பா நெல்க்கதிர் குலை போலே செய்து அது கொண்டு முடியென்று முகித்து, வயனமாக கொண்டு யெது கொண்டு வந்து பாண்டிய ராசா முன்னே அந்த முடியைப் பாத காணிக்கையாக வைத்துக் கொண்டார்.

அப்போது ராசா வெகு சந்துஷ்ட்டியாயி இத்த நெல் முடியை யெடுத்து சயதுங்க வரகுண ராமபாண்டிய வன்னிய னார் சிரசில்த் தரித்து நெல்முடி கொண்டானென்று பேறுங் குடுத்து திருப்பூவனத்துக்குப் போயி, சுவாமி தெரிசனம் பண்ணிக் கொண்டு பாண்டிய ராசா திரும்ப மதுரை வந்து சேந்தார். அதின் பேரில் சயதுங்க வரகுண ராம வன்னியனார் பாண்டிய ராசாவுக்கு மிகவுந் தயவுவர நடந்து கொண்டு துரைத்தனம் பண்ணினார்.

அதின் பேரில் சயதுங்க வரகுண ராமப் பாண்டிய வன்னிய னார் மகன் புராந்தக வன்னியனார் அந்த சீற்மையை ஆண்டு அப்பால் புனிதமாற்கண்ட வன்னியனார் அந்தச் சீர்மை ஆண்டு அப்பால் புண்ணிய குமார வன்னியனார் அந்தச் சீமை ஆண்டு அப்பால் புத்திர சம்பத்து வன்னியனார் சீமையை ஆண்டு வருகுரபோது பாண்டிய ராசா மதுராபுரிக்கி வரவழைத்து உத்திரவான செய்தியென்ன வென்றால் : சோள ராசாவுக்கும் நமக்கும் பகை வந்து அவர் நம்மிட பேரில் சண்டைக்கு வருகுர படியினாலே நீயும் உன் சனமும் குமுக்குடனே பிரப்பிட்டு வந்து அவர் படையுடனே யெதிர்த்து சண்டை செய்து செயங் கொண்டு வரவேணுமென்று உத்திரவானபடிக்கி தன் சனச் சேகரத்துடனே, சோளன் படைக்கி யெதிரே போய், அவர் களையும் அபசயப்படுத்தி, பாண்டிய ராசாவுக்கு சயமுங் கொண்டு வத்து பாண்டிய ராசாவைக் கண்டதில் அவருக்கு மிகவும் சந்துஷ்ட்டி வந்து, கன்னடி காத்தா னாடு ஹூத்தி எட்டு

கிராமம் காவலாய்க் குடுத்து அனேக வெகுமதியும் பண்ணி திருப்பூவனத்துக்கு அனுப்பிவிச்சார்கள். அவர் பட்டம் ஆண்டு அப்பால் சத்துரு சங்கார வன்னியார் பட்டம் ஆண்டு வருகையில் அப்போது மதுரையிலிறுந்த தயிரிய வர்மப் பாண்டிய ராசா, சத்துரு சங்கார வன்னியனாரை வரவளைத்து கண்டு கொண்டதில் உமக்குச் ச்ரி இருப்பும், பொன் முடியும் ஆரென்ன உத்திரவாதத்தைக் கண்டு கொடுத்தார்களென்று கேள்க்க அப் போது மந்திரிமார் சொன்ன வயனம். இவர்கள் முன்னோர் மீனாட்சி சுந்தரேசுபராள் கிறுபாகடாட்சம் பெற்ற பேர்க ளானதாலும் முன்பிருந்த பாண்டிய ராசாக்களுக்கு அனேக உத்திரவாதங்கள் செய்த பெயர்களாகையாலும் அவர்களுக்கு யிந்தப் பொன்முடியுஞ் சரியிருப்பும் மறியாதியும் முன்யிருந்த பாண்டிய ராசாக்களுக்கு அனேக உத்திரவாதங்கள் செய்த பெயர்களாகையாலும் அவர்களுக்கு யிந்த பொன்முடியுஞ் சரியிருப்பும் மறியாதியும் முன் யிருந்த பாண்டிய ராசாக்கள் குடுத்திருக்குர காரியமாகையால் அது காரியத்தில் கோபஞ் செய்ய வேண்டியதென்று மந்திரிமார் சொல்ல அதற்கு பாண்டிய ராசா மாறுத்திரவு கொடுத்த தென்னவென்றால் முன்னிருந்த பெயர்கள் செய்த உத்திர வாதத்துக்கும் அவர்களுக்கு நடத்திவிச்ச மரியாதிக்கும் சரித்தான்; இவர்களுடைய உத்திரவாதமும் மீனாட்சி சுந்தரேசு பராள் கிறுபையிருக்குர குறியும் நமக்குத் தெரிந்தல்லோ நாமும் யிவருக்கு அந்த மரியாதி குடுக்கு வேணுமென்று பாண்டிய ராசா உத்திரவு சொன்னதற்கு மந்திரிமார் சொன்னது யென்ன வென்றால், யிந்த சத்துரு சங்கார வன்னியனாருக்கு மீனாட்சி சுந்தரேசுபராள் கிறுபையுண்டென்பதற்கும் யிவர் உத்திர வாதத்துனுடைய சத்தி சாமார்த்தியம் அரிய வேண்டியதற்கு எந்தப்படி சோதித்துக் கொள்ள வேணுமோ அந்தப்படி சேர்த்துக் கொள்ள வேண்டியதுதானென்றும் மந்திரிமார் சொல்ல அதற்கு ராசா மாறுத்திரங் கொடுத்ததென்ன வென்றால், நீங்கள் சொன்னது யிதாற்தந்தானென்று ஒப்புக் கொண்டு பாண்டிய ராசா சொன்னது, நாளைத்தினம் செப்புப் பரி உண்டு பண்ணி, தீயுலையில்ப் பளுக்கக் காச்சிக் கொண்டு வந்து வைக்குரது. யிந்த சத்துரு சங்கார வன்னியனார் எரித் திருப்பினால் நாமும் முன் மரியாதி தப்பாமல் நடப்பிவிக்கு

ரோமென்று சொன்னபடியினாலே அந்தப் படிக்கி யிந்த சத்துரு சங்கார வன்னியனாரும் ஆகட்டும் என்று சம்மதித்துக் கொண்டு விடுதிக்கு வந்து மீனாட்சி சுந்தரேசுபராள் பாத கமலங்களை யிருதயத்திலே நினைத்து தியானித்துக் கொண்டு போசனமும் பண்ணாமல் நித்திரை பண்ணுகுர சமையத்தில், மீனாட்சியம்பா கருணை யிரங்கி நம்முடைய பத்தனென்று அஞ்சு வயதுப் பிறாமணப் பெண் போலே வந்து சத்துரு சங்கார வன்னியனாருக்குக் கெனாவில்ப் பிரைத்திட்சமாயி அனுக்கிரகம் பண்ணினது என்னவென்றால், நீய் ஆயாசப்பட வேண்டியதென்ன சகல சுமதிக்கும் நாமே யிறுக்குரோம். நீய் ஆயாசப் படாதபடிக்கி நாளை உதையத்தில் உலையிலே காச்சியிறுக்குர செப்புக் குதிரையை நீயேறி நம்முடைய திருக் கோவிலை மூன்று பிராகாரஞ் சுத்தி வரும்படியாகக் கிறுபை செய்திருக்குதென்று அம்மாள் கனாவிலும் உத்திரவு பண்ணின விசேஷத்துனாலே மறுனாள் தயிரிய வர்மப் பாண்டிய ராசாவும் கோவில் வாசல் முன்னே வந்து நின்று கொண்டு சத்துரு சங்கார வன்னியனாரை செப்புக் குதிரையேறச் சொல்லி, சத்துரு சங்கார வன்னியனாரும் மீனாட்சி அம்பாளுடைய கிறுபா கடாட்சத்தி னாலே காச்சின செப்புக் குதிரையின் பேரில் யேறிக் கொண்ட உடனே செப்புக் குதிரைக்கும் உயிர் வந்து திருக்கோவில் மூன்று பிராகாரம் சுத்தி வத்து, குதிரையும் அனுமானித்து, சத்துரு சங்கார வன்னியனாரும் குதிரை விட்டுக் கீளே யிரங்கி தயிரிய வர்மப் பாண்டிய ராசா முன்னே நின்றாருடனே, சத்துரு சங்காரப் பாண்டிய வன்னியனாரைப் பாத்து தயிரிய வர்மப் பாண்டிய ராசாவும் வெகு சந்தோஷப்பட்டு, உடனே சிங்கக் கொடியும் அனுமக்கொடியுங் குடுத்து அனேக வஸ்திராபரண அலங்காரங்களுஞ் செய்து ரத்தின கடகமும் போட்டு மதுரா புரிக்கி தென் கிளக்கு இராமீசுபரம் பாதை மார்க்கத்தில் ஆணையூர், ஆப்பனூர், பசுமையூர், மங்கையூர், இளசையூர், அம்பையூர் ஆக யிந்த ஆருருக்கும் ஆரு கோட்டையும் போட்டுக் கொள்ளச் சொல்லி, ஆறு கோட்டை வன்னியனாரென்று பேருங் குடுத்து, ரட்டைக் குடையுங் குடுத்து யெதாத்தானத்துக்கு அனுப்பிவிச்சார்கள். சத்துரு சங்கார வன்னியனாரும் அந்தப் பிறகாரம் போயி ஆறு கோட்டையுஞ் சம்ரட்சணை பண்ணிக் கொண்டு ராசாவின் உத்திரவுப் படிக்கி சீற்மையை ஆண்டு

கொண்டு யிருந்தார்.

அப்பால் தாஷ்ட்டீக சவுந்தர பாண்டிய வன்னியனார் பட்டத்துக்கு யிறுக்குர போது அவருக்கு ஆறு பிள்ளையள் பிறந்தது. ஆணையூரில் ஒரு பிள்ளையும், ஆப்பனூரில் ஒரு பிள்ளையும், பசுமையூரில் ஒரு பிள்ளையும், மங்கையூரில் ஒரு பிள்ளையும் இளசையூரில் ஒரு பிள்ளையும், அம்பையூரில் ஒரு பிள்ளையும் யிந்த ஆரு பிள்ளைகளையும் ஆரு கோட்டையில் வைத்து தாஷ்ட்டீக சவுந்திர பாண்டிய வன்னியனார் திருப் பூவனத்திலிருக்குரபோது மதுரைப் பாண்டிய ராசா தாஷ்ட்டீக சவுந்திர பாண்டிய வன்னியனாரை வரவளைத்து இராசா உத்திரவு குடுத்தது என்னவென்றால், தட்சண சீமையில் சுண்டனென்றொறு பள்ளன் சிறுது சனச்சேகரத்துடனே அந்தச் சீமையை அனேக விதமாக நிபாதப்படுத்தியிருக்குகுரபடி யினாலே நீயும் உன்னுடைய புத்திராள் முதல் சகல தனத் தையுஞ் சேகரித்துக்கொண்டு தட்சண சீர்மைக்கிப்போய் அந்த சுண்டனையுஞ் சங்காரம் பண்ணி சீர்மையிலுஞ் சல்லிய மில்லாமல் ஒடிக்கிவிச்சுத்திரும்ம மதுரைக்கிப்போயி பாண்டிய ராசாவைக்கண்டு நடந்த வரலாரெல்லாஞ் சொல்ல ரெம்பவுஞ் சதுஷ்ட்டியாயி யிப்படி பராக்கிரமமுள்ள நீங்கள் தெட்சிணத் தில்த்தானே யிருங்கௗென்று அனேக விருதுகளும் அனேக வெகுமதியுங்குடுத்து தெட்சிணஞ் சீர்மையில்த்தானே யிருங் கௗென்று பட்டமும் கட்டி அனுப்பி விச்சார்கள்.

அப்பால்த் தாதாஷ்ட்டீக சவுந்தரபாண்டிய ராசா இந்த ஆறு மக்களுக்கும் முன் பாண்டிய ராசா தெட்சணஞ் சீர்மையில் உத்திரவு கொடுத்த பூமியிலே அவனியங் கோன்எந்தல் ஒருத்தரும் அச்சந்த விளத்தானில் ஒருதரும்; புத்தூரில் ஒருதரும், தென்மலையில் ஒருத்தரும், திருவேங்கிடத்தில் ஒருதறும் ஆக அஞ்சு பேருக்கும் அஞ்சுயிடம் விட்டுக்குடுத்து யெங்கள் முன்னோர்கள் வரகுண ராம ரெட்டைக் குடை வன்னியனாகருக்கு செவ்வல்க்குளமுஞ் சிறுது சொந்தக் கிராம மஞ் சிறுது திசைக்காவல்க் கிராமமும் விட்டுக்குடுத்து ஆண்டுக் கொண்டுயிருக்கையில் வரகுணராம ரெட்டைக் குடை வன்னி யனார் தென்காசியில் அளகம் பெறுமாள் ராசா னாளையில் அவரிடத்துக்குப் போயிக் காத்திருந்தார். அப்போது அனேக

உத்திரவாதங்கள் செய்து அவர்கள் தயவுவர நடந்ததில் அளகம் பெருமாள் வன்னியராயன் ரெட்டைக் குடையரென்று பேரும் குடுத்தார். அப்பால் அளகம் பெருமாள் ராசாவுடனே மதுரைக்கிப் போயிருந்ததில் கள்ள நாட்டுச் சல்லியத்தில் இவர் முகனித்து அந்தக்கள்ள நாட்டுக்கெல்லாம் முதலாளி காலாளக்களநாயன் மேலாளக்கன் தோழன் என்று பேருடைய கள்ளனுடனே வெகு சாகுசம் பண்ணி அந்தக் கள்ளனையும் யிவர் பிடித்து ராசாவிடத்தில் விட்டதில் அந்தக் கள்ளனை ராசா ஆக்கினை செய்யச் சொல்லி இவருக்கும் உமக்கும் வேண்டியதென்ன வென்று கேட்டதில் எனக்கு இவன் தலை ஒன்று ஆக்கினையில்லாமல் மன்னாட்டுக் குடுக்க வேணு மென்று சொன்னதில் அந்தப் படிக்கி அவனையும் விட்டதில் அந்த கள்ளர் வங்கிசத்தா ரெல்லோரும் கூடி ராசாமுன்னனி லைக்கி யெங்கள் தாலிக்கு வேலியிட்ட ரெட்டைக்குடையா ரென்று பேர் குடுத்தார்கள். இப்படி யிருக்குர போது சாழுவ தேசத்து ராசா மதுரைக்கு வந்திருந்தார். அப்போது வரகுண ராம ரெட்டைக்குடை குடையளகம் பெருமாள் தாலிக்குவேலி வன்னியராயனென்று விருது கட்டியங் கூறி வருகையில் சாளுவ தேசத்து ராசா கேட்டு இந்த விருது கட்டியம் குடுத்தாரென்று வாக்குத் தத்துவம் வந்து அனேக உயித்தமுஞ் செய்து செயம் பண்ணின படியினாலே சாளுவக் கட்டாரி என்று பேர் குடுத் தார்கள். அப்பால் மதுரை விட்டு ராசா தென்காசிக்கு வருகுர போது இவரையும் செவ்வல்க்குளத்துக்கு அனுப்பிவிச்சார்கள்.

அவரும் வத்து சிறுது னாள் சீமை ஆண்டு கொண்டு யிருந் தார். அதின் பிறகு கறுத்தத்தம்பி ரெட்டைக்குடையார் சீமை ஆண்டு கொண்டிருந்தார். அப்பால் கறுத்தான் ரெட்டைக் குடையார் சீமை ஆண்டார். அப்பால் அவர் மகன் சிதம்பர ரெட்டைக்குடை வன்னியனார் தென் காசி ராசா விடத்தில் காத்திருக்கிர போது ஆனை மதம் பொளிஞ்சு வருகுரபோது வேணபேர்கள் வந்தெதிர்த்தும் அடங்காத படியினாலே சிதம்பர ரெட்டைக்குடை வன்னியனார் போயி ஆனைக்கையை வெட்டி சாய்த்தபடியினாலே ஆனை வெட்டிச் சிதம்பர ரெட்டைக் குடையாரென்று பேர் குடுத்தார்கள்.

அவருஞ் சிறுது னாளிருந்தார். அப்பால் றாயர் சமஸ் தானத்திலிருந்து கொட்டியம் நாகம நாயக்கர் அவர்கள்

குமாரர் விசுவனாத நாயக்கரவர்கள் பாண்டிய தேசத்துக்கு அதிபதியாக வந்து மதுரை யெழுபத்து ரெண்டு கொத்தளத்துடனே கோட்டையும் போட்டு பாளையக்காரர் சகலத்திறாளையும் வரவளைத்து அவரவரை ஒவ்வொறு கொத்தளத்துக்கு மனுடர் நேமித்துக் கார்க்கச் சொல்லி உத்திரவு பண்ணி திசைக் காவல் விட்டுக் குடுக்குர முன்னுக்கு ஆனை வெட்டிச் சிதம்பர ரெட்டைக்குடை வன்னியனார் மகன் கந்தசுவாமி ரெட்டைக் குடையாரை வரவளைத்து திசைக்காவலும் விட்டுக் கொடுத்து மதுரைக் கோட்டை திருமஞ்சன வாசலுச்கு கிளக்கு முதல்ப் பிரதட்சணமாக இருவத்தஞ்சாங் கொத்தளங் காற்கச் சொல்லி உத்திரவு பண்ணினபடிக்கி, ஆள் வைத்தும் காத்து வந்தார்கள். அப்பால்க் குமாரசாமி ரெட்டைக் குடையார் சிதம்பர தாண்டவ ரெட்டைக் குடையார், வீரமார ரெட்டைக் குடையார் குமாரசாமி ரெட்டைக் குடையார் ஆக அஞ்சு பேரும் அஞ்சு தலைமுறையும் மேலே யெழுதிய படிக்கி கொத்தளமுங் காத்து சீற்மையும் ஆண்டு கொண்டு வந்தார்கள். அப்பால் ரெட்டைக்குடை ரெட்டைக் குடையார் நாளையில் செவ்வல்க் குளங் கோட்டையை ஸ்ரீ ரெங்க கிஷ்ண, முத்து வீரப்ப நாயக்கரவர்கள் அக்கிரகாரம் பண்ணிவிச்சு வடபாரிசம் அளகாபுரி யென்று ஊர் கட்டியிருக்கச் சொல்லி அந்தப் பூமிகளையும் காற்து திசைக்காவல் அனுப்பிக்கச் சொல்லி ரெட்டைக்குடை ரெட்டைக் குடையார் அருபது வயசு யிருந்தார். அவர்மகன் ஆண்டி ரெட்டைக் குடையார் னாற்பத்தேழு வயசுக்கு யிருந்தார். அவர்களுக்குப் பிறகு தவசி ஆண்டி ரெட்டைக் குடையார் இருபத்தி ரெண்டு வயசு யிறுந்தார்.

அப்பால் யென்னுடைய தகப்பனார் சிதம்பர ரெட்டைக் குடையார் அறுப்பத்தஞ்சு வருசமிருந்தார். இப்பால் சிதம்பர ரெட்டைக் குடையார் மகன் கட்டாரி ரெட்டைக் குடையார் இறுந்து சீர்மை ஆண்டு கொண்டு மகாராஜ ராஜஸ்ரீ கும்பினியாரவர்களுக்கு கிஸ்திப்பணஞ் செலுத்திவிச்சுக்கொண்டு மகாராஜ ராஜ ராஜ ஸ்ரீ கும்பினியாரவர்கள் கட்டளையிட்ட உத்திரவுப்பிரகாரம் நடந்து வருகுறேன்.

**இந்தப்படிக்கி அளகாபுரி ஜமீந்தார்**
**ரெட்டைக்குடை வன்னியன்**

# பழனி பாளையப்பட்டு சின்னப்ப நாயகன் வமிசாவளி

## D. 3118

*யெதுகுல வமுச வரலாற் விபறம் : 1816 ௵ ஏபிறல் மாசம் 29 ௳ தறியாபத்து நிட்டலனாயன்னய்யன்.*

*திண்டிக்கல் வகையா கோயம்முத்தூற் ஜில்லாவுக்கு சேற்ந்த அய்யம்பள்ளி துகுடிகி சேகறம் பழனி வைகாபுறனாட்டு பாளைகாறனாகிய - யிம்முடிப்பட்டத்துக் குமாற விஜையகிறி வேலாயுத சின்னோப னாயக்கற் வமுசாவழி வரலாற். ஷெ ஆதி னத்தில் கணக்கு ஸ்தானமுள்ள விறும்மியண பிள்ளை என்குற வன் வமுசஸ்தனான ஷெ தாயாதி வமுசம் கறுப்பபிள்ளை என்று பேற் உள்ளவன் யிடத்தில் யிருந்து கண்ட பழமைப் பட்ட ஏடுகளுக்கு நக்கல் :*

*உத்திர திக்கில் கவுசில தேசத்துலெ கலியுக சகாற்பதம் 116-க்கு மேல் செல்லாநின்ற - வனாந்திரத்திலே யெதுகுல மென்றும் - யாதவனென்றும் - வேடரென்றும் - கம்பளனென் றும் - போகியென்றும் - னாயக்கரென்றும் - கோசலவாரென் றும் - கங்கறாதியென்றும் - வனத்தாரென்றும் - மறவுகாவல னென்றும் – அய்யோத்தியாரென்றும் - ஆணுவத்தாரென்றும் - வேட்டைக்காறரென்றும் - வில்மதரென்றும் - காமக்கோட்ட காவலரென்றும் - காளாஸ்திரி வறப்பிறசாதியரென்றும் - உலக விறுத்தாந்திரென்றும் - உத்திர தேசாதியவான்ங்களென்றும் - அயங்குலத்தாரென்றும் - ஆறனியத்தாரென்றும் - கண்ணப்ப னென்றும் - வால்மீகரென்றும் - மன்னவறகளென்றும் - பறம பக்கெதரென்றும்-பாக்கிய போசரென்றும்-விமரசாரசனென்றும் - வீரகாண்டிப ரென்றும்-இந்த வமுசத்தில், வனத்தில், யெதுவ னென்றும் ஒரு காவலன். அவன் மகன், பெத்துறாவாட னாயக் கன் - அவன் மகன் அவறஞ்சி வாடுனாயக்கன் - அவன் மகன் பொம்முலு வாடநாயக்கன், அவன் மகன் காக்கிவாடனாயக்*

கன் - அவன் மகன் சோலவாட னாயக்கன் - அவன் மகன் கடும் பிலுவாடனாயக்கன் - அவன் மகன் சனகவாட னாயக்கன் - அவன் மகன் வெங்கிட கிஷ்ணம னாயக்கற் - யிவற்கள் பத்து தலைமுரைக்கி வெளுப்பெல்லாம் பாலும், கருப்பல்லாம் தண் ணீர். அந்த வனத்திலே வச்சிறங்கள் விளவுகாடுண்டு. அதுலே கல்லு பொறிக்கி கொண்டு போயி - கோதும்பைக்கும் கேபைக் கும் விலைபண்ணி, சிறுதுகாலம் மான் மரைவதை செயிது - சிறுதுகாலம் ஆனைக்கொம்பும் அரைக்கும் குங்கிலியம் வித்து சிறுதுகாலம் யிப்படி அனேகனாள் காலந்தாட்டிக்கொண்டிருந் தாற்கள். வெங்கிட கிஷ்ணம னாயக்கறுக்கு ஒரு சத்பாத்திற மாக, யோகவானாக, பொறந்த படியினாலேயும் வமுஷற் செயித பூஜாபலத்துனாலேயும் நல்ல தற்மங்களை பண்ணினபடியினா லேயும், அதிக பூஜாபலம் செயிதபடியினாலெயும், அவனை பெத்த தாய் உத்தம ஜென்மம்(ம) பறுவதா பத்தினி அஷ்ட லக்ஷிமி பொருந்திய தாயான படியினாலே நல்ல பிள்ளையெ பெத்தாள். சத்திய பாண்மை வமுசத்து, யேறக்கம்மாள் வெங் கட கிஷ்ண மனாயக்கற், பெண்சாதி யெறக்கம்மாள், பெறிய மாதவ னாயக்கரை பெத்தாள் - இவற்கள் வமுசம் பூறண செந் தோரோதயம் வெளங்குனாப் போலே வெளங்கித்துது. அது யெப்படி யென்றால் உத்திற திக்கில் கோசலதேசத்தில் வனாந் திரத்தில், யமுனா தீறத்தில் பெரிய மாதவ னாயக்கற் தனு வெடுத்துக்கொண்டு யிருக்கிற காலத்தில் செறம மிறுகங்கள் பக்ஷிகள் சிக்காமலும் அலைந்து சோபித்து மெத்த வைறாக்கிய மாய்ப் பசிதாக நிமித்தியம் மறிமான் நிழலிலே மறத்தடியில் வில்லும் அம்பும் தலைக்கு வைத்துப் படுத்துக்கொண்டுயிருந் தாற். அந்த வேளையில்ச் சொற்ப்பனங் கண்டாப்போலத் திடுக்கிட்டு யெழுந்திருந்து னான்கு திக்கும் பாற்க்க ஒன்றும் கண்ணுக்குத் தோற்தாதபடியி னாலே பின்னையும் படுத்துக் கொண்டான். தியான னித்திரையாயிருக்குற போது சிங்கம் போலும் ஆற்ப்பரித்துக்கொண்டு ஆகாச வாக்குப்புறந்தாப் போலவும், ஆள்வந்து தட்டி எழுப்பினாப்பொலேயும் யிருந்த படியினாலெ, யிது என்னமோ இப்படி மிறட்டினதென்று பாற்கும் போது, அம்படிக்கும் உத்திராத்தில் ஒரு புதையும் அதுக்குள்ளெ ஒரு யோகீசு பறனும் யிருந்தார்கள். சடையும் முடியும் கண்டு, யிதுயென்னமோ பேயோ பிசாசியோ

றாட்க்ஷசனோ வென்று பயந்து குரல் நடுங்கி மூற்சை போயி தெளிந்து, யிதை ஸம்மாறம் பண்ணாமல் விட்ட மானால் னமக்கு மோசமென்று வில்வாறி யேத்தி யெயிதான். யெயித அம்பெல்லாந் தப்பிபோன படியினாலே, யிதுவென்ன வென்று காலிலே விழுந்தான். அந்த யோகீசுபறன் புன்முறுவல் கொண்டு பிறம்பாலெ தட்டியெழுப்பினாற். எழிப்பினபின்பு யிவ னுக்குக் கியானம்வந்து னான்பண்ணின அபசாறம், பொறுத்து ரெக்ஷிக்க வேணுமென்று தோத்திறம் செய்ய, அவறுக்கு கிறுபா கடாக்ஷம்வந்து நீயெயிதால் யென்பேறில் உன்னுடைய அம்பு தைக்குமா பூறணமோட வென்று கேழ்க்க, பேயொ பிசாசியோ வென்று முழிங்கிப் போடுமென்று சொல்லி யெயிதேனென்று சொல்ல, அவறும் புன்முறுவல்கொண்டு, நீயொன்றுக்கும் பயப் படாதென்று யோகீசுபறன் சொல்லுகுறாற்.

யினிமேல்பட்டு யிந்த கோசல தேசத்திலே சிறிதுகாலம் அறசாக்ஷிபண்ணி கொண்டு, சிறிது காலத்தில் தெக்ஷண தேசம் சுப்பிறம்மணியரை பூசித்துக்கொண்டு யிந்த ஜென்மத்திலே வமுஷ வளியாயி, தெக்ஷிணத்திலே, அரசாக்ஷி செயிதுகொண்டு சிறிதுகாலத்துக்கும் அறசாக்ஷிசெயிது, வமுஷம் வாழ்ந்திருந்து, பின்னாலே அயின்பதொரு தலைமுறையில் ஒரு பிள்ளை வலக்கால் முடமும் யிடக்கண் குறுடுமாயி சென்ம சருபமாயி பொறந்து, பின்னாலே உத்திரதேசத்துக்கு வந்து யிறந்து போனால், புறாதன விதமென்று வறப்பிறசாதம் கட்டளை யிட்டு போனாற்.

அதின் பின்னாலெ ஒரு கம்பளப்பாலம னெங்குறவன், பெறிய மாதம்ம னாயக்கற் வளவில், அந்த னாயக்கனும், அவன் பெண்சாதி பெத்தம்மாளும் வேலைபண்ணிக் கொண்டு யிருப் பாற்கள், அப்படியிருக்குற னாளையில் மாதவ னாயக்கற் மகன் கடும்பல னாயக்கனும், பாலம னாயக்கன் மகன் சின்னம னாயக்க னும் வனத்தில் விரகுக்கு போனாற்கள். ஆறண்ணியத்திலே கல்பொதுக்குள்ளே, விளக்கு வைத்த சோதிபோலெ வெளிச்சம் கண்டு, யாறோ தீ யெரிச்சிக்கொண்டு யிருக்குறார்க ளென்று போயிவிட்டாற்கள். யிந்தப்படி பத்து சாறி கண்டாற்கள். யிதுலே மனுஷற் சஞ்சாறமில்லை; தினம் தீ மாத்திரம் எரிய தென்று யிந்த சமாசாறம் மாதவ னாயக்கறிடத்தில் சொல்ல ஒரு

னாள் அந்த புள்ளைகளை அழைத்துக்கொண்டு அந்த வனாந் திறத்துக்கு போயி கல்பொதுக்குள் பாற்குறபோது வெளிச்ச மாச்சிது. யிது கண்டு அந்த புதுக்குள் பூந்து பாத்து தீயில்லா தனதை கண்டு கையே வைத்து பாற்க்க, வெதுப்பு மில்லாதபடி யினாலே அதையெடுத்துக்கொண்டு வந்து டில்லி ஆகறாவுக்கு போயி றாச்சிய பறிபாலனம் பண்ணுகுற துலுக்க றாசா விடத் தில் வைக்க, மகா சந்தோஷம் வந்து, உனக்கு என்னவேணு மென்று கேழ்க்க எனக்கு, உம்முட கைனாலெ, ஒரு விறுதும், ஒரு குதிரையும், ஹூறு மாடும், சிறுது வன மானியமும் கேட்டு வாங்கிக்கொண்டு வந்தான். அந்த மாடு துலுக்கன் குடுத்தமாடு, மோளற மாடுயென்று பேறாச்சிது. அந்த பாலமன் மகன் கூடக் கண்டு சொல்லியும் யிவற் வீட்டிலே யிருந்தபடியினாலே, பாலம னாயக்கன் தைவீகமாயி போறபோது, பாலமனை உன்பிள்ளை யென்று பிடித்து குடுத்தான். பெத்தம்மாளும் தைவீகமாயி போற போது, னாகம னாயக்கனை காப்பாத்திக்கோ உன்பிள்ளை யென்று பிடித்து குடுத்தபடியினாலே, பெரிய மாதவனாயக்கர் தெயிவீகமாயி போறபோது கடும்புல னாயக்கற் கிட்ட பிடித்து குடுத்து, நீங்கள் ரெண்டுபேரும், பங்காளிகள், யிருக்குற முதலும் மாடும் ரெண்டுபேரையும் பங்கிக்கச் சொல்லி வாக்கு வறமும் குடுத்து, தைவீகமாயி போனாற். வால்மீகற் உத்தாறப் படிக்கி வனாந்திறத்து குடியேத்தி, கிறாதறுடனே போழ்க்குற காலத்திலே, அறசாக்ஷி பண்ணிக்கொண்டு யிருக்குற காலத்தில், கடமை வாங்குகுறதும், செங்கும், மயில் எறகு, தேன்மொழுகு, யானை கொம்பு, வைறம், முத்து, குங்கிலியம், அரைக்கு, காந்தம், கவறிமான் சவறி, கஸ்தூரி, புழுகுசட்டம், சந்தனம், அகில்கட்டை யிதுவகைகள் பாச்சாவுக்கு, தோப்பாபணம் செலுத்திக்கொண்டு யிருக்குற காலத்திலே, கம்பளத்து ஸ்ரீகள் றூப லாவண்ணியமாக சந்திறபிம்பம் போலேயும் றம்பயற் போலேயும் ஸ்ரீகளை கண்டு பாக்ஷாயிடத்தில் அறிக்கையாகி, பொண் குடுக்கச்சொல்லி கேட்டபடியினாலெ கோசல தேசம் விட்டு பெனுகொண்டைக்கி வருகுறபோது யமுனைதீறத்தில் பொசலிலே தண்ணிற் வெள் ளப்பிறளையமாயி குறுக்காட்டிக் கொண்டுது, அப்போயிந்த வன தேவதைகளையும் பெறியோற்களையும். யமுனதீற பொசலையும், தோத்திறம் செய்ய அக்கரை யிக்கரை விறுக்ஷம் பொருத அந்த வழியே வந்தோம். அந்த காலத்தில் பெனு

கொண்டையில் சோளதேசத்திலே யிருந்து சிவகியான பிள்ளை யாத்திரை வந்தவனும் அந்த பெனுகொண்டைக்கி வந்து சேந் தான். அப்போ னம்ம மோளற மாடு ஆயிறம் உருப்படிக்கி மேலே யிருந்த படியினாலே, கணக்கு வியாகியானம் தெரியாத படியினாலே, அந்த சிவகியானபிள்ளை யோகி றூபமாயிருந் தவனை எங்கள் வசம் மனைமகனாக யிருக்க யிருந்தமேல் னாம்மள் யிவனை பிள்ளை என்றுயிருக்க விபாகம் செய்ய வேணுமென்று யோசித்து, யிவன் வறலாறு விசாறித்து சோழ தேசத்தில் கலியாணம் செயிது, யிவன் மகனை சிதம்பற பிள்ளையை படிக்கவைத்து, ஆடுமாடு, வீடுவாசல் விசாறணை யுஞ் செய்யத் தீற்க்கமாக சகல விசாறணையும் செய்ய யிப்படி யிருக்குற காலத்திலே றாச்சியத்துலே உரிப்போட்டு கழித்தருக் கிறது முக்கியமான படியினாலே, ராயற் யிந்த உரிப்போட்டு கழித்தறுக்குறவனைப் பிடித்தால் அவனுக்கு னான் சீற்மை பூமி குடுத்து ஆரோக்கியம் பண்ணிவிக்குரோம் என்று தமுக்கடித்து மணிக்கட்டி யிருந்துது. அப்படியிருக்குற னாளையிலே, அந்த சிவகியானபிள்ளை மகன் சிதம்பறபிள்ளை, ஆராக்ஷி மணியை அடித்து, றாயற் பேட்டி கண்டு, தன் எஜமானையும் றாயற் பேட்டி செயிவித்து, பெண்குண்றை தூவுயிருந்து உரிப்போட்டு கழுத்தறுக்குற துலுக்கற் கலாபத்தினாலே, என்னை றாயற் அழைத்து, நீ யிந்த கள்ளனைபிடித்து கொண்டுவந்தால், சிங்கா சனக் காவல் நீயே யிருக்கிறவ னென்று தாக்கிது செய்ய, அந்த அப்பணைப்பிறகாறத்துக்கு அந்த கள்ளனையும் பிடித்துக் குடுத்து நடந்துக் கொண்டிருக்கிற னாளையில், வால்மீகறுடைய உத்தாற கட்டளை கடாக்ஷத்துனாலேயும் வனதேவதா கடா க்ஷத்துனாலேயும் வமுச பூஜாபத்து னாலேயும் றாயற் சமூகத் துலே ஒரு வேளையில் யென்னுடைய பிறஸ்தாபம் ரொம்பவும் பிறபலமாக பேசிக்கொண்டு யிருக்குற வேளையில், கிஷ்ணப்ப றாயவற்களுக்கு ரொம்பவும் சந்தோஷம் வந்து ஊழியக்காறரை விட்டு அழைத்துக்கொண்டு போயி விட்டாற்கள். நீ சேவுக விற்தியிலே வில்வித்தை ஆயுத வித்தையிலே நீ பெலவானென்று சொல்லுகுறார்கள். உன்னுடைய சம்பறமம் வேடிக்கை பாற்க்க வேணுமென்று றாயர் சமூகத்திலே, மதம் பொழிந்த யானையை கொண்டுவந்து விட் டாற்கள். அதை தும்பிக்கை பிடித்திழுத்து விழக்காட்டினான்.

யிருப்புக் கொப்பரையை தட்டாறிக்க அம்புனாலே யெயிதான். கல்தூணைக் கட்டாறியாலே கையில் குத்தி காலுனாலே, பிடிங்கினான். பஞ்சிமெத்தையை துண்டுதுண்டாயி வெட்டினான். உரிப்போட்டு கழித்தறுக்குற துலுக்கரை குறுக்காட்டி வெட்டியும், ஆனையை றாயர் வேட்டை வனத்திலே அம்பாலே யெயிதான், கறடியை கையை பிடித்துக் கொண்டு மறத்தில் தையிற்கடைந்தான். றாயருக்கடங்காத குறுமன்னியரையும் கொட்டமடக்கி, கிஷ்ணப்ப றாயரவர்கள் மனேரெதப்படிக்கி நடந்துக் கொண்ட படியினாலேயும் கடும்பிலவானாக யிருந்தபடியினாலேயும், வால்மிகற் கட்டளையிட்ட கடாக்ஷப்பிறகாற மகா யோக திசையினாலேயும் கிஷ்ணப்ப றாயற் சவாசென்று மெச்சி,சாளுவ றாயநெண்றும், ராசக் கட்டாறி யென்றும், விருதுக் கட்டாறி யென்றும்,புசபல தாஷ்டிக றாயனென்றும்,மெச்சி றாயர் றனபேரிகையும், ஆனைமேல் கனக துஜமும், சந்திரக்காவி டால், வெள்ளடால், காறனுமடால், கெருடடால், பச்சைடால், சங்கு செக்கிற சுறுட்டி, வெள்ளி அவுதாவும், கசம்புக் குடையும், குடைமேல் குடையும், வெண்டாழப் பக்கரையும், முன் ச்ல்லி, பின் சல்லி, முகசல்லி, பொன்சல்லி, புலிக்கொடியும், சிங்க வெண்குடை பஞ்சவர்ணப் பாவாடை, பல்லக்கு, உபய சாமறம், ஈயோட்டி, சாமுத்திரோகற வெண்டயம், வீறகண்டாமணி, பகல் தீவிட்டி, தூபதீபம், யிந்த விறுதெல்லாம் குடுத்து, வெண்கொன்றை றாச்சியம் மானியம் விட்டு, சிம்மாசனக் காவலவனென்று சிம்மாசனக்காவல் குடுத்து, வாழ்ந்து யிருக்குற னாளையிலே கிஷ்ணப்ப றாயற் சமுகத்திலே தெக்ஷண பூமியிலே குறுமன்னியற் உபாதி மெத்தவென்று பிறாதியாகி, சம்மந்த பாண்டியன் நிமித்தியமாக தெக்ஷணத்தில் மதுறாபுறி பட்டணமும் றாச்சியமும் குறுமன்னியர் கட்டிக் கொண்ட படியினாலே ச்ம்மந்தப் பாண்டியன் வந்து றாய வேலூறில் றாயற் பேட்டியில்லாம(ல்) கீரைக் காரன் வளவில், தோட்டத்தில் தண்ணீறிரைத்துக் கொண்டு, யேவல் பண்ணிக் கொண்டுயிருந்தாற்.அந்த தோட்டக் காறன் றாயர் அரைமனைக்கி தினசருதி கீரை குடுத்து வருவான். இந்த சம்மந்தப் பாண்டியன் பாகமாக அரைக்கீரை பயற் செயிது, ஒரு னாள் வேளையில் றாயருக்கு கீரை குடுக்கச் சொல்லி குடுத்தான். யிந்தக் கீரையுட ருசிபாகங் கண்டு சந்தோஷம் வந்து, மறுனாள் இந்தக் கீரையின் னெரை வரை

யில்லாது யிப்போ யிந்த ருசிபாக மேதென்று கீரைக்காரனை றாயர் கேழ்க்க, சுவாமி யிந்தக் கீரை, என் வீட்டிலே பிள்ளையில் லாததுனாலே ஒரு பிள்ளைய வளற்துகுரேன். அவன் பயிற் செயித கீரையென்று சொல்ல, அந்தப் பிள்ளையை இந்த க்ஷணம் அழைத்துக்கொண்டு வரவேணு மென்று அனுப்ப, அந்த பிள்ளையை தோட்டத்தில் தேடிக் கொண்டு போறபோது, யிந்த பிள்ளை யின்ரை தினம் யெந்தவிதமாகிலும் றாயறிடத்தில் அறிக்கை யாகுமென்று நவரத்தினப் பதிக்கம் பண்ணியிருந்ததை யெடுத்துக் கழித்திலே தறித்துக்கொண்டு யிருந்தாற். யிது யென்ன காறணமாக யிருக்குதென்று விறுமித்து யடித்து மூற்சை போயி தெளிந்து, உம்மை றாயர் அழைத்து வரச் சொன்னா ரென்று சொல்லினான். வாறதில்லை யென்று சொல்லிப் போட்டாற். யிந்த சமாசாறம் கீரைக்காறன் றாயரிடத்தில் அறிக்கை செய்ய, மறுபடி யிந்த பிள்ளை வாறதில்லை யென்ற சமாசாறத்துக்கு அழைத்து வற மனுஷர் நேமித்து அனுப்பினார். அவர்கள் வந்து யிந்த பிள்ளையை பாற்கயில், அவன் கழுத்திலே போட்டிருக்குற னவறத்தின பதிக்கம் யிந்த லோகம் விலை மதிக்கத் தகாதென்று சொல்ல, றாயர் யினியும் வேரே மனுஷர் போயி அழைத்து வாங்களென்று சொல்ல, சுவாமி! யினிமேல் அந்த பிள்ளையை னாங்கள் போயி அழைத்தால் னாங்கள் மிஞ்சி வாறதில்லை யென்று சொல்ல, றாயருக்கு வெகு யோசனை யாகி, மனுஷரையும் பல்லாக்கும் குடுத்தனுப்பி, அழைத்து வரச் சொன்னாற். அப்போ மனுஷற் வந்து அழைத்து கொண்டு போயி விட்டாற்கள். அப்போ றாயர், நீற் யாரென்று கேழ்க்க னான் தெக்ஷண தேசம், மதுறாபுரி. என் பேற் சம்மந்தப் பாண்டியனென்று சொல்லி, யென் சீற்மையை யீழ தேசத்து றாசா கட்டிக் கொண்டான், யிது நிமித்தியம். பனிரெண்டு மாசம் சமயமில்லாமல் காத்துயிருந்தேன். யின்ரை தினன் சமயம் கிடைத்தது என்று பாண்டியன் அறிக்கை செயிது கொண்ட வுடனே, றாயர் சம்மந்த பாண்டியனை மதிரையில் பட்டம் வைத்து, ஈழ தேசத்து றாசாவை பிடிக்குற நிமித்தியம், னாகம னாயக்கரையும் பவுசும் அனுப்புகுறபோது, னாகம னாயக்கற் விருதுக் கட்டாறி சாளுவ றாயனை அனுப்புவிக்கச் சொல்லி றாயறை அப்பனை கேட்டபடியினாலே விருதுக்கட்டாறி சாழுவ றாயனும், சமுசாறத்துடனே அப்பனை வாங்கிக் கொண்டு

வருகுறபோது, கடும்பில் னாயக்கற் தம்பி முத்து மாத ஆண்டி னாயக்கரையும் சிம்மாசனக் காவல் யிருக்கச் சொல்லி வைத்துப் போட்டு, சிவக்கியானைபிள்ளை மகன் சிதம்பர பிள்ளையை கூடவரச் சொல்லி அழைத்தோம். னான் தெக்ஷண தேசத்துக்கு வருகுறதில்லை என்று சொல்ல, என்னுடைய குமாறர்களுக்கு யெந்தப்படி னடத்தி வைக்கிரேனோ அந்தப் படி னடத்தி வைக்குரேன் என்று, கடும்பில் னாயக்கற் வமுசம் வளற்ந்தால் வளறவும், தனிந்தால் தணியவும், என் அஞ்சாம் பிள்ளைகளுடனே நீ யாறாம் பிள்ளை யென்று யென்பெறில் கால் பட்டாலும் கைப்பட்டாலும் கைக்கால் தவறியெடைந்தாலும், மான மறியாதி தாக்ஷிபண்ணுகுறதில்லை யென்றும், கல்லியாணம் தெயிவம், நல்லது பொல்லாதது யெந்த காரியத்துக்கும் சிதம்பற பிள்ளையை யல்லாமல் தப்பித மில்லை யென்று, விறுபாக்ஷி, யீசுவறன் சன்னதியில் கட்டாறிப் போட்டுத் தாண்டிக்குடுத்தாற் சிங்காற முத்தியன் வில் தலையில் அடித்துக் குடுத்தார். மோளரு மாட்டு வாலினாலே பாலை துவைத்து சத்தியம் பண்ணினாற். யிப்படி சத்தியம் பண்ணி கூட்டி கொண்டு வந்து குமாறு கணக்கனென்று பேருங்கொடுத்து, வாறபோது, சிங்காற முத்தி யன், தூறினாச்சிமார், கன்னடியப்பெருமான், கருப்பு மூத்த மூப்பன் வேட்டைக்காரன், மின்பாரைக்கன்னி, நட்டாத்துக்கன்னி, வலசை மூப்பன், கொள்ளுக்கஞ்சி தெய்வம், குமார கணக்கன் செய்யும் பிறம்மியணன், யிதுவெல்லாம் பொட்டகத்தில் கோப பட றாயன்வய்த்துக் கொண்டு வாறபோது, சுந்தறப்பல்லவருயன் தன் சீற்மையை வாதியினால் வல்லமை விட்டு றாயற் சமுகத் தினில் பணிரெண்டு வருஷம் சமயமில்லாம லிருக்குறபோது சம்மந்தப் பாண்டியன் நிமித்தியமாக னாகமனாயக்கன் மதுரைக்கி வாறது கண்டு சுந்தறப்பல்லவருயன் னாகமனுயக்கற், முகாந்திரம் றாயற் பேட்டிபண்ணிக் கொண்டு வாறபோது, னாகம னாயக்கரை பார்த்து, சுந்தற பல்லவருயன் காறியம் விசாறணைபண்ணிக்கொண்டு போகச்சொல்லி உத்திறவானபடி யினாலே வாறபோது கடும்பில் னாயக்கறுக்கும், சுந்தறப்பல்லவ ருயனுக்கும், சினேகிதராகிக் கூடவந்தோம். வந்தபின் காவேறி தாட்டி நஞ்சுனக்கடல்ச் சேந்தபோது அனுப்பமசக்கவுண்டன் வந்து சேந்தான், னஞ்சுண்டக்கடல் விட்டு மடவிலாகம் வந்து சேந்தோம். சுந்தறப் புல்லவருயனும் விறுதுக்கட்டாறி சாமு

STATE DEPARTMENT OF ARCHAEOLOGY MADRAS

வருனும், துஷ்டரை வெட்டி சிஷ்டபறிபாலனமும் செய்து சுந்தர றப் பல்லவருயன் மனோறதப்படி நடந்து காறியமும் நிறவேறின பின் சம்மந்தப்பாண்டியன் சீற்மையை னோக்கி மதுரைக்கி பாளையம் போற போது, சுந்தறப்பல்லவருயனும், விறுதுக் கட்டாறி சாளுவருயனும், சமுசாறத்தையும் கூடவே அழைச்சிக் கொண்டு திறியிற தெப்படியென்றும், மேல்காறியம் சாதிக்க போகயில் சமுசாரம் ஒருபக்கம் வைச்சுப்போட்டு போக வேணுமென்று யோசனை செய்து, சமுசாறம் தேவதா வனத் திலே வைத்துப் போட்டு மதுரைக்கி போயி சேந்தபோது ஈழத்து றாசாவும் மதுரையை விட்டு தன் தேசமே போனால், இதுக்குமேல், அம்பிகை மீனாக்ஷி அய்யன்னென்று ஒரு பிறாம் மணன் பிருந்தாற். அந்த பிறாமணன் னாகம னாயக்கரை வந்து கண்டு பேட்டி செய்து சமாசாறமெல்லாம் பேசிக்கொண்டு ஈழதேசத்து றாசாவானவன் நீற் வலர சமாசாறமறிந்து ஓடி போனான். பாண்டியனுக்குப்பட்டம் வைக்குறது பின்னாலே பாத்துக்கொள்ளலாம். பாண்டியனை பிடித்து பந்தனம்பண்ணிக் கொண்டு நீற்பட்டம் வைத்துக்கொண்டால் னல்ல காறிய மென்று அந்த பிறாமணன் சொல்ல, னாகமனாயக்கனும் சம்ம தித்துக்கொண்டு, பட்டங்கட்டிக்கொண்டு, சம்மந்த பாண்டி யனை மோசம் பண்ணிப் போடயிருக்குற சமாசாறம் சம்மந் தப்பாண்டியனுக்கு தெறியவந்து திரும்பியும் வடக்கே றாயற் அவற்கலிடத்துக்கு பயணப்பட்டு போகயிருக்குற முன்னு தனக்கு சகாயம் ஒருத்தருமில்லாமயிருந்து, கட்டாறி சாழுவருயனை வரச்சொன்ன போது, னான் உமக்குச் சகாயத்துக்கு மனுஷரை யனுப்பி விக்குரேன், எனக்கு உம்முடைய உபகார மென்ன வென்று கேழ்க்க, சம்மந்தபாண்டியன் சொன்ன சமாசாறம் னான் வடக்கே போயி திரும்பி வந்தால் இம்முடிப் பட்டங் குடுக்குரேனென்று யெழிதிக் குடுத்தாற்.

அப்போ சகாயத்துக்கு, முத்து மாதனாயக்கனையும் பத்து சனமும், னாகம னாயக்கனுக்கு தெறியாமல் அனுப்பிவைத்தாற். சம்மந்தப்பாண்டியன் றாயறிடத்துக்கு போயி பேட்டி செயிது, மதுரையில் (ந)டந்த விபறமெல்லாம் சொல்லிக்கொண்டாற். அப்போ ராயறுக்கு வெகு கோபாக்கினி கோறமாகி, னாகம னாயக்கன் மகன் விசுவனாத னாயக்கனை அழைத்து, உன்

தகப்பன் னாகமனாயக்கன் கறத்துரோகம் செயிதான். அவனை பிடித்துக்கொண்டு சம்மந்தப்பாண்டியனுக்கு பட்டம் வைத்துப் போட்டுவறச்சொல்லி பவுசும் குடுத்து அனுப்ப விசுவனாத னாயக்கன் னாகமனாயக்கன் தலையை யிப்போ கொண்டாருவேனென்று ராயற் சமக்ஷமத்திலே செபிதம் சொல்லிக் கொண்டு வந்தான். வாற சமாசாறமறிந்து னாகமனாயக்கன் மகன் மனது பேதித்து ஓடிபோக அழைப்பு செயிது யிருக்குற போது, ராயற் சமஸ்தானத்துக்கு ராயவேலூறின் பேரில் யுகாந்த காலப் பிறளயம் போலே துலுக்கற்பாளையம் வந்துயிறங்கின சமாசாரம் கேட்டு, அம்பிகை மீனாக்ஷி அய்யன் னாகமனாயக்கனுக்கு பிலமும் தயிறியமும் சொல்லி, னாகமனாயக்கன் மனத்தை திடப்படுத்தி, உன்னுடைய மகனை உன் சொல்ப்படி கேழ்க்க பண்ணாமல் போனால் னான் பிராம்மணனல்லவென்று திடம் சொல்லி, விசுவனாதனாயக்கன் வருகுற முன்னுக்கு வந்து பேட்டி செயிது, ராயற்பேரிலே யானால் யெதிறாளிப் பாளையம் வந்துயிறங்கிப் போச்சுது. யெசமான் அப்பணைப்படிக்கி னாகம னாயக்கரை பிடித்துக்கொண்டு வற னாகமனாயக்கற் உமக்கு ஆதினம் சம்பாதித்தாற், உம்முடய யெசமான் பேறில் பர்க்ஷாபாளையம் வந்துயிறங்கினது. பணங்காசுடனே போயிவிட்டால் சறி, யில்லாவிட்டால் நீர் னாகமனாயக்கரை செயித்துப் பிடித்துக்கொண்டு ராயறண்டைக்குப் போகாமல் தொகப்பனையும் சறிப்படித்திப் போட்டு, நீர் யென் தொரையிடத்துக்கு போவாயென்று சொல்லி, விசுவனாத னாயக்கரை அழைத்து வந்து, தொகப்பன் பிள்ளைக்கும் சமாதானம் பண்ணினாா்ன், சம்மந்தப்பாண்டியனும் பின்னிட்டு போனான். யிப்படி யிருக்குற காலத்திலே, தேவதா வனத்திலிறிந்து கொண்டு னாகமனாயக்கற் உத்திறவுபடிக்கி, குறுமன்னியரைச் கொட்ட மடைக்கி னாகம னாயக்கனிடத்தில் காத்துக் கொண்டு, தேவதாவனத்தில் மாலையும் கட்டி, பதினோரு ஆண்டுயிருந்து, பின்னாலே ஆணைப்பாளியில் அஞ்சாண்டு யிருந்து, னாகம னாயக்கற் உத்திறவு மேரைக்கி னடந்துக் கொண்டு யிருந்தோம். பின்னாலே சித்துருவி லிறிந்துக் கொ்ண்டு மெகற வளியும், குறுமன்னியரையும், கொட்டமடக்கி யிருந்தோம். அப்படியிருக்குற காலத்திலே னாகம னாயக்கற் காலஞ்சென்று, அவற்மகன் விசுவனாதனாயக்கன் பேற்சொன்ன

படிக்கி, தெற்க்கு சிறுமலைக்கி வடக்கு, கறுவூறுக்கு மேற்க்கு, ஆனை (ம)லைக்கி கிழக்கு யெப்படி யிருந்ததென்றால், யெள்ளு குறுணியும் எலிமுக்குறுணியும் செம்பள மில்லாத சேவுகனும், கோபமில்லாத றாசாவும், ஒரு கூடை செங்கலும், பிடாறியும், தன்தான் வீட்டுக்கு தானே துரையுமாகவும், பிறந்த பிள்ளை யெல்லாம் பெறிய, தினமும் தடிக்கி பில்லு போடுகுறதும், பூனைக்கி னாமம் சாற்த்துகுறதும், யிப்படியிருக்குறதுக்கு ஒரு திட்டம் யெப்படி யென்றால், கெடியென்றும், னாடுறபாளைப் பட்டென்றும், ஒரு நிகுதிசெயிது, கெடியென்றும் சுபையென்றும் அறிக்காறக் காறரென்றும், கறணிக்கற்யென்றும், குறிக்காறரென் றும், கோட்டைசெயிது ஒரு நிகுதி னடந்து வருகுற காலத்திலே, விசுவனாத னாயக்கர் உத்திரவு, மேரைக்கி வால சமுத்திறத்தில் சசித்துருவில் வாலறாசாவென்று, அவன், மைத்துனன் கொழுமத் தில் கிஷ்ணறாசாவெண்று யிந்தரெண்டு பேரும் அரசாக்ஷ செலித்திக்கொண்டு யிருக்குறகாலத்திலே,கிஷ்ணறாசா யென்குற வன் வாலறாசாவை மோசம் பண்ணுகுறதுக்கு யெத்தினம் பண்ணிக்கொண்டு ஆள்போட்டு யிருந்தான். அப்போ வால றாசாவானவன் அவனுடகையாளை யனுப்பிவைத்து, கிஷ்ண றாசாவை செயித்து யென்ணையும் ரெக்ஷச்சதேயானால், யென்னு டைய றாச்சியம், வாலசமுத்திறமும், உமக்கு யெழுதிக்குடுக்குரே னென்று தானாபதியை அனுப்பினாற். அப்படியே நீ யெழுதிக் குடுத்ததே யானால் உன்காறியம் செயம்பண்ணி தாரேனென்று பச்சயாத்துக் கருப்பணன் கோவிலில், மதுறகாளிஅம்மன் கோவி லில் சன்னிதியில் ஒன்றுக்கொன்று சத்தியம் செயிதுக்கொண்டு கிஷ்ண றாசாவையும் செயம்பண்ணி, வாலறாசா கைபட வால சமுத்திறமும், றாசியமும்,யெழுதிக் குடுத்தான். வாலசமுத்திரத்து வாலறாசாவுக்கு, சித்துருவு மாத்திரம் மானியம்விட்டு மத்த பூமி யெல்லாம் கைவசப்படுத்திக்கொண்டு துஷ்டரைவெட்டி சிஷ்ட பறிபாலனம் செயிது, ஆறிலொன்று கடமைவாங்கிக்கொண்டு, செங்கொல் முறமை தவறாமல் கோசல தேசம் பெண்குன்றை தெய்வங்களுக்கும், வருஷமொருதிறஞ் செயிதும் ரெண்டு வருஷத் திலொரு திறம் செயிதும், யிப்படியிருக்குற னாளையில், பழனி வாலனம்பியாற், வறதனம்பியாற், பங்காளிகள் ஒன்றுக்கொன்று துவேஷமாகி பழனியூரையும் யெழுதிக் குடுத்தாற். விசுவனாத னாயக்கற் உத்தாறப்படிக்கி அரசாக்ஷி செயிது

கொண்டுயிருந்தோம். அப்படியிருக்கும் னாளையில் முத்து மாதச் சின்னோப னாயக்கற் தெய்வீகமாயிப் போனார். அந்த வேளையில் நிறுவாக மில்லாமல், ஊரெல்லாம் ஒரே ஒப்புக் காடெல்லாம் ஒரே னேம்பாக யிருந்தபோது அதுனாலே அபறஞ்சி னாகம னாயக்கற் மோளரு மாட்டையும் ஒட்டி காரைத் தொழுவில் மேத்திக் கொண்டுயிருந்து, அவடத்தில் நிருவாக மில்லாமல் மோளற பட்டியில் சேற்ந்து, அந்தப் பூமி, பூவுலு வன் குயிலுவன் பூமியானபடியினாலே யிந்த மாடு வெட்டுவன் குமாற மாதவன் மாடென்று னமக்கு தாயாதி யென்று யிடம் குடுத்து, மோளற பட்டியில் நின்றது. அப்போ அபரஞ்சி னாகம னாயக்கன், தந்திறத்துனாலே, மாட்டைக்கி பூமி வாங்கினான். குமாறமுத்து மாத சின்னோபன் மகனென்று சொல்லிக் கொண்டு தந்தறதுனாலே, தளிஞ்சி வரைக்கு கட்டிக் கொண்டு அறசாக்ஷி செயிதான். யிப்படி யிருக்குற காலத்திலே பழனியில் அபறஞ்சி னாகமனாயக்கற் தம்பி குமாற பாலம னாயக்கனும், குமாற கணக்கனும், குழந்தையும், அம்மாளும் அல்லாமல், மத்த பேற எதிறாளிகள் யெல்லிக்குள் எலி போலவும் கல்லிக்குக்குள் தேறை போலவும், சொல்லுக்குள் துடி போலவும், சொல்லுக்கு னாவைப் போலவும், யிறுக்கையில் குறுமன்னியற் மீறினாற்கள், பெண்பிள்ளையும் சிறிபுள்ளையு மானபடினாலே நிறுவாக மில்லாமல், சுந்தரப் பல்லவறாயன் மகன் சிதம்பற பல்லவ றாயறிடம் போயி சேந்தோம். யிப்படியிருக்குற காலத்தில் வேட்டுவற் படைவந்து காடன்கறி(ல்) சற்வ சங்காறகாலம் போல ஆடு மாடு சற்வ கொள்ளையடித்துக் கொண்டு வாற போது (வி)ண்டு னாம்மள் யிந்த சீற்மையில் ஒரு நேறம் செல பானம் பண்ணினாலும் யிந்த றாசாவுக்கு சாக்கிறதை மறியா தை யாச்சிது. விறுது கட்டாறி றாயனென்று பல்லவறாயறிடத் தில் யிருந்து யெதிறாலிக்கி யெடம் குடுக்குறதா யென்று வால்மீகரையும் தியானம் பண்ணினவன், தேவதைகளையும் தியானித்து, குறுக்கட்டி சண்டை செயிது, நெரையை திருப்பி, கொள்ளையையும் திருப்பிட, வேட்டுவற் படையை ஓட்டி விட் டேனென்று யிந்த விசுவாசம் மனசில் சம்பூறனமாகி, யிம்முடி குமாற காங்கய மன்றாடியார் தம்முடைய தளத்துடனே வந்து, கண்டு பேசி, னம்மையும் சிதம்பறப் பல்லவ றாயனையும், குமாற காங்கய மன்றாடியார் காடை னகறுக்கு அழைத்துப்போயி,னம்ம

செறித்திற மெல்லாம் கேட்டு வைத்துக் கொண்டு யிருக்குற காலத்திலே ஒரு னாள் வேளையில் சுப்பிறமணியற், வந்து தட்டி யெழுப்பி விசைய றங்க சொக்கலிங்கம் னாயக்கற் கிட்ட போகச் சொல்லி உத்திரவு ஆச்சிது. அதே மேரைக்கி விசுவனாத னாயக் கற் மகன் விசையறங்க சொக்கலிங்கம் னாயக்கரை போயி கண்டு விசைய றாம தளவாயையும் கண்டு மறுபடி யிந்த சமாசாற மெல்லாம் யிம்முடிக்கு மாற காங்கய மன்றாடியாறுக்கும், சிதம்பற பல்லவராயனுக்கும் சொல்லி, யிம்முடி குமாற காங்கய மன்றாடியாற் வெகு சந்தோஷமாகி யிருக்கிற வேளையில் முன்னுதாக சம்மந்தப் பாண்டியன் யெழிதிக் குடுந்த பட்டயமும் குடுத்து, நீரே அந்த சம்மந்த பாண்டியன் யென்று சொல்ல கேட்டு, யினிமேல் காட னகறாவது, காங்கயமாவது, பழனியூ ரென்று, பழனியூற், காடைனகற் காங்கயமென்று ஒன்றுக் கொன்று ஆயுதமும் போட்டு சத்தியமும் பண்ணிக்கொண்டு, ஆங்கில வருஷம் ஆவணிமாசம்13உ பூர்வபக்ஷமும் திரையோதேசி சோமவாறமும் வுத்திற னெக்ஷத்திறத்தில் சிங்க லக்கினத்தில் சித்தனாம யோகமும் பால வாகறணமும் பெத்த சுபதினத்தில், மடவிளாகத்தில், மடவிளாகச் சின்னோப னாயக்கறுக்கு இம்முடிப் பட்டமும் சாத்தி, பறிவட்டமும் கட்டி, பட்டாபி ஷேகமும் சூட்டி செனசேகறத்துடனே, இம்முடி குமாற காங்கய மன்றாடியாறும், சிதம்பறப் பல்லவறாயறுமாக வந்து, பழனியூறி லிருந்துக் கொண்டு குறுமன்னியாரை கொட்டமடக்கி, துஷ்டரை வெட்டி, சிஷ்டபறிபாலனம் பண்ணி, பால சமுத்திறத் தில் தங்கள் மனுஷரையும் வைத்து, யென்றும் போலே தொரைத் தனம் செயிது, துறுவப்பட்டம் போலே னடந்துவறச்செயிது, பந்தோபஸ்து செயிது, அவறவற் ஸ்தளங்களில் அவறவற் ஸ்தானமாக யிருந்தாற்கள். அன்று முதல் யின்று காங்கயம், காடனகற், பழனியூற் யிந்த மூன்றும், னாடூற் பாளையப்பட் டென்றும் பிறக்கியாதியா யிருக்க, யிம்முடி குமாற காங்கய மன்றாடியாறுக்கும், சிதம்பறப் பல்லவ றாயறுக்கும், பழனியாற் பட்டம் பறிவட்டம் கட்ட, பழனியூறாறுக்கும், இம்முடி குமாற காங்கய மன்றாடியாரும், சிதம்பறப் பல்லவ றாயறும் பட்டம், பறிவட்டம் கட்ட, னாடூற் யென்று சமஸ்தானங்களுக்கும், குறுமண்ணியறுக்கும், அசேஷத்தாறுக்கும், உத்தாறுக்கும், பயம் செனிக்க அறசு பூண்டுயிருந்தோம், யிந்த னாட்டாற் சத்தியம்

தப்பினாலும், பாளையப்பட்டாற் சத்தியம் தப்பினாலும், வன தேவதைகள், பிதாமுதல் தைலம் செய்யாதை யிருந்தாலும், வமுச விற்தியாகாது, பட்டம் நீழியாது, தைலம் துணை செய்யாது, யிந்தப் பட்டயம் வாசித்து வறலாறு காணவேணுமென்றால் னல்ல னாள் முகூற்தம் பாத்து, கணக்கு வாசிக்குற னாள் ஒரு பொழுது யிருந்து, ஸ்தானம் பண்ணிக் கொண்டு பட்டயத்துக்கு கற்தனாகியவறும், அவற் வமுசத்தாறும், ஒரு சந்தியிருந்து பத்தியுடனே, குமாற பிறம்மியண பிள்ளை வமுசஸ்தனா யிருக்க வேணும். அவனும் வீடுவாசல் சுத்திபண்ணி, ஒரு பொழுதிருந்து, பஞ்ச கலியம் சாப்பிட்டு, புண்ணியாசெனம் நீற் புறோக்ஷிச்சி, பட்டுவிறித்து, யிந்த கணக்கை வைத்து தீபதூப நெயிவேத்தியம் செயிது, னடன சங்கீதமேள வாத்தியத்துடனே, அரைமனைக்கு அழைத்து வந்து, அரைமனையிலேயும் பட்டக்காறறும், பட்டஸ்ரீயும், அவற் பிள்ளையும் புத்தி கோசறமாகயிருக்ற புள்ளைகளும், அந்த குமாற கணக்கறுமாக யிருந்துக்கொண்டு, மத்த செனம், புள்ளை பந்துக்கள் காறியஸ்தர் குடி சினேகதற், ஒண்டறி ஊழியம், யாருவது ஒரு செனமில்லாமல், போகச்சொல்லி கட்டளையிட்டு, தலைவாசலுக்கு ஆனப்போட்டுக்கொண்டு, றகசிய பொருளாயி வாசிக்கச்சொல்லி, யின்பமாக வேரே வியாகுலமில்லாமல், கியாபகமாயி, பக்கிறியிடனே, செவிகுளுறக் கேட்டு, வறவாற் விபறமறிந்து கொண்டு, அத்தகணக்குருக்கு ஷோட சோப சாறஞ்செயிது, குமாறக்கணக்கனுக்கு வெகுமறியுஞ்செயிது, சந்தோஷம் செயிவித்தனுப்பி வித்து குடுக்கவும் அழைத்துவருகுறபோது குடும்பத்துடனே,னட பாவாடை மேலே கூட்டி வறவும், யிதுயென்னமோ கன்னாப்பின்னாவென்று யோசித்தால், வமுஷவிற்தி யாகாது, யிந்த விறுத்தாந்தமெல்லாம் தெறியமாட்டாது, யிந்த பட்டயம் பிள்ளைகள் தாம் வேதமென்று எண்ணிக்கொண்டு மனதில் பத்தியுடனே கேழ்விப்பட்டால், யிந்த கணக்கனை, அன்றைதினம் மாதா பிதா குரு தெய்வமென்று யெண்ணிக்கொள்ளவும், யிந்த விசுவாசம் யில்லாவிட்டால், பறதேவதா கடாஷம் யிருக்காது. யிறுதேவதா விசுவாசமாக யெண்ணிக்கொண்டு விசுவாசத்துடனே, நடந்தவனுக்கு வமுசவிற்தியும், தைவ விறுத்தியும், ருச விருத்தியும், (தேவேந்திறப்) பதவியும், போக போக்கியத்துடனே குபேற

செல்வமாக துறுவப்பட்டம் பெத்து வாழ்வாறகள், யித்த கணக்கு மூடின் முத்துலோகம் பெரும், காடித்தண்ணியை மூடி குடி., மவுனம் மலையைச்சாறும், யெனக்குள்ளது யிம்மட்டென்று, பிறசறத்துக்கு காண்பிக்க வேண்டாம், தானும தானுமாக றகசியமாக யிருந்து, கணக்கனும் தானுமாக யிருந்து கேழ்க்கவும், யிந்த கணக்கு குமாற கணக்கன் வமுசமல்லாமல் வேரே ஒருதிரேடம் குடுத்தால் திருவெடிப்பாங்கு யில்லை, யிதுவகை தெறிந்து நடந்துகொள்ளவும், வால்மீகற் அப்பனைப் பிறகாறம், சத்தியமான கணக்கு சுப்பிறமணியற் உத்தாறம், பறகாயமான பெறியோற், றாசறாச உத்திதி னல்லபுத்தி, குறுபாதம்விறுத்தி, யெண்ணினபடி முத்தி, வெகு சேத்தி, சிவமயம், தைவ சகாயம், யின்னவிதம் பதம், யிதம், சதம், சமுசாறம்திடம், காடைனகற் காங்கய மன்றாடியார், காங்கயம் பல்லவறாயரையும், பழனிமடவேளாக சின்னோப னாயக்கற் மறந்தாலும், பழனி மடவிளாக சின்னோபன நாயக்கறை காங்கயமன்றடியாற், பல்லவநாயக்கற் மறந்தாலும், கடும்பில் னாயக்கற் வமுசஸ்தாறுக்கும் ஆபத்து சம்பத்துக்கு குமாற கணக்கன் குமாறக் கோணங்கி கட்டிக் காத்திருக்காமல் போனாலும், கடும்பில் னாயக்கற் வமுசத்தாற் குமாறக் கணக்கன் குமாற கோணங்கி வமுசத்தை பறிபாலனம் செய்யாதை யிருந்தாலும், வமுச விறுத்தி, குறுவிற்தி, தைவவிற்தி, றாசவிற்தி, லோக விற்தி, பூமி விற்தி, யில்லாமல் போகக் கடவதென்று சாபம். அப்படி வறாமல் மனசில் பக்தி முக்தி வைத்து பட்டயத்து வாக்கு பிறகாறம் னடந்த பேறக்கு தைவவிற்தி குறுவிறுத்தி, புத்திற விறுத்தி, பூமிவிறுத்தி, றாசவிறுத்தியும் பெத்து, குபேற சம்பத்தும் மாறக்கொண்டாயிசும், மதுறுவப்பட்டமும், வியாசற் வேதமும், வால்மிகற் வறப்பிறகாதமும், சுப்பிறம்மணியற் கடாக்ஷமும், தமிள்வாணி போதகமும், தேவேந்திற பதவியும், கற்மியில்லாத தேகமும் படைத்து, நீடுழி காலமும் வமுசாவமுசமுள்ள வரைக்கும் வாழ்ந்து, பதினாறும் பெத்து பெருவாழ்வும் வாழ்வாறகள். சிவமயம்.

குமாற தளவாயி குடுத்த பட்டயத்துக்கு விபறம் :

தஞ்ச னகறதுக் கோசீ சாமி மகாறாசாவும், சரபோசி றாசாவும் பிறதாபு சிங்கு மகாறாசாவும், புதுச்சேறி மாந்திய றாசாவும்,

தேவணாம் பட்டணங் கச்சிறாயரும் னாகூற்க்கரை துரையாற் கந்தப்பெருமாள் வற்தகரும், செஞ்சி தீரனருள் சிங்கு மகா றாசாவும், மைசூற் சிக்குதேவ றாய ருடையாரும், கிஷ்ண றாசய்யா, சாமறாசய்யா, வீறறாசய்யா, தேவறாசய்யா, னஞ்சறாசய்யா பாளையப்பட்டு, மாளவறாயன் உடையாற் பாளையத்தாற், வணங்காமுடி சிங்கற், சேதுபதி, ரெங்கா ரெட்டியாற், வறதா ரெட்டியாற், றாமாரெட்டியாற், கிஷ்ணரெட்டியாற், உடையாத் தேவன், தொண்டமான், யேழாயிறம் பண்ணையாற், வரகுண வன்னியன், காம னாயக்கன், சின்னணஞ்சாத் தேவற், யெட்டப்ப னாயக்கற், கட்டபொம்ம னாயக்கற், திருவணராத தேவற், ஆண்டு கொண்ட வன்னியனார், கண்டம னாயக்கற், தும்பிச்சி னாயக்கற், கம்பய னாயக்கற், பூச்சைய னாயக்கற், லக்கய னாயக்கற், லிங்கய னாயக்கற், வல்லக்கொண்டம னாயக்கற், பொம்மய னாயக்கற், முத்தய னாயக்கற், கூளப்ப னாயக்கற், சாமய னாயக்கற், அம்மைய னாயக்கற், அப்பய னாயக்கற், முத்து வெங்கடாத்திறி னாயக்கற், தாசறி சின்னப்ப னாயக்கற், ஒபள கொண்டம னாயக்கற், னாகய னாயக்கற், யெத்துல னாயக்கற், போடி னாயக்கற், அப்பாசி கவுண்டற், யெற்றப்ப கவுண்டற், மச கவுண்டர், குமாற காங்கய மன் றாடியாற், சிதம்பற பல்லவறாயர், வெள்ளைய கவுண்டற் முத்தி ரெத்தின வேணு ஒடையான், குப்ப மன்றாடியார், வங்கி மன்றாடியாற் வளத்த மன்றாடியார், குறுப்ப மன்றாடியார், சற்வத்தாம மன்றாடியார், பெருமாள் மன்றாடியார், யெளைய னாயக்கன், வேடப்பட்டம் வேலப்ப னாயக்கன், சென்னம னாயக்கன், பொன் பிறம்மறாசா, பலனாயக்கர், னாடூர் பாளை யப்பட்டும், சகலறும் கூடி வைகாபூற் குட்டை மானியமென்று செப்புப் பட்டயமும் யெழிதி, மயில் வாகனக் கல்லும் னாட்டி, சுப்பிரமணியனுக்கு திருமஞ்செனத்துக்கு மானியமென்று குமாற தளவாயின் முன் செப்பு பட்டயம் யெழிதிக் குடுத்தார்... யிது செப்புப் பட்டயத்துக்கு, எதிகை... தெண்டாயுத மூற்தி ரெக்ஷிக்கவும்.

பழனி பாளையப்பட்டு ஆண்டு வந்தவற் தலமுரையும் அவாள் பெண்சாதிமாற் பேற்களும், ஒடைப்புறந்தவற் முதலாகிய பேற்கள் விவறம் யிதின் கீழே யெழிதி வருகுறது :

1 குதி கடும்பில்ச் சின்னோப னாயக்கற்.
2 அவர் குமாறன் முத்துமாத சின்னோப னாயக்கற்.
3 அவற் குமாறன் மடவிளாக சின்னோப னாயக்கற்.
4 அவற் குமாறன் பெரிய பட்டத்து னாயக்கற்.
5 அவற் குமாறன் வேலாயுத சின்னோப னாயக்கற்.
6 அவற் குமாறன் குமாறச் சின்னோப னாயக்கற்.
7 அவற் குமாறன் வேலாயுத சின்னோப னாயக்கற்.
8 அவற் குமாறன் குமாறப் பட்டத்து னாயக்கற்.
9 அவற் குமாறன் வேலாயுத சின்னோப னாயக்கற்.
10 அவற் குமாறன் அபறஞ்சி சின்னோப னாயக்கற்.
11 அவற் குமாறன் குமாற பட்டத்து னாயக்கற்.
12 அவற் குமாறன் விசையகிறி வேலாயுதச் சின்னோப னாயக்கற்.
13 அவற் குமாறன் வேலாயுதச் சின்னோப னாயக்கற்.

மேற்படி பதிமூன்றாவது பட்டக்காறனாகிய வேலாயுத னாயக்கன் னாளையில் மேஸ்தற் ஆள்வாற் துரை அவற்களிடத்தில், குடுக்கல் வாங்கல் செயிதிருந்த முன்னுக்கு கும்பினியாறவற்களுக்கு ஆயாசம் வந்து மேற்படி வேலாயுத னாயக்கனை பிடித்து சென்னபட்டணத்தில் கொண்டு போயி, வைத்திருந்த யிடத்தில் தெயிவிகமாயி போயிவிட்டான்.

14 மேற்படியாறுடைய பெண்சாதி சின்னோபளம்மாள் யெங்குற பொம்மிண்டாட்டியும், அந்த பட்டஸ்ரீ மாமியாறும், மேற்படி சின்னோபளம்மாள் வளப்புபய்யன், மேற்படி வேலாயுத னாயக்கனும், ப(ழய)வால சமுத்திறத்தில் யிருக்குறாற்கள். மகா றாச ஸ்ரீ கும்பினி சறுக்காறுலே மேற்படி சின்னோப ளம்மாளுக்கு மாசம் - 1க்கு சம்பளம் பொன் விராகன் 30 நடந்துக் கொண்டு வருகுறது.

உடைப்புறந்தவற் பேற் விவறம்:

மூன்றாவது பட்டம் பெறிய மடவிளாக சின்னோப னாயக்கற் உடன் பிறந்தவற்,

| | |
|---|---|
| குட்டி சின்னோப னாயக்கற் | 1 |
| கடும்பில் சின்னோப னாயக்கன் | 1 |

ஆண்டி வேலாயுத சின்னோப னாயக்கன் 1
கந்தசாமி னாயக்கன் 1
சின்னோப னாயக்கன் 1
ஆக செனம் ... 6.

னாலாவது பட்டக்காறனாகிய பெறிய பட்டத்து னாயக்கற் உடன் பிறந்தவற்,

வேலாயுத் சின்னோப னாயக்கன் 1
சின்ன வாடலு னாயக்கன் 1
ஆக செனம் ... 3.

அஞ்சாம் பட்டக்காறனாகிய வேலாயுத சின்னோப னாயக்கற் உடன் பிறந்தவற்,

சாமுலு னாயக்கன் 1
கந்தசாமி னாயக்கன் 1
ஆக செனம் ... 3.

ஆறாம் பட்டக்காறனாகிய குமாற சின்னோப னாயக்கற் உடன் பிறந்தவற்,

முத்து மாத னாயக்கன் 1
ஸ்ரீ திம்மனாயக்கன் 1
சின்னவாடலு னாயக்கன் 1
ஆக செனம் ... 4.

ஏழாம் பட்டக்காறனாகிய வேலாயுதச் சின்னோப னாயக்கற் உடன் பிறந்தவற்,

வங்காறு னாயக்கன் 1
ஆண்டி வேலாயுத னாயக்கன் 1
பரஞ்சோதி னாயக்கன் 1
ஆக செனம் ... 4.

பதினோறாம் பட்டக்காறனாகிய குமாறப்பட்டத்து னாயக்கற் உடன் பிறந்தவற்,

குட்டி குழந்தை னாயக்கன் 1
சின்ன வாடலு னாயக்கன் 1
சாமுலு னாயக்கன் 1
ஆக செனம் ... 4.

பனிரெண்டாம் பட்டக்காறனாகிய விசையகிறி வேலாயுத சின்னோப னாயக்கர் உடன் பிறந்தவற்,

| | |
|---|---|
| சின்னதம்பி னாயக்கன் | 1 |
| குமாற னாயக்கன் | 1 |
| கோசல சின்னோப னாயக்கன் | 1 |
| முத்து வெங்கிட்ட னாயக்கன் | 1 |
| ஆக செனம் ... 5. | |

வேலாயுத னாயக்கற் உடன் பிறந்தவற் ஒன்பதாம் பட்டக் காறனாகிய தம்பி,

| | |
|---|---|
| கந்தசாமி னாயக்கன் | 1 |
| வங்காறு னாயக்கன் | 1 |
| வெங்கிட்ட னாயக்கன் | 1 |
| ஆக செனம் ... 4. | |

பெண்டுகள் தலைமுறை விபறம் :

வின்ன வாடருலு னாயக்கன் வகையில்,

| | |
|---|---|
| சோடப்ப னாயக்கற் மகள் பெத்தக்கம்மாள் | 1 |
| கொண்டம னாயக்கன் மகள் வாலக்கம்மாள் | 1 |
| ஆக பெண் சனம் ... 2. | |

சாமுலு னாயக்கற் வகையில்,

| | |
|---|---|
| கொண்ட முத்து னாயக்கன் மகள் வள்ளியக்கம்மாள் | 1 |

வடவாட னாயக்கற் வகையில்,

| | |
|---|---|
| மாப்பிள்ளை னாயக்கற் மகள் தொப்புலம்மாள் | 1 |
| முடாப்பாடி னாயக்கற் மகள் வடம்மாள் | 1 |
| சித்தி வினாயகன் மகள் பெருமாளம்மாள் | 1 |
| கொண்டம னாயக்கற் மகள் வெங்கிடம்மாள் | 1 |
| ஆக செனம் ... 5. | |

சத்தியமங்கல வகையில்,

| | |
|---|---|
| ஒபக்கம்மாள் | 1 |
| வேலம்மாள் | 1 |
| வெங்கடம்மாள் | 1 |
| பெரிய கஸ்தூரி அம்மாள் | 1 |
| சின்ன கஸ்தூரி அம்மாள் | 1 |

| | |
|---|---|
| யெற்றக்கம்மாள் | 1 |
| முத்தம்மாள் | 1 |
| வரதம்மாள் | 1 |
| பெரிய வங்காறம்மாள் | 1 |
| தெய்வயானை அம்மாள் | 1 |
| லெக்ஷமம்மாள் | 1 |
| வைப்பு வடுக வேங்கடம்மாள் | 1 |
| வைப்பு சின்ன வங்காறம்மாள் | 1 |
| வைப்பு வடுக கஸ்தூரி அம்மாள் | 1 |
| ஆக பெண் சனம் ... 19. | |

| | |
|---|---|
| றாசாத்தி மங்கல வகையில் வீறமாசதியான்பேற் | 14 |
| வேலாயுத னாயக்கற் வகையில், | |
| கொண்டம னாயக்கர் மகள் திம்மக்கம்மாள் | 1 |
| கம்பள வகையில் ஓபக்கம்மாள் | 1 |
| மாதக்கம்மாள் | 1 |
| ஆக பெண் சனம் ... 3. | |

| | |
|---|---|
| குமாறப் பட்டத்து னாயக்கற் வகையில், | |
| சித்துருவு கம்பள ஓபக்கம்மாள் | 1 |
| கொண்டம னாயக்கற் மகள் வேங்கிடம்மாள் | 1 |
| முத்துரு ரங்கம்மாள் | 1 |
| ஆக பெண்சனம் வீறமா சதியான பேற் | 3 |

மக்கள் வகை பேற் விவரம் :

| | |
|---|---|
| பெறிய மடவிளாக சின்னோப னாயக்கற் மக்கள், | |
| பெறிய பட்டத்து னாயக்கற் | 1 |
| கோசல சின்னோப னாயக்கற் | 1 |
| குமாற சின்னோப னாயக்கற் | 1 |
| கந்தசாமி னாயக்கற் | 1 |
| ஓபலி முத்து னாயக்கற் | 1 |
| ஆக ஆண் சனம் ... 5. | |

பெறியபட்டத்து னாயக்கன் மக்கள் ;

வேலாயுத சின்னோப னாயக்கனுக்கு மக்கள்,

முத்தகுடிக்கி வாடலு னாயக்கற் 1
சாமுலு னாயக்கன் 1
யிளையகுடிமகன் குமாறப் பட்டத்து னாயக்கன் 1
ஆக ஆண்சனம் ... 3.

மேற்படி யிளைய குடிமகன் குமாறபட்டத்து னாயக்கனுக்கு
வேலாயுத சின்னோப னாயக்கன் 1
தம்பி வடவாட னாயக்கன் 1
ஆக ஆண் சனம் ... 2.

வேலாயுத சின்னோப னாயக்கன் மகன்
குமாறப் பட்டத்து னாயக்கன் 1

அவற் மேற்படியான் மகன் தம்பி வேலாயுத சின்னோப னாயக்கன்.

மேல் எழிதிய பழனி சின்னோப னாயக்கன் வமுசா வழியில் பாளையப்பட்டு ஆண்டு வந்தவற் பேறப்பட்ட வருஷங்கள் நிற்ணய விபரம் :

1. ஆதிகடும்பில் சின்னோப னாயக்கற் பட்டத்திலிருந்தது வருஷம் 41.

2. முத்து மாத சின்னோப னாயக்கற் பட்டத்திலிருந்தது வருஷம் 28.

3. மடவிளாகச் சின்னோப னாயக்கற் பட்டத்திலிருந்தது வருஷம் 32.

யுவ வருஷம் வையாசி 14-ம் தேதி தெயிவீகமாயி அவன் பெண்சாதி பெத்தம்மாள், கோழிக்கடவு மாதம்மாள், ரெண்டு பேரும் மறுனாள் வீறமா சதியானாற்.

4. பெறிய பட்டத்து னாயக்கற் பட்டமிறுந்த வருஷம் 28.

5. வேலாயுத சின்னோப னாயக்கற் பட்டமிறுந்த வருஷம் 25.

6. குமாற சின்னோப னாயக்கற் பட்டமிறுந்த வருஷம் 22.

7. வேலாயுத சின்னோப னாயக்கற் பட்டமிருந்த வருஷம் 25.

8. குமாற பட்டத்து னாயக்கன் பட்டமிறுந்த வருஷம் 30.

9. வேலாயுத சின்னோப னாயக்கற் பட்டம் வருஷம் 22.

10. அபறஞ்சி சின்னோப னாயக்கர் பட்டம் வருஷம் 33.

11. குமாற பட்டத்து னாயக்கன் பட்டம் வருஷம் 28.

12. விசயகிறி வேலாயுத சின்னோப னாயக்கன், பழனி தெண்டாயுதபாணி பிறதியக்ஷமாக பேசிக்கொண்டு ஒரு கண சுவாமியும், ஒரு கண தானுமாக வறம் குடுத்துக்கொண்டு பட்டமிருந்த வருஷம் 70.

13. வேலாயுத சின்னோப னாயக்கற் னாளையில் மேஸ்தற் ஆள்வாற்துரை குடுக்கல் வாங்கல் தகாதாவில் செ ன் ன பட்டணத்தில் எறந்துபோன றுதிறோத்காறி வருஷம் வையாசி மாச வ ரை க் கு ம் அவற்னாள் வ ரு ஷ ம். ஆகப்பட்டம் 13 வருஷம், ஆண்டுவந்திருந்த வருஷம். யிவாள் சாதியின் பாலசாஸ்த்திற மென்று செயுகுற வழக்கம் யெப்படி யென்றால் அன்னியற் சாதியில் உள்ள ஸ்ரீயின் பேறில் மோகம் உண் டாயிருந்தால், அந்த பெண்ணை கூட்டிக்கொண்டுவந்து சாதி யாரனவரும் கூடி, வெள்ளி தட்டில், பாலும், பழமும் போட்டு அந்த பொண்ண திண்ணு, யெச்சல் ஆகினபின், பெறியதன மாயிருக்கிற சாதி பெறிதனம் கோணங்கி, பொதுறாசா, ரெண்டு பேரும், அந்த யெச்சலை திண்ணு, யிந்த பொண் னம்முடைய பொண் யென்று அவாளனைவரும் சொல்லி, சாதியிலே சேத்துக் கொண்டு, கல்லியாணம் பண்ணி, அவள் வயத்திலே பொறந்த ஆண் புள்ளைக்கி பட்டம் சூட்டுகுறதும், பொண்பிள்ளையை சாதியில் தானே குடுத்து கலியாணம் பண்ணுகுறதும் உண்டாம். யிப்படிக்கி யிவாள் சாதி வழக்கம். பழனி ரெட்டயம்பாடி, ஆலக் குடி யிந்த மூணுபாளையப்பட்டும் ஒரே ஜாதி, பழனி பாளைப் பட்டு ஆண்டுவந்தவாளில்,[1] பணிரெண்டாம் பட்டம் விசைய கிறி வேலாயுதம் சின்னோப னாயக்கனுக்கு, சொந்த பொண் டாட்டிகள்பேறுகளும் வைப்பு சம்மந்தமானவாள் பேறுகளும்,

அவாளவாளுக்குள் பிள்ளைகுட்டிகள் பேறகளும், அவாள வாளுக்குள்ள சித்திரங்களும், யிதின் பின்னாலே வயணம் எழிதி வருகுறது.

பழணி பாளையபட்டாக யிருக்குற னாளையில் 32 அமற மென்றும், பாலசமுத்திறத்தில், கோட்டை, அறமனை, மாளிகை, மச்சிகள் முதலாகிய றாசதானிகைளெல்லம் யிப்போ யிடிபட்டு போயிருக்குது. பாலசமுத்திரம் கிறாமம் யிரிக்குது.

மேற்கு ஆம்பிறாவதிக்கரை முதல், கிழக்கு னல்லதங்கா ஓடை மேல்கரை வரைக்கும் உத்தேசம் வழி காதம். 2.

தெற்கு பன்றிமலை கிறாமங்கள் உள்பட்ட மலையில் கிறாமம் கருமலை முதல், வடக்கு, னல்லாம் பாளையம் நிலம் புறகரைக்கு தெற்கு காதம் 3.

யிதிலகப்பட்டது, முப்பத்திரெண்டு கிறாமம் உபகிறாமங்கள் பலதும் உண்டு. பழனி சீற்மை பாளையகாறன் னாள் ஆயக்கட்டு 25000 கயறு. காடு 5000 மாவு நிலம் என்று கணக்கு.

3 ஒபம்மாள் | 4 மாதம்மாள் | 5 சின்னமாதம்மாள் | வைப்பு 2 செல்லகுட்டியம்மாள் | வைப்பு 3 கருப்பாயி அம்மாள்

பழனியில் ஆண்டிருந்த விஜையகிறி வேலாயுத சின்னோப னாயக்கனுக்கு பெண்டாட்டிமாற் 8. வைப்பு 3. ஆக 11.

1 திம்மக்கம்மாள்

பட்டக்காற னென்று 60ஷயிருந்து மாதம் 5 சாக லாபத்தில் தோப்பனுக்கு முன் பதினஞ்சி னாள் குரைய போனான்.

தேசது பெம்முண்டாடி யெடுக்க தகா தென்றும், மசாண்டி னாயக்கன் யென்றவன் மகன் பட்டத்துக் காறனல்ல வென்று, பழனி சீற்மை குடிகளனைவரும் சொல்லுகுறாற்கள்.

2 பாடகத்தம்மாள்

மண்டலாதிபதியென் குறவன் 25 ஷ யிறுந்து தெயிவகெதி யடைந்தான்.

6 பாபலம்மாள்

12 ஷ யிருந்து புள்ளை வகுறி கண்டு போச்சிது;

பத்து வயசு பய்யனை வையாபுரி னாயக்கன் விசனாவி பழத்தில் வச்சி குடுத்து கொண்ணு போட்டான்.

7 முத்துவெங்கடம்மா

1 — 2 — 3

1. ரெண்டாவது வெங்கடம்மா. ரெட்டயம் பாடியில்யிருக்குறுள்.

2. பெறியவள் பாபாயி அம்மா ஆய்க்குடிபட்டஞீ போயிருக்கிறாள்.

3. மூணாவது புள்ளை வேலாயுத னாயக்கனென்று சென்னப் பட்டணத்தில் வந்து யிருந்து யெறந்து போன பட்டக்காறன் பெறியவன்.

யிவன் பெண்டாட்டி சின்ன ஒபளம்மாள் என்றவள்... யித்தம்மாளு... னாஷி சின்னோயம்மாள் (தாயா) தியான மசான்டி னாயக்கன் மகனை வளப்புயெடுத்து, வச்சி கொண்டு யிருக்குற அவன் பேற், ஆண்டி வேலாயுத னாயக்க

8 பெரியம்மாள்

பெத்துபோசிது

வைப்பு 1 தங்கம்மாள்

வையாபுறி, னாயக்கன் என்குறவன் பாயலம்மா புள்ளையை காறனாக வச்சி கொண்டு சீமையாண்டு வருகையில், பையனையும், பாபலம்மாளையும் கொண்ணு போட்ட படியினாலே, அந்த பழிக்கி ஆய்க்குடியாற் மலைமேல் வெட்டி போட்டவன்.

மேல் எழுதினவை வையாபுறி மகனை முத்து சேற்வகாறன் வெட்டி போட்டான். அவன் பெண்டாட்டி 3 மாச கெற்பம்.

மூணுமாச கெற்பமாகி உள்ள ஸ்ரீ பிறசவித்து பொறந்த விசைய கிறி னாயக்கன் யென்குறவன் ஜமீந்தாறிக்காக மதிரையில் எறந்து போனவன் - சின்னவன்.

யிவனுக்கு ஆய்க்குடி

| ..ரதம்மாள் | திம்மக்கம்மாள் | செக்கறம்மாள் | கிஷ்ணம்மாள் |
|---|---|---|---|
| ம ம | பெ பெ பெ ம | ம பெ பெ | யிவள் தைவீகமானாள் |

மேல் எழிதிய விசையகிறி னாயக்கன் மக்கள் அஞ்சும் பெண். அஞ்சும் ஆக ..பத்து பசங்கள் உள்ளதில் மக்கள் அஞ்சி பேரில், பெறிய புள்ளையான பதினாலு வயசு புள்ளை யிருக்குறவன். ஜமீன்தாறிக்கி அறுளனென்று சொல்லுகுறாற்கள்,

முன் விசையகிறி வேலாயுத னாயக்கன், அப்பன் குமாற சின்னோப னாயக்கன். க்ஷத்திறியன் வச்ச வைப்புடைய பொண்ணு ரூபாவதியா யிருந்ததனாலே அவளை பால சாத்திறம் பண்ணி, கலியாணம் செயிது கொண்டான்... க்ஷத்திரிய வளப்பு பொண்.

பாலசாஸ்தரம் பண்ணின லெக்ஷ்மம்மாள், யிவள் மகளானவளை ஆய்க்குடி பாளையகாறனுக்கு குடுத்து கலியாணம் பண்ணது. யிவளுடைய மக்கள்

| வெங்கடம்மாள் | பெறியம்மாள் | செக்கரையம்மாள் |
|---|---|---|
| யிவன் மகன் கம்பு குத்தி ஒபள கொண்டம னாயக்கன். யிவன் மகன் சென்ன பட்டணத்தில் எறந்து போன, ..யாபுறி னாயக்கன் பெ..சாதி பட்டம் ஸ்ரீ சின்னோப ளம்மாள் யிப்போயிருக்கு. | | |

யிப்போ கும்பினியில் முப்பது விறாகன் சம்பளம் வாங்குற சின்னோப ளம்மாள் மாமியாறான சின்னோப னாயக்கன் யெட்டான் பெண்டாட்டி பெரியம்மாளென்று கெழவியிருக்குறாள்.

பழனி கடும்பில் னாயக்கன் மூணாம் பேறனாகிய, தளகற்த னாயக்கன் வல்லங் கோட்டை பிடித்து, மதிரை சமுஸ்தானத்தில் வெகுமதி வாங்கி யிருந்த பழனிக்கு தளகற்தனாகியவன், அஞ்சான் பேறனான மசாண்டி னாயக்கன் மகன், ஆண்டி வேலாயுத னாயக்கனென்று, 15 வயதுள்ளவனை வளத்திருக்குறாள்.

யிப்போ பழனியில் பாளைகாறன் வமுசத்தில் உள்ள யின வழி யாறாரென்றால் :

பெண்வழியில், விசையகிறி வேலாயுத சின்னோப னாயக்கன் பெண்டாட்டி பெறியம்மாளெக்குற கேழிவி.

சென்ன பட்டணத்தில் எறந்து போன வேலாயுத னாயக்கன் பெண்சாதி சின்னோபம்மாள் கும்பினி சம்பள வாங்குறவள்.

ஆண்வழியில் சென்னபட்டணத்தில் எறந்து போன வேலாயுத னாயக்கன் பேறனாகிய விசையகிறி னாயக்கனேறுள்ளவன் மதிரையில் எறந்துபோன அவனுக்கு ஆய்க்குடி ஜமீன் தாறி உடன் பிறந்தவாளை மூணு னாலு பேரை குடுத்திருந்து அவாளாள் வகையில்... அஞ்சி புள்ளைகள் யிருக்குறார்கள் யென்றும், அந்த அஞ்சிபிள்ளைகளில் பெரிபுள்ளை பட்டத்துக்கு யோக்கியனென்று சொல்லுகுறார்கள்.

சின்னோபளம்மாள் வளக்குற பய்யனை பட்டத்துக்கறுள னாகான் யென்று, கிறாம பிறதி கிறாமத்து குடி கணக்கறும் கோறிக்கடவு கிறாமத்திலுள்ள அவாள் எனத்து குடிகளும் சொல்லுகுறார்கள்.

. மேற்படி சின்னோபளம்மாள் வளத்துகுற மசாண்டி னாயக்கன் மகன் மேற்படி வேலாயுத னாயக்க னென்ற பய்யனுக்கு பாத்தியமே அன்னியில் மதிரையில் எறந்து போன விசையகிறி னாயக்கனும் பட்டத்துக்கு அனுளனல்லன், அவன் மக்கள் யிப்போ ஆய்க்குடியில்(உ)ள்ள பசங்களுக்கும் அருளத்துவ வறமாட்டாதென்று மேற்படி பட்டக்(கா)றியாகிய சின்னோபளம்மாளும் யெ(ட)ய கோட்டை ஜமீந்தாரனாகிய லக்ஷுமன னாயக்கனும் சொல்லுகுறார்கள்...

**யிப்படிக்கி பழனி சீமையில் விசாறணை செ(யி)து முகிவு எழுதிய பழனி சின்னோப னாயக்(கற்) வமுசாவழி வறலாறு.**

★